V51
N63
105819

# கிரேக்கப் பெருமக்கள்

7

A. K. விஜயபானு, M.A., B.L.

பசவேஸ்வரா பிரசுரம்
தவுலதாபாத் :: கிருஷ்ணகிரி.
(சேலம் மாவட்டம்)

முதற் பதிப்பு : நவம்பர், 1963

V51
N63

பிறமொழிகளில் ஆக்கும்
உரிமை ஆசிரியரைச்
சேர்ந்தது.

விலை ரூ. 4-00

105819

Jeevan Press, Madras-5. (829)

# கிரேக்கப் பெருமக்கள்

பசவேஸ்வரா பிரசுரம்

# முன்னுரை

"கிரேக்கப் பெருமக்கள்" என்னும் சுவை நிறைந்த இந்தச் சிறு நூலின் மூலம் திரு. ஏ. கே. விஜயபானு அவர்கள் நம்மைக் கிரேக்க நாட்டிற்கு அழைத்துச் சென்று, அந்த நாட்டு மக்களுடைய பொற்காலம், பொல்லாத காலம் இரண்டையும் காணும்படிச் செய்திருக்கிறார். அத்துடன் கிரேக்கப் பெருமக்களுடைய அரசியல் சித்தாந்தங்களை எழுத்தோவியமாக்கிக் காட்டியிருக்கிறார்.

புத்தகம் மிகவும் நன்றாயிருக்கிறது என்று சொல்லத் தோன்றவில்லை. மிக மிக நன்றாயிருக்கிறது. புத்தகத்தைப் படித்த அன்றும் மறுநாள் முழுதும் கிரேக்கப் பெருமக்களைப் பார்த்து, அவர்களுடன் பேசி உறவாடியது போன்ற உணர்ச்சி எனக்கு வந்தது.

'சகல துறைகளிலும் முன்னேறிய சமுதாயம் பின்னர், ஏன் பாழ்பட்டுப் போயிற்று' என்று நம் முன் எழும் கேள்விக்கு நாமே விடை காணும் முறையில் கிரேக்க நாட்டின் வரலாற்று விவரங்களைப் படிக்கப் படிக்க இனிக்கக்கூடிய முறையில் எழுதியுள்ள விவரங்கள் நூலாசிரியருடைய சரித்திர ஞானத்தை மட்டுமல்ல, ஆராய்ச்சித் திறனையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்திருக்கிறது. பிளேட்டோ - அரிஸ்டாடில் இவர்களுடைய வாழ்க்கை வரலாற்றினையும், அரசியல் சமுதாய சித்தாந்தங்களையும் எல்லோரும் புரிந்து கொள்ளும்படி எளிய நடையில் எழுதியிருப்பது பாராட்டுதற்குரியது.

கிராம சுயராஜ்யம் ஏற்பட வேண்டுமென்று எண்ணி உழைப்பவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய பல சரித்திர உண்மைகள் இந்த நூலில் பரவிக் கிடக்கின்றன. பஞ்சாயத்து ராஜ்யம் பயனுள்ள முறையில் வேலை செய்ய விரும்புபவர்களுக்கும் தெரிய வேண்டிய முக்கிய விஷயங்கள் பல இந்நூலில் இடம் பெற்றிருக்கின்றன. எனவே, பஞ்சாயத்துத் தலைவர்கள் அலுவலர்கள், ஆசிரியர்கள் அனைவரும் படித்தறிய வேண்டிய நூல் இது என்று சொன்னால் அது மிகையாகாது.

திரு. ஏ. கே. விஜயபானு அவர்கள் இத்தகைய இன்னும் பல நூல்கள் எழுதி, தமிழ் மக்களுக்குச் சேவை செய்ய ஆண்டவன் அருள் செய்வாராக.

**கோ. வேங்கடாசலபதி**
கிராம அபிவிருத்தி கமிஷனர்,
சென்னை.

# பதிப்பாளரின் முன்னுரை

அறிஞர் திரு. ஏ. கே. விஜயபானு M.A , B.L., அவர்கள் பன்னூற் புலமை நிறைந்த சிந்தனையாளர். அறம் வாழவும் தமிழ் வாழவும் அரும்பணியாற்றி வரும் பெருந்தகை. ஆங்கிலத்திலும் தமிழிலும் நிகரற்ற வல்லமையுடன் பேசி எவரையும் பிரமிக்க வைக்கும் ஆற்றல் படைத்த பெரிய மேடைப் பேச்சாளர். இவரின் ஆங்கிலக் கட்டுரைகளை ஆங்கிலத் தினசரி ஞாயிறு பதிப்புகளில் பல வட்சம் மக்கள் படித்து இன்புற்று வருகின்றனர். "கிரேக்கப் பெருமக்கள்" என்னும் இப் புத்தகம் அன்னார் இயற்றிய மூன்றாவது தமிழ் நூலாகும். இந் நூலை வெளியிடுவதை எங்களுக்கு வாய்த்த பெரும் பேறாகக் கருதுகின்றோம். தமிழ் உலகம் ஆசிரியரைப் போற்றிப் பாராட்டும் என்ற எண்ணத்துடன் இந் நூலைத் தமிழ் மக்களின் முன்னிலையில் சமர்ப்பிக்கின்றோம்.

இந் நூலுக்கு முன்னுரை வழங்கி உதவிய உயர்திரு. கோ. வேங்கடாசலபதி (கிராம அபிவிருத்தி கமிஷனர், சென்னை) அவர்களுக்கு எங்களது நன்றி கலந்த வணக்கம் என்றும் உரியதாகும். இந்நூலுக்குச் சிறிய முறையிலே முன்னுரை அளித்து ஆசிரியரைப் பாராட்டி வாழ்த்தியுள்ள அன்னாருக்கு எங்களின் உளம் கனிந்த நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பசவேஸ்வரா பிரசுரம்.

To
My Father,

**Sri A. Kondian Chettiar**
Who is no more

To thee I owe
All that I am.
From thee I learnt
To hate
All that is sham.

—A. K. Vijaya Bhanu.

# கிரேக்கப் பெருமக்கள்

★

உலகிலே மிகப் பெருவாழ்வு வாழ்ந்து காட்டியவர்கள் கிரேக்கர்கள். ஒரு காலத்திலே ஐரோப்பிய நாகரிகத்தின் தங்கத் தொட்டிலாக விளங்கியது கிரீஸ் தேசம். அரசியல் முதல் கொண்டு அழகுக் கலை, கட்டிடக் கலை, கணிதம், கவிதை, நாடகம் ஆகிய துறைகளிலும் எத்தனையோ ஐரோப்பிய நாடுகளுக்குக் கிரீஸ் வழி காட்டியாய் விளங்கிற்று. வாழ்வின் நெறிகளை வகுத்த மேதைகள் பலர் தோன்றி அறிவுச் சுடரை அனைத்துலகும் பரப்ப முயன்ற பல சரித்திரக் காதைகளைக் கிரீஸின் வரலாற்றிலே நாம் காண்கிறோம். கலைகளுக்கெல்லாம் தலையாய கலையாகிய வாழ்வுக் கலையை அறிந்தவர்கள் பண்டைக் கிரேக்க மக்கள். தன்னலமற்ற தேசாபிமானிகள், விவேகமிக்க விற்பன்னர்கள், நூல் வல்லுநர் பலர் தலைமை தாங்கிக் கிரேக்க நாகரிகத்தை வளர்த்து, உலக அரங்கிலே கிரீஸுக்கு அழியாப் பேரும் புகழும் ஈட்டித் தந்தனர்.

அறிவொளியிலே மூழ்கித் திளைத்த இந்த நாட்டைப் பூகோளப் படத்திலே பார்த்தோமேயானால் சதா மத்தியதரைக் கடலினுள் மூழ்க முயற்சித்துக் கொண்டிருக்கும் ஒரு தேசம் போல் தோன்றும். அது மட்டுமன்று. இது எப்பொழுதும் கதிரவனின் ஒளியிலே இடையறாது மூழ்கிக் கொண்டிருக்கும் நாடு. கதிரவனின் கிரணங்களால் சுடப்பட்டுக் காய்ந்து வறண்டிருக்

கும் பல பிரதேசங்களை இந்த நாட்டிலே காணலாம் சூரிய வெப்பத்தால் பாளம் பாளமாகப் பிளந்து கிடக்கும் நிலப்பரப்புக்கள் கிரீஸ் அபிமானிகள் பலரின் நெஞ்சை உருக்கி யிருக்கின்றன. பொதுவில் சொல்லப்போனால் விவசாயத்திற்கேற்ற இயற்கை வசதிகள் எதுவும் பெற்றிராத நாடு கிரீஸ். பெரிய விவசாயப் பண்ணை களை இந்த நாட்டிலே காண்பதென்பது முயற்கொம்பே. கி. மு. 20 ஆம் நூற்றாண்டின் கிரீஸ் நிலைமையைப்பற்றி எழுதியிருக்கும் சரித்திர ஆசிரியர்கள் பலர் இதைப் பற்றி மிகப் பிரலாபித்திருக்கிறார்கள். விவசாய வசதி களைப் பெற்றிராத குறை ஒருபுறமிருக்க, ஏராளமான மலைத்தொடர்களைக் குறுக்கும் நெடுக்குமாக எங்கணும் பெற்றுள்ள ஒரு நாடாக விளங்கியது கிரீஸ். குறுக்கும் நெடுக்குமாக ஒன்றையொன்று வெட்டிக்கொண்டு மலைத் தொடர்கள் சென்றதால், நான்கு புறமும் மலைகள் சூழ்ந்த குட்டிக் குட்டி நகரங்கள் பல தோன்றித் தங்களை 'நாடுகள்' என்று அழைத்துக் கொண்டன. இப்படிப்பட்ட பல குட்டி நகர– நாடுகள் (City-States) ஒரு கற்றையாக விளங்கியதை மொத்தத்தில் நாம் கிரீஸ் என்ற பெயரில் அழைக்கிறோம்.

கி. மு. 20 ஆம் நூற்றாண்டுக் காலத்திலெல்லாம் கிரீஸ் ஓர் ஏழை நாடுதான். தொழிற்சாலைகள் கூடக் கிரீஸ் தேசத்தில் காணப்படுவது அரிதாக இருந்தது தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருள்களும் கனிப் பொருள்களும் அங்குக்கிடைக்கவில்லை. பூதேவி கொடுக்க மறுத்ததற் கெல்லாம் கடல் போதிய அளவுக்கு மேலாகவே ஈடு செய்தது. கிரேக்கர்களின் முன்னேற் றத்திற்கும் நல் வாழ்வுக்கும் கிரீஸ் தேசத்தை அன்னை போல் தழுவி அணைத்துக்கொண்டிருந்த விரிந்த கடல் பரப்பே ஆதாரமாக விளங்கியது. கிரேக்கர்கள் தங்க ளின் அதிர்ஷ்டங்களையெல்லாம் கடல் வாணிகத்திலும், கடல் பிரயாணத்திலும், கடல் போரிலுமே கண்டார்கள்.



நீலக் கடலுக்கும் கிரேக்க மக்களுக்கும் உலகின் எச்சக்தி யாலும் பிரிக்கமுடியாத மிக வலிய பந்தம் ஏற்பட்டு நிலைத்தது. கடலின் அலைகளை அதிர்ஷ்ட தேவதையின் கரங்களாகவே கண்டு மகிழ்ந்தனர் கிரேக்க மக்கள். கணந் தவறாது அவர்கள் கண்டு களித்த கடலின் விரிவைப் போலவே கிரேக்க மக்களின் உள்ளமும் விரிந்தது. கடலின் ஆழத்தையும் விஞ்சியது கிரேக்க மக்களுடைய அறிவின் ஆழம்.

**ஆதியிலே** கிரீஸில் வாழ்ந்த மக்கள் பல இனங்களை யும் வகுப்புகளையும் சேர்ந்த மக்களின் கலவையாயிருந்த னர். அண்டை நாடுகளில் வாழ்ந்த பிற இனத்தினரின் கூட்டங்கள் பல கிரீஸ் பிரதேசங்களுள் புகுந்து தங்க ளின் வாழ்வுக்கு வழிதேட ஆரம்பித்தன. கொள்ளை யடிக்கும் கூட்டத்தினர் பலர் கிரீஸ் நாட்டினுள் புகுந்து அங்குள்ள மக்களைக் கொள்ளையடித்துத் துன் புறுத்தியதுடன், இறுதியில் அங்கே தங்களின் அரசியல் ஆதிக்கத்தையும் நிலைநாட்ட ஆரம்பித்தனர். இவையெல்லாம் கி. மு. பன்னிரெண்டாம் நூற்றாண்டை யடுத்து நிகழ்ந்த நிகழ்ச்சிகள். கிரேக்க மக்களின் இரத்தத்தைச் சரித்திரச் சோதனைக்குட்படுத்தினால், அது பல்வேறு இரத்தங்களாலான அரிய கலவை என்பதை உணர்வோம். இது ஏறக்குறைய எல்லா நாட்டு மக்களுக்கும் பொருந்துமென்றே நினைக்க வேண்டி யிருக்கிறது.

கி. மு. 8 ஆம் நூற்றாண்டு, 7 ஆம் நூற்றாண்டுகளி லெல்லாம் ஆதி கிரேக்கர்கள் கடல் வாணிகத்தில் மிகச் சிறந்து விளங்கினார்கள். வாணிகத்தின் கேந்திரங் களாக விளங்கிய எபிஸஸ், மிலடஸ், ஸ்மிர்னா, சாமோஸ் போன்ற நகரங்கள் பல இக்காலத்தில்தான் தோன்றின. கிரேக்கக் குடும்பங்களிலே மூத்த பிள்ளைகள் குடும்பங் களிலேயே தங்கிக் குடும்ப விவகாரங்களைக் கவனித்து வந்தனர். கிரேக்கக் குடும்பங்களின் இரண்டாவது,

மூன்றாவது குழந்தைகளெல்லாம் சதா கப்பலிலேதான் தங்கள் காலத்தைக் கழித்தனர். கடல் வாணிகமில்லையேல் கிரேக்கக் குடும்பங்களுக்கு வாழ்வில்லையாதலின், கிரேக்க இளைஞர்கள், முதியவர்கள் அனைவருமே பெருவாரியாகக் கடல் வாணிகத்திலே ஈடுபட்டனர். தங்கள் வாணிகத்தின் காரணமாக இவர்கள் பிற நாடுகளுக்கும் பிரதேசங்களுக்கும் சென்றபொழுது, கிரேக்க நாகரிகமும் இவர்களுடன் சேர்ந்து சென்றது. ஆங்காங்கே கிரேக்க நாகரிகத்தின் வித்துக்கள் வீழ்ந்து, கிரேக்க நாகரிகம் பரவியது. கிரேக்க நாகரிகம் பரவிய அந்நியத் துறைமுகங்களிலும், நகரங்களிலும் கிரீஸின் மேல் ஒரு அபிமானம் ஏற்பட்டது. கிரேக்கக் காவியங்களிலும் நாடகங்களிலும் கிரேக்க மக்களின் கடல் பிரயாணங்களும், கடல் வாணிகமும், கடல் போர்களும் முக்கிய இடம் பெற்றன. கோலக் கடலைக் கும்பிட்டு வாழ்ந்த கிரேக்க மக்கள், கடல்தான் தங்கள் தலைவிதியை நிர்ணயிக்கும் தர்ம தேவதை என்று நம்பினார்கள். சீறியெழுந்த கடல் கிரேக்க மக்களை வாரியணைத்து வாழ்த்தியதே யொழிய அவர்களின் வாழ்விற்கு எவ்வித ஊறும் இழைக்கவில்லை.

வெகு சீக்கிரத்தில் கிரீஸ் நாட்டிலே சாதாரணக் கிராமங்களாயிருந்தவை யெல்லாம் செல்வம் கொழிக்கும் நகரங்களாக மாறின. **கொரிந்த்** (Corinth) என்ற நகரம் தலைநகரா யில்லாவிட்டாலும், பெரிய ஒரு தலைநகர் போன்றே காட்சியளித்தது. **ஏஜீனா** (Aegina) என்ற நகரம் வாணிகச் செலாவணிக்கும் பண்டமாற்றலுக்கும் பெயர்பெற்ற நகரமாய் விளங்கியது. **சியோஸ்** (Chios) என்ற நகரம் அடிமைகளை விற்பதற்கும் வாங்குவதற்கும் புகழ்பெற்ற பல சந்தைகளைக்கொண்டு விளங்கியது. **பிரேயஸ்** (Piraeus) என்ற நகரிலே கண்டவிடமெல்லாம் வர்த்தகப் பொருள்கள் மலைபோல் குவிந்து கிடந்தன. சுகபோகப் பண்டங்களும் சொகுசுப்



பொருள்களும் (Luxury goods) எங்கணும் காணப்பட்டன. இச் செல்வங்களனைத்தும் கடல் மூலமாகப் பிற நாடுகளிலிருந்து கிரீஸுக்கு வந்தவை. கிரேக்கக் கப்பல்கள் செல்வத்தின் அதிதேவதையான திருமகள் பிரயாணம் செய்யும் ரதங்களாகவே காட்சியளித்தன. கடல் வாணிகத்தால் கிரேக்கப் பட்டினங்கள் பல குவலயத்தில் குபேரபுரிகளெனத் திகழ்ந்தன. கிரேக்க மக்களுக்கும் கடல் மாதுக்கும் இயற்கை இடையறாது ஒரு வதுவை நடத்திக்கொண்டே யிருந்தது.

கடல் பிரயாணத்தில் சிரமங்களும் ஆபத்துக்களும் இல்லாம லில்லை. எத்தனையோ கிரேக்கக் கப்பல்கள் புயல்களுக்கு இரையாகியதுண்டு; எத்தனையோ கப்பல்கள் பாறைகளில் மோதுண்டு பாழாகியதுண்டு; இரவிலே வழியைத் தவறவிட்டு, எதிரிகளின் கரங்களிலும் கொள்ளைக் கூட்டத்தினரிடமும் அகப்பட்டுத் திண்டாடித் தவித்து இன்னலுற்ற கப்பல்களும் பல உண்டு; கப்பல்கள் சரிவரக் கட்டப்படாததால் பாரங்களைத் தாங்க முடியாது கடலின் அடிமட்டத்துக்கு ஆழ்ந்த பல கப்பல்களும் உண்டு. எனினும் இறுதிக் கணக்கில் கடல் வாணிகம் கிரேக்க மக்களுக்கு எல்லையற்ற நன்மையையே பயந்தது. தங்களின் கையருகே கடல் மட்டும் இல்லாதிருக்குமேயானால், தோன்றிய மறு நூற்றாண்டிலேயே கிரேக்க மக்கள் பூண்டோடு அழிந்து போயிருப்பர். அவர்களுக்கென ஒரு நாடும் ஒரு சரித்திரமும் இருந்திருக்காது. கிரேக்க மக்களுக்குத் தாயாகவும் தந்தையாகவும் இருந்து அவர்களை வளர்த்து, உலகமனைத்தும் அவர்களுக்குப் பெருமையீட்டித் தந்தது அவர்களின் நாட்டைச் சுற்றி விரிந்து கிடந்த கடல்தான் என்பதை எவரும் மறுத்தற்கில்லை.

கிரேக்கர்களுக்கு இயற்கைச் சக்திகளுடன் போராடி வெற்றி பெறுவதிலே ஒரு தனி விருப்பு. கிரேக்கர்கள் எந்த ஆபத்துக்கும் அஞ்சாது முன்னேறிச்செல்பவர்கள்.

இயற்கை அழகை மிகவும் விரும்பி ரசிப்பவர்கள்.
இயற்கையோடு சதா கலந்து அதைத் தங்களின் வாழ்
விலே ஒரு பகுதியாக ஆக்கிக் கொண்டவர்களாதலின்,
இயற்கையின் ஆக்க சக்திகளும் அழிவு சக்திகளும்
இவர்களின் இயல்பிலே கலந்திருந்தன. ஈவு இரக்கம்
நிறைந்திருந்த இப்பெரு மக்களிடத்திலே மனித இரத்
தத்தை வெள்ளமாக ஓடவிட்டுப் பார்க்கும் சுபாவத்தை
யும் சமயா சமயங்களில் காண்கிறோம். கிரேக்க சமுதா
யத்திலே மிக நல்லவர்களும் தோன்றியிருக்கின்றனர் ;
மிகக்கெட்டவர்களும் தோன்றியிருக்கின்றனர். கிரேக்க
வரலாற்றிலே மானிடத் தெய்வங்களையும் பார்க்கிறோம்;
மானிட மிருகங்களையும் பார்க்கிறோம். தெய்வ குணம்,
மிருக சுபாவம் இரண்டும் கலந்த மேதைகள் பலரையும்
பார்க்கிறோம். பொதுவில் கிரேக்க வரலாற்றில் இடம்
பெற்ற கெட்டவர்களும் நல்லவர்களும் மிக அரிய பிறவி
களாகவே காணப்படுகின்றனர். ஒரு பெரிய விந்தை
யென்னவெனில், தீக்குணம் படைத்த வல்லோர்களா
லும் கிரீஸ் தேசம் நன்மைகள் பலவற்றை அடைந்
திருக்கிறது.

கிரேக்க சரித்திரம் படிக்கப் படிக்க இனிக்கக் கூடிய
தொன்று. வாழ்வின் தோல்விகள், வெற்றிகள் இரண்
டையும் அடைந்தவர்கள் கிரேக்கர்கள் ; பொற்காலம்,
பொல்லாத காலம் இரண்டையும் அவர்கள் அனுபவித்த
வர்கள் ; தீயதை ஒறுத்து, தூயதை நாடியவர்கள்.
சமயங்களில் தீயதில் ஆழ்ந்து தூயதைப் பழித்த
வர்கள். வாழ்வைப் பல கோணத்திலிருந்தும் ஆராய்ந்த
வர்கள்; ஆனால் ஒரு கோணத்திலாவது நிலைத்த இன்பத்
தைக் காண முடியாது அங்கலாய்த்தவர்கள். வாழ்வை
மனோகரமான மதுக் கோப்பையெனக் கருதிச் சுவைத்த
வர்கள் ; ஆனால், பாதியிலேயே அக்கோப்பையைப்
போட்டு உடைத்தவர்கள். உலகிற்கெல்லாம் அரசி
யல் சித்தாந்தங்களை வழங்கியவர்கள் ; முடிவில்



தங்களின் அரசுக்குத் தாங்களாகவே சமாதி கட்
டிக் கொண்டவர்கள். கற்பனையிலே பிரம்மாண்ட
மான கனவுக் கோட்டைகளைக் கட்டியவர்வள் ; நிஜ
வாழ்விலே மிகச் சாதாரணமான பகைவரிடமும்
கோட்டை விட்டவர்கள். பிற்காலச் சந்ததியாருக்கு
ஏராளமான அறிவுச் செல்வங்களை விட்டுச்சென்றவர்கள்;
ஆனால், தம் சொந்த வாழ்விலே அறிவைப் பிரயோகிக்க
அநேகம் தடவை தவறியவர்கள். கலை, கவிதை, தத்து
வம் இவற்றில் ஆழ்ந்து தோய்ந்தவர்கள்; ஆனால், தங்க
ளின் ஆசாபாசங்களுக்கு வரம்பு கட்ட முயலாதவர்கள்.
வாழ்வின் நெறிகள் பலவற்றை அபார ஞானத்துடன்
வகுத்துத் திட்டந் தீட்டியவர்கள். ஆனால், வாழ்வின்
நெறிகளைச் சமயங்களில் சுக்கு நூறாக உடைத்தெறிந்த
வர்கள். அளவிடற்கரிய பேச்சு வல்லமை படைத்த
வர்கள்; ஆனால், பேச்சு தேவைப்பட்ட காலத்திலே
அமைதியில் ஆழ்ந்தவர்கள். சகல துறைகளிலும் முன்
னேறியவர்கள்; முடிவில் தங்களின் முன்னேற்றத்தைக்
கொண்டே தங்களை மாய்த்துக் கொண்டவர்கள். வாழத்
தெரிந்த மக்களே சாகத் தெரிந்த மக்களாயும் இருக்கின்
றனர். கிரேக்க மக்கள் அப்படிப்பட்டவர்களே. இக்
காரணத்தாற்றான், கிரேக்க சரித்திரம் படிக்கும்பொழுது
சுவை மிக்க காவியம் போல் இலங்கி நம்மைக் கவரு
கின்றன ; சிறந்த தத்துவம் போல் இயங்கி நம் விவே
கத்தை வளர்க்கிறது. நம் அறிவு மண்டலத்திலே
ஆயிரம் வினாக்களை எழுப்புகிறது.

சரித்திர காலத்திற்கு முற்பட்ட ஆதி கிரேக்கர்
களைப் பற்றி நாம் விஸ்தாரமாகத் தெரிந்துகொள்ள
நமக்குச் சரியான ஆதாரங்கள் எதுவும் அகப்பட
வில்லை. நமக்குக் கிடைக்கும் ஆதாரங்களெல்லாம்
கிரேக்கப் புராணங்களும், நாடோடிக் கதைகளும்
தலைமுறை தலைமுறையாக விட்டுச் செல்லப்பட்ட
வாய்மொழி விவரங்களுமே இவைகளை வைத்துக்

கொண்டு நாம் எந்த முடிவுக்கும் வர இயலவில்லை;
சில முடிவுகளுக்கு வராதிருக்கவும் முடியவில்லை.
கிரேக்கப் புராணக் கதைகள் பலவற்றின் சில
பகுதிகளாவது உண்மையில நடந்த நிகழ்ச்சிகளாய்
இருக்கக் கூடும் என்பது பல ஆராய்ச்சியாளர்களின்
அபிப்பிராயம். இவர்களுள் பிரபல சரித்திர ஆசிரிய
ரான ப்யூரி (Bury) என்பவரும் ஒருவர். இப்புராணக்
கதைகள் பலவற்றில் மெய்யும் பொய்யும் கலந்திருக்
கின்றன என்பது ஓரளவுக்கு உண்மையாயிருப்பினும்,
எது மெய், எது வெறும் கற்பனை என்று பகுத்து ஒதுக்
குவது இயலாத காரியமென்றே படுகின்றது. கிரீஸ்,
ஆசியா ம்மைனர், கிரீட் போன்ற இடங்களில் நடந்த
புதைபொருள் ஆராய்ச்சிகள் பற்றிய விவரங்களை
வைத்துக்கொண்டு பார்க்கும்பொழுது, இப்புராணக்
கதைகளில் ஒரு சிலவாவது முற்றிலும் உண்மையாக
இருக்கக் கூடுமோ என்று ஐயுறத் தோன்றுகிறது.
ஐயப்பாடு அறவே நீங்கும் வரை நாம் எந்த முடிவுக்கும்
வருவது சரியல்ல,

நாம் இப்புராணக் கதைகளை நம்பினாலும் நம்பாவிட்
டாலும் சரித்திர கால கிரேக்கர்கள் இவற்றைப் பெரிதும்
நம்பினார்கள். அரசியல் விவகாரங்கள் பலவற்றிலே
இப்புராணக் கதைகளுக்கு முக்கியத்துவம் அளித்
தார்கள். அந்நிய நாடுகளுடன் ராஜரீகத் தொடர்பு
வைத்துக் கொள்வதிலும், ஐயத்துக்கிடமான எல்லைகளை
நிர்ணயிப்பதிலும், கிரேக்க மக்கள் இப்புராணக் கதை
களிலே மேற்கோள்களையும் ஆதாரங்களையும் தேடி
னார்கள். கிரேக்க மக்களின் மத்தியிலே இனப்பற்றையும்
தேசப் பற்றையும் வளர்ப்பதற்கு இவை சில சரித்திர
காலக் கட்டங்களிலே மிகவும் உதவின. கிரேக்க
மக்கள் பொதுவாக, தம்மால் எதையும் சாதிக்க முடி
யும், எதையும் நடத்திக் காட்ட முடியும், என்ற தன்
னம்பிக்கையைச் சிறந்த அளவிலே பெற்றிருந்தார்கள்.



எனவே, தங்களுடைய பண்டைப் புராணக் கதைகள்
பலவற்றை அவர்கள் நம்பியதில் வியப்பதற்கெதுவு
மில்லை.

கிரேக்கப் புராணங்களிலே கிரேக்கக் கடவுள்கள்
சம்பந்தப்பட்ட பகுதிகளை நாம் எவ்வாவற்றானும் நம்ப
முடியாது. எல்லா நாட்டுப் புராணங்களையும் போலக்
கிரேக்கப் புராணங்களிலும் பல பகுதிகள் பகுத்தறிவுக்
கும் நடைமுறை அனுபவத்திற்கும் முரண்பட்டவை
யாகவே இருக்கின்றன. எனினும் கிரேக்கப் புராணங்
களைப் படிக்க ஆரம்பித்தால் அவற்றின் கதைச் சுவை
யும், இலக்கிய அழகும் நம்மைப் பெரிதும் ஈர்க்கின்றன.
அவைகளைப் படிக்கத் தொடங்கினால் அவற்றைக் கீழே
வைப்பதற்கு நமக்கு நம் மனம் எளிதில் இடந்தருவதில்லை.
அபத்தமான பகுதிகளினூடேயும் அரிய சன்மார்க்கங்
களை அவை போதிக்கின்றன. அழகிய கிரேக்கத்
தெய்வங்களையும், கண்கவர் காட்சிகளையும், மயிர்க்
கூச்செறியும் நிகழ்ச்சிகளையும், வீராவேசமான உரை
களையும், நாம் இந்நூல்களிலே காண்கிறோம். கிரேக்க
தெய்வங்கள் எந்த நேரத்திலும் வானத்திலிருந்து
இறங்குகின்றன; நினைத்த நேரத்தில் நினைத்த இடத்
தில் தம் இஷ்டம் போல் தோன்றி நிற்கின்றன. கிரேக்க
மன்னர்கள், வீரர்கள், மங்கையர்கள் இவர்
களுடன் சரசமாகப் பழகுகின்றன. அவர்களின்
வாழ்விலே பங்கு கொள்கின்றன; தாம் விரும்பிய
வர்களுக்கு நேரடியாகவே வந்து அதிர்ஷ்டங்களை
வாரி வழங்குகின்றன; மக்களுக் கிடையேயும்
அரசர்களுக்கிடையேயும் பிளவுகளை ஏற்படுத்துகின்
றன. ஏற்கனவே உள்ள பேதங்களைத் தீர்த்து
வைக்கின்றன; போரிலே வெற்றிக்கு மார்க்கங்களைச்
சொல்லுகின்றன; குறிப்பிட்ட அழகிகளை அடை
வதற்கு வீரர்களுக்கும் மன்னர்களுக்கும் உபாயங்களைச்
சொல்லுகின்றன; கடலிலே அடிக்கும் புயல்களைத் தங்க

ளுக்கு விரோதமானவர்கள் பிரயாணம் செய்யும் கப்பல்களை நோக்கித் திருப்புகின்றன; எதிர்காலத்தைத் தாங்கள் விரும்பியவர்க்கு அறிவிக்கின்றன; இரவு பகல் எந்த நேரத்திலும் மனிதர்களுடன் வந்து சகஜமாகப் பழகுகின்றன; இவ்வளவு எளிதாக எவருடனும் பழகும் தெய்வங்களின் அபாரமான சக்திகளைக் கண்டு சில சமயங்களில் நாம் பிரமித்துவிடுகிறோம்: அமரத்துவம் வாய்ந்த இத்தெய்வங்கள் பூலோக மனித வாழ்விலே பங்கு கொள்வதற்கு ஏன் இவ்வளவு வேட்கை கொள்ளுகின்றனவோ என நாம் ஆச்சரியப்படுகிறோம். மனிதருக்குரிய ஆசாபாசங்கள், விருப்பு வெறுப்புக்கள் பலவற்றையும் இத்தெய்வங்களிடத்திலே நாம் அடிக்கடி காண்கிறோம். மனிதரிடத்தில் காணப்பட்டாலும்கூட மன்னிக்கப்பட முடியாத பல குறைகளையும் இத்தெய்வங்கள் பல பெற்றிருக்கின்றன.

பூலோக மாந்தரினின்றும் எவ்விதத்திலும் வித்தியாசப் படாதவை போல் தோன்றும் இத்தெய்வங்கள் சில சமயங்களில் மானிடரைக் காட்டிலும் எல்லையற்று உயர்ந்தவையாயும் சில சமயங்களில் மானிடரைக் காட்டிலும் மிகத் தாழ்ந்தவையாயும் தோன்றுகின்றன. கிரேக்கத் தெய்வங்கள் கிரேக்கக் கவிஞர்களும் முனிவர்களும் இயற்றிய மாயா ஜாலங்கள் போலும்! சரித்திர காலத்துக்கு முற்பட்ட கிரேக்கர்கள்கூட அழகுப் பித்தர்களாய்த்தான் இருந்திருக்கிறார்கள்; தங்களின் தெய்வங்களை அழகுக் கோலங்களாகவே கற்பனையில் அவர்கள் கண்டிருக்கிறார்கள். கிரேக்கப் புராணங்களில் காணப்படும் தெய்வங்களைப் போல அழகுப் படிவங்களைச் சித்திரத்தில் வரையவோ, சிலையில் செதுக்கவோ எவராலும் முடியாது. புராணப்பாடல்களினூடே அவை உயிர்த்தெழுந்து வந்து நம் சிந்தையில் கலக்கும் பொழுது நாம் மெய்மறந்து விடுகிறோம். தெய்வங்களோடு உறவாடி அவைகளுக்குச் சமானமாக வாழ்வதற்குப்



பண்டைக் கிரேக்கர்கள் எவ்வளவு தூரம் விழைந்திருக்கிறார்கள் என்பதற்கும் இப்புராணங்கள் ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன. அதிசயிக்கத்தக்க அபூர்வமான கற்பனா சக்தியைப் பெற்றிருந்தவர்களே இப்புராணங்களைப் படைத்திருக்கக்கூடும். சுரங்கத்திலிருந்து எடுக்கப்பட்ட பொன்னை அதோடு கலந்திருக்கும் மட்டமான இதர உலோகங்களிலிருந்து பிரித்தெடுப்பதைப்போல, இப்புராணங்களிலே ஆங்காங்குச் சிறந்த அளவிலே காணப்படும் பொன்னான பகுதிகளைப் பிரித்துச் சுவைத்தனுபவிக்கத் தெரிந்தவர்கள் உண்மையிலேயே மிகுந்த ஆத்ம லாபத்தை அடைவர். படிப்பதனாலாய பயனும் அதுவே; நம் பகுத்தறிவுக்கு உரமாகி அதை மேலும் வளர்க்கக் கூடிய பகுதிகளும் புராணங்களில் இல்லாமலில்லை.

பண்டைக் கிரேக்கப் புராணக்கதைகளில் **"ட்ரோஜன் யுத்தம்"** (Trojan War) என்ற தலைப்பில் வழங்கும் கதை மிகப் பிரபலமானது. வரலாற்றுக்கு அப்பாற்பட்டதெனினும் கூட, இலக்கியப் பிரசித்தி பெற்றது. **ட்ராய் (Tray)** எனும் நகரத்திலே இந்த யுத்தம் நடந்ததாகக் கூறப்படுகிறது.

சரித்திர காலத்திற்கு முற்பட்ட ஆதி காலத்திலே ட்ராய் நகரம் திசை நான்கும் தனது புகழைப் பரப்பி, ஈடு இணையற்ற தனி மகத்துவத்துடன் விளங்கியது. அல்ட்ராய், நீர்வளம் நிலவளம் பொருந்திய நாடன்று. இருப்பிலது சுரங்கப் பொருள்கள் மலிந்த நாடுமன்று. இருப்பினும் எவரும் காமுறத்தக்க செல்வத்தையும் ஆதிபத்தியத்தையும் அது பெற்றிருந்ததற்குக் காரணம் அதனுடைய அருமையான பூகோள அமைப்பே. அஃது ஒன்றே அதற்கு நிரந்தரமான அதிர்ஷ்டமாகவும் ஆஸ்தியாகவும் ஆகிவிட்டது. ட்ராய் நகரத்தின் ஆதிக்கம் மென்மேலும் வளர்வதற்குக் கீழ்க்கண்ட சந்தர்ப்பச் சூழ்நிலைகள் பெரிதும் உதவின.

ஏஜியன் (Aegean) பிரதேசங்களுக்கும் ட்ராய் நகருக்கு அப்பாற்பட்ட தானியம் விளையும் பிரதேசங்களுக்கும் இடையே கப்பல் வாணிகம் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. கோடை காலத்திலே வடக்கு, வடகிழக்கு, வடமேற்குப் பகுதிகளிலிருந்து அடித்த பலமான கோடைக்காற்றுகளின் காரணமாகக் கப்பல் வியாபாரிகள் தங்களின் கப்பல்களைப் பல நாட்கள், சமயங்களில் பல வாரங்கள் வரை, கடலின் ஹெல்லஸ்பாண்ட் பகுதியை ஒட்டி நிறுத்தவேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டுவிடும். இதற்கு அனுமதி வழங்குவதற்கோ மறுப்பதற்கோ உண்டான அதிகாரம் ட்ராய் நகரத்து அரசிடமே இருந்தது.

ட்ராய் நகரம் தன்னைச் சுற்றியுள்ள நான்கு திக்கிலுமிருந்து வந்த வியாபாரப் போக்குவரத்துப் பாதைகளுக்குச் சந்திப்புக் கேந்திரமாக (Junction) விளங்கியது. இதனால் நான்கு திக்கிலுமிருந்து வந்த செல்வங்கள் பல இந்நகரில் குவிந்ததோடு, ட்ராய் நகரத்து அரசின் தயவு மற்ற அரசுகளுக்கு மிகமிகத் தேவைப்பட்டது.

ட்ராய் நகரம் தன்னைக் கடந்து சென்ற கப்பல்கள், வாகனங்கள் அனைத்தின் மேலும் வரி விதித்தது.

ட்ராய் நகரிலே கூடிய வருடச் சந்தையில் நாலா திக்குகளிலிருந்தும் வர்த்தகர்கள் பலதரப்பட்ட ஏராளமான சரக்குகளைக் கொண்டு வந்தனர். இவையனைத்தின் மேலும் ட்ராய் அரசு வரிகள் பல விதித்து அவற்றைக் கண்டிப்புடன் வசூல் செய்தது.

ட்ராய் நகர மக்களுக்கு வேண்டிய பண்டங்கள் எதையும் வாங்குவதற்கு எந்த வியாபாரியும் மற்ற நாடுகளுக்கோ நகரங்களுக்கோ போக வேண்டிய அவசியம் சிறிதும் ஏற்படவில்லை. சகல பொருள்களும் ட்ராய் நகருக்கு வந்ததால், குறைந்த விலையிலேயே சகல பொருள்களும் கிடைத்தன. தனக்கு இருந்த சாதகமான பூகோள அமைப்பைப் பயன்படுத்திக்



கொண்டு, ட்ராய் நகரம் தனது ஆதிக்கத்தையும் செல்வத்தையும் அத்துமீறி வளர்ப்பதாகவும், இறுமாப்புடன் பிற நாடுகளை இலேசாக மதிப்பதாகவும் ஒரு அபிப்பிராயம் மற்ற அரசுகளின் மத்தியில் தோன்றிப் பரவிற்று. ஏதாவதொரு வழியில் முன்னேறிக்கொண்டிருப்பவர்களைக் கண்டு முன்னேற முடியாமல் தவித்துக் கொண்டிருப்பவர்கள், பொறாமையினால் அங்கலாய்த்து, தங்களுக்குள் பொய்ப்பிரச்சாரம் செய்வதைப்போன்றுதான் இதுவும் இருந்திருக்கக்கூடும். எனினும், ட்ராய் நகரம் பிற நகரங்களின் செல்வத்தைக் கொண்டுதான் வளர்ந்தது என்பது ஓரளவு உண்மை. ஆனால், ட்ரோஜன் யுத்தத்திற்கும் இந்த வாதத்திற்கும் நேரடியான தொடர்பு எதுவும் கிடையாது.

ட்ரோஜன் யுத்தம் கி. மு. 1193-இலிருந்து 1184-வரை நடந்ததாகக் கூறப்படுகிறது.

மெனிலாஸ் (Menelaus) என்பவன் கிரீஸைச் சேர்ந்த ஸ்பார்ட்டா (Sparta) நகரத்து அரசன். அவனுடைய மனைவி ஹெலன் (Helen) என்பவள் வார்த்தெடுத்த தங்கப்பதுமை போன்ற அழகி. தனக்குஒப்பாரும் மிக்காரு மற்ற ஒய்யார மடந்தை. சரஸகலையிலே வல்லவள். எவரையும் கணத்திலே மயக்கிவிடும் எழில் மோகினி. அவளின் அழகைப்பற்றி அக்காலத்திலே பேசிப் புகழாதவர்கள் இல்லை. ட்ராய் நகரத்து அரசனின் மகனாகிய பாரிஸ் (Paris) என்பவன் பல சூழ்ச்சிகளைக் கையாண்டு அந்தரங்கமாக அவளை மெனிலாஸிடமிருந்து கடத்திச் சென்றான். கிரீஸ் தேசத்திலிருந்த அத்தனை அரசர்களும் ஒரு காலத்தில் அவளை மணக்க முயன்றவர்கள். அவளை அடைய முடியாவிட்டாலும்கூட, அவளின்பால் அவர்களுக்கிருந்த பக்தியும் மோகமும் அவர்களை விட்டுப்பிரிய அடியோடு மறுத்தன. ஹெலனுக்கு எந்த ஆபத்து எவர் இழைப்பினும் அவர்களைத் தாம் தண்டிப்போம் என்று வெகு காலத்திற்கு முன்னரே இவ்

வரசர்கள் அவரவர் தெய்வங்களின் முன்னால் பிரதிக்ஞை எடுத்திருந்தனர். அதன் பிரகாரம் மெனிலாஸ் என்ற அரசனோடு மற்ற மன்னர்களும் ஒன்றாகக் கூடிக் கொண்டு ட்ராய் நகரின் மீது படையெடுத்து அதை முற்றுகையிட்டனர். ஹெலனை ட்ராய் இளவரசனிடமிருந்து மீண்டும் பறித்து வருவதற்காக இந்த யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. மெனிலாஸ் என்ற மன்னனின் உறவினனும் **ஆர்கோஸ்** (Argos) நகரின் வல்லரசனுமான **அகமெம்னன்** (Agamemnon) என்பவனின் தலைமையிலே, ஹெலனை மீண்டும் கவர்ந்துவரச் சென்ற படைகள் ஏறக்குறையப் பத்தாண்டுக் காலம் ட்ராய் நகரை முற்றுகையிட்டுப் போர் நடத்தின. ட்ராய் நகரம் தளர்ந்து கொடுத்தபாடில்லை. இப்போரிலே நடந்த அதிசயிக்கத்தக்க பல வீரச் செயல்களைப்பற்றி **ஹோமர்** (Homer) எழுதிய **இலியட்** (Iliad) என்ற காவியத்திலே விரிவாகக் காண்கிறோம். இச்சண்டையிலே ட்ராய் அரசுக்கு விரோதமாகப் பங்கு கொண்டவர்களுள் **இதாகா** (Ithacca) நகரின் மன்னனாகிய **ஒடிஸஸ்** (Odysseus) என்பவனும் ஒருவன். இவன் மிகுந்த அறிவாளி. தந்திரங்களிலே வல்லவன். பொதுவில் நல்லவன். அவனுடைய ரகசிய ஆலோசனையின்படி ஒரு பிரம்மாண்டமான மரக்குதிரை ஒன்று செய்யப்பட்டது. அதனுள்ளே **ஒடிஸஸ்ஸும்** அவனது சகாக்களான வேறு பல வீரர்களும் ஒளிந்து கொண்டார்கள். தங்களின் சாதுர்யமான சூழ்ச்சியால் ட்ராய் நகரத்தைச் சேர்ந்த வீரர்களையே இக்குதிரையை ட்ராய் நகரத்துக்குள்ளே எடுத்துச் செல்லச் செய்தனர். நடு இரவில் **ஒடிஸஸ்ஸும்** அவனுடைய ஆட்களும் மரக்குதிரையினுள்ளிருந்து வெளிவந்து கோட்டைக் கதவுகளைத் திறந்துவிட்டு, முன்னேற்பாட்டின்படி ஏற்கனவே கோட்டைக்கு வெளியே தயாராகக் காத்துக்கொண்டிருந்த தம் படையினரை உள்ளே கூட்டம் கூட்டமாக வரவிட்டனர்.



ட்ராய் நகரத்துக்கு உடனே தீ வைக்கப்பட்டது. இரு தரப்பு வீரர்களுக்கும் கடுமையான போர் நடந்ததெனினும் வெகுசீக்கிரத்தில் ட்ராய் நகரமே அழிந்து சாம்பலாகிவிட்டது. இக்கதையை அடிப்படையாக வைத்து **அலெக்ஸாண்டர் எர்ஸ்கின்** (Alexander Erskine) என்ற புகழ்பெற்ற எழுத்தாளர் "**ஹெலனின் அந்தரங்க வாழ்க்கை**" (The Private life of Helen of Troy) என்ற அற்புதமான நவீனம் ஒன்று எழுதியுள்ளார்.

மகாகவி ஹோமர் (Homer) எழுதிய **இலியட்** (Iliad) **ஒடிஸ்ஸி** (Odyssey) என்ற இரு நூல்களும் நமது ராமாயணம், மகாபாரதம் போன்ற பெரும் இதிகாசங்களாகக் கிரேக்க மக்களால் போற்றப்படுகின்றன. **வெர்ஜில்** (Virgil) என்ற கவி எழுதிய **எனிட்** (Aeneid) என்ற நூலும் அவ்வாறே கருதப்படுகின்றது. இவர்கள் இருவரும் சரித்திர காலத்திற்கு முற்பட்டவர்கள். மகாகவி ஹோமர் உலகப் பிரசித்தி பெற்ற மேதையாவர். "**இதிகாசக் கவிதை**" (Epic Poetry)யின் தந்தையென்றே அவர் கருதப்படுகிறார். அவரது நூல்களாகிய **இலியட், ஒடிஸ்ஸி** இரண்டும் உலகின் பல மொழிகளிலே பெயர்க்கப்படுகின்றன. அந் நூல்களின் கவிதையழகையும் கருத்தழகையும் அந் நூல்களை நேரில் படித்தவர்களே உணர்வர். மொழி பெயர்ப்பில் படிக்கும் பொழுதே அவற்றின் சுவை நம்மை மிக உயர்ந்தரகமான உணர்ச்சிகளிலும், ஆத்ம இன்பத்திலும் ஆழ்த்துகின்றது. ஏதோ ஒரு தெய்வீகக் கிறுக்கில் எழுதப்பட்ட நூல்கள் போல அவை காணப்படுகின்றன. இந்நூல்களிலே காணப்படும் லட்சிய வீரர்களுடன் நாம் மானஸீகத் தொடர்பு கொள்ளும்பொழுது, அவர்களை நம் இனத்தவரென்று கருதிக்கொள்ள நாம் ஆசைப்படுகின்றோம். கம்பன், காளிதாஸன், வால்மீகி இவர்களின் நூல்களில் காணப்படும் மாவீரர்களைப் போன்றே

அவர்கள் காணப்படுகிருர்கள். அவர்கள் பேசுவதைப் போன்றே இவர்களும் பேசுகிருர்கள்.

இத்தகைய மாபெரும் கவிஞரான ஹோமரைப் பற்றிய வரலாறு நமக்குச் சரிவரக் கிடைக்கவில்லை. ஒரு சில ஆதாரங்களைக் கொண்டு ஒரு சில முடிவுகளுக்கு மட்டும் நம்மால் வர முடிகின்றது. அவர் ஏழ்மை வாழ்வின் அடிமட்டத்தில் உழன்றிருக்கிருர். அந்தகராயிருந்த அவர் பிறரிடம் பிச்சையேற்று உண்ண வேண்டிய நிலையிலே இருந்திருக்கிருர். அவர் வாழ்ந்த காலத்தில் அவரை எவரும் ஏறெடுத்துப் பார்க்கவில்லை. அவருடைய மேதையை எவரும் புரிந்திருந்ததாகவோ, மன்னர்கள் பிரபுக்கள் எவரும் அவரின்மேல் இரங்கி அவரை ஆதரித்ததாகவோ, எள்ளளவு சான்றுகூட நமக்குக்கிடைக்கவில்லை. அவர் எங்குப் பிறந்தார், எந்தக் காலவறையறையில் பிறந்தார் என்பதுபற்றிப் பல்வேறு அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. ஒவ்வொரு சாராரும் அவரவர்களுடைய அபிப்பிராயத்தை நிலைநாட்ட எத்தனையோ காரணங்களை எடுத்துச் சொல்லி வாதிக்கின்றனர். ஏழு பெரிய நகரங்கள் ஹோமர் தங்களுக்குத்தான் சொந்தம், ஹோமர் தங்களின் நகரத்தில்தான் தோன்றினுர், வளர்ந்தார் என்று ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக் கொள்வதாகக் கூறும் இரண்டு அடிகள் ஆங்கில மொழியிலே உண்டு. அந்த ஏழு பெரிய நகரங்களின் வாதங்களுக்கு ஆதாரம் அவைகளினூடே ஹோமர் ஒரு காலத்தில் வழக்கமாக அடிக்கடி பிச்சையெடுத்துச் சென்றதுதான். ஹோமர் உயிரோடிருந்த காலத்தில் அவரைப் புறக்கணித்து ஒறுத்துத் தள்ளிய நகரங்கள் இன்று அவரைத் தம்மவர் என்று சொல்லிக் கொள்வதிலே அளவற்ற பெருமையடைகின்றன. காலத்தின் கதிதான் எப்படியெல்லாம் செல்கின்றது!



Seven famous cities Contend for Homer dead
Through which the living Homer begged his bread.

வையத்தைப் பாலிப்பதற்காக எந்த இன்னலையும் ஏற்றுக்கொள்ளும் சான்றோர் பலரின் நிலை இவ்வாறே இருந்திருப்பதைப் பல நாட்டு வரலாறுகளிலே காண்கிறோம். சத்தியத்தைப் பேசிய சாக்ரட்டீஸுக்கு விஷபானத்தைக் கொடுத்த சமூகம்தானே இது! சாக்ரட்டீஸைப் போன்ற மேதையருள் மேதையை உலகிற்கு அளித்தவர்களும் கிரேக்க மக்கள்தாம்! அவனுக்கு விஷக் கோப்பையை நாடறியக் கொடுத்து அதிலே பெருமிதமடைந்தவர்களும் கிரேக்க மக்கள்தாம்! எது எவ்வாறிருப்பினும், இருண்டு போயிருந்த ஐரோப்பியக் கண்டத்துக்கு ஞான ஒளியீந்த ஆத்மப் பெருவிளக்காகவே கிரேக்கம் ஒரு காலத்தில் விளங்கியது.

'ஹோமரைப் பற்றி நமக்குத் தெரிந்த அளவுகூடக் கிரேக்கர்களுக்குத் தெரியாது" என்று வுட்ஹவுஸ் (Woodhouse) என்ற ஆசிரியர் சொல்லுகின்ருர். இது உண்மை. பிற்காலத்திய கிரேக்கர்கள் அனைவருக்குமே ஹோமரின் மேல் அளவிறந்த பக்தி ஏற்பட்டுவிட்டது. பக்தி அதிகப்படும்பொழுது ஆராய்ச்சிக்கு மனம் அதிகம் இடம் கொடுப்பதில்லை. ஹோமரைப் பற்றிய அநேகத்தை அழகிய கட்டுக்கதைகள் (Legends) உற்பத்தி செய்து அதிலே இன்பங் கண்டார்கள் கிரேக்க மக்கள். கற்பனைக் கதைகளிலே அவர்களுக்குக் கிடைக்கும் இன்பம் வர்லாற்று உண்மைகளிலே அவர்களுக்குக் கிடைப்பதில்லை. மேலும், எம்மக்களும் தாம் தொழுது போற்றி வந்தனை செய்யும் ஒரு பெரியாரின் வரலாற்றைச் சோதனைக்குட்படுத்தவோ ஆராய்ச்சிக்குட்படுத்தவோ விரும்பமாட்டார்கள். அதை மற்றவர்கள் செய்ய வேண்டும். இதனால் கிரேக்க மக்கள் மூட நம்பிக்கைகளிலே பற்றுக்கொண்டவர்கள், ஆராய்ச்சி மனப்பான்மை அற்றவர்கள் என்று கூறமுடியாது.

அகவாழ்வுத் துறையிலும் புறவாழ்வுத் துறையிலும் அளவைக் கடந்து ஆராய்ச்சிகள் செய்து, தாங்கள் சேகரித்த அரிய ஞானத்தைப் பல்வேறு சிந்தாந்தங்களாக ஆக்கி உலகிற்கு அளித்தவர்கள் கிரேக்கர்கள். வரலாறு வேறு, கற்பனை வேறு என்ற பாகுபாட்டை நன்கு உணர்ந்து, வரலாற்றில் கலந்திருந்த கற்பனையை அறவே அகற்றி உண்மையை முதல் முதலில் அரியாசன மேற்றியவர்களும் கிரேக்கர்களே. உன்னதமான சரித்திர இலக்கியம் கிரேக்க நாட்டில் வளர்ந்தது போன்று வேறு எந்நாட்டிலும் பண்டைக் காலத்தில் வளர்ந்ததில்லையென்று நிச்சயமாகக் கூறலாம். அவர்களுடைய சரித்திரம் பல்வேறு காலங்களில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பலவற்றின் வெறும் தொகுப்பல்ல; மனித அறிவு, ஆத்மம் இவற்றின் எழுச்சி வீழ்ச்சி, வளர்ச்சி, இவைகளை வரைந்து காட்டும் முயற்சியாகவே அவர்களின் சரித்திரம் விளங்கியது. தமது பகுத்தறிவையும் தத்துவ ஞானத்தையும் கொண்டு அரசியல், சமுதாய நிகழ்ச்சிகளை விமரிசனம் செய்து சரித்திரத்தை எழுதியவர்கள் முதன் முதலில் கிரேக்கர்களே. ப்யூரி (Bury) என்ற சரித்திர அறிஞர் அழகிய சில வாக்கியங்களிலே இந்த அபிப்பிராயத்தை வலியுறுத்துகிறார். ("Greeks were not the first to chronicle human events, but they were the first to apply criticism. And that means, they originated history"–Bury) சரித்திரத்தைத் தேனினும் இனிய அழகிய கவிதை வசனத்திலே எழுதுவதில் கிரேக்கர்கள் நிகரற்றவர்கள். ஹிரோடோடஸ் (Heredotus) என்ற கிரேக்க அறிஞர் பெர்ஸியப் போர்கள் பற்றி எழுதியுள்ள சரித்திர நூலையும், தூ-ஸிடிடஸ் (Thucydides) என்ற கிரேக்க அறிஞர் பெலபோனிஸியன் யுத்தங்களை (Pelepponesian)ப் பற்றி எழுதியுள்ள சரித்திர நூலையும் நன்கு படித்தவர்களுக்கு இந்த உண்மை தெள்ளிதில் விளங்கும்.



கவிதைப் பித்தர்களாகிய கிரேக்கர்களின் வசனமும் கவிதை போன்றே இருந்ததில் ஆச்சரியமெதுவுமில்லை. எனினும் கிரேக்க வசனங்களில் கருத்துக்கள் வெள்ளிடை மலைபோல் தெள்ளத்தெளிவாக, ஒன்றோடொன்று குழம்பாது, தனித்தனியே வலிவுடன் நிற்பதைக் காண்கிறோம். தர்க்க சாத்திரத்திலே வல்லவர்களான கிரேக்கர்களின் வசனம் சரியான வாதப்பிரதிவாதங்களுடன் கற்கோட்டை போன்று விளங்குவதைப் பல அறிஞர்கள் போற்றி வியந்திருக்கின்றனர். அத்தகைய வசனத்தைக் கொண்டு சரித்திரத்தை எழுதும்பொழுது சரித்திரமும் வன்மை பெறுகின்றது. அதனுடைய உண்மைகள் நம் உள்ளத்தில் கல்வெட்டுகள் போல் பதிகின்றன.

கிரேக்க அரசியல் கிரேக்க வரலாற்றின் மிக முக்கியமான பகுதியாகும். ஆதியில் கிரீஸ் தேசம் ஒரு தனி அரசாக விளங்கவில்லை. பல நகர—ராஜ்யங்கள் (City—States) ஆங்காங்கே தோன்றித் தனித்தனியாக அரசோச்சி வந்தன. நகர—ராஜ்யம் ஒவ்வொன்றும் தன் எல்லைக்குள் வாழ்ந்த மக்களின் அரசியல், பொருளாதாரம், சமுதாயம், மதம், அறிவு ஆகிய சக்திகளுக்கு ஒரு தனிப்பெருமையாக விளங்கி அவற்றை இயங்க வைத்தது. ("The City—State is a State in which the whole life and energy of the people, political, intellectual and religious, is focussed at one point, and that point is a City"—Fowler). தற்காலத்திய அரசியல் கொள்கைக்கு இது முற்றிலும் மாறுபட்டது. இப்பொழுது எத்தனையோ மாகாணங்களையும் நகரங்களையும் கொண்ட நிலப்பரப்பை, ஏதாவது ஒரு நகரத்தைத் தலைநகராக வைத்துக்கொண்டு, மக்கள் அரசு புரிகின்றனர். அக்காலத்திலே கிரீஸிலே இருந்த நகர ராஜ்யங்கள் என்பவை மிகச் சிறிய நிலப்பரப்பையும் ஜனத்தொகையையும் கொண்டிருந்தன. பல நகர—

ராஜ்யங்களின் ஜனத் தொகை 10,000லிருந்து 15,000க்குள்தான் இருந்தது. அதில் வாழ்ந்த மக்கள் ஏறக்குறைய அனைவரும் ஒருவரையொருவர் நன்கு அறிந்தவர்களாகவே இருந்தார்கள். அவர்களின் அகவாழ்வு புறவாழ்வு அனைத்திலுமே அரசியல் ஓரளவு அதிகமாகவே படர்ந்தது. அரசியலிலே பொதுவாகக் கிரேக்க மக்கள் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். அரசியலில் ஏதாவதொரு முறையில் பங்குகொள்ளாத நாட்களையும் அரசியலைப் பற்றிப் பேசாத நாட்களையும் வீண் நாட்கள் என்று கருதினார்கள். அரசு வேறு, சமுதாயம் வேறு (State and Society) என்று நாம் இக்காலத்தில் பாகுபாடு செய்வதைப்போல் அக்காலத்திய கிரேக்க மக்கள் செய்யவில்லை. அரசும் சமுதாயமும் ஒன்றாகவே விளங்கியது. எனினும் இந்நிலைமை ஒரு குறிப்பிட்ட காலக்கட்டம் வரையிலும்தான் நீடித்தது.

நகர—ராஜ்யங்கள் சிறுசிறு நிலப்பரப்புக்களில் சிறிய ஜனக்கூட்டங்களிடையே இயங்கி வந்தமையால், மிகச் சாதாரண மனிதரும்கூட அரசியலைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கும் அரசியலைப் பற்றித் திரும்பத் திரும்பச் சிந்திப்பதற்கும், அரசியல் பிரச்சினைகளைப் பற்றி அபிப்பிராயங்களளிப்பதற்கும், அரசியல் தலைவர்களின் செயல்களையும் போக்குகளையும் கூர்ந்து கவனித்து, அவ்வப்பொழுது தமது திருப்தியையும் அதிருப்தியையும் வெளிப்படுத்துவதற்கும் வாய்ப்புக்கள் நிறைய இருந்தன. அரசில் அங்கம் வகித்த தலைவர்களுக்கும் மக்களின் துன்ப துயரங்களையும், குறைவு நிறைவுகளையும், நேரடியாகக் கண்டு நிலைமையைச் சரிவர உணரவும் முடிந்தது. அரசினரும் மக்களும் நேர்முகமாக ஒருவரையொருவர் சந்தித்துத் தங்களின் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடிக்கொண்டனர். அரசினர் பொது மக்களினின்றும் தம்மை வேறாகக் கருதவில்லை. பொதுமக்களும் தாங்கள் வேறு, அரசினர்



வேறு என்று நினைக்கவில்லை. நகர—ராஜ்யங்களின் அரசியல் வாழ்விலே எவ்வளவோ பொறாமை, பூசல்களும் சூழ்ச்சிகளும் இருந்தன என்பது உண்மை. எனினும் அரசியல் ஞானமும் ஓரளவு அதிலே துலங்கிற்று என்பதை எவரும் ஒப்புக்கொள்வர்.

அரசியலை மனிதன்தான் உருவாக்குகின்றான். மனிதனுடைய விருப்பு வெறுப்புக்களுக்குக் கட்டுப்பட்டதுதான் அரசியல். மனிதன் விரும்பினால் ஒரு அரசியல் அமைப்பை வைத்துக் கொள்கிறான்; இல்லாவிட்டால் அதை உடைத்தெறிந்துவிட்டு இன்னொன்றை ஆக்கிக் கொள்கிறான். இதையே நாம் புரட்சி என்கிறோம். இது அமைதியான நீண்ட காலப் புரட்சியாக இருக்கலாம்; அல்லது பலாத்காரமான திடீர்ப் புரட்சியாக இருக்கலாம்; அல்லது படிப்படியான மாற்றமாகவும் இருக்கலாம். எது எப்படியிருப்பினும் மனிதனுடைய விருப்பை ஒட்டி அரசியல் அமைப்பு மாறுகின்றது. மனிதனுடைய விருப்பு வெறுப்புக்களுக்கிணங்க அரசியல் அமைப்பு மாறும்பொழுதும்கூட, சில பலமான அடிப்படை விதிகளும் மர்மமாக இயங்குவதை அறிஞர்கள் ஆராய்ந்து கண்டிருக்கின்றனர். இவ்விதிகளுக்கிணங்கியே அரசியல் அமைப்புக்களும் ஓரளவு மாறுகின்றன. மனிதனுடைய விருப்பு வெறுப்புக்களிலும் சில விதிகளும் நியதிகளும் தோன்றி வேலை செய்கின்றன. அத்தியாவசியமான தேவைகளால் வலிய உந்தப்பட்டாலொழிய மனிதர்கள் தங்களின் அரசியல் அமைப்பை மாற்ற விரும்புவதில்லை. எந்தச் சமயத்தில் எந்த மாதிரி அரசியல் அமைப்பை நாம் விரும்புவோம் என்று நாமே சொல்ல முடியாது. ஸ்காப்பன் ஹாயர் (Schopen hauer) என்ற ஜெர்மானிய தத்துவஞானி கூறுவதைப்போல், நாம் விரும்பியதை வேண்டுமானால் நாம் செயலில் ஆக்க முடியும்; நாம் எதிர்காலத்தில் எதை விரும்புவோமென்று இப்பொழுதே

முடிவுகட்டிக்கொள்ள முடியாது ("Man can do what he wills, but he cannot will what he will will"—Schopenhauer). எனவே அந்தந்தக் காலத்தில் நம்மையுமறியாமல் எங்கெந்தச் சூழ்நிலைகள் ஏற்படுகின்றனவோ, அவைகளுக்கிணங்கவே நம் விருப்பு வெறுப்புக்களும் தோன்றி வேலை செய்கின்றன. 20 ஆண்டுகட்குப் பிறகு நாம் எதை விரும்புவோம், நமது சட்டங்களிலே என்ன திருத்தங்களைக் கொண்டு வருவோமென்று இப்பொழுதே நாம் திட்டங் கட்டிவிட முடியாது. எனவே, ஒரு பார்வையில், அரசியல் அமைப்பு என்பது நம் இச்சைக்குக் கட்டுப்பட்டதெனினுங்கூட, இன்னொரு பார்வையில் அது நம்மையுங் கடந்து நிற்கின்றது. **ஹெகல் (Hegel)** என்ற அரசியல் ஞானி சரித்திரம் எந்த விதிகளை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றது என்பதை மையமாக வைத்து ஒரு பெரிய தத்துவ சித்தாந்தத்தையே நிர்மாணித்திருக்கிறார். அவருடைய நூல்களைப் படித்தவர்கட்குச் சரித்திரம் காலத்துக்குக் காலம் எவ்வாறு மாறுகிறது என்ற மர்மம் ஓரளவு புரியும். சரித்திரம் என்பது மனித சக்தியின் இயக்கமெனினும் புவன சக்தியும் ஓரளவு அதில் வெளிப்பட்டு இயங்குகிறது. நாம் சரித்திரத்தை உருவாக்கலாம். ஆனால், சரித்திரமும் ஓரளவு நம்மை உருவாக்குகிறது என்பதை மறுப்பதற்கில்லை. சரித்திரத்தை நாம் எந்த அளவுக்கு நிர்மாணிக்கிறோமோ அந்த அளவுக்குச் சரித்திரமும் நம் மனோ அமைப்பை நிர்மாணிக்கிறது என்பது சித்தாந்த உண்மை மட்டுமல்ல, அனுபவ உண்மையுங்கூட.

கிரேக்க மக்கள் பல்வேறு காலக் கட்டங்களில் தங்கள் விருப்பம் போல் தங்களின் அரசியல் அமைப்பை மாற்றி மாற்றித் தங்களின் வசதிக்கேற்ப அமைத்துக் கொண்டார்கள். ஆனால், எந்தக் காலத்தில் தங்கள் அரசியல் அமைப்பு மாறும், எவ்வாறு மாறும், என்ன கார



ணங்களால் மாறும், மாறிய அரசியல் அமைப்பு எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதெல்லாம் அவர்களுக்கே தெரியாது கிரேக்கர்களென்ன, எவருமே அரசியல் சமுதாய சக்திகளின் போக்கையும் கதியையும் மாற்றத்தையும் திட்டப்படுத்திச் சரிவர முன்கூட்டியே அறிவிக்க இயலாது! இருப்பினும் கிரேக்கர்கள் தங்களின் அரசியல் அமைப்பை மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டு அதற்குரிய காலமும் வந்தபொழுது, அதை மாற்றத் தவறவில்லை. அரசியலிலே அபாரமான உற்சாகத்தைக் காட்டியவர்கள் கிரேக்கர்கள். அவர்களின் காதல் பேச்சுக்களில்கூடச் சமயங்களில் அரசியல் ஊடாடும். அறிவிற்கும் அழகுக்கும் கிரேக்கர்களைப் போல் மதிப்பளித்தவர்கள் உலகில் வேறு எவருமே கிடையாதெனக் கூறலாம். இந்த உணர்ச்சியைத் தங்களின் அரசியலிலும் அவர்கள் காட்டினார்கள். தங்கள் அரசியல் அமைப்பு முற்றிலும் தங்களின் அறிவிற்கு இயைந்ததாக ஆகும் வரை அவர்கள் ஓயமாட்டார்கள். அத்துடன் அவர்களின் அரசியல் கட்டுக்கோப்பு சரியான விகிதங்களுடன் அழகாக இணைந்து அமைந்து தங்களின் சிந்தைக்கு இதம் அளிக்கும் வரை அதைத் திருத்திக் கொண்டேயிருப்பார்கள்; அல்லது அதை ஓயாது எடுத்துச் சொல்லிப் பிரச்சாரம் செய்து கொண்டேயிருப்பார்கள். வாழ்வை நன்கு சுவைத்துப் பார்த்து அனுபவிப்பதற்கு அரசியலை ஆதார உபகரணமாகக் கொண்டவர்கள் கிரேக்கர்கள். சரித்திர காலத்துக் கிரேக்கக் குடிமகன் ஒருவனைச் சந்தித்து, அவனுடைய நகரத்து அரசிலே உள்ள சில கோளாறுகளையும் குற்றங்குறைகளையும் சுட்டிக்காட்டி இவற்றிற்கு யார் பொறுப்பு எனக் கேட்டால் அவன் முதலில் தன்னைத்தான் சுட்டிக் காட்டியிருப்பான். கிரேக்க மக்கள் தங்களின் அரசியலில் எவ்வளவு அக்கறை காட்டினார்கள் என்பதற்கு எத்தனையோ குட்டிக் கதைகள் உண்டு. எதை வேண்டு

மாஞலும் கிரேக்கர்கள் அடுத்தவர்களுக்குத் தியாகம் செய்வார்கள். தங்களுடைய அரசியல் கருத்துக்களையும் கொள்கைகளையும் எந்தச் சூழ்நிலையிலும் எவருக்காகவும் தியாகம் செய்யமாட்டார்கள். கிரேக்கர்கள் வாழ்வை வெறுத்தவர்க ளல்லர். வாழ்வை விரும்பி அதிலே மோகங்கொண்டு வாழ்ந்தவர்கள். எனவே தன்னம்பிக்கையும் தைரியமும் அவர்களுக்கு நிறைய உண்டு. இந்த இரு குணங்களையும் மக்கள் பெருவாரியாக அரசியலில் கலக்கும்பொழுது அரசியலின் தன்மையும் உருவுமே மாறுகின்றது. வெற்றி மனப்பான்மை உடையவர்களின் அரசியல் ஒரு மாதிரி இருக்கும்; தோல்வி மனப்பான்மை யுடையவர்களின் அரசியல் முற்றிலும் வேருெரு மாதிரி இருக்கும்.

ஆதியிலே கிரேக்க அரசியலில் மேம்பட்டு விளங்கியது முடியாட்சியே. அரசன் கடவுளுக்குச் சமானமாக, கடவுளின் பிரதிநிதியாகக் கருதப்பட்டான். அவனுடைய அபிப்பிராயங்களும் முடிவுகளும் கடவுளின் பேரருட் சக்தியால் தோன்றியவை என்று மக்கள் நம்பிஞர்கள். அரசர்கள் தெய்வங்களின் வம்சாவளியில் வந்தவர்கள் என்று அவர்கள் நம்பிஞர்கள். சகல பொறுப்புக்களையும் அரசனே வகித்தான். சட்டத்தை ஆக்குபவனும் அவனே; சட்டத்தை அமுல்படுத்துபவனும் அவனே; சட்டத்தை மீறியோர்களைத் தண்டிக்கும் நீதிபதியும் அவனே. மத விஷயங்களில் தனது குடிமக்களின் வாழ்வை அவன் முற்றிலும் கட்டுப்படுத்திஞன். அவனது ஆணைகள் மத விஷயங்களில் வேதவாக்காக விளங்கின. மக்களுக்கு அரசன்தான் பிரதானமான தலைமை மதகுருவாக விளங்கிஞன். மக்களுக்குள் ஏற்பட்ட சண்டை சச்சரவுகளையும் விவகாரங்களையும் அவன் உடனுக்குடன் தீர்த்து வைத்தான். அவனின் தீர்ப்புக்கள் எந்தச் சட்டத்தையும் அடிப்படையாகக் கொண்டவை யல்ல. அவ்வப்பொழுது அவனின் சிந்



தனையும் அறிவும் நியாயமென்று கூறியதை அவன் மக்களுக்குத் தீர்ப்பாக வழங்கிஞன். உரோமரின் நூல்களிலே இப்படிப்பட்ட அரசனைத்தான் நாம் காண்கிருேம்.

அரசனுக்கு உதவ ஒரு மந்திராலோசனை சபை இருந்தது. ஆங்கிலத்தில் இதை (Council of Elders) என்று அழைக்கலாம். இந்த ஆலோசனைக் குழுவில் வழக்கமாகப் பிரபுக்களும், இளவரசர்களும், அறிவுமிக்க சான்ருேர்களும் அங்கம் வகித்தனர். மக்கட் பிரிவு (Clans)கள் பலவற்றின் தலைவர்களும்கூட இதில் அங்கம் வகித்திருக்கக்கூடுமோவென்று சமயங்களில் நாம் நினைக்கத் தோன்றுகிறது. இருப்பினும் ஜீயஸ் என்ற கிரேக்கப் பெருந் தெய்வத்தின் பரம்பரையிலே வந்தவர்கள் என்று கருதப்பட்ட கோமான்களும் சீமான்களுமே இதில் அங்கம் வகித்திருப்பர் என்று முடிவு கட்டுவதுதான் சரியெனத் தோன்றுகிறது. இவர்களின் யோசனைகளையும் அறிவுரைகளையும் அரசன் அடிக்கடி நாடிஞன். இவர்களின் யோசனைகளை அரசன் கட்டாயம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ப தில்லை. ஆஞல், அனுபவத்தில் அவர்களுடைய யோசனைகளுக்கு அவன் பெருமதிப்பளித்திருக்க வேண்டும். அவன் கடவுளின் பிரதிநிதியென்று கருதப்பட்டதால் அவர்களின் யோசனைகளை அவன் முற்றிலும் புறக்கணித்தாலும்கூட, அவனை எவரும் குற்றஞ்சாட்டவோ, பழித்துக் கூறவோ துணிந்திரார். இந்த மந்திராலோசனைக் குழுவை முற்றிலும் சக்தியற்ற ஸ்தாபனம் என்றும் சொல்வதற்கில்லை. காலமெல்லாம் [illegible] வருவார்கள் தனமாக அரசனை இவர்கள் பின்பற்றி [illegible] என்று எவரும் எதிர் பார்க்க முடியாது. [illegible] திற்கப்பால் முடியாட்சி அகற்றப்பட்டு [illegible] நாம் சீமான்களின் (Aristocracy) ஆட்சி ஏற்பட்டது [illegible] பின்ஞல் பார்ப்போம். அதற்கு இந்த மந்திராலோசனைக் [illegible]

குழுவே வித்தாக இருந்தது. இக்குழுவிலிருந்தே அது கருக்கூடியது.

மேற்சொன்ன மந்திராலோசனைக்குழு தவிர, மக்கள் சபையும் ஒன்று அரசின் கீழ் இயங்கியது இது வழக்கமாக நகரத்தின் சந்தை கூடும் இடத்திலே கூடியது. விரும்பிய போதெல்லாம் தனது விருப்பங்களை இக்குழுவுக்குத் தெரிவிப்பதற்காகவும், அவர்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்வதற்காகவும் அரசன் இச்சபையைக் கூட்டினான். தானும் மந்திராலோசனைக் குழுவும் சேர்ந்து எடுத்த முடிவுகளையும் இச்சபையினிடத்தில் அரசன் அடிக்கடி சொல்வதுண்டு. போர்கள் நிகழ்ந்த காலத்தில் இந்த மக்கள் சபையை அரசன் அப்படியே போருக்கும் அழைத்துச் சென்றான். பிரச்சினைகளைத் தமக்குள் விவாதித்து முடிவுக்கு வரக்கூடிய உரிமையோ, அரசனின் முடிவுகளை எதிர்த்து மறுக்கும் உரிமையோ இந்தச் சபைக்குக் கிடையாது. மக்கள் தங்களுக்கிருக்கக் கூடிய தேவைகள் குறைகளைப் பற்றியும் இச்சபையில்தான் அரசனிடம் சொல்வதுவழக்கம். எதிர்காலத்திலே வரவிருந்த குடியாட்சி இந்த மக்கள் சபையிலிருந்துதான் கருக்கூடியது. எந்தப் பொறுப்புக்களும் அதிகாரங்களும் உரிமைகளும் இல்லாது போயினுங்கூட, சில மக்களை ஒன்றாகக்கட்டி அவர்களை ஒரு சபை என்று ஆக்கும்பொழுது அச்சபைக்கு இயற்கையிலேயே நாளடைவில் ஒரு முக்கியத்துவம் ஏற்பட்டு விடும். அரசன் கடவுளின் பிரதிநிதியாக இருந்தாலும் கூட, மற்றவர்கள் தங்களுக்கிருக்கக் கூடிய அறிவிற்குக் காலமெல்லாம் விலங்கிட்டு வைத்திருக்க முடியாது. அறிவு வளர வளர அது சில உரிமைகளைக் கேட்கும். கேட்டுக் கிடைக்காவிட்டால், அவ்வுரிமைகளைத் தானே வலிய எடுத்துக்கொள்ள அது முயலும். மனிதனின் அறிவு வளர்ச்சியை எவர் தடுக்க முடியும்? எவ்வளவுகாலம் தடுக்க முடியும்?



நமது காவியங்களிலும் புராணங்களிலும்கூட, உதாரணமாக இராமாயணம், மகாபாரதம் போன்ற நூல்களில், சூரிய குலத்தரசர்கள் பலரையும், சந்திர குலத்தரசர்கள் பலரையும் காண்கிறோம். இது போன்று பல தெய்வங்களின் வமிசாவளியில் வந்த பல மன்னர்களைக் காண்கிறோம். நம் நாட்டில் மட்டுமல்ல, ஆசிய நாடுகள், இன்னும் மற்ற ஐரோப்பிய நாடுகள் பலவற்றின் புராண இதிகாசங்களை ஆராய்ந்தோமானால் கடவுள்கள் வழி வந்த இத்தகைய அரசர்கள் பலரைக் காண்கிறோம். அரசர்கள் நீதியினின்றும் தர்மத்தினின்றும் தவறாதிருப்பதற்கு அரசர்களுக்கு இது ஒரு வலிய நினைவூட்டாக அந்தக் காலத்திலே இருந்திருக்கக் கூடும். தாங்கள் தெய்வ பரம்பரையில் வந்தவர்கள் என்பதை அரசர்கள் அடிக்கடி நினைவுறுத்திக் கொண்டால், தாங்கள் சத்தியம், தர்மம் இவற்றின் காவலர்கள் என்பதையும், உயிர்களனைத்தையும் தெய்வத்தைப் போல் நின்று கண்ணுங் கருத்துமாகக் காப்பது தங்களின் தலையாய கடமை என்பதையும் அவர்கள் எளிதில் மறக்க மாட்டார்கள். அதே சமயத்தில் பொது மக்களினின்று தாங்கள் முற்றிலும் வேறுபட்ட உயர்ந்த இனம் என்ற இறுமாப்பும் வளரக்கூடும். மன்னர்களிடம் இறுமாப்பு வளரும்போது, நீதி தவறுகின்றது. கொடுங்கோன்மை ஆரம்பமாகின்றது. மெய்யல்லாதது மெய்யாகவும், அதர்மம் தர்மமாகவும் மன்னனுக்கு மாறித் தோன்ற ஆரம்பிக்கின்றன. தர்மத்தின் காவலனுடைய கரங்களாலேயே தர்மம் சிறிது சிறிதாக அழிய ஆரம்பிக்கின்றது.

முடியாட்சி நீடித்து நிலைக்க வேண்டுமானால், மன்னன் ஆளும் நாடு மாபெரும் நிலப்பரப்புடையதாய் விளங்க வேண்டும். அப்பொழுதுதான் பொது மக்களின் கண்களும் கருத்தும் அரசனின் அந்தரங்க வாழ்விலே பிரவேசிக்காமலிருக்க வழி ஏற்படும். மன்னனுக்கும்

பொது மக்களுக்கும் இடையே அதிகமான இடைவெளி இருக்கக் கூடாது. முற்றிலும் இடைவெளி இல்லாமலிருக்கவும் கூடாது. அரசன் என்பவன் கடவுளல்லன். அவனும் மனிதனே. மனிதர்களுக்கிருக்கக் கூடிய குற்றங்குறைகள் அவனிடத்திலும் காணப்படலாம். அவனது சொந்த வாழ்வு பொது வாழ்வைப்போல் எல்லோருக்கும் தெரியும்பொழுது, அதைப்பற்றி மக்களிடையே எவ்வளவோ சர்ச்சைகளும் விவாதங்களும் தோன்றும். அரசனுடைய பிரத்தியேக வாழ்வு பிறரறியாது பிரத்தியேகமாகவே இருந்துவிடுதல் அவனுக்கும் நன்று, பொது மக்களுக்கும் நன்று. தன் சொந்த வாழ்விலே அவன் நல்லவை என்று கருதுபவை பொது மக்கள் பலருக்குக் கெட்டவை என்று தோன்றலாம். அவன் தன் உற்றார் உறவினர் நண்பர்களுடன் நடந்துகொள்ளும் முறை பொது மக்களில் பலருக்குப் பிடிக்காது போகலாம். அவன் இழைக்கும் மிகச் சாதாரணமான தவறுகள்கூடப் பொது மக்கள் பலருக்கு மிகப் பெரிதாகத் தோன்றலாம். எந்தத் தோழர்களுடன் தன் அபிப்பிராயங்களை அரசன் பகிர்ந்து கொள்ளுகிறானோ அத்தோழர்களில் பலரைப் பொது மக்கள் சந்தேகிக்கலாம். அரசனின் அந்தரங்க நிறைவு குறைவுகள் அம்பலமாகும்பொழுது அரசனின் மேல் பொது மக்களுக்குள்ள மதிப்பும் மரியாதையும் குறைய ஆரம்பிக்கிறது. அரசனின்சொந்த வாழ்வு பற்றிய விவரங்கள் சதா பொது மக்களிடையே அம்பலமாகிக் கொண்டிருந்தால், மன்னன் தங்களைப் போன்று சாதாரணமானவன்தான், அல்லது தங்களிலும் சாதாரணமானவன் என்று சில சமயங்களில் பொது மக்கள் நினைக்க ஆரம்பித்து விடுவர். சொந்த வாழ்வை மிகமிகத் தூய்மையுடன் நடத்திய எத்தனையோ மன்னர்களின்மேல், அரைகுறைச் செய்திகளையும் ஆதாரமற்ற வதந்திகளையும் வைத்துக்கொண்டு, பொது மக்களில் பலர் வீண் பழிகளைச் சுமத்தி



யிருக்கின்றனர். அரசனின் சொந்த வாழ்வு தூயதாயும் இருக்க வேண்டும்; அதே சமயத்தில் அந்தரங்கமாயும் இருக்கவேண்டும். கிரேக்க நகர—ராஜ்யங்களிலே இந்த அந்தரங்கத்துக்கு இடமே யில்லை. நகரத்தின் நிலப்பரப்பும் ஜனத்தொகையும் மிகச் சிறியதாய் இருக்கும்பொழுது, அரசனின் சொந்த வாழ்விலே நிகழும் குற்றங்குறைகளையும் பிழைகளையும் ஒவ்வொரு கணமும் ஆயிரக்கணக்கான கண்கள் உன்னிப் பார்க்கின்றன. அரசனுடைய குறைகள் பொது மக்களின் மனத்திலே நிறைந்தன. அவனுடைய தெய்வீகத் தன்மையிலே மக்கள் சிறிது சிறிதாக நம்பிக்கை யிழந்தனர். தங்களிடமுள்ள குறைகளே அரசனிடமும் காணப்படும்பொழுது, தங்களை வழி நடத்த அவனால் எவ்வாறு முடியும்; அவனைத் தெய்வாம்சமாக ஏன் தாங்கள் கௌரவித்துப் போற்ற வேண்டும் என்றெல்லாம் மக்கள் நினைக்க ஆரம்பித்தார்கள். இந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு மந்திராலோசனைக் குழு அங்கத்தினர்களும் அரசனுடைய அபிப்பிராயங்களையும் முடிவுகளையும் அடிக்கடி எதிர்க்க ஆரம்பித்தனர். முடியாட்சி சிறிது சிறிதாக ஆட்டங்கண்டது. மேலும் மக்கள் ஒரு பிரதேசத்திலிருந்து இன்னொரு பிரதேசத்திற்குக் குடியேறும் பொழுதும், போர்கள் நிகழும் பொழுதும்தான் அவர்களின் எண்ணங்களையும் செயல்களையும் ஒருமுகப்படுத்தி, வழி நடாத்தி வெற்றிகாண வலிய அரசாங்கம் ஒன்று தேவைப்படுகிறது; அல்லது ஒரு மன்னன் தேவைப்படுகிறான். மற்ற குழப்பமற்ற சமாதான காலங்களிலே மக்கள் அறிஞராட்சியை விரும்புகிறார்கள்; அல்லது குடியாட்சியை விரும்புகிறார்கள். கிரீனிட்ஜ் (Greenidge) என்ற பேராசிரியர் ஒருவர் [illegible]ப்பொருள் பற்றித் தம் நூலொன்றிலே மிக [illegible] எழுதியிருக்கின்றார்.

கிரீஸ் நகர—ராஜ்யங்களிலே (city [illegible]) முடி

யாட்சி தளர்ந்ததற்கு மற்றொரு காரணம், மன்னர்கள் பலர் நாளடைவில் தங்களின் அதிகாரத்தை மிக எதேச்சையாக, தங்கள் இஷ்டம்போல், தங்களின் சொந்த விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையிலே பிரயோகிக்க ஆரம்பித்ததுதான். இத்துடன் மகுடத்தைப் பறிக்கவும் அரசைக் கவிழ்க்கவும் அரண்மனைகளிலேயே சூழ்ச்சிகளும் சதிகளும் தோன்ற ஆரம்பித்தன. இத்தகைய சூழ்நிலைகளிலே முடியாட்சி முடியும் காலம் நெருங்கியது.

இந்தக் கட்டத்தில்தான் பண்டிதச் சீமான்கள் (Aristocrats) அரசியலைக் கைப்பற்றினார்கள். அது அவர்களுக்கு மிகச் சுலபமாக முடிந்தது அவர்களிடத்திலே ஆஸ்தியும் சமுதாய அந்தஸ்தும் பொது மக்களிடையே செல்வாக்கும் ஓரளவு இருந்தது இத்துடன் மந்திராலோசனைச் சபையில் வெகு காலம் அங்கம் வகித்திருந்ததனால் அரசியல் நிர்வாகத்திலும் போதிய அளவு ஞானமும் பயிற்சியும் இருந்தது. எனவே, மன்னர்களுக்கு அடுத்தாற்போல் நாட்டை ஆள்வதற்குச் சகல தகுதியும் பெற்றவர்கள் இவர்களே என்பதைப் பொது மக்கள் எளிதில் ஒப்புக் கொண்டனர். பொதுவாகவே, அரசியல் ஞானமும் நிர்வாகப் பயிற்சியும், போதாததற்கு ஆஸ்தியும் எவரிடத்தில் இருக்கின்றனவோ, அவர்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற விழைவதும், அதைக் கொண்டு நாட்டுக்கு நல்லது செய்ய விழைவதும் இயற்கை எனவே 'இப்பண்டிதச் சீமான்கள்' எளிதில் ஆட்சியைக் கைப்பற்றினார்கள். அரிய மேதாவிலாசத்துடனும் திறமையுடனும் அந்தரங்க சுத்தியுடனும் ஆட்சியை நடத்தினார்கள். மன்னர்கள் மறைந்தவுடன் உடனே ஆட்சியை ஏற்று நடத்துவதற்கு வேண்டிய அத்தனை தகுதியையும் இவர்கள் பெற்றிருந்ததால், அரசியல் கொந்தளிப்புகள் குறிப்பிடத்தக்க முறையிலே எதுவும் ஏற்படவில்லை. சில நகர—ராஜ்யங்களில் மன்னர்கள் தொடர்ந்து பதவியை வகித்தார்கள்.



எனினும் அதிகாரம் இப்பண்டிதச் சீமான்களின் கரங்களுக்குச் சென்றுவிட்டது; மன்னர்கள் சக்தியற்றுப் போய் இவர்களின் கைப்பொம்மைகளாக விளங்கினார்கள்.

கிரேக்கத் தோற்றத்தின்படி பண்டிதச்சீமான்களின் (Aristocracy) ஆட்சி என்பது மக்கள் திலகங்களின் ஆட்சி (The rule of the best). கோமான் குடும்பங்களிலும் சீமான் குடும்பங்களிலும் பிறந்தவர்களைப் பொதுமக்கள் மனிதர்களுள் மதிக்கத் தக்கவர்கள் என்று கருதினார்கள். அவர்களிடத்தில் சிறந்த பண்புகளும், உயர்ந்த குண நலன்களும், ஆன்ற அறிவும் இருக்குமென நம்பினார்கள். உண்மையில் அவர்கள் அவ்வாறே விளங்கினர். பண்டிதச் சீமான்கள் என்று சொல்லப்பட்ட இவர்கள் நல்ல சரீர வனப்பும் ஆற்றலும், போர்த்திறமையும், நிறைந்த அறிவும் பெற்று விளங்கியதோடு, சுயநலத்தை ஓரளவு அகற்றியவர்களாய்ச் சமுதாயத்திற்கு நல்லது செய்யும் விருப்பு மிகுந்தவர்களாய் விளங்கினார்கள். டங்கர் (Duncker) என்ற அறிஞர் இப்பண்டிதச் சீமான்களைச் சீரிய முறையில் விளக்கிச் செல்கின்றார் தனது புத்தகமொன்றிலே. (The aristocracy were "Capable in body and mind, strong and agile in limb, brave in fight, free from personal greed, zealous for the general good). பண்டிதச் சீமான்கள் வெறும் பிரபுக்களின் குடும்பங்களை மட்டும் சேர்ந்தவர்களல்லர். ஏதாவதொரு தெய்வத்தின் வமிசாவளியிலோ, அல்லது தெய்வ வமிசத்தைச் சேர்ந்த வீரனொருவன் பரம்பரையிலோ அல்லது பிரபலமான ஒரு மதகுருவின் பரம்பரையிலோ அவர்கள் வந்தவர்களென்றும் கூறப்பட்டது பண்டிதச் சீமான்கள் ஒரு குழுவாக அமர்ந்து அரசை நடத்தினார்கள்.

நகர—ராஜ்யங்களின் வரலாற்றிலே பண்டிதச் சீமான்களின் ஆட்சிக் காலத்தை ஒரு பொற்கால

மென்றே கூறலாம். நாட்டுக்கு நல்லது செய்வதிலே நாட்டங்கொண்ட இவர்கள் சலியாது மக்களுக்காக உழைத்தார்கள். அரசியலைப் புதிய பாணியிலே உருவாக்கிப்புதிய அரசியல்கொள்கைகளையும் லட்சியங்களையும் வகுத்தார்கள் அரசியலிலே நேர்மையையும் தூய்மையையும் அனுசரித்த இவர்கள் பொது மக்களுக்கு மாதிரிகளாய் (models) விளங்கி அவர்களின் பாராட்டுதலைப் பெற்றார்கள். பண்பாட்டின் சிகரமாய் விளங்கிய இவர்கள் அகந்தை என்பது சிறிதுமின்றி அதிகாரத்தை மிக விழிப்புடனும் கவனத்துடனும் பிரயோகித்தார்கள். நிர்வாகத் திறமையை இவர்கள் நிறையப் பெற்றிருந்த காரணத்தினால், மக்களின் வாழ்விலே குறுகிய காலத்தில் சிறந்த முன்னேற்றம், குறிப்பிடத்தக்க அளவிலே காணப்பட்டது. தங்களுடைய மேதையைப் பெரிதாக எண்ணி இவர்கள் பொது மக்களுடைய சிந்தனைகளையும் அபிப்பிராயங்களையும் புறக்கணிக்கவில்லை. புதிய கோணத்திலே அரசியல் எண்ணங்கள் மக்களின் மத்தியிலே இக்கால முதற்கொண்டுதான் உருவாக ஆரம்பித்தன. அரசியல் புதிய உயிர்த்துடிப்பைப் பெற்று அனைவரையும் ஈர்த்தது.

"சமுதாயம்" என்ற கருத்தைச் சீரிய முறையில் தெளிவாக உருவாக்கி மக்கள் சிந்தையில் பதிய வைத்ததே பண்டிதச் சீமான்கள்தாம். சமுதாயப் பணியே ஒவ்வொரு குடி மகனுடைய லட்சியமாகும் என்பதை அவர்கள் மக்களுக்குப் போதித்தார்கள். குடி மகன் செய்ய வேண்டிய கடமைகள் சமுதாயத்துக்கும் நகரத்துக்கும்தானே யொழிய மன்னனுக்கல்ல, என்பதை வலியுறுத்திப் பொது மக்களின் சிந்தனையைப் புது வழியில் திருப்பினார்கள். குடி மகன் நகரத்துக்குச் செய்யவேண்டிய கடமைகள் பல உண்டு என்பதை மக்களுக்கு விரிவாக விளக்கி, "சமுதாயக் கடமை" (Public duty) என்ற



கருத்தைத் தோற்றுவித்து, வளப்படுத்தி மக்களின் உள்ளங்களில் நிலைநாட்டினார்கள்.

இதுவரை பரம்பரை மரபுகளும் வழக்கங்களுமே குடி மக்களின் வாழ்வுத் துறைகள் அனைத்தையும் கட்டுப்படுத்தி வந்தன. பண்டிதச் சீமான்கள் குழப்பத்திற்கும் ஐயத்திற்கும் இடமின்றி, பண்டை மரபுகளைப் பகுத்தறிவுக் கிணங்க அதிகாரபூர்வமான விதிகளாக இயற்ற ஆரம்பித்தார்கள். பிற்காலத்தில் மக்களின் தலைவர்களாய்த் தோன்றி அவர்களுக்குச் சட்டங்களை வகுத்துக் கொடுத்த மேதைகளின் பணிக்கு, பண்டிதச் சீமான்கள் இப்பொழுது மரபுகளிலிருந்து உருவாக்கிய அரசியல் விதிகளே, ஆதார மூலப்பொருட்களாக அமைந்தன. வழக்கத்திலிருந்த மரபுகளை எழுத்து வடிவத்தில் விதிகளாக வடித்துக் கொடுத்த பண்டிதச் சீமான்களின் பணி உண்மையிலேயே மிகப் பாராட்டத்தக்க பணியாகும். அதற்கு முன்பு எது பரம்பரை வழக்கம், எது அண்மையிலேற்பட்ட வழக்கம், எதைப் பின்பற்ற வேண்டும் என்பது பற்றியெல்லாம் சாதாரணப் பொதுமக்களுக்குச் சில பெரிய மனிதர்களே விளக்கம் கொடுத்து வந்தார்கள். இந்தப் பெரிய மனிதர்களுக்குள்ளேயே சமயங்களில் இதுபற்றி அபிப்பிராயபேதம் வலுத்தது. மேலும் இப்பெரிய மனிதர்கள் சில சமயங்களில் வயதில் மட்டும்தான் பெரியவர்களாக இருந்தார்கள். வேறு சில சமயங்களில், தங்களின் சுபாவத்தையும் கூடக்கலந்து, இஷ்டம்போல் அபிப்பிராயங்களை அடிக்கடி மாற்றி மாற்றிச் சொல்லி வந்தார்கள். சந்தர்ப்பச் சூழ்நிலைகளுக்கேற்ப அடிக்கடி பெரிய மனிதர்களாகவும், சின்ன மனிதர்களாகவும் மாறிக்கொண்டார்கள். பண்டிதச் சீமான்களின் ஆட்சி ஏற்பட்ட பிறகு, இதற்கெல்லாம் ஒரு முடிவு காணப்பட்[illegible] [illegible] (idea of law) என்ற கருத்துருப் [illegible]

அதைப் பொது மக்களிடையே வளர்த்தவர்கள் முதன் முதலில் பண்டிதச் சீமான்கள் தாம்.

பண்டிதச் சீமான்கள் அரசியல் நிர்வாகத்தை நன்கு பலப்படுத்தி விரிவுபடுத்தியதுடன் அதிலே புதியநிர்வாக விதிமுறைகளைச் சாங்கோபாங்கமாகப் புகுத்தினார்கள். மன்னர்கள் ஆட்சிக் காலத்திலிருந்த நிர்வாக யந்திரம் ஏதோ பெயருக்கு நிர்வாக யந்திரமாயிருந்தது. அதில் நுணுக்கமான விதிமுறைகள் எதுவும் இல்லை. அரசனுடைய சொற்படி அனைத்தும் நடந்து வந்தது. இந்த யதேச்சாதிகாரமான நிலையை மாற்றி நிர்வாகத்தைச் சட்டசபைகளுக்குள்ளும் விதிகளுக்குள்ளும் பண்டிதச் சீமான்கள் கொண்டு வந்தார்கள். கிரேக்க வரலாற்றில் சட்டபூர்வமான அரசியலை (Constitutional Government) துவக்கி வைத்தவர்களே பண்டிதச் சீமான்கள் தாம்.

பண்டிதச் சீமான்களின் ஆட்சி குடியாட்சியினின்று வேறுபட்டதெனினும் கூட, மக்களின் நலனைப் பெரிதாகக் கருதி அவர்களின் அபிப்பிராயங்களுக்குப் பெரிதும் மதிப்பளித்து ஆட்சியை நடத்திவந்த பண்டிதச் சீமான்கள், உண்மையிலேயே குடியாட்சிக்கு வித்திட்டவர் என்பதை மறுக்க முடியாது. பொதுமக்கள் அரசியல் நிர்வாகத்தில் போதிய அளவு பங்கெடுக்கப் பண்டிதச் சீமான்கள் வசதி வாய்ப்புக்களை உண்டு பண்ணினார்கள். பொதுமக்களைத் தங்களின் ஆட்சிக் காலத்திலேயே, பலமான ஒரு அரசியல் சக்தியாக, இப் பண்டிதச் சீமான்கள் தாங்களே வலிய ஆக்கி வைத்தார்கள். ∴பௌலர் (Fowler) என்ற சரித்திர அறிஞர் கூறுவது போன்று, பிற்காலத்தில் ஏற்பட்ட ஜனநாயக அரசியலின் அத்தனை பகுதிகளுக்கும் அம்சங்களுக்கும் அஸ்திவாரமிட்டது பண்டிதச் சீமான்களின் அரசியல் ஞானமே. ("It will hardly be going too far to say that all the three constitutional germs which we find



in the infant Sate—the King, Council and people, or the executive, deliberative and legislative elements in the later constitutions—owed both their survival and their development to the political intelligence of the aristocracies"—Fowler). பின்னால் ஏற்பட்ட பல்வேறு குடியாட்சி அரசியல் அமைப்புக்கள் பண்டிதச் சீமான்களின் அறிவாற்றலுக்கும் சலியா உழைப்புக்கும் எவ்வளவு கடமைப்பட்டிருக்கின்றன என்பதைக் கிரேக்க அரசியல் வரலாற்றை நன்கு ஆழ்ந்து படித்தவர் அறிவர். பண்டிதச் சீமான்களின் பண்பும் மனோபாவமும் ஒரு தனி ரகத்தைச் சேர்ந்தது. பொதுமக்களின் நலன்களும் அரசியல் ஞானமும் வளரும் பொருட்டுத் தங்களுடைய பதவிக்குத் தாங்களே குழி வெட்டிக் கொள்ளவும் அவர்கள் தயாராயிருந்தார்கள்.

பண்டிதச் சீமான்களைப் பற்றிக் குறிப்பிடத்தக்க ஒரு விஷயம் என்னவென்றால், அவர்கள் அரசியல் பதவியாளர்களாக மட்டும் இருக்கவில்லை, மக்களின் நம்பிக்கைக்கும் மரியாதைக்குமுரிய கண்ணியமான தலைவர்களாகவும் விளங்கி, (moral leaders) அவர்களின் வாழ்விலே நல்ல கொள்கைகளையும் இலட்சியங்களையும் தோற்றுவித்தார்கள். அவர்களைச் சீரிய முறையில் வழி நடாத்திச் சென்றார்கள். தங்களின் அரிய கல்வி ஞானத்தைப் பொதுகலனுக்குப் பல்வேறு முறைகளில் பயன்படுத்தினார்கள். வாழ்வில் கெட்டதிலிருந்து நல்லதைப் பிரித்து உணர்த்தினார்கள். அரசியலைப் பொதுமக்களின் மூச்சாகவும் உயிர்நாடியாகவும் ஆக்கினார்கள். "ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்" என்ற கருத்தைத் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் குறிப்பாக அரசியல் துறையிலே அதை நிலைநாட்ட முயன்றார்கள். அரிய தத்துவ [illegible] பண்டிதச் சீமான்கள், [illegible] அரங்கிலும், தங்கள் செயல்கள் சிந்தனைகள் [illegible]

லும் தத்துவச் சிறப்பைக் காண விழைந்தனர். உயரிய தோரணையிலே மக்களை இயக்குவித்து, அற மார்க்கங்களை அரசியல் உள்பட அனைத்திலும் பொது மக்களுக்குக் காட்டி வைக்க வேண்டுமென்பது அவர்களின் பேரவாவாக இருந்தது. வாழ்விலே மாண்பை விளங்கச் செய்யவேண்டும், மனித அறிவிலே ஞான ஒளியைப் பிரகாசிக்கச் செய்யவேண்டும், அரசியலை இதற்கு ஆன்றதோர் சாதனமாக ஆக்கவேண்டும் என்பனவே அவர்களின் மூலக் கனவுகள்.

"செம்மையான வாழ்வு" (The ideal of good life) என்ற இலட்சியத்தையும் பொதுமக்களிடம் வளர்த்தவர்கள் பண்டிதச் சீமான்களே. இலட்சியக் குடிமகன் (Ideal citizen) என்பவன் தனது உடலையும் அறிவையும் நாட்டின் நலத்துக்காக அர்ப்பணிப்பவனே என்பதை மக்கள் மத்தியிலே பண்டிதச் சீமான்களின் ஆட்சி நன்கு பரப்பியது. கலைப்பொருள்களிலே எழில் சுரந்து நிற்பது போல், மனிதனின் வாழ்விலும், நடத்தையிலும், செயல்களிலும் முயற்சிகளிலும், அறிவிலும், உடலிலும், எழில் தோன்றி விளங்க வேண்டும். (Cultivation of the beautiful in human body and conduct as well as in the products of art). இதற்குக் கல்வியறிவோடு ஒழுக்கமும் புலனடக்கமும் தேவை. தம் சிந்தனைகளிலும் செயல்களிலும், பொதுவாகத் தம் வாழ்விலும், தத்துவ எழிலை வளர்ப்பதையும், தம் உடலாற்றலையும் அறிவாற்றலையும் சமுதாயத்துக்கும் அரசுக்கும் பயன்படுத்துவதையும், குடிமக்களின் இலட்சியங்களாக்கிய பண்டிதச் சீமான்கள், மக்களின் சிந்தனையிலே மாபெரும் புரட்சி ஒன்றை மெள்ள மெள்ளக் கிளப்பி, மக்களுக்குப் புதிய குறிக்கோள்களை வகுத்துக் காட்டியதுடன், அவற்றிலே மக்களின் மனத்தை ஈடுபடச் செய்தார்கள்.

சாதாரண மக்களைப் பெரிய இலட்சியங்களுக்குத்



திருப்புவதென்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. பாமர மக்களுக்குப் பொதுநலம் என்றால் என்ன என்பதை உணர்த்துவதே சற்றுக் கடினமான காரியம். பொதுப் பொருளிலே அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்வார்கள். அதன் சிறப்புப் பொருளை அவர்கள் உணர்ந்து அதிலே தம் சிந்தையைச் செலவிடுவதற்குச் சற்றுத் தாமதமாகும். எனினும் சிறிது முயற்சி செய்து தளராமல் உழைத்தால் நாளடைவில் எந்த இலட்சியங்களையும் பொதுமக்களுக்குக் கற்றுக் கொடுத்துவிடலாம். பொதுமக்கள் இலட்சியங்களைப் புரிந்து கொண்டு, அவை தமக்கு நன்மை பயப்பன என்று தெரிந்துகொண்டுவிட்டால், அவர்களுள்ளே மறைந்து கிடக்கும் சக்திகள் விசுவரூபத்திலே வெளிப்பட்டுப் பிரளயம் போல் இயங்க ஆரம்பிக்கின்றன. இந்திய சுதந்தரப் புரட்சி, பிரெஞ்சுப் புரட்சி இவையெல்லாம் ஜனசக்தியின் சாதனைகளே.

பண்டிதச் சீமான்களுக்கும் பொதுமக்களிடையே புதிய இலட்சியங்களை வளர்ப்பதில் ஆரம்பத்தில் சிரமங்கள் பல இருந்தன. இருப்பினும் கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் வெற்றி கண்டார்கள். பொதுமக்களை அவர்கள் பெரிதாக நினைக்க நினைக்க, பொதுமக்களும் அவர்களைப் பெரிதாக நினைக்க ஆரம்பித்தார்கள். இரு தரப்பினரும் பரஸ்பரம் ஒருவரையொருவர் மதித்ததால், பண்டிதச் சீமான்களின் பணி பொதுமக்களிடையே எளிதில் வெற்றி கண்டது. வாழ்வின் அத்தியாவசியத் தேவைகளுக்காக நித்தியப் போராட்டம் நடத்தும் எளிய மக்களிடையே தத்துவ லட்சணங்கள் பொருந்திய வாழ்வைத் தோற்றுவிக்க வேண்டுமானால், அதற்கு [illegible] இடையறு முயற்சியும் தளரா உறுதியும் [illegible] இவற்றைப் பண்டிதச் சீமான்கள் [illegible] பெற்றிருந்தார்கள். அப்போது

நிர்ப்பந்தங்களும் சந்தர்ப்பச் சூழ்நிலைகளும் இப்பணிக்குப் பெரிதும் உதவின.

இத்தகைய பண்டிதச் சீமான்களின் ஆட்சியும் நாளடைவில் சீர்குலைந்து சிறிது சிறிதாகத் தேய ஆரம்பித்ததுதான் விந்தையிலும் விந்தை. பிற்காலத்தில் ஆட்சிபீடத்துக்கு வந்த பண்டிதச் சீமான்கள் ஆரம்பக் கட்டங்களிலும் மத்திய கட்டங்களிலும் வந்த பண்டிதச் சீமான்களைப் போன்று அவ்வளவு சிறந்தவர்களாக இல்லை. தங்களுடைய பிரபுத்துவத்தையும் தெய்வ வமிசாவளிப் பிறப்பையும் நினைவுபடுத்திக் கொண்டு சாதாரண மக்களைத் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களாகவும் இரண்டாந்தரமானவர்களாகவும் நினைக்க ஆரம்பித்தார்கள். அதை வெளிப்படையாகவும் காட்டினார்கள். தாங்கள் சாதாரண மக்களினின்று அறவே வேறுபட்டவர்கள் என்ற எண்ணம் மேலிட மேலிட பொதுமக்களினின்று விலகி வாழ்ந்து அவர்களை வெறுப்புடன் நோக்கினார்கள். தங்களுடைய செல்வங்களைப் பொதுநலத்துக்கு உபயோகிப்பதை விடுத்து, தங்களின் சுயநலத்துக்கு அவற்றைப் பயன்படுத்தினார்கள். அத்துடன் பொதுநலத்தைத் தியாகம் செய்து தங்களின் சொந்த நலன்களை வளர்க்கவும் தொடங்கினார்கள். பொதுமக்களைக் கொடுமைப்படுத்தும் படலமும் சீக்கிரம் ஆரம்பமாகியது. அநீதியை நீதியாக மக்களுக்கு வழங்கினர் ஆட்சியாளர்கள். தேவைப்பட்ட போது பலாத்காரத்தையும் இம்சையையும் கையாண்டார்கள் இவர்கள். பண்டிதச் சீமான்களின் ஆட்சி நாளடைவில் பேராசை பிடித்த பணக்காரர்களின் ஆட்சியாக (Oligarchy) மாறியது.

இந்த நிலைமை ஏற்படுவதற்குக் காரணம் என்ன? பண்டிதச் சீமான்கள் தங்களின் செல்வங்களைப் பொது நலன்களுக்கே பெரிதும் உபயோகித்து வந்ததால் நாளடைவில் அவர்களின் செல்வம் குறைய ஆரம்பித்தது.



தங்களின் நேரத்தையும் சிந்தனையையும் அதிகமாகப் பொது நலனிலேயே செலவிட்டதால், அவர்களின் செல்வங்கள் போதுமான பராமரிப்பும் மேற்பார்வையுமின்றிச் சீர்குலைய ஆரம்பித்தன. எனவே, இறுதிக் கட்டத்தில் வந்த பண்டிதச் சீமான்களின் செல்வங்கள் மிகக் குறைந்த அளவும் மதிப்புமுடையதாகவே இருந்தன. அத்துடன் முன்பிருந்த பண்டிதச் சீமான்கள் பொது மக்களின் அரசியல் ஞானத்தையும் பலத்தையும் விருத்தி செய்துவிட்டுச் சென்றிருந்தார்கள். எனவே, இறுதிக் கட்டத்தில் வந்த பண்டிதச் சீமான்களின் காலத்தில் பொது மக்களின் அரசியல் பலமும் சக்தியும் ஓரளவு நன்கு அதிகரித்திருந்தது. ஆட்சியாளர்களின் போக்குகளை அவ்வப்போது சுட்டிக் காட்டிக் கண்டனம் செய்யவும் ஆரம்பித்தார்கள். எனவே, இறுதிக் கட்டத்தில் வந்த பண்டிதச் சீமான்களின் ஆஸ்தி பலமும், அதிகார பலமும் குன்றித் தேயும் நிலையிலிருந்தது. சீக்கிரம் இவை இரண்டும் மறைந்துவிடுமோ என்ற பயமும் அவர்களைப் பீடிக்க ஆரம்பித்தது. அத்தகைய சூழ்நிலையில் அவர்கள் இரண்டையும் காத்துக் கொள்வதற்கும் வளர்த்துக் கொள்வதற்கும் எல்லா விதமான தந்திரங்களையும் முறைகளையும் கையாண்டனர். ஓரளவு வெற்றியும் பெற்றனர். ஆதியில் ஆட்சி பீடத்துக்கு வந்த பண்டிதச் சீமான்களும் அவர்களை அடுத்து வந்தவர்களும் தியாகமூர்த்திகள். பதவி, பணம் இரண்டையும் தூர எறிந்துவிட்டு, ஓட்டாண்டியாக இருந்து கொண்டுகூடச் சமுதாயத்திற்குச் சேவை செய்யத் தயாராயிருந்திருப்பார்கள். ஆனால், இறுதிக் கட்டத்திலே வந்த பண்டிதச் சீமான்கள் என்ன காரணத்தாலோ ஆஸ்தியில் மட்டுமின்றி [illegible] திலும் குறைபட்டவர்களாகவே இருந்தார்கள். [illegible] களை வளர்ப்பதையே தலையாய [illegible] கொண்டு அவர்கள் ஆட்சியை நடத்தின[illegible]

இருந்த அரசியல் சட்டங்களேயும் விதிகளேயும் அவர்கள் மாற்ற முயலவில்லே. அவைகளேத் தாங்கள் இஷ்டப் பட்டபோதெல்லாம் தங்களுக்குச் சாதகமாகப் பிரயோ கித்தார்கள். பண்டிதச் சீமான்கள் ஏன்ற பெயருக்குரிய அருகதையை இவர்கள் இழந்துவிட்டனர். இவர்களு டைய ஆட்சி அப்பட்டமான **பணக்காரர்களின் ஆட்சி** யாகவே மாறியது. இப் **பணக்காரர்களின் ஆட்சி** **(Oligarchy)** சில காலம் மிக வெற்றிகரமாகவே நடந்து வந்தது. சந்தர்ப்பத்துக்குத் தக்கவாறு சாம, பேத, தான, தண்டம் எனப்படும் அத்தனே உபாயங் களேயும் கையாண்டு தம் சொந்த நலன்களே இப்பணக் காரர்கள் மிகச் சாமர்த்தியமாக வளர்த்து வந்தனர். அடிக்கடி தங்களின் பிறப்பின் பெருமைகளேயும் தங்க ளின் முன்னேர்களின் பெருமைகளேயும் எடுத்துச் சொல் லிக் கொண்டனர். இவர்களேச் சுற்றி எத்தனேயோ அடிவருடிகளும் அரசியல் பச்சோந்திகளும் இவர்களின் விருப்பங்களுக் கெல்லாம் தலேயாட்டி இவர்களின் தய வைப் பெற்று வாழ்ந்து வந்தனர். அரசியல் தனது தார்மீக பலத்தை இழந்து தாழ்ந்து வீழ்ந்தது. அச்சு முறிந்து காணப்பட்ட அரசியலேப் பயன்படுத்திக் கொண்டு; பொதுமக்களின் நலன்களேச் சூறையாடித் தம்மை வளர்த்துக்கொண்டனர் பலர். கடந்துபோன பண்டிதச் சீமான்களின் ஆட்சியை நினைந்து நினைந்து மக்கள் ஏங்கினர். மக்கள் திலகங்கள் அமர்ந்திருந்த ஆட்சிபீடங்களிலே, மமதை யேறிய சுயநலமிகளின் கூட்டம் எதேச்சாதிகாரம் செய்துகொண்டிருந்தது. பதவிகளும் சலுகைகளும் பணத்திற்கு விற்கப்பட்டன. தூய மனிதர்களேத் தாங்கிப் பெருமிதமடைந்த அரியா சனங்கள் தீய மனிதரைத் தாங்கவேண்டிய அவல நிலே ஏற்பட்டதை நினைந்து திகைத்துப் பெருமூச்சு விட்டன. நீதிமன்றங்களிலே அநீதி தாண்டவமாடியது. நீதி பதிகள் பேரம் பேசி நீதியை விலேக்கு விற்ருர்கள். பணத் தின் மதிப்பும், பணக்காரர்களின் சொற்களுக்கிருந்த



மதிப்பும் கரைகடந்து நின்றன. ஏற்கனவே இருந்த வர்கள் எழுதிவைத்து விட்டுப்போன சட்டங்கள் ஒரு புறமிருக்க, பணக்காரர்களின் வெறும் வாய் வார்த் தைகள் சட்டங்களாகவே பல இடங்களில் விளங்கின. சமுதாயம் எல்லாவற்றிற்கும் சிலகாலம் இடம் கொடுத் தது; ஆட்சியும் ஏதோ தொடர்ந்து நடைபெற்றது.

பணக்காரர்களின் ஆட்சியால் விளேந்த தீமைகள் எண்ணிறந்தன. சில கெடுதல்கள் தம்மையு மறியாமல் சில நன்மைகள் பயப்பதுண்டு. அதுபோன்றே பணக் காரர்களின் ஆட்சியால் விளேந்த சில கெடுதல்களும் சில நன்மைகளேச் செய்தன. ஆட்சியாளர்களுடைய கொடுங்கோன்மை சாதாரண மக்களே ஏழ்மையிலாழ்த் தியது. ஆட்சியாளரின் கொடுங்கோன்மையினின்றும் இடையருது தம்மை வருத்தும் ஏழ்மையினின்றும் விடு தலே பெற விரும்பிய சாதாரண மக்கள் பலருக்கு ஒரே வழிதான் தோன்றியது. அதுதான் அந்நிய நாடுகளில் சென்று குடியேறுவது. பெருவாரியான கிரேக்க மக்கள் பிற தேசங்களுக்குச் சென்று குடியேறி அங்கே விவசாயத்துறையிலும் வாணிகத் துறையிலும் முன் னேறத் தொடங்கினர். கிரேக்க நகர—ராஜ்யங்களில் ஆட்சி பீடத்திலிருந்தவர்கள் பணக்காரர்களெனினும் உயர்குடிப் பிறப்புடையவர்கள். தாழ்ந்த குடியில் பிறந் தவர்கள் பணக்காரர்களா யிருப்பினும் ஆட்சியாளர் களாக ஆவது முடியாத காரியமாக இருந்தது. எனினும் பொதுவாகப் பணக்காரர்களால் பணத் திற்கு மட்டற்ற மதிப்புக் கொடுத்த அரசாங்கத் தி lலே, பல காரியங்களேச் சாதித்துக்கொள்ள முடிந் [illegible] தது; பல சலுகைகளேப் பெற முடிந்தது. [illegible] ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்கும் பொழுது [illegible] பணத்திற்கு மிக விசேடமான மதிப்பு [illegible] இயற்கைதானே; எனவே, பணம் ஈட்டு [illegible] பலர் அந்நிய நாடுகளில் குடியேற [illegible], தாம் சென்ற நாடுகளில் விவசாயம், [illegible]

இவைகளில் ஈடுபட்டு இவர்களில் பலர் ஏராளமான பொருளீட்டினர். கிரேக்க மக்கள் பிறநாடுகளில் மேலும் மேலும் குடியேறிப் பரவவும், கிரேக்க நாகரிகமும் ஆதிக்கமும் பிறநாடுகளிலும் விரிந்து பரவ ஆரம்பித்தன. உலகில் பல நாடுகள் பிரபல சாம்ராஜ்யங்களை உலகின் பல பகுதிகளில் நிர்மாணித்ததே குடியேற்ற முறை (Colonisation) யினால்தான் என்பதை உலக வரலாற்றிலே நாம் காண்கிறோம். கிரீஸுக்கும் கிரேக்கர்கள் குடியேறிய பிற நாடுகளுக்கும் இயல்பாகவே வாணிகத் தொடர்பும், நாகரிகத் தொடர்பும், அரசியல் தொடர்பும் அதிகரிக்க ஆரம்பித்தது. கிரீஸிலேயே தங்கிவிட்ட சாதாரண மக்களின் ஏழ்மையும் ஓரளவு மறைய ஆரம்பித்தது. கிரீஸிலிருந்து பிறநாடுகளில் குடியேறிய பலர் ஏராளமான பொருளீட்டிக்கொண்டு தாய்நாடு வந்து சேர்ந்தனர். "புதுப் பணக்காரர்களின்" தொகை கிரீஸ் நாட்டிலே வளர ஆரம்பித்து, தொடர்ந்து வளர்ந்து கொண்டேயிருந்தது. "புதுப் பணக்காரர்கள்" உயர்குடிப் பிறப்பைப் பெற்றிராத காரணத்தால் ஆட்சிபீடத்தையும் பதவிகளையும் கைப்பற்ற விழையவில்லை. ஆனால், ஆட்சியாளர்களாயிருந்த பணக்காரர்களின் கொடுங்கோலாட்சியையும் அநீதியையும் அவர்கள் பொறுக்கவோ ஏற்றுக் கொள்ளவோ மறுத்தார்கள். ஆட்சிபீடத்திலமர்ந்திருந்த பணக்காரர்கள் நாட்டின் நிலங்களையெல்லாம் தங்களுடைய உடைமையாக்கிக் கொண்டனர். இத்துடன் அநீதியான கடன் சட்டங்களை வேறு இயற்றி மக்களைக் கொடுமைப்படுத்தினர். பொருளாதாரத்திலே முன்னேற விரும்பிய பொதுமக்களுக்குத் தடைகள் பல விதித்து இடையூறுகள் பலவற்றைச் செய்தனர். பண பலத்தையே தங்களின் பிரதானமான பலமாக நினைத்து அதைக்கொண்டே அவர்கள் ஆட்சி செய்ய விரும்பியதால், சாதாரண மக்களை எப்பொழுதும் ஏழ்மையிலேயே இருத்தத் தங்க



ளால் முடிந்த அத்தனை தந்திரங்களையும் கையாண்டனர். புதுப் பணக்காரர்களுடன் சாதாரண மக்களும் ஒன்று சேர்ந்துகொண்டு தங்களின் மனக்கொதிப்பை வெளிக்காட்ட முனைந்தனர். பணக்காரர்களின் ஆட்சி (Oligarchy) க்கு மிகக் கடுமையான எதிர்ப்பு எல்லா இடங்களிலும் பலமாக உருவாகியது. சாதாரணப் பொதுமக்களுக்குக் கிரேக்க மொழியிலே Demos என்று பெயர். இதிலிருந்துதான் Democracy (ஜனநாயகம்) என்ற சொல் உருவாகியது. சாதாரணப் பொதுமக்களிடையே எங்குப் பார்த்தாலும் அரசியல் கொந்தளிப்புக் காணப்பட்டது. பணக்காரர்களின் ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்த பொதுமக்கள் பணக்காரர்களைப் பதவியிலிருந்து அகற்ற வேண்டுமென்று மட்டும்தான் நினைத்தார்களே தவிரக் குடியாட்சியை ஸ்தாபித்து அரசியல் அதிகாரத்தைத் தாங்கள் கைப்பற்ற வேண்டுமென்று அவர்கள் நினைக்கவில்லை. தங்களுக்குப் போதிய அளவு அரசியல் சட்ட ஞானமும் அரசியல் நிர்வாகப் பயிற்சியும் கிடையாது என்பது ஒருபுறமிருக்க, அரசியல் நிர்வாகத்தை ஏற்றுக்கொள்வதற்குத் தங்களுக்குப் போதிய அள்வு பொருளாதார வசதியும் அவகாசமும் கிடையாது என்று அவர்கள் ஒருவேளை நினைத்திருக்கலாம். இதற்கெல்லாம் மேலாக, குடியாட்சி என்பதை அவர்கள் முன்பின் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. அதுபற்றி அவர்களுக்கு எந்தவித ஞானமும் அநுபவமும் கிடையாது. எனவே, குடியாட்சி என்பதைப்பற்றி அவர்களுக்கு நினைக்கவே தோன்றியிருக்காது. எவராவது அதைப்பற்றிச் சொல்லியிருப்பினும்கூட, அதை ஒரு புரியாத புதிரென்று கருதி நகைத்திருப்பர். இந்தச் சூழ்நிலையிலே, பொதுமக்களின் எதிர்ப்பு [illegible] வளர்ந்து கொந்தளிப்பு அதிகரிக்க, குடு[illegible] (Oligarchy) அரசாட்சி செய்த பணக்காரர்களின் ஆட்சி [illegible] மறைந்து, ஒற்றை மனிதனின் ஏகாதிபத்திய ஆட்சி

ஆரம்பமாயிற்று. அரசியல் நூல்களிலே இந்தப் புதிய ஆட்சியின் தலைவன் ஏகாதிபதி (Tyrant) என்று அழைக்கப்படுகிறான்.

கி.மு. எட்டாம் நூற்றாண்டு இறுதியில் பணக்காரர்களின் ஆட்சியும் இறுதியடைய ஆரம்பித்துவிட்டது. ஏகாதிபத்தியத் தலைவர்களின் ஆட்சியைக் கிரீஸின் பல நகரங்களில் கி.மு, ஏழாம் நூற்றாண்டிலே நாம் காண்கிறோம். அகராதியின்படி பார்த்தால் Tyranny என்ற ஆங்கிலப் பதத்திற்குச் சரியான தமிழாக்கம் 'கொடுங்கோன்மை' என்பதே. ஆனால், கிரேக்க அரசியல் மொழியில் Tyrant என்ற பதம் கொடுங்கோல் மன்னனைக் குறிக்கவில்லை. பொதுவாக முதல்வன், தலைவன், எஜமானன், அதிபதி என்ற பொருளிலேயே அது வழங்கப்பட்டது. எனவே Tyrant என்ற பதத்திற்கு "ஏகாதிபதி" (ஏக அதிபதி) என்ற தமிழாக்கம் ஓரளவு பொருந்தும். அரசியல் அதிகாரம் அனைத்தும் இந்த ஏகாதிபதிகளிடமே இருந்தது. இவர்களைக் கேள்வி கேட்கும் உரிமை பொதுமக்களுக்குக் கிடையாது. பொதுமக்களுக்கோ அவர்களின் பிரதிநிதிகளுக்கோ பதில் சொல்லும் கடமையும் இவர்களுக்குக் கிடையாது. கிரேக்க வரலாற்றிலே காணப்படும் ஏகாதிபதிகளில் (Tyrants) பலர் நற்குணம் படைத்த உயர்ந்தோர்களா யிருந்திருப்பதையும், பலர் தீக்குணம் படைத்த சுயநலமிகளாய் இருந்திருப்பதையும் காண்கிறோம்.

சில சமயங்களில் சில ஏகாதிபதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். குறிப்பிட்ட சில நகர-ராஜ்யங்களில் ஏகாதிபதிகளைப் பணக்காரர்களின் குழுவே (Oligarchy) பொதுமக்களின் ஏகோபித்த விருப்பத்தின் பேரில் நியமித்திருக்கிறது; இந்த ஏகாதிபதிகளுக்கு Arbiters என்று பெயர். இவர்கள் குறிப்பிட்ட காலத்திற்கோ அல்லது ஆயுள்முழுவதுமோ சில குறிப்பிட்ட பணிகளை நிறைவேற்றிக் கொடுக்க அமர்த்தப்பட்டனர்.



அப்பணிகளைப் பொறுத்தமட்டில் அவர்களுக்குப் பரிபூரண சர்வாதிகாரம் வழங்கப்பட்டது. நடைமுறையில் இவர்களும் மற்ற ஏகாதிபதிகளைப் போலவே விளங்கினர். Arbiter என்ற பதத்திற்கு "சர்வாதிகாரி" என்ற தமிழாக்கம் ஓரளவு பொருந்தும். "சர்வாதிகாரி"க்கும் "ஏகாதிபதி"க்கும் இருந்த வித்தியாசத்தை ஃபௌலர் (Fowler) என்பவர் கீழ்க்கண்டவாறு கூறுகின்றார். "சர்வாதிகாரியினுடைய ஆட்சி பகுத்தறிவுக்கு உட்பட்ட ஆட்சியாய் இருந்தது. சட்டத்துக் கிணங்கிய ஆட்சியாகவும் சட்டத்தைத் தோற்றுவிக்கும் ஆட்சியாகவும் விளங்கியது. ஏகாதிபதியினுடைய ஆட்சி பொதுவாகச் சொந்த ஆசாபாசங்களை அடிப்படையாகக் கொண்ட ஆட்சியாகவும், சட்டங்களை உதாசீனம் செய்து புறக்கணிக்கும் ஆட்சியாகவும், கிரேக்க மக்களின் அடிப்படை இயல்புக்கு முற்றிலும் எதிர்மறையான ஆட்சியாகவும் இருந்தது. (The Government of the arbiter was a government of reason, based on law and begetting law; the government of the tyrant was often one of passion, begetting a spirit of lawlessness utterly alien to the true Greek nature"—Fowler.) அரசியல் ஞானி அரிஸ்டாட்டிலும் இதே அபிப்பிராயத்தைத்தான் தனது நூல்களில் கூறுகின்றார். "ஏகாதிபத்தியம் என்பது சுயநலனுக்காக உபயோகப்படுத்தப்பட்ட முடியாட்சியே" என்பது அவரின் கருத்து. ("Tyranny is monarchy used for the advantage of monarch"—Aristotle)

ஆனால், கிரேக்க வரலாற்றில் நாம் காணும் "ஏகாதிபதிகள்" பலரின் சரிதைகளை நாம் படிக்கும்பொழுது இந்த அபிப்பிராயங்கள் முற்றிலும் சரி[illegible]கவோ, ஏற்புடைத்தாகவோ தோன்றவி[illegible] ஏகாதிபதிகளில் பலர் மக்களுக்குச் சிறந்த சேவை [illegible]கின்றனர்.

கிரேக்க நாட்டின் வளர்ச்சிக்கும் [illegible]

முன்னேற்றத்திற்கும் ஏகாதிபத்தியம் (Tyranny) பல வழிகளில் உதவியது. பணக்காரர்களின் ஆட்சி காலத்திலே மக்களுக்குள் கணக்கற்ற பிளவுகளும் அவற்றையொட்டிப் பல கோஷ்டிகளும் அரசியல் கட்சிகளும் தோன்றி நாட்டின் (City State) ஒற்றுமையைக் குலைத்தன. புதிய ஏகாதிபதிகள் அரசியல் கட்சிகள் கோஷ்டிகள் அனைத்திற்கும் முடிவு கட்டி அவற்றை ஒழித்து, நாட்டை ஒற்றுமைப்படுத்தி, மக்களுக்குத் தேசியத்தை ஊட்டி, மக்கட் சக்திகளை ஒருமுகப்படுத்தினர். இங்கு "நாடு" என்னும்பொழுது நாம் நகர—ராஜ்யத்தையே (City State) குறிப்பிடுகின்றோம். நகரங்களின் பலத்தை மக்களின் முன்னும் பிற நகரங்களின் முன்னும் உயர்த்திக் காட்டி, தங்களின் நகரங்களுக்குப் பெருமையீட்ட இவர்கள் மிகவும் பாடுபட்டனர். தங்களின் நகரங்களுக்கு நாலாபுறமும் அரண்கள் கட்டிப் படைபலத்தை அதிகரித்ததுடன், நகரங்களைப் பல்வகையிலும் அழகுபடுத்தினர். இவற்றிற்கெல்லாம் மேலாக, தமது நகரங்களைக் கலை, இலக்கியம், தத்துவம், நாகரிகம் இவற்றின் கேந்திரங்களாக ஆக்கி, பிற மக்களின் கவனத்தை இவற்றின் மேல் திருப்ப முயன்றனர். ஏகாதிபதிகள் தொடர்ந்து அளித்த ஆதரவாலும் ஊக்கத்தாலும், அவர்கள் கலைஞர்களுக்கு அளித்த மதிப்பாலும் புகழ்பெற்ற கவிஞர்கள் பலர் தோன்றிப் பல அமர இலக்கியங்களைப் படைத்தனர். வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்காக, ஏழை மக்களின் வறுமையைப் போக்குவதற்காக, இந்த ஏகாதிபதிகள் கோவில்கள் பலவற்றைக் கட்டினர். பொது வேலைகள் பலவற்றைத் துவங்கினர். மதத் துறையிலும் இவர்கள் பல முக்கியமான சீர்திருத்தங்களைச் செய்தனர். பல அறிஞர்கள் நினைப்பதைப் போல், ஏகாதிபதிகள் பொதுமக்களை அரசியல் அறியாமையில் ஆழ்த்திவிட முயலவில்லை. ஏற்கனவே பண்டிதச் சீமான்களும்—பணக்கார ஆட்சி



யாளர்களும் விட்டுச்சென்ற அரசியல் சட்ட அமைப்பை அவர்கள் ஓரளவுக்குத் தொடர்ந்து அமுல் நடத்தி வந்தனர். எனவே, பண்டிதச் சீமான்கள், பணக்காரர்கள், பொதுமக்கள் இவர்கள் முன்போலவே அரசாங்கத்தில் ஓரளவு பங்குகொள்ளவும் முடிந்தது. இதனால் பொது மக்களுக்கு அரசியல் பயிற்சியும் நிர்வாகப் பயிற்சியும் ஏற்பட்டது. இதை ஏகாதிபதிகள் மிக அதிகரிக்க விடாது கட்டுப்படுத்தி வந்தனரெனினும், மக்களை முற்றிலும் அரசியல் அறியாமையில் ஆழ்த்திவிட்டால் அவர்களை ஆளுவதே கடினமாகிவிடும் என்பதையும் உணர்ந்தனர். பணக்காரர்களின் ஆட்சி இழைத்த அநீதிகளைப் பார்த்தும் அனுபவித்தும் கேள்விப்பட்டும் நொந்துபோன மக்களுக்கு, ஏகாதிபதிகளின் ஆட்சியிலிருந்த குறைகள் எவ்வாற்றாலும் பெரிதாகத் தோன்றவில்லை. சர்வாதிகாரிகளாயிருந்த ஏகாதிபதிகள் எப்பொழுதும் தங்களின் அதிகார பலத்தைப் பெருக்குவதிலும் காப்பதிலும்தான் தங்கள் கவனத்தை அதிகமாகச் செலுத்தினர் என்பது உண்மை. தங்கள் ஆட்சி நல்ல ஆட்சி என்பதை மக்களை உணரவைத்து அவர்களைத் திருப்திப்படுத்திக்கொண்டேயிருந்தால்தான் தங்களின் அதிகாரத்தைக் காப்பதும் வளர்ப்பதும் சாத்தியம் என்பதையும் அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். பொதுமக்களை அதிகம் ஏழ்மையில் தோயவிடாமலும், அவர்களின் அரசியல் பலத்தையும் பொருளாதார பலத்தையும் அதிகம் வளரவிடாமலும் மிகச் சாமர்த்தியமாகக் கட்டுப்படுத்தி வந்தனர். மக்கள் அதிகம் ஏழ்மையில் தோய்ந்தாலும் தங்களின் அதிகாரத்துக்கு ஆபத்து, அவர்களின் பொருளாதார நிலைமையும் அரசியல் பலமும் [illegible] அதிகம் வளர்ந்தாலும் தங்களுக்கு [illegible] எண்ணமே அவர்களின் கொள்கைகளை [illegible] எவரையும் பிரமுகராகவிடாதபடியும், [illegible] மக்களிடத்தில் முக்கியத்துவமும் செல்வா[illegible] பெற

முடியாதபடியும் தடுத்தனர். மக்களிடையே அடிமை மனப்பான்மையை இவ்வேகாதிபதிகள் திட்டமிட்டு வளர்த்தனர். பொதுவில் ஏகாதிபத்திய ஆட்சி நன்மையும் தீமையும் கலந்ததா யிருந்தது. ஆரம்பக் கட்டங்களில் வந்த ஏகாதிபதிகளின் ஆட்சியிலே நன்மை அதிகமாகவும் தீமை சற்றுக் குறைவாகவும் காணப்பட்டது. பிற்காலத்தில் வந்த ஏகாதிபதிகளின் ஆட்சியில் நன்மை குறைந்தும் தீமை மிகுந்தும் காணப்பட்டது.

கிரேக்க மக்கள் ஏகாதிபத்தியத்தை மனமார விரும்பினார்களென்றோ, ஏகாதிபதிகளைப் போற்றி வாழ்ந்தார்களென்றோ சொல்ல முடியாது. கிரேக்க மக்களின் அடிப்படை இயல்பு சுதந்தரத்தையும் ஏதேச்சையையும் விரும்புவது. சமயங்களில் கட்டுப்பாடுகளனைத்தையும் உடைத்தெறிந்துகொண்டு மேலெழும்புவது. அதிகாரத்தைக் கொண்டு எளிதில் அடக்க முடியாதது. போராட்ட குணம் படைத்தது. அதிகாரத்தைத் தனக்குக் கைப்பற்ற விரும்புவது. பிறரின் அதிகாரத்தைத் துச்ச மென்று நினைப்பது. தான் வெறுப்பதை எப்படியும் கவிழ்க்க நினைப்பது. நேரடிப் போரிலும், சூழ்ச்சி தீட்டுவதிலும் வல்லமை பெற்றது. வணங்கிப் போவதற்கும் இணங்கிப் போவதற்கும் விரும்பாதது. எனவே, ஏகாதிபத்திய ஆட்சி கிரேக்கர்களின் இயல்புக்கு அறவே ஒத்து வராததொன்று. எனினும் வேறு வழியின்றி, கிரேக்க மக்கள் ஏகாதிபதிகளின் ஆட்சியை அத்தியாவசியமாக அது தேவைப்பட்ட காலம் வரை ஏற்றுக்கொண்டார்கள். உண்மையிலேயே, பணக்காரர்களின் ஆட்சியை ஒழிக்கவும், அவ்வாட்சியின் பயங்கரமான வடுக்களை அகற்றவும், நாட்டில் ஏற்பட்டிருந்த அரசியல் குழப்பம் கொந்தளிப்புகளை ஒயச் செய்து நாட்டில் ஓரளவு சமாதானத்தை நிலைநிறுத்தவும் ஏகாதிபதிகளின் ஆட்சி சில காலம் இன்றி



யமையாததாகவே இருந்தது. அமைதிக்காகவும், சுபிட்சத்துக்காகவும் வேட்கையுற்றுத் தவித்துக்கொண்டிருந்த மக்கள் ஏகாதிபதிகளின் ஆட்சி ஏற்பட்டவுடன் சற்று ஆறுதலடைந்தனர். ஏகாதிபதிகள் கிரேக்கர்களின் சுதந்தர இயல்புக்குச் சிறிது காலம் தங்களுடைய சூழ்ச்சிகளாலும் தந்திரங்களாலும் விலங்கிட்டு வைத்திருந்தனர். அவர்களின் ஆட்சியிலே நன்மையின் அளவு அதிகமாகவும் தீமையின் அளவு குறைவாகவும் இருந்தபொழுது, அவர்களுக்கு ஏற்பட்டிருந்த மகிழ்ச்சி அவர்களின் இயல்பைச் சற்றுத் தூங்கச் செய்தது. ஏகாதிபத்திய ஆட்சியில் நன்மையும் தீமையும் சமவிகிதத்திலே சென்று கொண்டிருந்தபொழுது, அவர்களின் இயல்பு விழிக்க ஆரம்பித்தது. நன்மை மிகக் குறைந்தும் தீமை மிக அதிகமாகவும் ஆக ஆரம்பித்தவுடன் அவர்களின் இயல்பு பலமாக எழுந்து வேலை செய்யத் தொடங்கியது. சில நகரங்களில் ஏகாதிபதிகள் பொதுமக்களுக்குப் பொருளாதார சுபிட்சத்தை நிறைய அளித்தும்கூட, அரசியல் உரிமைகளை மக்களுக்கு அளிக்க மறுத்ததால், மக்கள் அரசை எதிர்த்துத் தங்களுடை ஆத்திரத்தை நெருப்பாகக் கொட்ட ஆரம்பித்தனர். கிரேக்க மக்கள் உயர்ந்த பண்பும் சுதந்தர வேட்கையும்கொண்ட மக்கள். ஏகாதிபத்திய ஆட்சியை அவர்கள் ஏற்றுக் கொள்வதென்பது தற்காலிகமாக முடியலாமே யொழிய நிரந்தரமாக முடியாத காரியம். அவர்களுடைய இயல்புக்குக் குடியாட்சியே (Democracy) மிகப் பொருத்தமான ஆட்சி. குடியாட்சிக்கு மேலான ஆட்சி வேறு எவ்வாட்சியுமே கிடையாது என்பதை அனுபவத்திலே கண்டுணர்ந்து, அதை வாழ்விலே அவர்கள் நிறைவேற்றிக் காட்டியவர்கள். இந்த கைய மக்களிடையே ஏகாதிபத்தியம் [illegible] தென்பது அரிதினும் அரிது. பொ[illegible] அரசியல் விழிப்பு அதிகரிக்க அதிகரிக்க ஏகாதிபத்

களும் தங்களுடைய கொடுங்கோன்மையை அதிகப் படுத்தினர்கள். ஏகாதிபதிகளின் கொடுங்கோன்மை வளர வளரப் பொதுமக்களின் எதிர்ப்பும் சினமும் அதிக மாகின. நிலைமை முற்றி மோசமாகியபொழுது மக்கட் சக்தியே வெற்றிபெற்றது. ஆராய்வுக் கண்கொண்டு நோக்கினல், அதிபதிகளின் ஆட்சி ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின் தானகவே முற்றுப்பெற வேண்டி யதே. குழப்பத்தி லிருந்தும் கொந்தளிப்பி லிருந்தும் சில பயங்கரமான அநீதிகளி லிருந்தும் நாட்டை மீட்பதற் காக அது ஏற்பட்டது. அமைதியான சூழ்நிலை ஏற் பட்டு அநீதிகளுக்கும் தீர்வு கண்டவுடன், மக்களின் சுதந்தர உணர்ச்சிக்கு ஆட்சியாளர்கள் வழி வகுத்துக் கொடுத்திருக்க வேண்டும். பணக்காரர்களின் ஆட்சி (Oligarchy) தோன்றி மக்களுக்கு இன்னல்களிழைக்க ஆரம்பித்த காலத்திலிருந்தே, மக்களிடம் இந்தச் சுதந்தர உணர்ச்சி வலுத்து வந்திருக்கிறது. ஆரம்ப காலத்தில் ஆட்சி பீடத்துக்கு வந்த ஏகாதிபதிகள் (Tyrants) ஓரளவு மக்களின் இந்தச் சுதந்தர உணர்ச்சியை மதித்து வந்தார்கள். தங்களுடைய அதிகாரத்தை அதிகமாக வும் விட்டுக் கொடுக்காமல், அதிகாரத்தை மிக அதிக மாகவும் பிரயோகிக்காமல் மக்களுடைய உரிமைகளை யும் நலன்களையும் முற்றிலும் புறக்கணிக்காமல், அவர் களின் சினத்தைக் கிளறிவிடாமல், எப்புறத்திலும் அதிக மாகச் சாயாமல், எப்புறத்திலும் சாயாதிருந்தும் விடா மல், மிகச் சாமர்த்தியத்துடனும் திறமையுடனும் தங்க ளுடைய பதவியைக் காப்பாற்றி வந்தார்கள். பதவி யிலே ஆசை மிகுந்துவிட்டால், அதைக் காப்பாற்றிக் கொள்ள ஒருவருக்கு எல்லாவிதமான சூழ்ச்சிகளும் தோன்றுமல்லவா? அதிகாரத்திலே முற்றிலும் ஆசை யற்றவர்களால்தான் அதிகாரத்தை நியாயமான முறை யிலே, பொதுமக்களின் நன்மை ஒன்றையே குறிக் கோளாகக் கொண்டு பிரயோகிக்க முடியும். அதிகாரத்



திலே ஆசை ஏற்படும்பொழுது, அவ்வதிகாரத்தை வளர்ப்பதிலும் காப்பாற்றுவதிலுமே ஒருவரின் சிந்தனை இடையருது செல்கின்றது. பொதுமக்களுக்கு நன்மை செய்வதற்காகவே தான் தம்மிடம் அதிகாரம் இருக் கிறது என்பதை மறந்து, தம்முடைய அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும் வளர்த்துக் கொள் வதற்காகவுமே அவன் பொதுமக்களுக்கு நன்மை செய்ய முயலுகின்ருன். பொதுமக்களுடைய பொருளா தாரமோ, அரசியல் அறிவோ அதிகம் வளர்ந்தால் தங் களின் அதிகாரத்துக்கு ஆபத்து என்று அவனுக்குத் தோன்றுமானல், தனது அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்ளப் பொதுமக்களின் வளர்ச்சியைத் தடுக்கிருன். ஏகாதிபதிகளில் (Tyrants) பலர் இவ்வாறுதான் நினைத் தனர். அதிகாரம் ஒருபுறத்திலும் பொதுமக்கள் மற் ருெரு புறத்திலும் இருக்கும் பொழுதுதான் இந்த முரண்பாடான நிலை ஏற்படுகின்றது. அதிகாரமே (Political Power) பொதுமக்களின் உடைமையாகிவிட் டால், இந்த முரண்பாடான நிலைக்கு இடமே ஏற்படுவ தில்லை. தங்களின் நல்வாழ்வுக்கு எவன் மேலும் மேலும் சேவை செய்கின்ருனே, அவனிடத்தில் மக்கள் அதி [illegible] ய காரத்தைக் கொடுக்கின்றனர். அது [illegible] சொந்த உடைமையாக எந்தக்காலத்திலும் எந்த [illegible] நிலையிலும் ஆவதில்லை. அது பொ[illegible] உடைமை. அவர்களின் பிரதிநிதியாக [illegible] அதிகாரத்தை அவர்கள் விரும்[illegible] கிக்கின்ருன். எனவே மக்களி[illegible] மக்களின் பிரதிநிதி ஒருவன், மக்[illegible] பிரயோகிப்பதென்பது இயலாத காரியம். [illegible] குடியாட்சி (Democracy) என்கிருேம். [illegible] கிரேக்க மக்களுக்கு எல்லா வழிகளிலும் [illegible] தது. இந்த ஆட்சியே கிரேக்க மக்கள் [illegible] இடங்களிலும் ஸ்தாபித்தார்கள்.

குடியரசை உடனுக்குடனேயே முழுமையான வடிவில் ஸ்தாபித்து விடுவது என்பது நடக்கக்கூடியதல்ல. சிறிது சிறிதாகவே அதை வளர்த்துப் பெருக்கிச் செல்ல வேண்டும். கிரேக்கர்கள் முதலில் இதற்கு இரண்டு வழிகளைக் கையாண்டார்கள். (1) அதிகாரத்தைப் பிரயோகிப்பவர்களின் தொகையைத் தேவைப்பட்ட அளவுக்கு அதிகப்படுத்துவது; (2) அதிகார பீடத்தில் ஒருவர் அமர்ந்திருக்கும் காலத்தைக் குறுக்கி வரையறுத்து நிர்ணயித்து விடுவது.

இவ்விரண்டில் ஏதாவதொன்றையோ அல்லது இரண்டையுமோ சந்தர்ப்பச் சூழ்நிலைகளுக்கேற்றவாறு கிரேக்கமக்கள் கையாண்டார்கள். பதவியிலிருப்பவர்கள் எவராயிருப்பினும் எவ்வளவு காலமிருப்பினும் மக்களின் விருப்பத்திற்கிசைந்து நடக்குமாறு கட்டுப்படுத்தப்பட்டனர். தற்காலத்திலே பல நாடுகளில் நடைமுறையிலிருந்து வரும் குடியரசுக்கும், அக்காலத்தில் கிரேக்க நகர—ராஜ்யங்களில் நடைபெற்று வந்த குடியரசுக்கும் முக்கியமான வித்தியாசம் ஒன்று உண்டு. உதாரணமாக இந்தியக் குடியரசை நாம் எடுத்துக் கொண்டோமானால், பொதுமக்களாகிய நாம் அரசாங்கத்தை நாமே நேரடியாக நிர்வகிப்பதில்லை. சில வருடங்களுக்கொரு முறை நடக்கும் தேர்தல்களிலே நமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறோம். அப்பிரதிநிதிகளே நமக்காக நமது ஆணையின்படி நிர்வாகத்தை ஏற்று நடத்துகின்றனர். கோடிக்கணக்கான மக்களைக் கொண்ட குடியரசு நாடு இந்தியா. இத்தனை மக்களும் நேரடியாகவே அரசாங்க நிர்வாகத்தில் பங்கு கொள்வதென்பது, விரும்பக்கூடிய காரியமல்ல என்பது ஒருபுறமிருக்க, அது அறவே முடியாத காரியமும்கூட. ஆனால், அக்காலத்திலே கிரீஸிலிருந்த நகர ராஜ்யங்கள் சிறிய ஜனத்தொகையையும் சிறிய பரப்பையுமே உடையனவாக இருந்தன என்று நாம் ஏற்கெனவே கூறியுள்ளோம். சுமார் 10,000 ஜனத்



தொகையும் சில சதுர மைல் பரப்பளவையுமே கொண்டதாக இருந்தது, சாதாரணமான ஒரு சராசரி நகர—ராஜ்யம். நகர—ராஜ்யம் என்ற சொல் (City State) என்ற ஆங்கிலச் சொல்லின் நேரடியான மொழிபெயர்ப்பு. உண்மையில் பார்த்தால் கிரீஸ் தேசத்திலிருந்த நகர—ராஜ்யங்களை நகர ராஜ்யங்கள் என்று அழைப்பதைக் காட்டிலும் கிராம—ராஜ்யங்கள் என்று அழைப்பதே பொருந்தும். கிராமங்களில்கூட நமது கிராமப் பஞ்சாயத்து நிர்வாகத்திலே அத்தனை மக்களும் நேரடியாகப் பங்கு கொள்வதில்லை. கிராமப் பஞ்சாயத்தின் நிர்வாகம் கிராம மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகளைக் கொண்டே நடைபெறுகிறது. ஆனால், அக்காலத்தில் கிரீஸில் இருந்த நகர ராஜ்யத்து மக்கள் அத்தனை பேரும் அரசியல் நிர்வாகத்தில் நேரடியாகப் பங்கு கொண்டனர். அதுதான் உண்மையான குடிமக்களிணுட்சி என்று அவர்கள் கருதினர். நகர ராஜ்யத்தின் பல்வேறு சபைகளிலும் குழுக்களிலும் மக்கள் அனைவரும் கலந்துகொண்டு விவாதங்களில் பங்கு கொண்டனர். பதவிகளும் சீட்டுப் போட்டுக் குலுக்கும் முறையிலே பொதுமக்களுக்கு அளிக்கப்பட்டு வந்தன. பொதுமக்களில் ஒவ்வொருவரும் சில காலத்துக்கொரு முறையாவது பல்வேறு பதவிகளில் ஏதாவதொன்றில் அமர வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது [illegible] குடியரசு என்றால் பெரும்பான்மை (Majority) [illegible] ஆட்சி (Rule of the majority) என்று [illegible]. இதை அக்காலத்திய கிரேக்க மக்கள் [illegible] உண்மையான குடியாட்சிக்கு முரண்பட்ட [illegible] நினைத்தார்கள். கிரேக்க மக்கள் [illegible] தங்கள வாழ்வு என்று கருதினார்கள். எனவே [illegible] நிர்வாகத்திலோ, அரசியல் சட்ட ஆக்கங்களிலோ, தீர்மானங்களிலோ அன்றாடம் தாங்கள் பங்கு கொள்ளாவிட்டால் தான் தங்களின் வாழ்வே நிறைவேறுகிறது என்பது

அவர்களின் கொள்கை. "செம்மையான வாழ்வு" (The ideal of good life) என்பதையும் அரசியல் என்பதையும் அம்மக்கள் ஒன்றாகவே கண்டார்கள். அவர்கள் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்துணர வில்லை.

இத்தகைய ஆட்சியிலே நடைமுறை அனுபவத்தில் பல சிக்கல்களும் சிரமங்களும் ஏற்பட்டன. அத்தனை மக்களும் கால முழுவதையும் அரசியலிலே செலவிட்டால் நாட்டுக்கு வேண்டிய பொருளையும், ஒவ்வொருவரின் தனி ஜீவனத்திற்கு வேண்டிய பொருளையும் எவ்வாறு ஈட்டுவது? எவர் ஈட்டுவர்? அடிமைகள் இருந்து பல்வேறு தொழில்களை ஓரளவு கவனித்துக் கொண்டனரெனினும், ஓரளவு தாங்களே தங்களின் தொழில்களில் அக்கறையெடுத்துக் கொண்டால்தான் தொழில் சரிவர நடக்கும். மேலும் எல்லோராலும் அடிமைகளை வைத்துக் கொள்ள முடியாது. சுருக்கமாகச் சொல்லப் போனால் கிரேக்க மக்களில் பலருக்கு அரசியலில் சதா நேரடியாகப் பங்கு கொள்வதற்கு வேண்டிய அவகாசமும் பொருளாதார வசதியும் போதிய அளவு இல்லை. இருப்பினும் முடிந்த மட்டில் அவர்கள் அரசியலில் பங்கு கொண்டனர். மேலும் அரசியல் நிர்வாகத்தின் பிரிவுகளை நடத்துவதற்கு விசேடக் கல்வியும், பொருள் நுணுக்க ஞானமும் (Technical Knowledge), பயிற்சித் திறனும் தேவைப் பட்டன. சில சமயங்களில் குறிப்பிட்ட பதவிகளுக்குக் கண்ணியம் நிறைந்தவர்களும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களும் தேவைப்பட்டனர். எனவே குடியாட்சியிலும் கூடச் சில முக்கியமான பதவிகளைப் பண்டிதச் சீமான்களும் பணக்காரர்களுமே வசிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் சூழ்நிலையும் ஏற்பட்டது. இது ராஜ்யத்துக்கு ராஜ்யம் வேறுபட்டது. பல ராஜ்யங்களில் போர்ப் பதவிகள் (Military offices) சீட்டுப் போட்டுக் குலுக்கும் முறையினால் பொதுமக்களில் எவருக்கும் அளிக்கப்பட



வில்லை. இவற்றிக்குப் பொதுஜனத் தேர்தல் நடத்தித் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்தனர். இது போன்றே நிதி சம்பந்தமான சில முக்கியமான பதவிகளுக்கும் தேர்தல்கள் நடத்தியே தகுதியான மனிதர்களைத் தேர்ந்தெடுத்தனர். பண்டிதச் சீமான்களும் பணக்காரர்களும் இப்படிப்பட்ட பதவிகளுக்கும் இன்னும் வேறு சில பதவிகளுக்கும் விசேடத் தகுதி பெற்றவர்களாயிருந்தால் அப்பதவிகளுக்கு மக்கள் இவர்களையே தேர்ந்தெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எனினும் இவர்களுடைய செயல்களையும் போக்குகளையும் அவ்வப்பொழுது சபைகளிலேயும் பொதுவிடங்களிலேயும் விவாதித்து விமர்சனம் செய்து கண்டிப்பதற்குப் பிரஜைகள் அனைவருக்கும் உரிமை யிருந்தது. அத்துடன் இவர்கள் பொதுஜனத் தேர்தலின் பேரில் பதவிக்கு வந்து பொதுமக்கள் குறிப்பிட்டு நிர்ணயித்த காலம் வரையில்தான் பதவியில் அமர்ந்திருந்தனர். பொதுமக்களின் தீர்மானங்களுக்குக் கட்டுப்பட்டு அவர்களின் விருப்பங்களை இவர்கள் நிறைவேற்றி வைப்பவர்கள். எனவே இவ்வாட்சியைப் பண்டிதராட்சியின் (Aristocracy) தொடர்ச்சி யென்றோ, பணக்கார ராட்சியின் (Oligarchy) எச்சமென்றோ சொல்ல முடியாது. முற்றிலும் குடியாட்சியே இது. குடியாட்சியிலும் ஓரளவு முன்னேற்றமான குடியாட்சி; சற்றுப் பொறுப்பும் புத்திசாலித்தனமும் வாய்ந்தது. குடியாட்சியை ஒவ்வொரு வழியிலும் பக்குவப்படுத்தி முன்னேற்றத்தான் கிரேக்கர்கள் விழைந்தார்களே யொழியக் குடியாட்சியை மற்ற ஆட்சி முறைகளோடு ஒப்பிட்டுக் குறை கூறவோ, அதினின்றும் பிரிந்து செல்லவோ அவர்கள் எக்காலமும் விரும்பிய தில்லை.

கிரீஸ் நகர ராஜ்யங்களில் பிரஜா உரிமை பெற்றிருந்தவர்களுக்கு மட்டுமே அரசியலில் பங்குகொள்ளும் உரிமை இருந்தது. மற்றவர்கள் அரசியலில் பங்கு

கொள்ள இயலாது. உதாரணமாக, புகழ்வாய்ந்த நகர
மான ஏதென்ஸ் (**Athens**) ராஜ்யத்திலே, அதன் ஜனத்
தொகை 450,000 ஆக இருந்தபொழுது அதில் 250,000
பேர் அடிமைகளாக இருந்தனர். இவர்களுக்கு அரசிய
லில் பங்கு கொள்ளும் உரிமை அறவே கிடையாது.
மீதியுள்ளவர்களில் 8000 பேர் பிற நாட்டவராயிருந்த
னர். அவர்களுக்கும் அரசியலில் பங்குகொள்ளும்
உரிமை கிடையாது. எஞ்சியிருந்த 120,000 பேர்
மட்டுமே பிரஜைகளாகக் கருதப் பட்டனர். இதில்
குழந்தைகளையும் பெண்களையும் கழித்துவிட்டோமே
யானல் சுமார் 40,000 பேர்தான் அரசியலில் பங்குகொள்
ளும் வாய்ப்பைப் பெற்றிருந்தனர். பெண்களுக்கும்
அரசியலுக்கும் எந்தவிதமான சம்பந்தமு மில்லாமலிருந்
தது. வண்டிகளையும் வாகனங்களையும் இழுக்கவும்,
பாரங்களைக் கடத்தவும். சுமைகளைத் தூக்கவும், சுரங்
கங்களைக் குடையவும், சுவர்கள் எழுப்பி வீடுகள் கட்ட
வும், கல்லுடைக்கவும், கழனி திருத்தவும், இரும்பைக்
காய்ச்சி உருக்கவும், ஈட்டிகளையும் வேல்களையும் செய்
யவும், சரக்குகளைக் கப்பல்களில் ஏற்றவும் இறக்கவும்
அடிமைகள் பெருவாரியாகத் தேவைப்பட்டதால்,
அடிமைகளின் உரிமைகளைப் பற்றியோ, அவர்கள்
பட்ட கஷ்ட நிஷ்டூரங்களைப் பற்றியோ, வெறும் வாய்
வார்த்தைகூட எவரும் வெகு காலமாகப் பேசவில்லை.

குடியரசின் மேல் அளவற்ற பற்றுக்கொண்ட
வர்கள்தாம் கிரேக்கர்கள். இதற்குக் காரணம், அள
வற்ற சுதந்தர வேட்கையையும் தன்மான உணர்ச்சி
யையும் உடையவர்கள் அவர்கள். அதே சமயத்தில்
அவர்கள் மிகுந்த சுயேச்சை மனப்பான்மை உடையவர்
களாய், அளவுக்கு மீறிய தனித்துவ இயல்பை (**Indivi-
dualism**)ப் பெற்றவர்களாய் இருந்தார்கள். இதனல்
அவர்கள் ஒரு தலைவரின் கீழோ, பல தலைவர்களின்
கீழோ எந்தச் சூழ்நிலையிலும் ஒன்றுபட மறுத்தனர். பிற



ருடைய தலைமையை ஏற்றுக்கொள்வதே அவர்
களுக்குச் சொல்ல முடியாத கசப்பும் வெறுப்பும். ஒவ்
வொருவரும் அவருக்கு அவரே தலைவர் எனக் கருதிக்
கொண்டனர். இது ஒரு வழியிலே நல்ல குணப்பாங்
கெனினும் இது அளவைக் கடக்கும்பொழுது, கூட்டு
முயற்சிகளும், கூட்டு வாழ்வும், கூட்டுப் பாதுகாப்பும்
இயலாத காரியங்களாகி விடுகின்றன. நாட்டைச்
சூழ்ந்து எதிரிகள் தோன்றி, தங்களின் நாடும் சுதந்தர
மும் குடியரசும் பறிபோகக்கூடிய நிலைமை ஏற்பட்ட
பொழுதும்கூட, கிரேக்கர்கள் தங்களின் வித்தியாசங்
களை மறந்து, எதிரிகளை விரட்டுவதற்கு, ஒருவரோ
டொருவர் இணங்கி ஒன்றுகூடத் தவறினர். தங்களுக்
குத் தாங்களே, "மன்னர்" என்ற எண்ணம் அவர்களை
விட்டு எளிதில் அகல மறுத்தது. ஒவ்வொரு நகர ராஜ்
யத்திலும், அங்கிருந்த கிரேக்கர்கள் ஒவ்வொருவரும்
தங்களை அந்நாட்டு மன்னர் என்று கருதிக்கொண்டு
பிறருடன் இணங்கிச் செல்வது, பிறரின் தலைமையை
ஏற்றுக் கொள்வது, இவற்றையெல்லாம் தங்களின்
தன்மானத்துக்கு இழுக்கு என்று நினைத்தனர். இந்த
இயல்பைக் கிரேக்கர்களின் குடியாட்சி அவர்களிடம்
மேலும் மேலும் வளர்க்கத்தான் செய்தது. கூட்டுப்
பாட்டையும், பிறருடைய அபிப்பிராயங்களிலும் முடிவு
களிலும் உள்ள நியாயத்தையும் புத்திசாலித்தனத்தை
யும் ஏற்றுக்கொள்ளும் தன்மையையும் அது அவர்களி
டம் அவ்வளவாக வளர்க்கவில்லை. கலை, தத்துவம், இலக்
கியம் இவைகளிலெல்லாம் கிரேக்கர்கள் ஒருவரை யொரு
வர் மதித்துப் போற்றிப் பாராட்டி, ஒருவரோடொருவர்
இணங்கிச் சென்றார்கள். அரசியலில் மட்டும் அது
எளிதில் நடவாத காரியமா யிருந்தது. சாதாரணமான
சராசரி கிரேக்கன்கூட ஓரளவு சிறந்த சிந்தனையாளனாக
வும் தர்க்கத்தில் வல்லவனாகவும் விளங்கினான். அமைதி
யான காலங்களில் சாதாரணப் பிரச்சினைகளைப்

பொறுத்தமட்டில் அவர்கள் எளிதில் ஒருவரோடொருவர் இணங்கிப் பல காரியங்களில் ஏகோபித்துச் சென்றனர். முக்கியமான பிரச்சினைகளும் பதவிப் போட்டிகளும் எழும்பொழுதுதான், ஒவ்வொரு கிரேக்கனும் தனது சிந்தனை விவேகத்தையும் தர்க்கத் திறனையும் காட்டினான். தனது அபிப்பிராயங்களே சிறந்தவை என அவன் மனமார நம்பியதால், அவனது தர்க்கங்களுக்கும் தனித்துவத்துக்கும் எளிதில் முடிவேற்படவில்லை. தங்களினும் மிகச் சிறந்த சிந்தனையாளர்களின் அபிப்பிராயங்களை மதித்துப் புகழ்ந்தனர் சாதாரணக் கிரேக்கர்கள். பெரிய வீரர்களையும் புகழ்ந்து அவர்களின் தலைமையையும் எத்தனையோ சமயங்களில் ஏற்று அரிய காரியங்களையும் சாதித்தவர்கள்தான் கிரேக்கர்கள். எனினும் இவர்களை ஒன்றுகூட்டிப் பெரிய முயற்சிகளில் ஈடுபடுத்தித் தொடர்ந்து இயக்குவது மிக அசாதாரணமான தலைவர்களால்தான் முடிந்தது. கிரேக்கர்களின் தத்துவ வல்லமையும் சிந்தனைத் திறனும் அரசியல் உள்பட எல்லாத் துறைகளிலும் அற்புதம் அற்புதமான சித்தாந்தங்களைத் தோற்றுவித்தன. இதே திறமைகள்தான் அவர்களின் நடைமுறைக் காரியங்களுக்குச் சமயங்களில் உதவாது போயிற்று. அது மட்டுமல்லாது அரசியல் ஆக்க முயற்சிகளுக்குப் பெரிய தடைகளாக இருந்தன. இவ்வளவு இருந்தும், கிரேக்கர்கள் அரசியலை நடத்திக் காட்டியதுபோல் இதுவரை உலகில் எவரும் நடத்திக் காட்டவில்லை. யானை படுத்தாலும் அசுவத்தின் உயரமென்பது இங்கு நிரூபணமாகின்றது. கிரேக்கர்கள் சற்றுப் பெரிய அச்சிலே வார்க்கப்பட்டவர்கள். பெரிய மனிதர்களுள் பேதங்களும் அதிகம் காணப்படும்; அவர்களின் சாதனைகளும் அதிகமாகவே காணப்படும். எனினும் கிரேக்கர்களின் அடிப்படை தனித்துவ இயல்பு (Individualism) இறுதியில் அளவைக் கடந்து மேலிட்டுவிட்டதால், தங்களுக்குள்



ஒற்றுமையிழந்து, அந்நியப் படையெடுப்புக்குக் கிரீஸ் தேசம் அனைத்துமே ஒரு காலத்தில் அடிபணியவேண்டியதாகிவிட்டது. கீரிஸ் நாடு பிறரின் கைவசமாயிற்று.

இக்காரணத்தாலோ என்னவோ, **ரெனி ஸெடில்லாட்** (Rene Sedillot) என்ற தற்காலத்தைய எழுத்தாளர் ஒருவர் கிரேக்க மக்களின் குணாதிசயங்களில் ஓரிரண்டைப் புகழ்ந்துவிட்டு, மிகுந்துள்ளதையெல்லாம் மிக வன்மையாகப் பழித்துக்கூறி நிந்திக்கிறார். அவர்களைப் பொய்யர்கள் என்றும், திருடர்கள் என்றும், அகந்தையாளர்கள், சுயநலமிகள் என்றும் பல்வேறு அடைமொழிகளைக் கொண்டு வசை புராணம் பாடுகிறார். வியாபார ஸ்தலங்களிலும், தொழிற்சாலைகளிலும், கப்பல் தளங்களிலும், எல்லா இடங்களிலும் துறைகளிலுமே கிரேக்கர்கள் பொறாமையும் போட்டியும் நிறைந்த வன்னெஞ்சர்களாய் விளங்கினர் என்பது அவரின் அபிப்பிராயம். ஒருவரையொருவர் புரிந்துகொள்ளுவதைவிட ஒருவரை ஒருவர் சூழ்ச்சி செய்து வீழ்த்துவது அல்லது கொன்று குவிப்பதே அவர்களின் தொழிலாக இருந்தது என்று அவர் கூறுகிறார். ஒழுங்கின்மையும் போட்டியும் அவர்களுடைய வாழ்வின் விதியாக இருந்தது; பொது நலத்தைக் காட்டிலும் சுயநலத்தையே அவர்கள் அதி முக்கியமாகக் கருதினார்கள்; அவர்களுள் இருந்த பிளவுகளால் கிரீஸ் தேசம் என்றுமே ஒற்றுமைப்பட முடியாது போயிற்று. இவ்வாறெல்லாம் ஸெடில்லாட் சினமிகுந்து பேசுகின்றதை அவரின் சரித்திர நூலொன்றிலே காண்கிறோம். (Competition was the law of their being, and indiscipline their method. Mutual slaughter was commner than mutual understanding. Even when peril threatened from outside, they were incapable of calling a truce to their ruling passions or of uniting in self-defence. With them private

**interest was of more importance than the general good).** கிரீஸ் மாநிலத்திலே காணப்பட்ட பல்வேறு நகர ராஜ்யங்கள் ஒன்றோடொன்று போட்டி யிட்டன; சண்டை யிட்டன; ஒன்றையொன்று பொறாமைப்பட்டு, கழுகுக் கண்கள் கொண்டு பார்த்துக் கவ்வ முற்பட்டன; ஒன்றை யொன்று படையெடுத்து ஆக்கிரமித்தன, அடிமைப்படுத்தின என்பதெல்லாம் உண்மை. கிரீஸ் மாநிலத்துக்குப் பொது எதிரிகள் தோன்றி அம்மாநிலம் அனைத்தையும் படையெடுத்து அடிமைப்படுத்த முனைந்த காலத்தில் அதனுள் காணப்பட்ட பல்வேறு நகர ராஜ்யங்கள் (City States) சமஷ்டியாக (federation) இணைந்து ஒன்று கூடி எதிரியை வீழ்த்தத் தவறின என்பது உண்மை. கிரேக்க மக்களின் தேசாபிமானம் அவரவர்களின் நகரங்களைத்தான் அளவாகக் கொண் டிருந்ததே யொழிய, கிரீஸ் மாநிலத்தை அளவாகக் கொண்டிருக்கவில்லை. கிரேக்கர்கள் அவரவர்களின் நகரங்களைத்தான் தங்களின் நாடுகளென்று நினைத்து அவற்றின்மேல் பற்றுக் கொண்டிருந்தனரே யொழியக் கிரீஸ் மாநிலத்தின் மேலல்ல. தங்களுடைய நகரத்துக்கு (City State) ஆபத்து வந்தபொழுது தங்களின் உரிமைப் பொருளுக்கு ஆபத்து வந்ததாகக் கருதினார்கள். கிரீஸ் மாநிலத்துக்குப் பொதுவாக ஏற்பட்ட ஆபத்தை அவர்கள் அதிகமாகப் பொருட்படுத்தவில்லை. இதற்குக் கிரீஸில் வாழ்ந்த கிரேக்க மக்க ளனைவரையும் பொது வாகக் குற்றம் சாட்டிப் பயனில்லை. கிரேக்க மாநிலத் திலே வாழ்ந்த பல்வேறு நகரங்கள் முன்னெச்சரிக்கை யாக வெகு காலத்திற்கு முன்பே சமஷ்டியாக இணைந்து கிரேக்க மக்களின் தேசப் பற்றைக் கிரீஸ் மாநிலம் அனைத்தையும் அளவாகக் கொண்டு விரித்திருக்குமா னால், கிரீஸுக்கு இறுதியில் அத்தகைய அவல நிலை ஏற்பட்டிருக்காது. கிரேக்க தேசியம் நகர ஆட்சிகளின் எல்லைகளைத் தாண்டிக் கிரீஸ் நிலப் பரப்பு அனைத்தையும்



ஏற்கெனவே உள்ளடக்கி வளர்ந்திருக்குமானால், கிரேக்க சரித்திரத்தின் திக்கும் போக்குமே மிகப் பெரிய அள விலே மாற்ற மடைந்திருக்கும். அத்தகைய அகண்ட தேசியத்தை வளர்த்திருப்பது முடியாத காரியமல்ல. ஏனெனில் கிரீஸ் மாநிலத்துக்குள் கிரேக்கர்கள் பல் வேறு நகர ராஜ்யங்களில் தனித்தனியாக வாழ்ந் தாலும் கூட, அவர்களின் அடிப்படை இயல்பும் பண் பும், வாழ்வின் கோட்பாடுகளும் அரசியல் நாகரிகமும், கிரீஸ் மாநிலமனைத்தும் ஒன்றாகவே இருந்தன. இந்த அடிப்படை ஒன்றிப்பைப் பயன்படுத்தி அகண்ட தேசியத்தைக் கிரீஸ் நிலப்பரப்பு அனைத்திலும் பரப்பிப் பல நகரங்களையும் இணைத்து ஒரே சமஷ்டியாக்காதது கிரேக்க மக்களின் குற்றமே. கிரேக்கத் தலைவர்களின் குற்றமென்று சொன்னால் அது மிகப் பொருத்தமா யிருக்கும். முயன்றிருந்தால் இது முடியாத காரியமல்ல. கிரீஸ் மாநிலம் அனைத்திற்கும் அந்நியப் படையெடுப் பால் ஆபத்து வந்தவுடன் இத்தவறு சுட்டிக்காட்டப்பட் டது. எனினும் ஓரிரு ராஜ்யங்களா யிருந்திருப்பின் அவை இணைந்திருக்கும். பல நகர ராஜ்யங்களாயிருந்த காரணத்தால் அவை எளிதில் இணைய முடியவில்லை. இணையாதிருப்பது தவறு என்பதை அவர்கள் சரிவர உணரவும் முடியவில்லை. மேலும் பல நூற்றாண்டு களாய் ஒரு முறையில் வளர்ந்து வந்த சுபாவத்தை இரவுக்கிரவு அடியோடு மாற்றிப் புதிய முறையில் திருப் புவதென்பது கதை காவியங்களில் நடக்கலாமே யொழிய நிச வாழ்வில் நடக்காது.

உதாரணமாக, சீனர்கள் இந்திய எல்லையின் மேல் படையெடுத்திருப்பது இந்திய உபகண்டத்துக்கே பயங்கரமான ஆபத்து என்பதைப் பண்டித ஜவஹர்லால் நேரு உள்பட அத்தனை இந்தியத் தலைவர்களும் மேலே நாட்டு ராஜதந்திரிகளும் திரும்பத் திரும்பச் சுட்டிக் காட்டுகின்றனர். இருப்பினும், பாகிஸ்தான் மக்களும்

தலைவர்களும் இந்திய உபகண்டத்தைப் பற்றியா நினைக்கின்றனர்? இந்திய உபகண்டத்தின் ஒரு பகுதி தான் பாகிஸ்தான் என்பதையா நினைக்கின்றனர்? பாரதத்திற்கு ஏற்பட்டுள்ள ஆபத்து சீக்கிரம் தங்களுக்கும் ஆபத்தாக வளரும் என்பதையா நினைக்கின்றனர்? பாகிஸ்தான் ஒரு தனி நாடு, அதற்குத் தற்பொழுது எந்த ஆபத்தும் இல்லை; பாகிஸ்தானை மட்டும் நாம் தற்பொழுது காத்துக்கொண்டால் போதும் என்றுதான் நினைக்கின்றனரே யொழிய, அரசியல் தூரதிருஷ்டியிருக்கும் மக்களைப்போல் அவர்கள் நடந்து கொள்ள மறுக்கின்றனர். இதற்குக் காரணம் 'இந்தியா பாகிஸ்தானின் முதல்தரமான எதிரி' என்ற எண்ணத்தை இடையறாது ஊட்டிப் பாகிஸ்தான் மக்களின் தேசியத்தை அதன் தலைவர்கள் வளர்த்து வருகின்றனர். உண்மையில் இந்தியாவும் பாகிஸ்தானும் பரஸ்பர எதிரிகளே அல்ல இவ்விரு நாடுகளுக்கு மிடையே இதுவரை எந்தப் போரும் நிகழவில்லை; போர் நிகழ்வது சாத்தியமுமல்ல, எனினும் இந்தியாவைத் தன்னுடைய எதிரியாகப் பாவித்தே பாகிஸ்தான் நடந்து கொள்ள வேண்டும் என்ற மனோநிலையைப் பாகிஸ்தான் தலைவர்கள் பாகிஸ்தானிலே தோற்றுவித்திருக்கிறார்கள். இதற்குப் பாகிஸ்தானின் லட்சோபலட்சம் பொது மக்களைக் குறை கூறிப் பயனில்லை. ஆனால், கிரீஸ் மாநிலத்திலோ அதனுள் ளடங்கியிருந்த பல்வேறு நகர ஆட்சிகளுக்கிடையே (City States) ஓயாது அடிக்கடி போர் நிகழ்ந்து வந்தது. ஒவ்வொரு நகர ராஜ்யமும் அண்டை நகர ராஜ்யங்களை வெறும் எதிரிகளாக மட்டுமல்ல, பயங்கர வைரிகளாகவே கருதி வந்தது. சாதாரண மக்களிடையேயும் இந்த உணர்ச்சியும் மனோநிலையும்தான் வளர்ந்து வந்தது. இந்தச் சூழ்நிலையிலே அவர்கள் ஏன் இணையவில்லை என்று கேட்கும் கேள்வி அபத்தமான தொன்றாகும்.



இந்தியா சுதந்தரமடைவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னிருந்தே, ஆசியாக் கண்டத்திலுள்ள தேசங்களனைத்தின் மத்தியிலும் ஒரு பொதுவான தேசீயத்தைத் தோற்றுவித்து, ஆசிய நாடுகளின் மத்தியில் ஒரு சகோதர உறவை உண்டுபண்ண வேண்டும் என்று நம் பண்டித நேரு ஒரு ஆசைக்கனவை வளர்த்துக்கொண்டிருந்தார். இந்தியா சுதந்தரமடைந்தபின் தம்முடைய அரசியல் ஞானம், ஒப்புயர்வற்ற தூய ராஜதந்திரம் அனைத்தையும் கையாண்டு தம் கனவை நனவாக்கப் பல்வேறு முயற்சிகளைச் செய்தார். ஓரிரண்டு முயற்சிகளும் வெற்றி கண்டார். எனினும் அவர் விழைந்த ஆசிய தேசியம் எளிதில் உருவாக மறுக்கிறது. ஆசியாக் கண்டத்தி லுள்ள ஒவ்வொரு தேசமும் தன்னைப் பெரிதென்று நினைத்து, எம்முறையையும் கையாண்டு தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று நினைக்கின்றதே யொழிய, ஆசியாக் கண்டமனைத்திலும் தன் கண்களை ஓட்டி விரிந்த அடிப்படையிலே சிந்திக்கும் திறனை அணுவளவாவது பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. ஆசிய தேசியம் வளர்ந்தால், ஆசியாவிலுள்ள ஒவ்வொரு நாடும் தன்னைப் பன்மடங்கு சிறந்த முறையிலே வளர்த்துக் கொள்வதற்கும், சர்வதேச அரங்கிலே தங்களுடைய கூட்டுப் பலத்தால் தன் பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்வதற்கும், அந்நியர் எவருடைய ஆதிக்கத்திலும் வீழாதிருப்பதற்கும் அது கணக்கிடற்கரிய அளவு உதவும் என்பதை எந்த ஆசிய தேசமும் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்ப்பதாகத் தெரியவில்லை. ஆசிய தேசங்களுக்குள்ளேயே எவ்வளவோ பொறாமையும், போட்டிகளும், பூசல்களும்தான் காணப்படுகின்றன. ஆசியாக் கண்டம் இன்னும் மேலை நாடுகளின் சூதாட்ட அரங்கமாகவே இருந்து வருகிறது. ஆசிய நாடுகள் பல மேலை நாடுகளின் பகடைக் காய்களாக சூதாட்டத்திலும்

பயன்பட்டு வருகின்றன. சர்வ தேசியக் கண்ணேட்டமும், ராணுவக் கூட்டுறவுகளும், சமஷ்டிக் கொள்கைகளும் பலப்பட்டுக்கொண்டு வருகிற இந்த இருபதாம் நூற்ருண்டிலேயே, ஒரே கண்டத்தினுள் அடுத்தடுத்து வசிக்கும் நாடுகளின் மனேநிலை இவ்வாறு இருக்குமாளுல், பல நூற்ருண்டுகட்கு முன்பு, ஒன்றேடொன்று சதா போரிட்டுக் கொண்டிருந்த பல நகரங்களிலே பிரிந்து வாழ்ந்த கிரேக்க மக்கள் ஏன் ஒன்ருக இணையத் தவறினுர்கள் என்பதை ஓரளவு நாம் மனக்கண்ணுல் சித்தரித்துக் காணலாம். அந்த நகரங்கள் இணைவதற்குக் கிரீஸ் மாநிலத்தின் உள்புற பூகோள அமைப்பும் ஓரளவு தடையா யிருந்தது. எது எவ்வாறெனினும் கிரீஸ் மாநிலத்தினுள் இருந்த பல்வேறு நகரங்கள் (City States) அபாயகரமான சூழ்நிலையில்கூட இணைந்து ஒன்றுகூடத் தவறியதால் கிரீஸ் தேசமே அழிந்தது என்பது மட்டும் அப்பட்டமான உண்மை.

இதனுல் கிரேக்க மக்களைத் தீக்குணம் படைத்தவர்களென்று சொல்வது நியாயமற்ற கூற்ருகும். கிரேக்க மக்களின் வரலாற்றை அறிஞர்கள் பலர் மிகுந்த ஆராய்ச்சி ஞானத்துடன் எழுதியிருக்கிருர்கள். கிரேக்க மக்களை மாந்தருள் பெரும் படைப்புக்களாகவே அவர்கள் கருதுகிருர்கள். ஐரோப்பிய நாகரிகத்துக்கே அடி விளக்காகவும் பிடி விளக்காகவும் ஒரு காலத்தில் விளங்கியவை கிரேக்கர்கள் விட்டுப்போன அறிவுத் திரட்டுகளும் அரசியல் சித்தாந்தங்களும் ஆத்ம ஞான நூல்களும்தான் என்பதை அறிஞர்கள் ஒருமுகமாக இன்றும் ஒப்புக் கொள்கின்றனர். அவர்கள் தொட்டதெல்லாம் பொன்னுய்த் துலங்கிற்று. எந்தத் துறையில் இறங்கினுலும் கிரேக்கர்கள் அதிலிருந்து அரியதும் பெரியதுமான புதிய ஞானமொன்றைக் கடைந்தெடுத்து அகிலத்துக்கு வழங்கினுர்கள். எல்லா மனிதர்களுக்குமுள்ள குறைபாடுகள் அவர்களிடமு மிருந்தன. சில சமயங்



களில் அக்குறைபாடுகள் மிகுந்தும் காணப்பட்டன. எனினும் எல்லா மனிதர்களிடமும் காணப்படாத அரிய குண நலன்கள் பலவற்றையும் ஆற்றல்கள் பலவற்றையும் அவர்கள் மிகச் சிறந்த அளவிலே பெற்றிருந்தனர். மனித குலத்தின் மாணிக்கங்கள் பலர் அவர்களின் மத்தியில்தான் தோன்றினர் என்பதை எவர் மறுப்பர்?

உலகின் ஒவ்வொரு தேசத்திற்கும் ஒவ்வொரு வரலாறு உண்டு (History). சில வரலாறுகள் படிப்பதற்குச் சுவை மிகுந்தனவாய் உள்ளன. சில வரலாறுகள் படிக்கும்பொழுது சுவையற்றவையாய்ச் சப்பெனக் காணப்படுகின்றன. சுவை மிகுந்த வரலாறுகளை யுடைய தேசத்து மக்கள் வாழ்விலே சுவை கண்டவர்கள்; வாழ்வாங்கு வாழ முயன்றவர்கள்; போராட்டத்திலும் இன்பத்தைக் கண்டவர்கள்; வாழ்விலே எழிலைக் கண்டு மகிழ்ந்தவர்கள்; ஆத்ம யௌவனம் குன்ருதவர்கள்; வாழ்வின் ஏற்றங்களிலும் இறக்கங்களிலும் தமது ஆத்மத்தை இழந்துவிடாது சில லட்சியங்களைத் தொடர்ந்து கடைப்பிடித்தவர்கள்; ஆண்டவனையும் அறிவுப் பொருளாக உணர்ந்து வளர்ந்தவர்கள்; அநீதிக்குக் கல்லறை கட்டியவர்கள். இப்படிப்பட்ட மக்களின் வரலாறுகள் படிக்கப் படிக்க இனிக்கும். நம் உயர்ச்சிகளை யெல்லாம் விறுவிறுப்பை ஏற்றி நம் அறிவை ஆனந்த போதையிலே ஆழ்த்தும்; மானிட வாழ்வையே மனேகரமான ஒரு மதுக் கோப்பையாகக் காட்டும். அதற்கு மாருக, சுவையற்ற வரலாறுகளை யுடைய மக்கள் சுவையற்ற வாழ்க்கையே வாழ்ந்திருப்பர். கோழைகளாக, பிறரைக் கும்பிட்டு வாழ்பவராக, ஆத்ம ஞானத்தை விழையாதவர்களாக, போராட்ட மனப்பான்மை யற்றவர்களாக, சுய கௌரவத்தைப் பிறருக்கு விற்பவர்களாக, மிருக இச்சையிலே தோய்ந்து அறிவின்பத்தைப் புறக்கணித்தவர்களாக, கலையிலே இன்பங் காணுதவர்களாக, வர்த்தகத்திலும் வாணிகத்திலும் மட்டுமே தங்களின் சக்தி

களைச் செலவிட்டுச் சிதைப்பவர்களாக, பொருளீட்டுவதில் மட்டுமே தங்களின் புத்தியைப் படரவிடுபவர்களாக, புலனின்பத்தில் மட்டுமே பேரின்பத்தைக் காண்பவர்களாக, தேய்வுப் பாதையைத் தங்கள் வாழ்வுப் பாதையாய் ஆக்கிக்கொண்டவர்களாக அம்மக்கள் இருந்திருப்பர் என்பதை நிச்சயமாகக் கூறலாம். சரித்திரங்களை எழுதும் ஆசிரியர்கள் தம் கைத்திறனால் சில வரலாறுகளுக்குச் சுவையூட்டுவதுண்டு. எனினும், வரலாற்று ஆசிரியன் எவ்வளவு வல்லவனாக இருந்தாலும், அக வாழ்விலும் புற வாழ்விலும் பாழ்பட்டுப்போன மக்களின் வரலாற்றுக்கு எளிதில் அவனால் சுவையூட்ட முடியாது. அவன் ஊட்டும் சுவையும் வெகுநேரம் நிற்காது.

கிரேக்க மக்களின் வரலாற்றிலே இயல்பாகவே தத்துவச் சுவையும் நாடக ரசனையும் எங்கணும் பொதிந்து கிடக்கின்றன. சரித்திர ஆசிரியர் எவருடைய கைத்திறனாலும் ஏற்பட்டவையல்ல அவை. கிரேக்க மக்கள் வாழ்வை அவ்வளவு ரசனையுடன் நடத்தியிருக்கின்றனர். அவர்களின் வரலாற்றை நாம் படிக்கும்பொழுது, நம் அறிவிலும் உயர்ச்சி மண்டலங்களிலும் ஒரு பேரெழுச்சி ஏற்படுவதைக் காண்கிறோம். நமது பழைய சிந்தனைகள் மறைந்து புதுச்சிந்தனைகள் எழக் காண்கிறோம்; வாழ்வைப் புதிய கண்ணோட்டத்திலிருந்து பார்க்கிறோம்; வாழ்விலே நமக்குப் புதிய விருப்பு ஏற்படுகின்றது. வாழ்விலே இதுவரை ஏற்பட்ட சலிப்பு வெறுப்புக்கள் எல்லாம் மறைந்து, வாழ்வைப் புதிய தத்துவத்தின் அடிப்படையிலே நிர்மாணித்து இன்புற வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகின்றது. அதிலும் கிரேக்கப் பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகள் ஓயாது ஆத்ம இன்பத்தைச் சொரிந்து அறிவு விளக்கம் அளிப்பவை. கிரேக்க வரலாற்றைப் படித்தவர்களுக்கு உலக வரலாற்றைப் படிக்க வேண்டும் என்னும் எண்ணம் இயல்பாகவே மேலோங்கி எழும். இது



போன்றதே பண்டைய ரோமானிய வரலாறும். இவ்விரு வரலாறுகளையும் படிப்பவர்கள் ஏதோ இன்பியல், துன்பியல் (comedy and tragedy) நாடகங்களை மாறி மாறிப் பார்ப்பது போன்ற உணர்ச்சியை அனுபவிப்பதோடு, அறிவிலே தத்துவம் வெள்ளமாய் ஓடிக்கொண்டிருப்பதையும் அனுபவிப்பர். அதிலும் பண்டைக் கிரேக்க ரோமானிய நாடகங்களை, கிரேக்க ரோமானிய அரசியல் வரலாறுகளுடன் இணைத்துப் படித்தவர்கள், தங்கள் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு அனுபவத்திலும் ஒரு புதிய தத்துவச் சுவை தோன்றி நிற்கக் காண்பர். படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்பந்தரும் வரலாறுகள் பலவற்றுள்ளும் கிரேக்க ரோமானிய வரலாறுகள் முதன்மையானவை.

இதுவரை கிரேக்க அரசியலைப்பற்றிப் பார்த்தோம். இதைத் தொடர்ந்து, கிரேக்க அரசியல் சித்தாந்த மேதைகளும் தத்துவ ஞானிகளுமான இருவரைப்பற்றி இங்கே கூறுவது சாலப் பொருத்தமுடையது. நம்மில் பலர் ஏற்கெனவே அறிந்துள்ள பிளேட்டோ (Plato), அரிஸ்டாடில் (Aristotle) என்பவர்கள்தாம் அந்த இரு மேதைகளும். அவர்களுடைய நூல்களுக்கு உலக அரசியல் சித்தாந்தங்கள் பல மிகவும் கடமைப்பட்டிருக்கின்றன. கிரேக்க அரசியல் ஸ்தாபனங்கள் அனைத்தையும் ஆராய்ந்து அத்துடன் மனித இயற்கையின் மூலங்களையும் இணைத்துச் சிந்தித்து வரையப்பட்டவை இவ்விரு மேதைகளின் நூல்களும். அரசியல் சிந்தனைக் களஞ்சியங்களாகவே இவர்களின் நூல்கள் உலக அரசியல் தத்துவ அறிஞர்களால் கருதப்படுகின்றன. இவர்களின் நூல்களிலே வாதங்களும் பிரதிவாதங்களும் ஒன்றையொன்று மேலிட்டுச் செல்லும்பொழுது, அறிவு இயங்கிச் செல்லும் அழகைக் கொள்ளை கொள்ளையாகப் பார்க்கிறோம். அறிவு ஒளி சிறிது சிறிதாக விரிந்து சென்று எங்கணும் பரவுவதை இந்நூல்களில் நாம்

காணும்பொழுது, புதிய ஞானத்திலே திளைத்தெழுந்
தவர்களாய் அறிவிலே முன்னைக் காட்டிலும் உயர்ந்து
வளர்ந்துவிட்டவர்களாய் நம்மை நாமே கண்ணுற்றுப்
பெருமை யடைகின்றோம். இம்மேதைகளின் நூல்களிலே
காணப்படும் அரசியல் வாதங்களுக்கும் நம்மிடையே
காணப்படும் அரசியல் வாதிகளுக்கும் இடையே உள்ள
தூரத்தையும் பேதத்தையும் நாம் காணும்பொழுது,
வியப்பு, வெறுப்பு, சலிப்பு, கசப்பு ஆகிய உணர்ச்சிகள்
அனைத்தும் நம்மை ஆட்கொள்ளுகின்றன. இலட்சியங்
களைப்பற்றிய ஞானம் நமக்கு வளர வளர அவற்றைப்
பற்றவேண்டுமென்ற எண்ணமும் நமக்கு வளருகின்றது.
நூல்களிலே காணப்படும் இலட்சியங்களை நாம் நன்கு
கற்று, அவற்றின் அடிப்படையிலே நாம் மென்
மேலும் சிந்திக்கும்பொழுது நமக்கு எத்தனையோ
மாற்றுஅபிப்பிராயங்களும் புதிய கொள்கைகளும் புதிய
இலட்சியங்களும்கூடத் தோன்றுகின்றன. இலட்சியங்
களை நாம் நூல்களில் காண்பதுபோலவே நம் அறிவிலும்
கண்டு, அவற்றுக் கிசைய நம் வாழ்வை அமைத்துக்
கொள்ளும்பொழுது, நமக்கு வேறெதிலும் கிட்டாத
ஒரு தனி இன்பம் கிட்டுகின்றது. இந்த இன்ப
உணர்ச்சியிலேயே வாழ்வின் பல சோதனைகளையும் இக்
கட்டுகளையும் நாம் எளிதில் கடந்துவிடலாம். நாம்
தோல்வி யடைந்து விட்டாலும்கூட, நமது இலட்சி
யத்தை வீழாது காத்துவிட்டோமே யானால், தோல்வி
யும் நம் உள்ளத்திலே வெற்றிக்குமேல் பிரகாசித்து
நமக்கு இன்ப மூட்டுகிறது.

பிளேட்டோவின் நூல்களையும் அரிஸ்டாடிலின்
நூல்களையும் நம்மில் பலர் படிப்பதில்லை ; ஒரு வேளை
படிப்பினும் ஆழ்ந்து படிப்பதில்லை ; அவ்வாறு ஆழ்ந்து
படிக்க விழைவதுமில்லை. காரணம் அவற்றைப் படிப்
பதற்கான நிர்ப்பந்தமும் உடனடித் தேவையும் நமக்கு
ஏற்படுவதில்லை என்பதே. நிர்ப்பந்தமும் தேவையு



மிருந்தாலன்றி எந்த நூலையும் படிப்பதில்லை என்ற
கொள்கையில் நாம் சென்றோமே யாயின், நாம் அறிவிற்
சிறியவர்களாகவே யிருந்து மறைந்து, சிறியவர்களா
கவே வாழ்ந்து, சிறியவர்களாகவே மறைந்துவிடுவோம்.
கற்றல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், இந்த முறை
களில்தான் அறிவே வளருகின்றது. அறிவைத் தேடு
வதிலும், அதை அடைவதிலும், அதை நாம் வாழ்வில்
பிரயோகிப்பதிலும், அதைச் சமுதாய நலனுக்கு உப
யோகப்படுத்துவதிலும் நமக்கு ஆசை ஏற்பட்டுக்
கொண்டே யிருக்கவேண்டும். ஆண்டவனைக் கோவி
லிலே தேடுவது ஒருபுறமிருக்க, ஆண்டவனெனும் சக்
தியை அறிவிலே தேடி, அதை ஆத்மத்திலே அடைந்து,
வாழ்விலே அதைப் பிரயோகிப்பவன்தான் வாழ்விலே
உண்மையான பயனடைகின்றான்,

பிளேட்டோ, அரிஸ்டாடில் இவர்களின் நூல்களை
மட்டுமல்ல, மேலைநாட்டு அரசியல் சித்தாந்த நூல்க
ளனைத்தையும், அரசியல் நடைமுறை விமர்சக நூல்க
ளனைத்தையும், நாம் நன்கு கற்றல் வேண்டும்.
வாழ்வே அரசியல் மயமாகிக்கொண் டிருக்கக் கூடிய
இக்காலத்தில் ஓரளவு அரசியல் கல்வியும், அரசியல்
ஞானமும் மிக மிக முக்கியம். அரசியல் தத்துவ நூல்கள்
பல வாழ்வுத் தத்துவ நூல்களாகவே அமைந்திருக்
கின்றன. தத்துவத்தின் ஒரு பகுதியே அரசியல்.
எனவே, இந்நூல்களில் வாழ்வின் இலட்சியங்கள்
அனைத்தும் வகுத்துக் கூறப்படுகின்றன. உலக வாழ்
விலே இலட்சியங்களை எல்லா இடங்களிலும் காணுவ
தென்பது அரிது. எனினும் இலட்சியங்களின் சாயலை
யாவது ஒரு சில இடங்களில் நாம் காணும்பொழுது
நமக்கு ஓரளவு மனத் திருப்தியும் உள்ள எழுச்சியும்
ஏற்படுகின்றது. நமக்கும் ஓரளவு இலட்சிய மனப்
பான்மை உள்ளத்தில் உயிர்த்தெழுகின்றது. அந்த
சாயலைக்கூட வர வர நாம் பல இடங்களில் இப்பொழு

காண முடிவதில்லை. இலட்சியங்களை நூல்களிலிருந்தும் நம் அறிவிலிருந்தும் பெயர்த்து, நடைமுறை வாழ்வில் இரண்டறக் கோர்த்து இணைப்பதைத்தானே நாம் "வாழ்வின் முன்னேற்றம்" என்கிறோம். நடைமுறை வாழ்வுக்கு ஒத்துவராத இலட்சியங்களும் உண்டு; நடைமுறை வாழ்வுக்கு இசைந்து வரக்கூடிய இலட்சியங்களும் உண்டு. பின்னால் சொல்லப்பட்ட இலட்சியங்களையாவது ஓரளவுக்குப் பின்பற்றும் பொழுதுதான் சமுதாயம் உண்மையில் முன்னேறுகிறது; வாழ்வோடு தத்துவங்களும் இலட்சியங்களும் கலக்கும்பொழுதுதான் வாழ்விற்குச் சுவையும் அழகும் ஏற்படுகின்றது; வாழ்வை நடத்துவதற்கும் அனுபவிப்பதற்கும் ஒரு விருப்பு ஏற்படுகிறது; வாழ்வின் ஏற்றங்களைப் போலவே இறக்கங்களும் இனிக்க ஆரம்பிக்கின்றன. அப்பொழுதுதான் தியாக புத்தி நம் உள்ளமெல்லாம் தோன்றி நிறைகின்றது. ஒவ்வொருவரும் தன் வாழ்விற்கென ஒரு தத்துவத்தை (Philosophy of life) வகுத்து வைத்துக்கொண்டு, அதன் பிரகாரம் நடக்க வேண்டும். தத்துவமற்ற வாழ்வு சுவையும் சாரமுமற்ற வாழ்வாகும். விரய வாழ்வென்று அதை அழைத்தல் தகும். அத்தகைய வாழ்வு வாழ்வோன் உயிரோடிருக்கலாம்; சாலைகளில் நடக்கலாம்; வாகனங்களில் செல்லலாம்; நிறையப் பொருளீட்டலாம்; இருப்பினும் அவனுடைய ஆத்மம் வெகு காலத்திற்கு முன்னமேயே செத்துவிட்டது என்பது உறுதி. இலட்சியமற்றவனுடைய வாழ்வு பைத்தியக்காரன் சொன்ன கதையைப் போன்றது; அதிலே எவ்விதமான பொருளையும் பயனையும் காண முடியாது.

அரசியல் துறையிலே மேலைநாட்டவர்கள் நம்மைக் காட்டிலும் முன்னேறியவர்கள். மேலைநாட்டு அரசியல் சித்தாந்தங்கள் பல முதிர்ந்த அறிவின் தீர்க்கங்களாகவே விளங்குகின்றன. ஆத்மீகத் துறையிலே (Spiritual



sphere) மேலைநாட்டவரைக் காட்டிலும் இந்தியர்களாகிய நாம் எத்தனையோ மடங்கு முன்னேறியவர்கள். நமது ஆத்ம சம்பந்தமான நூல்கள் பல ஆத்ம ஞானத்தின் சிகரங்களாகவே விளங்குகின்றன. நமது முன்னைய ரிஷிகள் பலர் ஆத்ம ஞானத்தின் உச்சிக்கே சென்று அமர்ந்தவர்கள். மேலைநாட்டு அரசியல் ஞானத்தையும் பரத கண்டத்தின் ஆத்ம ஞானத்தையும் ஒன்றாக இணைத்து நம் வாழ்வை நாம் அமைத்துக் கொண்டோமேயானால், நம் நாடு நிச்சயம் உலகத்தின் அச்சாக இயங்கி உலகைப் பாலிக்க முடியும்.

**பிளேட்டோ (Plato):** கிரேக்க வரலாற்றிலேயே தனக்கெனத் தனிப் புகழீட்டி ஐரோப்பாக் கண்டத்தின் மனோன்மணியாக ஒரு காலத்தில் விளங்கிவந்த **ஏதென்ஸ்** நகரிலே கி. மு. 427ல் **பிளேட்டோ** பிறந்தார். **பிளேட்டோ** **ஏதென்ஸ் (Athens)** நகரில் தோன்றியதால், பிற்காலச் சிந்தனையாளர்களின் கணிப்பிலே, **ஏதென்ஸ்** நகரின் பெருமை இன்னும் அதிகரித்தது. ஹோமர் தங்களுக்குத்தான் சொந்தம், அவர் தங்களவர் என்று எத்தனையோ நகரங்கள் போட்டியிட்டன என்பதை நாம் அறிவோம். இருப்பினும் ஹோமர் எந்த நகருக்கு உரியவர் என்பதை, அவர் எந்த நகரில் பிறந்தவர் என்று தெரியாத காரணத்தால் இன்னும் தீர்மானிக்க முடியவில்லை. பிளேட்டோவைப் பொறுத்தவரையில் அந்தச் சர்ச்சைக்கு இடமில்லை. ஏதென்ஸ் நகரில்தான் அவர் பிறந்தார் என்பது சரித்திரபூர்வமான உண்மை. எனவே, ஏதென்ஸ் நகருக்கு அந்தத் தனிப்பெருமையை எவரும் பறித்துக் கொள்ளமுடியாது. ஏதென்ஸ் வரலாற்றின் பொன்னேடுகளுள் பிளேட்டோவின் சரிதை தலையாயவற்றுள் ஒன்று. கிரேக்க மண்ணிலே அவரும் அவரின் குருவான சாக்ரட்டீஸும் அவரின் சீடரான அரிஸ்டாடிலும் தோன்றினார்கள் என்ற ஒரு காரணத்தாலேயே கிரேக்கத்தின் புகழ் உலக வரலாற்றிலே இட-

டித்துவிட்டது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றிய பிளேட்டோவின் உடலைப் பூதேவி எப்பொழுதோ ஏற்றுக்கொண்டு விட்டாள். ஆனால், பிளேட்டோ அழிந்துவிடவில்லை. அவர் எழுதிய நூல்களினூடே இன்றும் அவரின் சிந்தனை படிந்த முகம் நம்மை நோக்கிச் சிரிப்பதையும் மறுபடியும் சிந்தனையிலாழ்வதையும் பார்க்கிறோம். சித்தாந்த உருவிலே இன்னும் உலகிலே அவர் வாழ்ந்து அறியாமை இருள் நிறைந்து கிடக்குமிடமெல்லாம் அறிவொளியாகப் பரவி அரசியல் மண்டலத்திலே எழும் அறிவியல் கேள்விகளுக்கு இன்றும் விடையளித்துக் கொண்டிருக்கிறார்.

ஏதென்ஸ் ஒரு எழில் மிக்க நகரம். அந்நகரத்திலே பரம்பரையாகச் செல்வந்தர்களாயிருந்து நற்பெயரீட்டி வந்த ஒரு பெரிய குடும்பத்தில்தான் பிளேட்டோ பிறந்தான். பிளேட்டோ சிறு வயது முதல்செல்வத்தையும், செல்வாக்கையும், அலட்சியமாகவும், விளையாட்டாகவுமே கருதினான். செல்வத்தை ஒரு பொருட்டாகக் கருதும் எண்ணம் அவனுக்குக் கடைசிவரை ஏற்படவேயில்லை: ஏதோ வாழ்விற்குரிய பல சாதனங்களில் ஒன்றாக " பணம் " அவனுக்குத் தென்பட்டதே யொழிய, அது வாழ்விற்கு இன்றியமையாததாகவோ, அல்லது மிக முக்கியமானதாகவோ அவனுக்கு எக்காலமும் தென்பட்டதில்லை. சமயங்களில் நல்வாழ்விற்கு அது ஒரு பெரிய இடுக்கண் என்றுகூட நினைத்தான். இயல்பிலேயே செல்வத்தைப் பெரிதாக மதியாத அவனின் அறிவு வளர்ந்து சிந்தனைசக்தி பெருகவும், அவனுடைய உள்ளத்திலே செல்வத்தின் மதிப்பு மேலும் மேலும் தாழ்ந்து மறைய ஆரம்பித்தது. உலக சரித்திரத்தில் பெரிய வடிவில் உள்ளத்தைப் படைத்திருந்த சான்றோர் பலர் " பணத்தை "த் துச்சமாகவே கருதியிருக்கின்றனர் என்பதற்குப் பிளேட்டோ ஒரு சிறந்த சான்று. நிறைந்த செல்வத்தில் பிறந்தும் செல்வத்தில் பற்று



மிகக் கொள்ளாது, இதையனைத்தையும் கடந்து ஒளிரும் அறிவின்மேல், இனம் புரியாத ஈடுபாடு கொண்டு, அதிலே வேறெதிலும் காணமுடியாத ஒரு இதத்தையும் இன்பத்தையும் கண்டுவந்தான் பிளேட்டோ.

பிளேட்டோவின் தந்தையின் பெயர் **அரிஸ்டோன்** (Aristone). தாயின் பெயர் **பெரிக்ட்டியோனி**, **கிளாக்கோன்**, **அடிமாண்ட்டஸ்** என்ற இரு மூத்த சகோதரர்களும், **போட்டோனி** என்ற ஒரு தமக்கையும் பிளேட்டோவுக்கு இருந்தனர். தமக்கையின் மகனான **ஸ்பூசிப்பஸ்** என்பவனே பிளேட்டோ நிறுவியிருந்த கலைக்கூடத்துக்கு (Academy) பிளேட்டோவுக்குப் பின் தலைமை இயக்குநனாக அமர்ந்தவன். பிளேட்டோ பிறந்த குடும்பம் அரசியல் அந்தஸ்து வாய்ந்தது. குடும்பத்திலே கடைசி பிள்ளையான பிளேட்டோவுக்கு அவனின் பெற்றோர்கள் வேண்டுமட்டும் சுதந்தரமளித்துச் செல்லப்பிள்ளையாக வளர்த்தார்கள். இயற்கையாகவே பிளேட்டோ மிக சுயேச்சைப் போக்குள்ளவனாக வளர்ந்தான்.

பிளேட்டோ என்பது புனைபெயர். பிளேட்டோவின் இயற்பெயர் **அரிஸ்டோக்கிளீஸ்** என்பதாகும். பிளேட்டோ என்றால் கிரேக்க மொழியில் " விசாலம் " என்று பொருள். விசாலமான மார்பைப் படைத்தவன் என்ற காரணத்தாலோ, அல்லது விசாலமான அறிவைப் படைத்தவன் என்ற காரணத்தாலோ அவனுக்குப் பிளேட்டோ என்ற புனைபெயர் ஏற்பட்டுவிட்டது அறிவை நாடுவதிலே அக நிறைவு எய்துபவருக்குப் பொதுவாக உடற்பயிற்சி விளையாட்டுக்களிலும் உடல் ஆக்க முறைகளிலும் அதிகம் விருப்பு ஏற்படுவது அரிது. ஆனால், பிளேட்டோ இதற்கு ஒருவிதி விலக்காக விளங்கினான்.

இள வயதிலேயே மல்யுத்தப் பிரியனாக, திறமை பெற்ற மல்யுத்த வீரனாக விளங்கிய பிளேட்டோ பிரபலம்

வாய்ந்த பெலப்போனீசிய யுத்தத்திலே பங்குகொண்டு தேசத்துக்காகச் சிறந்த ராணுவ சேவை செய்து வீர சன்மானம் பெற்றான். மிகுந்த வனப்பையும் சிறந்த உடல்கட்டையும் பெற்றிருந்த பிளேட்டோ இருபத்திரண்டு வயது முடிவதற்குள் பல துன்பியல் நாடகங்களையும் தனிக் கவிதைகளையும் இயற்றினான். ஆனால், தனது குருவான சாக்ரட்டீஸின் தொடர்பு ஏற்பட்டுத் தத்துவ ஆராய்ச்சியிலே மனம் லயிக்க ஆரம்பித்தவுடன், அவற்றையெல்லாம் பொருளற்ற பிதற்றல் என்று கருதிக் கிழித்தெறிந்து விட்டான். அவை அதிர்ஷ்டவசமாக நிலைத்திருக்குமேயானால், இளங்குமரப் பருவத்திலே பிளேட்டோவின் அறிவு வளர்ந்த திக்கைச்சுட்டிக் காட்டும் ஒரு சிறந்த கைகாட்டியாகவும், உலகின் அரும் பெரும் கலைச் செல்வங்களுள் ஒன்றாகவும் அவைவிளங்கியிருக்கக் கூடும். அரசியலில் ஈடுபட வேண்டுமென்பது அவனது வெகு நாளைய அவா. அவ்வாறே அரசியலில் ஈடுபட்டான்; அரசியலிலே முட்டாள்களும் முரடர்களும் சுயநலமிகளும் சூழ்ச்சியாளர்களுமே தலைதூக்க முடியுமென்றும், அறிவாளிகளுக்கு அங்கே இடமில்லையென்றும் தன் அனுபவத்தால் அறிந்து, அரசியலை விட்டு ஒதுங்கினான். அறிவுள்ளவர்கள் எவ்வாற்றானும் அரசியலிலே பங்குகொண்டு அரசியலைச் சுத்திகரித்து முன்னேற்றவேண்டும்; அது அவர்களுடைய கடமை என்பதையும் உணர்ந்து, அதற்கான நூல்களை எழுதுவதிலே பிற்காலத்தில் முனைந்தான். அதிலும் சத்தியமே உருவான தன்னுடைய குரு சாக்ரட்டீஸுக்குக் கிரேக்க மக்கள் விஷம்அளித்துக்கொன்றதைத் திரும்பத் திரும்ப நினைந்து வருந்தி மனம் நொந்த பிளேட்டோ குடியரசின் மேல் அறவே நம்பிக்கை இழந்துவிட்டான். பாமர மக்களாலான குடியாட்சிதான் சாக்ரட்டீஸுக்குத் தண்டனை விதித்தது என்ற எண்ணம் அவனை விட்டுக் கடைசி வரை அகலவேயில்லை. குடியாட்சியின்மேல் அவனுக்கு



மாறாத ஒரு கசப்பு ஏற்பட்டு ஸ்திரமாக நிலைத்துவிட்டது. பாமர மக்களும் அவர்களின் தலைவர்களும் குள்ளமான உள்ளத்தையும், குறைபட்ட அறிவையும் வைத்துக்கொண்டு, அறிவின் நிறைவாகவும் தர்மத்தின் உருவாகவும் விளங்கிய தனது குருவுக்கு மிகப்பெரிய மாபாதகம் இழைத்துவிட்டார்கள் என்று அடிக்கடி அவன் நினைந்து நெஞ்சுருகி வருந்தினான். அறிஞர்கள் போற்றி ஆராதிக்கும் பேரறிஞனாகிய சாக்ரட்டீஸைப் பாமர மக்களின் தலைவர்கள் குற்றம் சாட்டித் தண்டனை விதித்ததை அறிவுக்கே இழைத்த மாபெரும் அநியாயமாக அவன் கருதினான். குருவை இழந்த வேதனையிலே குடியாட்சிக்கும் அறிவுக்கும் ஆயிரம் மைல் தூரம், இரண்டும் எக்காலத்திலும் சந்திக்காது என்ற முடிவுக்கே வந்துவிட்டான். விஷம் அருந்தி உயிர் நீத்த தன்னுடைய குருவின் நினைவு பிளேட்டோவின் சிந்தனைப் போக்கையே மாற்றிவிட்டது. விருப்பு வெறுப்பற்ற நடுநிலைமை ஆராய்ச்சியில் இடையறாது ஈடுபடுவது அறிஞரின் அறிவு. அறிஞர் திலகம் என்று சொல்லப்படுபவர்களின் அறிவைக்கூட அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள் எவ்வளவு தூரம் பாதிக்கின்றன என்பதற்குப் பிளேட்டோ ஒரு பெரிய சான்றாகும். சாக்ரட்டீஸின் மரணம் ஒன்றுதான் பிளேட்டோவின் சிந்தனைப் போக்கை முற்றிலும் மாற்றியது என்று சொல்வதற்கில்லை. பிளேட்டோவின் வாழ்வில் அவனுக்கு ஏற்பட்ட அரசியல் அனுபவங்கள், அவன் கண்டது, கேட்டது அனைத்திலிருந்தும்தான் அவனது சிந்தனையும் அரசியல் சித்தாந்தங்களும் உருவாகின. சாக்ரட்டீஸின் மரண தண்டனை பிளேட்டோவின் நினைவில் எப்பொழுதும் திடல் போன்று எழுந்து நின்ற ஒரு பெரிய அனுபவம். அவனிடம் ஏற்கனவே காணப்பட்ட சிந்தனைப் போக்கை அது பெருமளவில் உறுதிப்படுத்தியது. அதற்குப்பின்னர் ஏற்பட்ட அவனது அனுபவங்கள்

அவனது முன்னைய முடிவுகளுக்கு முத்திரையிட்டு ஆமோதிப்பதுபோல் அமைந்தன. கிரேக்க சரித்திரத்தின் அப்போதைய கட்டம் அவ்வளவு சீர்குலைந்து சிறப்பிழந்து விளங்கியது. அனுபவங்களைக் கடந்தெழுந்து சிந்திக்கும் இயல்பு அற்றவன் அல்லன் பிளேட்டோ. அனுபவங்களால் பாதிக்கப்படாது, அவற்றைக் கடந்தெழுந்து சிந்தித்தால்தான் பரிசுத்தமான தூய உண்மைகளை நம் அறிவிலே தரிசிக்கமுடியும் என்பதுதான் பிளேட்டோவின் அடிப்படைச் சித்தாந்தமே. பிளேட்டோவின் நூல்கள் பக்கம் பக்கமாக இதைத்தான் வலியுறுத்திச் செல்கின்றன. பிளேட்டோவின் வாழ்வில் ஏற்பட்ட அனுபவங்கள் ஒரு வேளை ஏற்பட்டிராவிட்டாலும்கூட, அவருடைய சித்தாந்தங்கள் இப்போது இருப்பது போன்றே இருந்திருப்பதும் சாத்தியமே. பிளேட்டோ அறிஞர் பெருந்தகை. தன் வாழ்வில், அதிர்ஷ்டவசத்தாலோ, துரதிர்ஷ்டவசத்தாலோ ஏற்பட்ட ஒருசில அனுபவங்களின் வழியாகமட்டும் தன்னுடைய அறிவைச் செலுத்தி, ஒருதலைப்பட்சமான தவறான முடிவுகளுக்கு வந்திருப்பாரா என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது. எனினும், எவ்வளவு பேரறிஞராயினும், அவரின் வாழ்க்கை அனுபவங்கள் சிறிதளவாவது அவரின் சிந்தனைப் போக்கை மாற்றும் என்பதை எளிதில் மறுக்க முடியாது. தங்களுடைய அனுபவங்களை மட்டும் கொண்டே பிற மனிதரையும் உலகத்தையும் அளப்பது சாதாரண மனிதரின் இயல்பு. இத்தகையோர்கள் வாழ்வில் பெரும்பாலும் தவறான முடிவுகளுக்கே வருகிறார்கள். ஒவ்வொருவரும் அவரவருடைய அனுபவங்களிலிருந்தும் ஓரளவு அறிவைச் சேகரிக்கலாம். அது முடிவான அறிவாக இல்லாவிட்டாலும்கூட ஓரளவு சரியான அறிவாக இருக்கக்கூடும். ஒருவர் தம்முடைய அனுபவங்களை முற்றிலும் புறக்கணித்துவிட்டு பிற இடங்களில் அறிவைத் தேடு



வதும் அறிவுடைமையாகாது. சகல இடங்களிலும் நம் சிந்தனையைத் தோயவிட்டு அறிவைச் சேகரிக்கவேண்டும்; சேகரித்த அறிவைத் திரும்பத் திரும்பச் சரி பார்த்து உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். பிளேட்டோவின் பகுத்தறிவு இணையற்ற வல்லமையுடன் விளங்கிச் செல்வதை அவனின் நூல்களிலே காண்கிறோம். கேள்வி பதில் முறையைக் கையாண்டு (Dialectical method) அவன் தனது வாதங்களை விளக்கிச் செல்லும்பொழுது, 'பேசுவது பிளேட்டோ அல்ல, தூய அறிவுதான் எழுந்துநின்று பேசுகிறது', என்ற முடிவுக்கே நாம் வருகிறோம். அவனது வாதங்களிலே அவ்வளவு அழகு. அவனது வாதங்களின் வலிமை பெரிய அறிஞர் குழாம்களையே திணற அடித்துவிடும்.

சாக்ரட்டீஸ் மரண தண்டனை அடைந்து மாண்ட பொழுது, பிளேட்டோவுக்கு வயது இருபத்தி எட்டுதான் ஆகியிருந்தது. விவேகிகளுக்கும் பதட்டமற்ற நிதான புத்தி படைத்தவர்களுக்கும் பிரதானமான இடமளிக்கக் கூடிய ஒரு புதிய ஆட்சிமுறையை உண்டாக்கவேண்டுமெனப் பிளேட்டோ நினைத்தான். ஞானப் பண்டிதர்களால்தான் பொதுமக்களை நல்ல முறையில் இயக்கி நல்வழியில் நடத்தி, நாட்டின் தலைவிதியைச் சிறந்த முறையில் உருவாக்க முடியும் என்று பிளேட்டோ முடிவு கட்டினான். ஞானப் பண்டிதர்களைச் சிருட்டி செய்வது எப்படி என்று பன்முறை சிந்தித்தான். ஞானப் பண்டிதர்களின் ஆட்சியை உருவாக்குவது எப்படி என்று ஆராய்ச்சியிலீடுபட்டான். அல்லும் பகலும் தன் ஆயுள் முழுவதும் இது ஒன்றே அவனது பெரிய பிரச்னையாகி விட்டது. தான் கனவு கண்டுகொண்டிருந்த புதிய ஆட்சிமுறையைத் தன் சிந்தையிலே அங்கம் அங்கமாக அடுக்கடுக்காகக் கட்டிப் பார்த்துக் களித்தான். தான் அறிவிலே நிர்மாணித்ததை இறுதியில் அழகிய நூல் வடிவாக்கினான். அதற்குக் குடியரசு (Republic) என்றே

பெயர் வைத்தான். குடிகளுக்கு நல்லது செய்யும் ஆட்சி குடியாட்சி; அதற்கு அறிவு அரியாசனத்தில் அமரவேண்டும்; எனவே அறிவாட்சிதான் குடியாட்சி. இதுவே பிளேட்டோவின் முடிவு.

இப்பொழுது சற்றுப் பின்னோக்கிச் செல்வோம். சாக்ரட்டீஸ் மரண தண்டனை பெற்றுச் சிறைச்சாலையிலிருந்தபொழுது, அவரைச் சிறைச்சாலையினின்று பிளேட்டோ தப்புவிக்க முயன்றான் என்று அரசாங்கம் சந்தேகித்தது. பிளேட்டோவைக் கைது செய்து அவன் மேல் நடவடிக்கை எடுக்க அரசினர் அந்தரங்க ஆலோசனைகள் நடத்திக்கொண்டிருந்ததைப் பிளேட்டோவின் உறவினர்களும் நண்பர்களும் அறிந்தனர். ஏதென்ஸ் நகரைவிட்டுத் தப்பி ஏதாவது ஓரிடத்திற்குச் சென்று தலைமறைவாக இருக்கும்படி அவர்கள் அவனைத் திரும்பத் திரும்ப வற்புறுத்தி நிர்ப்பந்திக்கலாயினர். புத்தி கெட்ட அரசாங்கம் எந்தச் சமயத்திலும் தனக்கு விரோதமாகப் புத்தியீனமான செயலில் இறங்கும் என்று ஐயுற்ற பிளேட்டோ அவர்களின் ஆலோசனைக்கு இறுதியில் இணங்கினான். உலகின் பல்வேறு நாடுகளைச் சுற்றிப் பார்க்கவும், அவற்றின் அரசியல் முறைகளை நேரடியாகப் பரிசீலனை செய்து தனது சிந்தனைக்கு விஷயங்கள் சேகரிக்கவும் இது சரியான தருணமென்று எண்ணினான். ஆகவே, கி. மு. 399ல் ஏதென்ஸ் நகரை விட்டு வெளியேறினான். எங்கெந்த நாடுகளுக்குச் சென்றான், யார் யாரைச் சந்தித்தான், எவைபற்றி உரையாடினான் என்பதைப்பற்றியெல்லாம் நிச்சயப்படுத்துவதற்கு நமக்குப் போதிய அளவு ஆதாரங்கள் கிடைக்கவில்லை. இதுபற்றி ஆராய்ச்சியாளர்களின் அபிப்பிராயங்களுக்கும் முடிவில்லை. எகிப்து தேசத்துக்குப் பிளேட்டோ சென்றதாகவும், அங்குள்ள மேதைகளாகிய குருமார் இனத்தில் பலரைச் சந்தித்ததாகவும், அவர்கள் ஏதென்ஸ் நகரின் நிலையற்ற மதக் கொள்கைகளையும்



கலாசாரத்தையும் ஏளனம் செய்ததாகவும், அதற்கு இவன் செம்மையாகப் பதிலிறுத்ததுடன், அவர்களின் அரசியலிலுள்ள குறைபாடுகள் சிலவற்றைச் சுட்டிக் காட்டிக் கண்டனம் செய்ததாகவும் கூறப்படுகின்றது. பிறகு சிஸிலிக்கும் இத்தாலிக்கும் சென்றதாகவும், அங்குத் தத்துவ ஞானியும் கணித மேதையுமான **பித்தகோரஸ்** (Pythogoras) என்பவரால் நிறுவப்பட்ட பண்டிதர் குழாம், தங்களுக்குள் பொதுவுடைமை விதிகளை ஏற்படுத்திக்கொண்டு தனி இனமாக வாழ்ந்து, தர்க்க வாதங்களி லீடுபட்டு, அறிவின்பத்தைத் துய்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்து ரசித்ததாகவும் கூறப்படுகிறது. பரத கண்டத்தின் கங்கைக்கரை வரை வந்து இந்துக்களின் ஆத்ம தியானங்களையும் யோக மார்க்கங்களையும்கூட ஆராய்ந்தான் என்றும் சில ஆராய்ச்சியாளர்கள் உறுதியாகச் சொல்லுகின்றனர். பனிரெண்டு வருடங்கள் பிளேட்டோ வெளி நாடுகளில் சுற்றித் திரிந்தான். எளிதிற் கிடைத்தற்கரிய அனுபவத்தையும் அறிவையும் அடைந்தான். பரந்த அனுபவத்தோடு விரிந்த அறிவும் சேர்ந்தபொழுது, பின்னால் அவன் வெளியிடப்போகும் அரசியல் சித்தாந்தம் அவனின் சிந்தனையிலே பிரமாதமாக உருவாகித் தெளிவடைந்து கொண்டிருந்தது. “பெருவாரியான பாமர மக்களை ஆள்வதற்கு அரசியல் படிப்புத் தேவை; தத்துவ சிந்தனை தேவை; நிதானமான அறிவு தேவை. இவைகளைப் பயிற்சி முறைகளினால் அடையப் பெற்றவர்களே ஆட்சி பீடமேறுவதற்கு அருகதை யுடையவர்கள். சுருக்கமாகச் சொல்லப் போனால் தத்துவ ஞானிகள் ஆட்சியாளர்களாக வேண்டும். ஆட்சியாளர்கள் தத்துவ ஞானிகளாக வேண்டும். (Rulers must become philosophers and philosophers must become rulers)” என்ற அவனின் பிற்காலத்தேற்றம் இப்பொழுதுதான் பிளேட்டோவின் உள்ளத்தில் சிறிது சிறிதாக முதிர்ச்சி

யடைந்துகொண் டிருந்தது. ஏதென்ஸுக்குத் திரும்பி வந்தான் பிளேட்டோ. அப்போது நாட்டின் அரசியல் இருந்த நிலைமையில், அரசியலிலே அறிவாளிகள் தோன்றுவார்கள் என்ற நம்பிக்கைக்குச் சிறிதும் இட மில்லாம லிருந்ததால், தானே தன்னால் முடிந்த மட்டும் அறிவாளிகளைத் தயாரித்து அரசியலுக்கு வழங்கவும் முனைந்தான். அதற்கென ஏதென்ஸ் நகரில் ஒரு மாபெரும் கட்டிடத்தையும் பூங்காவையும் விலைக்கு வாங்கி “அகெடமி” என்னும் ஒரு ஞான வித்யா லயத்தை அமைத்தான். அங்குத் தன் கருத்துக்களைத் தன் சீடர்களுக்குப் போதிப்பதிலும், அவர்களோடு தர்க்கவாதங்கள் நடத்தி மேலும் மேலும் அறிவைச் சேகரிப்பதிலும் பிளேட்டோ தன் வாழ்நாள் அனைத் தையும் செலவிட்டான். அந்த வித்யாபீடத்தை எதற் காக எம்முறையில் பயன்படுத்த வேண்டும் என்று விவரமாக உயில் எழுதி வைத்தான். சமுதாய சேவை யும் அரசியல் சேவையுமே இந்தக் கலைக்கழகத்தின் அடிப்படை நோக்கம். சுமார் 900 ஆண்டு காலம் நிலை பெற்று நின்று இக்கலைக்கழகம் கிரேக்க நாட்டிற்கு நற் பணியாற்றி வந்தது. உலகம் போற்றும் பெரிய ஞானி யாக விளங்கிய அரிஸ்டாடில் இந்தக் கலைக் கழகத்தில் பிளேட்டோவின் சீடனாக அமர்ந்து கல்வி பயின்றவர் தான்.

அறுபது வயதாகிவிட்ட பின்னரும்கூட, முதுமை யால் சிறிதும் சோர்வடையவில்லை பிளேட்டோ. அவருடைய புகழ் கிரீஸுக்கு அப்பாலும் அநேக நாடு களில் பரவியது. பிளேட்டோவைத் தரிசிப்பதற்காகப் பல நாடுகளிலிருந்து பல அறிஞர் குழாம் ஏதென்ஸுக்கு வந்தது. சந்தர்ப்பவாதிகளும் காரியவாதிகளும் அகந்தையாளர்களும் ஆட்சியாளர்களின் அடிவருடி களும் சூழ்ச்சிக் கலை நிபுணர்களும் சுயநலமிகளும் அரசி யலைப் பற்றுக்கோடாகப்பற்றி வாழ்ந்து கொண்டிருந்த



அப்போதைய ஏதென்ஸ் நகரில் மட்டும் அஞ்சாநெஞ்ச ஞான பிளேட்டோவின் அரிய உபதேசங்கள் அவ்வள வாக எடுபடவில்லை. அறிஞர்கள் அரசியலுக்கு வர வேண்டுமென்ற உபதேசத்தை அரசியலை ஏற்கெனவே கைப்பற்றித் தங்களின் உடைமையாக்கி விட்டிருந்த அறிவிலிகளும் முட்டாள்களும் எவ்வாறு வரவேற் பார்கள்? பொது மக்களிடம் பிளேட்டோவுக்கு அதிகம் செல்வாக்கு ஏற்படாமல் அவர்கள் தடுத்து வந்தார்கள். எனினும் பிளேட்டோவைப்பற்றி அறியாதவர்களோ பேசாதவர்களோ ஏதென்ஸ் உள்படக் கிரீஸில் எந்த நகரத்திலும் அப்பொழுது இல்லை. மிகச் சாதாரணமான மனிதரைப் போலவே பழகி, எளிய நடை யுடை பாவனை களோடேயே கடைசி வரை விளங்கினார் பிளேட்டோ.

இலட்சிய ராஜ்யமொன்று உலகில் நிர்மாணமாக வேண்டுமென்று கனவு கண்டார் பிளேட்டோ. அதைத் தான் குடியரசு (Republic) என்ற தமது நூலிலே பக்கம் பக்கமாக விவரித்தார். பிளேட்டோ கடுமையான பொது வுடைமைவாதி. இப்போதைய கம்யூனிஸ சித்தாந் தத்துக்குத் தந்தையான கார்ல் மார்க்ஸ் பொது உடை மையைப் பற்றிச் சிந்திப்பதற்கு எத்தனையோ நூற் றுண்டுகளுக்கு முன்னமேயே மிகத் தீவிரமான பொது உடைமைக் கருத்துக்களை அவர் தோற்றுவித்து அவற்றின்மேல் தீராக் காதல் கொண்டிருந்தார். அறிஞர்கள் ஆட்சியாளர்களாக ஆக வேண்டும்; அவர் களின் கீழ்ப் பொது உடைமைச் சமுதாயம் ஒன்று தாம் விரும்பிய முறையிலே இயங்க வேண்டும் என்று பிளேட்டோ ஏங்கினார். ஏழைகளின் மேல் அளவற்ற இரக்கம் கொண்ட அவருக்குத் தனி உடைமையின் மேல் அளவற்ற வெறுப்பு ஏற்பட்டது. பிளேட்டோவின் அரசியல் வாதங்கள் நிகரற்ற அறிவெழில் மாட்சி படைத்தவை; ஆனால், நடைமுறைக்கு எளிதில் ஒத்து வராதவை. மனிதரின் அறிவும் இயல்பும் பரிபூரணம்

பக்குவமடைந்து தூய்மை யுற்ற பின்னர் வேண்டுமானால் ஒருவேளை பிளேட்டோவின் அரசியல் காரிய சாத்திய மாகலாம். அதுவரை அரசியல் அறிவு மண்டலத்திலே அழகிய வானவில்லாக விளங்கி நம் சிந்தையைக் களிப்பிக்குமே யொழிய, காரிய ரூபத்தில் கைகூடி வருமென்று நாம் எண்ணுவதற்கில்லை. எனினும் எவராலும் விலைமதிக்க முடியாத மனித குல ஆஸ்திகளுள் ஒன்று பிளேட்டோவின் சித்தாந்தங்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. பிளேட்டோவின் கனவுகள் நனவுக ளாகாமல் போகலாம். எனினும் அறிவிலிகள் அரசியலைச் சிதைத்து அதர்மத்தை அரங்கேற்றும் போதெல்லாம், பிளேட்டோவின் கனவுகள் மனித குலத்திற்குச் சீரிய எச்சரிக்கைகளாகவும் சிறந்த வழிகாட்டிகளாகவும் அவ்வப்பொழுது பணியாற்றி வரும் என்பதில் ஐயமில்லை.

பிளேட்டோவினுடைய கனவை நனவாக்கக் கிரீஸ் தேசத்திலுள்ள எந்த நகரமும் முன்வரவில்லை. தம் கனவு எப்பொழுது நனவாகும் என்று பிளேட்டோ ஏங்கிப் புழுங்கிக்கொண்டிருந்த காலத்தில், கிரீஸுக்கு அப்பாற்பட்ட சிஸிலித்தீவின் முக்கிய நகரான சிராக்கூஸ் பட்டினத்திலிருந்து தெம்பூட்டும் கடிதம் ஒன்று பிளேட்டோவுக்கு வந்தது. அந்நகரத்தின் மன்னன் இளைய டையோனியஸ் என்பவன் இளைஞன்; பதட்ட புத்திக்காரன்; நினைத்ததை யெல்லாம் செய்து முடிக்க வேண்டு மென்று நினைப்பவன். தன்னை முகஸ்துதி பண்ணுபவர்க ளிடமிருந்தே மறைமுகமாக அடிக்கடி முட்டாள் பட்டம் வாங்குபவன் அவனுடைய தாய் மாமனை டியோன் என்பவன் அவனுக்கு அரசியல் ஆலோசகனாக விளங்கினான். "இலட்சிய ராஜ்யம் ஒன்று நிர்மாணிப்பதற்கு ஏதென்ஸ் ஞானி பிளேட்டோவிடம் ஒரு அற்புதமான திட்டம் இருக்கின்றது. அவரைநாம் இங்கு வரவழைத்து அதற்காவன செய்தா லென்ன?"



என்ற யோசனையை மன்னனுக்கு அவன் கூறவும், மன்னன் டையோனியஸ் ஆனந்தத்தில் மெய்ம்மறந்து விட்டான். உடனே பிளேட்டோவுக்குக் கடிதம் அனுப்பி சிராக்கூஸ் நகருக்கு உடனே புறப்பட்டு வந்து தன் இராஜ்யத்தை இலட்சிய ராஜ்யமாக்கும்படி வேண்டிக் கொண்டான். பிளேட்டோ இன்பத்தால் புளகாங்கிதம் அடைந்தார். உடனே சிஸிலித் தீவுக்குப் புறப்பட்டார். ஆடம்பரமாக அவரை வரவேற்றான் மன்னன் அவரைக் கண்டவுடன் தன்னுடைய இராஜ்யம் அப்பொழுதே பாதி இலட்சிய ராஜ்யம் ஆகிவிட்டது என்றே நினைத்து விட்டான். பிளேட்டோவுக்கு அருமையான ஜாகை வசதிகள், ஏவலாளர்கள் அனைத்தும் ஏற்பாடு செய்யப் பட்டன. டையோனியஸ் மன்னனுடைய ராஜ்யத்தை இலட்சிய ராஜ்யம் (Ideal State) ஆக்குவதற்கு முன் மன்னனை உருப்படியான புத்திசாலியாக ஆக்குவது மிக மிக அத்தியாவசியம் என்பதை நன்குணர்ந்த பிளேட்டோ முதலில் அவனின் குணாதிசயத்தைச் சீர் திருத்தம் செய்து சரிப்படுத்த வெகு தீவிரமாக முனைந்தார். மன்னனின்மேல் ஓயாத உபதேசமாரி பொழிந்தார். ஆரம்பத்தில் அவருடைய அறிவுரைகளை ஏற்று அதன்படி நடக்க முயன்ற மன்னனுக்கு, நாள்பட நாள்பட எரிச்சலும் ஆத்திரமும் அதிகரிக்க ஆரம்பித்தது. உதட்டைப் பிதுக்கித் தன் அதிருப்தியை எத்தனையோ வழிகளில் வெளிக்காட்டினான். இதற்குள், மன்னனைச் சூழ்ந்து அவனது மடமையைப் பயன்படுத்திக்கொண்டு வாழ்ந்த பலருக்குப் பிளேட்டோவின்மேல் பொறாமை ஏற்பட்டது. அரசனை அவர் தம் உபதேசங்களால் தம் வசப்படுத்திவிட்டால், தங்களின் பிழைப்பு ஆட்டங் கண்டுவிடுமே என்று அவர்கள் அஞ்சினார்கள். பிளேட்டோவைப்பற்றி இல்லாததும் பொல்லாததுமாய் மன்னனிடம் சொல்லி அவன் மனத்திலே பிளேட்டோவின்மேல் வெறுப்பை வளர்த்தார்கள். அவனுடைய மாமனை

டியோன் தான் மன்னனை வஞ்சித்து அரசைக் கவருவதற்காகப் பிளேட்டோவை வரவழைத்துச் சூழ்ச்சி செய்கிறானென்று மன்னனிடம்கூறி அவன் மனத்தைக் கரைத்து அவனை மறுபடியும் தம் வசமாக்க முயன்றார்கள். பிளேட்டோ அவரது இலட்சிய ராஜ்யத் திட்டத்தைத் தனக்கு வெளிப்படுத்துவார் என்று இதுவரை எதிர்பார்த்திருந்த மன்னன், அவரது திட்டத்தை இறுதியில் அறிந்தபொழுது, அவனுக்கு நெஞ்சடைத்தது. மன்னன் தத்துவ ஞானியாகி, தன் செல்வங்களையெல்லாம் பொதுவுடைமை யாக்க வேண்டுமென்று பிளேட்டோ அவனிடம் கூறிய பொழுது அவனுக்கு ஆத்திரமும் சினமும் கரைபுரண்டு வந்தன.

உடனே தன் மெய்காப்பாளர்களிடம் பிளேட்டோவை ஒப்படைத்து, அவரை அடிமைச் சந்தையில் ஏலங்கூறி விற்றுவிடும்படி உத்தரவிட்டு விட்டான். அடிமைச் சந்தையில் ஏலப் பொருளாக்கப்பட்டார் பிளேட்டோ. இச்செய்தி ஏதென்ஸ் நகருக்கு எட்டியது. பிளேட்டோவை ஏலத்தி லெடுத்து டையோனியஸ் மன்னனின் எல்லையிலிருந்து மீட்டுவர ஏதென்ஸ் நகரில் பிளேட்டோவின் தோழர்களும் உறவினர்களும் சீடர்களும் பணந்திரட்ட முயன்றனர். முயற்சி எவ்வித பலனு மளிக்க வில்லை. பிளேட்டோவை மீட்கப் பண உதவி ஏதும் செய்தால், வன்னெஞ்சர்களும் கொடுங்கோலர்களுமாகிய ஏதென்ஸ் ஆட்சியாளர்களால் ஆபத்து எதுவும் எச்சமயத்திலும் நேரலாம் என்று பொதுமக்களில் பலர் பயந்தனர். ஆட்சியாளரின் அடியார்களும் கையாட்களும் பலர் இம்முயற்சியை முறியடிக்க முயன்றனர். இன்னும் பலர் பகிரங்கமாக இம்முயற்சியை எள்ளி நகையாடி ஏளனம் செய்தனர். பிளேட்டோ தோன்றி வளர்ந்த நகரத்திலே அச்சமயத்தில் அறிவின்மையும் பேதைமையும் அவ்வளவு மண்டிப் போய்க் கிடந்தன. இறுதியில் பிளேட்டோவின் உயிர்த் தோழனும் அவனுடைய சீடனுமான அன்னெனசெரிஸ்



என்பவன் தான், இடைஞ்சல்கள் பலவன்றை ஏறுபோல்
கடந்தெழுந்து, அடிமைச் சந்தையில் பிளேட்டோவை
ஏலமெடுத்து, ஏதன்ஸுக்கு அவரை மீட்டுக்கொண்டு
சென்றான். அவன் பிளேட்டோவை மீட்டுக்கொண்டு.
செல்லவில்லை ; இடுக்கணி லகப்பட்டுச் சிறைப்பட்ட
அறிவையும் அருளையும் மீட்டுக்கொண்டு சென்றா
னென்றுதான் சொல்லவேண்டும். உலகிற்கு அறிவைக்
கொள்ளை கொள்ளையாய் வழங்கிய கிரீஸ் தேசத்தில் கூட
இப்படி ஒரு நிகழ்ச்சி. கிரீஸின் மகுடமாய் விளங்கிய
ஏதென்ஸ் நகரில்கூட இப்படி ஒரு அவலநிலை.

பிளேட்டோ நிறுவிய கலைக்கழகமே அவரின் உயிரா
யிருந்தது. அங்குப் பணியாற்றுவதில்தான் அவர் தம்
வாழ்வின் இன்பத்தையே கண்டார். அவரிடம் ஏராள
மான மாணவர்கள் பயின்றார்கள். பலநாடுகளுக்கும் தங்க
ளின் குரு போதித்த அறிவைக்கொண்டு சென்றார்கள்.
பிளேட்டோ இப்பொழுது மிக முதியவராகி விட்டார்.
தம் கலைக் கழகத்தினுள்ளே பல இடங்களுக்கும் தள்
ளாடித் தள்ளாடி நடந்து சென்றார் அவருடைய
குழந்தை உள்ளமும் களங்கமற்ற சிரிப்பும் அனைவரை
யும் கவர்ந்தன. கலைக் கழகத்தினுள்ளே ஆங்காங்கு
அமர்ந்து உயரிய தர்க்கங்களை நடத்தி அறிவு விளக்கம்
செய்துகொண்டிருந்த மாணவர் கோஷ்டிகள் ஒவ்வொன்
றுக்கும் அவர் தள்ளாடிக்கொண்டுசெல்வார். ஒவ்வொரு
கோஷ்டியினிடத்திலும் சிறிது நேரம் அமர்ந்து தம்
கருத்துக்களைப் பகிர்ந்துகொள்வார். அவர்களின் அறிவு
கெழுமிய கருத்துக்களைக் காதால் கேட்டு அக மகிழ்ந்து
பூரிப்பார். அவருடைய புகழ் மிகத்தூர தேசங்களி
லெல்லாம் பரவி நிலை நின்றது. பிளேட்டோ என்னும்
பெயரை அறிவுக்கு மறு பெயராக உலகம் அறிய ஆரம்
பித்தது. தன்னிடத்தே தோன்றி தன்னிடத்தே வாழ்ந்து
வரும் பிளேட்டோவின் மேதையை உலகின் பல்வேறு
நாடுகள் போற்றியதைக் கண்ட [illegible] [illegible]

தான் இருந்தார். அவர் எழுதியவை யனைத்தையும் 56 நூல்களாக ஆன்றோர்கள் பிரித்திருக்கின்றனர். அழகிய கவிதை நடையிலே, எவரையும் ஈர்க்கும் வண்ணம் எழுதப்பட்ட அவரது நூல்களில், அவரது கருத்துக்கள் தெளிவினும் தெளிவாய் மிகத்தெளிவாய்ச் சிந்தனை சக்தியுள்ள எவரும் எளிதில் புரிந்துகொள்ளும் வண்ணம் காணப்படுகின்றன. அவர் ஓர் அறிஞர் மட்டுமல்லர்; பெரிய கலைஞர் என்பதையும் அவரின் நூல்களிலே காண்கிறோம். எழுத்துக் கலையிலே இணையற்ற நிபுணராக விளங்கும் அவரது சொற்களிலே ஆணித்தரமான வாதங்களும் முடிவுகளும் ஒன்றையொன்று தொடர்ந்து அணி அணியாகச் செல்வது கற்போருக்குத் தெவிட்டாத களிப்பை யூட்டுகின்றது. சொற்கலையைத் தம் ஆதீனத்துக் குட்படுத்திக் கொண்ட சொல் வேந்தராகிய இவர் அறிவு சம்பந்தமான எத்தகைய பிரச்சினையையும் குழப்பத்திலிருந்து மீட்டுத் தெளிவடையச் செய்வதில் சமர்த்தர். தம் சொற்றிறத்தால் தம் கருத்துக்களுக்கு விசேட சுவாரஸ்யத்தையும் சக்தியையும் அளிப்பவர். பிளேட்டோ விஷயங்களை அலசி ஆராயும் முறையே அலாதி. இவருடைய தர்க்க வல்லமை ஒரு புதிய ரகத்தின்பாற் பட்டது. தமது வாதங்களின்றும் அஸ்திரங்களை அவர் தொடுக்கும்பொழுது, எழுந்து நிற்கும் வினாக்களெல்லாம் தாமாகவே விடைகளை உகுத்து விடுகின்றன. தர்க்க ஞானமே இவரின் சுயாதீனப் பொருளோ என்று எவரும் ஐயுறும்படி, அவ்வளவு திறமையுடன் தமது வாதங்களைப் பிளேட்டோ ஜோடித்துச் சொல்கின்றார் அவரது நூல்களில். சம்பாஷணை முறையைக் கையாண்டு தமது நூல்கள் சிலவற்றில் தலையாய பாத்திரமாக்கி யிருக்கிறார். தமது ஆசிரியரின் நினைவையும் பெயரையும் தமது நூல்களில் நிலைநிறுத்த வேண்டுமென்ற விருப்பாலோ, அல்லது சாக்ரட்டீஸுக்கு இருந்த மகத்துவத்தின் காரணமாகத் தாம்



புகல வேண்டியதைச் சாக்ரட்டீஸ் என்ற பாத்திரத்தின் வாய்மூலம் புகன்றால் அச்சொற்களுக்கும் ஒரு மகத்துவம் ஏற்படும் என்ற எண்ணத்தாலோ அவர் இவ்வாறு செய்திருக்கக் கூடும். வாழ்வின் முக்கியமான துறைகள் அனைத்தையும்பற்றி அவர் சிந்தித்தார்; எழுதினார். இருப்பினும் அவர் அரசியலையே அவை அனைத்திற்கும் மையமாகக் கருதினார். எனவே அரசியலைச் சூழ்ந்து தான் அவருடை சிந்தனைகள் பெருவாரியாக எழுந்தன. அரசியலின் தரம் தாழ்ந்தால் வாழ்வின் தரமே தாழ்ந்து விடும் என்பது அவரின் திடமான நம்பிக்கை. குடியரசு (Republic) என்ற அவரின் தலைசிறந்த அரசியல் நூல் உலக மகா இலக்கியங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது.

பிளேட்டோவின் அரசியல் கருத்துக்களில் சிலவற்றை இங்குக் குறிப்பிடுவோம் :

(1) ஒவ்வொரு மனிதனும் எந்தத் தொழிலைச் செய்வதற்கு இயல்பிலேயே ஆற்றல் பெற்றிருக்கின்றானோ, அந்தத் தொழிலில் அரசாங்கம் அவனை ஊக்குவித்து, முன்னேற்றினால் அது அவனுக்கும் நல்லது ; அரசுக்கும் நல்லது ; அதுதான் சமுதாய நீதியாகும்.

(2) ஆள்பவரின் சுயநலங்களை வளர்க்காது, ஆளப்படுபவரின் நலன்களை வளர்த்து, அவர்களின் நன்மைக்காக இயங்கும் முறையிலே ஒரு நாட்டின் அரசியல் அமைப்பு இருந்தால் அதுவே நியாயமான அரசியல் அமைப்பாகும்.

(3) எல்லா ஆட்சிமுறைகளிலும் எதேச்சாதிகார ஆட்சி முறைதான் (Autocracy) மிக மிகத் தீமையானது. இதற்கு எளிதில் பாதை வகுத்துக் கொடுப்பது குடியாட்சிதான். எனவே, அரசியல் பதவிகளுக்கு மக்கள் ஆட்களைத் தேர்ந்தெடுக்கும்போது, மிகுந்த விழிப்புடனும் விநயத்துடனும் ஆழ்ந்த சிந்தனை சக்தியுடனும் நடந்துகொள்ள வேண்டும்.

(4) ஆளப்படுவோரின் மனோ இயல்புகளுக்கேற்ப அரசாங்கம் அமைகின்றது. பிரஜைகளின் தரத்திற்கேற்ப அரசாங்கத்தின் தரம் உயரவோ தாழவோ செய்கின்றது. ஒரு ராஜ்யத்தின் குடிமக்கள் நல்லவர்களாயிருந்தால் அரசாங்கம் நல்லதா யிருக்கும். தாழ்ந்த குணாதிசயங்களைப் பெற்றுள்ள மக்களின் மத்தியில் நல்ல அரசாங்கம் உருவாகாது. வெறும் சட்டங்களை மட்டும் சீர்திருத்தி விட்டால் எந்தப் பயனும் விளைந்து விடாது

(5) ராஜ்யத்திலுள்ள அனைவருக்கும் கட்டாயக் கல்வி அளிக்க வேண்டும். ஏழை பணக்காரர், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வித்தியாசம் எள்ளளவு மின்றி எல்லோருடைய குழந்தைகளுக்கும் நல்ல கல்வியறிவும் அதைப் பெறுவதற்குச் சரிசமமான வாய்ப்புகளும் அளிக்க வேண்டும். குழந்தைகளைப் பெற்றோர்கள் அவர்களைத் தங்களுக்குச் சொந்தம் என்று நினைப்பதை விட, அவர்களை நாட்டின் உடைமைகள் என்றும் அரசாங்கத்தின் சொத்து என்றும் நினைக்க வேண்டும்.

பிளேட்டோவின் இக்கருத்துக்கள் உதாரணத்துக்காகவே எடுத்துக் காட்டப் பட்டன. இதைப் போன்று எத்தனையோ கருத்துக்களைக் குடியரசு என்னும் நூலிலும் அவரது வேறு நூல்களிலும் காண்கிறோம். அவரின் கருத்துக்களில் பல மிக மிகத் துணிச்சலும் முற்போக்குமானவை.

பிளேட்டோ மறைந்தபின் அவரின் சிந்தனைகள் முன்னைக் காட்டிலும் வேகமாகப் பல நாடுகளில் பரவ ஆரம்பித்தன. அறிஞர்கள் பலர் அவரின் சிந்தனைகளை நன்கு பரிசீலித்து அவற்றிலே மனித சமுதாயம் உய்யும் மார்க்கங்களைக் கண்டனர். பிளேட்டோ நிறுவிய கலைக்கழகம் (Academy) மாபெரும் அறிவுப் பண்ணையாக விளங்கி, அவர் மறைந்த பின்னும், அவரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றித் தொடர்ந்து பணியாற்றி வந்



தது. கிரேக்கத்தின் வரலாற்றுக்கே பெருமையளித்தவர் கிரேக்க அறிஞர் பிளேட்டோ. செல்வத்தையும் சுகபோக வாழ்வையும் துறந்து உலகிற்குச் சேவை செய்த உத்தமர்களின் வரிசையிலே வைத்து எண்ணப்படக் கூடியவர் அவர். காசு பணத்திலும், வெறும் டாம்பீகத்திலும் சுயநலச் சர்ச்சைகளிலும், அநாகரிக ஆசாபாசங்களிலும் ஓயாது ஈடுபட்டுத் தன் சக்தியை விரயமாக்கிக் கொண்டிருக்கும் உலகின் மத்தியிலே இன்றும் பிளேட்டோ ஒரு பெரிய கலங்கரை விளக்கமாக நின்று, நல்வாழ்விற்குரிய மார்க்கங்களைக் காட்டி வருகின்றார்.

**அரிஸ்டாடில் (Aristotle):** சில மகா புருடர்களைப் பற்றிச் சிந்திக்கச் சிந்திக்க, நம்முள்ளே ஏதோ ஒரு வகையான இன்பம் வளருவதோ டன்றி, அம் மகாபுருடரும் நாமும் ஒருவரோ டொருவர் நம்மையு மறியாமல் ஒன்றித்து ஐக்கியமாவதைப் போன்ற ஓர் உணர்ச்சி நமக்கு ஏற்படுகின்றது. இந்த உணர்ச்சி நமது ஆத்ம வளர்ச்சிக்கு அதிக நன்மை பயப்பது. அரிஸ்டாட்டிலைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கினால், சிந்தித்துக் கொண்டே யிருக்கலாம்; சிந்தனை தொடர்ந்து கொண்டே யிருக்கும்; அதற்கு ஒரு முடிவே யிராது. அவரே ஒரு மாபெரும் சிந்தனையாளர். சிந்தனை ஏன் என்பதைப் பற்றியே நெடிய சிந்தனையில் நெடுங்காலமாக ஆழ்ந்தவர். அறிவியல் துறையிலும் அரசியல் துறையிலும் அமர நூல்களைப் படைத்து அகிலத்துக்கு வழங்கிய அசாதாரணமான மேதை அவர். ஒரு பெரிய அறிஞர் குழாமே செய்து முடித்தற்கரிய பல சாதனைகளைத் தாம் ஒருவராகவே சாதித்து முடித்தவர் அரிஸ்டாடில். அறிஞர்களுள் அவரை ஓர் அதிசயப் பிறவி என்று கூறினும் தகும். ஏறக்குறைய 2300 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு மனிதனையும் அவரின் சூழ்நிலைகளையும் அகக் கண்ணால் சித்தரித்தும் கற்பனையிலே திரட்டிக் காண்பதென்பது சற்றுச் சிரமமான காரியம் எனினும்

அரிஸ்டாடில் நமக்கு நேற்றைய மனிதர் போலவே காணப்படுகின்றார். அவருடைய உருவம்கூட நமக்கு நன்று பழகிப் போனதொன்றாகவே தோன்றுகிறது. அவ்வளவு தூரம் அவரின் நூல்களும் வாழ்க்கை வரலாறும் மனித சமுதாயத்தின் நினைவிலே ஊறிப் போயிருக்கின்றன. அரசியல் சித்தாந்தத் துறையை எடுத்துக் கொண்டோமேயானால் அதன் நுழைவாயிலிலேயே நிற்பவர் அரிஸ்டாடில். அவருக்குப் பின்னர் அறிஞர் பலர் தோன்றி அபூர்வமான அரசியல் சித்தாந்தங்கள் பலவற்றை உருவாக்கி நமக்கு அளித்துச் சென்றுவிட்ட பின்னரும் அரிஸ்டாடிலின் பெயர் மங்காது மறையாது, அரசியலறிவு வரலாற்றிலே சிறந்து நிலைபெற்று நிற்கின்றது. அரசியல் சாத்திரம் என்பது மனித இயற்கையின் மூலங்களை அடிப்படையாக வைத்து எழுவது. மனித இயற்கையை ஆயிரம் கோணங்களிலிருந்து அலசிப்பார்த்தவர். மானிட அனுபவத்தை அடித்தளமாக வைத்தே தமது நூல்களனைத்தையும் அவர் ஆக்கி யிருக்கிறார். மானிட அனுபவத்திற்கு அப்பாற்பட்ட அறிவைக்கூட அதைத் துணையாக வைத்துக்கொண்டுதான் தேடியிருக்கின்றார் ஆதி முடிவற்ற பரம்பொருளைப் போல், அங்கிங்கெனாதபடி அவருடைய நூல்களில் ஏறக்குறைய எங்கணுமே பரவிக் கிடப்பது அது.

ஏதென்ஸ் நகரம் அரிஸ்டாடிலைத் தன் சொந்த மதலை என்று கூறி உரிமை கொண்டாடிய போதிலும், அவர் பிறந்த இடம் ஏதென்ஸ் நகரமன்று. கிரீஸ் நாட்டின் வடக்குப் பகுதியிலே காணப்படும் மாஸிடோனியாவைச் சேர்ந்த ஸ்டாஜிரா (Stagira) என்ற இடத்தில் பிறந்தவர் அரிஸ்டாடில். கி. மு. 384-ல் அவர் பிறந்ததாகப் பல சான்றுகளை வைத்துக்கொண்டு வரலாறு உறுதிப்படுத்துகின்றது. அவருடைய தந்தையின் பெயர் நிக்கோமாக்கஸ். மகா அலெக்ஸாந்தர் மன்னனின்



N163

பாட்டனாருக்கு இவர் அரண்மனை வைத்தியராக இருந்தவர். வைத்தியரின் மகனாகப் பிறந்த அரிஸ்டாடிலுக்குத் தேர்ந்த வைத்தியர்களுக்கு இயல்பாகவே அமையும் ஆராய்ச்சி மனப்பான்மையும் விஞ்ஞான மனப்பான்மையும் பெருமளவில் இருந்தன. அனுபவங்கள் பலவற்றை ஆராய்வதும் அவற்றினின்று பொது முடிவுகளுக்கு வருவதும்தானே விஞ்ஞான முறையின் சிறந்த அம்சம்! அரிஸ்டாடில் தம் தந்தையிடமிருந்து வைத்தியக் கலையையும் கற்றார். இருப்பினும் அவர் வைத்தியராக வில்லை. அவரின் தந்தை உலக வாழ்வினின்றும் விடைபெற்றுக் கொண்டவுடன், வைத்தியக் கலையும் அரிஸ்டாடிலி னிடமிருந்து விடைபெற்றுக் கொண்டது. ஆனால், அரிஸ்டாடில் வேறொரு வகையில் பிற்காலத்தில் வைத்தியராய்த் திகழ்ந்தார். பல்வேறு ஆட்சி முறைகளையும் அவற்றைப் பீடிக்கும் அரசியல் நோய்களையும் ஆராய்ந்து, அந்நோய்களைப் போக்கி நிவர்த்தி காணும் மார்க்கங்களையும், பிற்காலத்தில் அவர் தம்முடைய நூல்களிலே மிக விளக்கமாக வகுத்தும் தொகுத்தும் எடுத்துரைத்தார். தத்துவம் கற்றுத் தேர்ந்த அரிஸ்டாடில் சிறந்த தத்துவ ஞானியாகி, அரசியல் சித்தாந்தத் துறையில் அரும்பெரும் தாரகையாக விளங்கினார்.

அரிஸ்டாடிலின் தந்தை இறந்தபொழுது அரிஸ்டாடிலுக்கு வயது பதினெட்டு. தந்தை மரித்த பின்பு, அரிஸ்டாடிலுக்குப் பிளேட்டோவின் தொடர்பு ஏற்பட்டு நேரே அவர் பிளேட்டோவின் கலைக் கழகத்துக்கு (Academy)ச் சென்று தத்துவ[illegible]த் தொடங்கி விட்டதாகக் கூறப்படுகின்றது. பிளேட்டோவுடன் அவருக்குத் தொடர்பு ஏற்பட்டதற்கு கூறப்பட்ட காலக் கூறுபற்றி வேறு பல செய்திகளும் வழங்குகின்றன. தந்தை காலமான பிறகு தந்து பூர்வீக ஆஸ்திகளையெல்லாம் அரிஸ்டாடில் தொலைத்துவிட்டு வயிற்றுப்

பிழைப்புக்கே திண்டாடியதாகவும், ஜீவனத்திற்கு வேறு வழி எதுவுமின்றிப் பிறகு அரசாங்கச் சேனையில் சேர்ந்ததாகவும், பின்னர் வைத்தியராகச் சில காலம் தொழில் நடத்தி அதில் போதிய ஊதியம் கிடைக்கப் பெருமையால் மனமுடைந்து, தத்துவ வேதாந்தங்களில் நாட்டங் கொண்டு அவற்றிலே மன ஆறுதல் அடைய விழைந்ததாகவும், அந்த மனோ நிலையில்தான் அவர் பிளேட்டோவைத் தேடி அவரின் கலைக்கழகத்துக்குச் சென்று தங்கியதாகவும் பல தரப்பட்ட கதைகள் பல முனைகளிலிருந்து நமக்குக் கிடைக்கின்றன. இவை பொய்க் கூற்றுக்களா, உண்மை நிகழ்ச்சிகளா என்று திட்டப்படுத்துவதற்குப் போதிய ஆதாரங்க ளில்லை. இச்செய்திகளில் பல உண்மையும் கற்பனையும் சேர்ந்த கலவைகளாக இருக்கலாம். அரிஸ்டாடில் பிளேட்டோவின் கலைக்கழகத்தில் இருபது ஆண்டுக் காலம் அமர்ந்து, தத்துவத்தைப் பயின்றும் சிந்தித்தும் வந்தார். இதை எவரும் இதுவரை மறுத்துக் கூறவில்லை. அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை இது.

பிளேட்டோ தம்முடைய குரு என்று சொல்லிக்கொள்வதில் அளவற்ற பெருமை யடைந்தவர் அரிஸ்டாடில். குருவுக்கேற்ற மாணவன்; மாணவனுக்கேற்ற குரு. அறிவாற்றலில் ஒருவரை யொருவர் விஞ்சிக் கொண்டேயிருந்தனர். எனினும் அரிஸ்டாடில் பிளட்டோவை ஞானப் பிழம்பென்றே கருதினார். பிளேட்டோவும் அரிஸ்டாடிலை அறிவுச்சுடர் என்றே மதித்தார். அரிஸ்டாடிலுக்குத் தம் குருவினிடம் மட்டற்ற மரியாதை. இருப்பினும் தம்முடைய குருவின் கருத்துக்களை அவர் மறுக்க முடியாத வேதவாக்குகளாகக் கொள்ளவில்லை. பல விஷயங்களில் அவர் பிளேட்டோவின் கருத்துக்களிலிருந்து பெரிதும் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தார்.



பிளேட்டோவின் சீடர்களுள் ஒப்புயர்வற்றவர் அரிஸ்டாடில். பிளேட்டோ மறைந்தார். பிளேட்டோ மறைந்தபின் சகல தகுதிகளும் வாய்ந்த அரிஸ்டாடிலுக்குத்தான் கலைக்கழகத்தின் தலைமைப் பதவி கிட்டியிருக்க வேண்டும். என்ன காரணத்தாலோ பிளேட்டோவினுடைய உறவினன் ஒருவனுக்கு அத்தலைமைப் பதவி சென்றது. என்ன காரணத்தாலோ அரிஸ்டாடிலுக்கு அகற்த மேல் அங்குத் தொடர்ந்து இருக்க மனம் இசையவில்லை. கலைக்கழகத்திலிருந்து அரிஸ்டாடில் வெளியேறினார்.

பல இடங்களிலும் சென்று சுற்றிப்பார்த்துச் சிறந்த அனுபவத்தைப் பெற்ற அரிஸ்டாடில் இறுதியில் ஹெர்மியாஸ் என்ற மன்னனின் வேண்டுகோளின் பேரில் அவனின் அவையை அடைந்தார். மன்னனுக்குத் தத்துவ போதனைகளை அளிக்கும் ஆசிரியராகவும் அவனின் அந்தரங்க ஆலோசகராகவும் அரிஸ்டாடில் விளங்கினார். பின்னர் மன்னனின் சகோதரியை மணந்து கொண்டார். மன்னன் அவரின் புகழைப் பரப்பினான். மனைவி மட்டற்ற இன்பத்தை அவரின் உள்ளத்தில் பெய்தாள். அமைச்சர்களும் தளபதிகளும் அவருக்கு அஞ்சலி செய்து நின்றனர். அவரின் பொன்னடிகள் தம் நாட்டு மண்ணில் படுவதைத் தாங்கள் செய்த பாக்கியம் என்று பொதுமக்கள் கருதினர். அவரின் வாய்வாக்கே அரண்மனையிலும் வெளியிலும் சட்டமாக விளங்கிற்று. அரிஸ்டாடில் தம் வாழ்விலே ஒரு புதுப் பொலிவைக் கண்டார். சுகபோக வாழ்வின் சுவையை அறிந்தார். தத்துவ சிந்தனையிலும் அடிக்கடி ஈடுபட்டு விண் இன்பத்தையும் இப்புவியிலேயே கண்டார். ஆனால், சிறிது காலத்தில் ஹெர்மியாஸ் மன்னனின் மகுடம் பறிக்கப்பட்டது. அவனும் கொல்லப்பட்டான். நொந்த உள்ளத்தோடு அரிஸ்டாடில் அவ்விடத்தை விட்டு அகன்றார். ஓராண்டுக் காலம் அரிஸ்டாடில் லெஸ

யாக ஓரிடத்திலும் இல்லாமல் பல இடங்களைச் சுற்றிப் பல மக்களைச் சந்தித்தார். பின்னர் மாஸிடோனியா தேசத்தின் மன்னனான ஃபிலிப் தனது ஒரே புதல்வனான அலெக்ஸாண்டருக்குத் தத்துவ ஞானத்தையும் கலை ஞானத்தையும் போதிப்பதற்கு அரிஸ்டாடிலை ஆசிரியராக அமர்த்தினான். இந்த அலெக்ஸாண்டர்தான் பிற்காலத்தில் உலகின் பல நாடுகளை வென்று, மகா அலெக்ஸாண்டர் என்று புகழ் பெற்று, ஐரோப்பாக் கண்டத்தின் வீராதி வீரனாகத் திகழ்ந்து, அகிலத்தை அச்சுறுத்தியவன். அரிஸ்டாட்டிலிடம் அலெக்ஸாண்டர் மாணவனாக அமர்ந்தபொழுது அவனுக்கு வயது பதின்மூன்று. தேர்ந்த கல்வி கற்றுச் சிறந்த புத்திமானாகத் தன் மகன் விளங்க வேண்டுமென்று தீராத ஆசை கொண்டிருந்த மன்னன் ஃபிலிப் தக்க ஆசிரியர் ஒருவர் தன் மகனுக்குக் கிடைக்கவில்லையே என்று வெகு நாட்களாக அங்கலாய்த்துக் கொண்டிருந்தான். இறுதியில் அறிஞரேறு அரிஸ்டாடிலே தன் மகனுக்கு ஆசிரியராக அமர நேர்ந்த அதிர்ஷ்டத்தை நினைந்து அகமகிழ்ந்தான். அரிஸ்டாடிலுக்கும் அலெக்ஸாண்டருக்கும் ஆசிரிய—மாணவ உறவு எத்தகையதாயிருந்தது என்பது பற்றிப் பலதரப்பட்ட கதைகள் உலாவுகின்றன. அலெக்ஸாண்டரின் வாழ்க்கை வரலாற்றைப் பலப்பல அறிஞர்கள் நம்பகமான முறையிலே திறம்பட எடுத்துரைத்திருக்கிறார்கள். பண்டைக் கிரேக்க ரோமானிய வீரர்கள் மேதைகள் இவர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் போதிய ஆதாரங்களுடனும் சான்றுகளுடனும் எழுதி உலகோரின் பாராட்டுதலைப் பெற்ற ப்ளூடார்க் (Plutarch) என்ற ஆசிரியர் அலெக்ஸாண்டரின் வாழ்வைத் தம் எழுத்துக்களால் படம் பிடித்துக் காட்டுகின்றார். இந்த நூல்கள் அனைத்தினின்றும் நாம் தெரிந்துகொள்ளக்கூடிய குறிப்பிடத்தக்க ஒரு விஷயம் யாதெனில், அலெக்ஸாண்டர் அஞ்சாநெஞ்சம் படைத்த



வெற்றி வீரன் மட்டுமல்லன்; இலக்கியப் பித்தன்; சிறந்த குணாதிசயங்களைப் படைத்த அரிய பண்பாளன்; நேர்மை தவறாதவன்; அடிக்கடி தன் சிந்தனையைத் தத்துவ மயமாக்கி இன்புறுபவன்; அலெக்ஸாந்தரின் குண மேம்பாட்டைச் சிருட்டி செய்தவரே அரிஸ்டாடில்தான் என்பதை எவரும் மறுத்தற்கில்லை. சின்னஞ்சிறிய வயதிலேயே மிகுந்த உதார குணத்தைப் படைத்திருந்தான் அலெக்ஸாந்தர். தகப்பனுடைய சிந்தனைப் போக்கிலிருந்து மகனுடைய சிந்தனைப் போக்கு முற்றிலும் பல விஷயங்களில் மாறுபட்டிருந்தது. அலெக்ஸாந்தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் பலவற்றிலே அரிஸ்டாடிலின் மனோதத்துவம் அடிக்கடி நிழலாடுவதை ஆராய்ச்சி வல்லோர்கள் எளிதில் கண்டுணரலாம். தன் குருநாதராகிய அரிஸ்டாடிலுக்குத் தான் எவ்வளவு கடமைப்பட்டுள்ளான் என்பதை அலெக்ஸாந்தரே அநேக சந்தர்ப்பங்களில் கூறியிருக்கிறான். தனது வாழ்விற்கு ஓரளவு தத்துவ பலத்தை அளித்ததுடன், அதை நேரிய முறையில் சீராக்கி அமைத்துக் கொள்வதற்கு வேண்டிய மார்க்கங்களைக் கற்றுக் கொடுத்தவர் அரிஸ்டாடில்தான் என்பதை அலெக்ஸாந்தர் தீர உணர்ந்தவன். "தத்துவ ஞானம் அன்றாட நடைமுறை உலக வாழ்வில் எத்தகைய பலன்களை ஈயும் என்பதற்கு அலெக்ஸாந்தரின் வாழ்வு ஓர் எடுத்துக்காட்டு," என்று பதினெட்டாம் நூற்றாண்டின் ஜெர்மானிய சிந்தனையாளரான ஹெகல் (Hegel) தனது நூலொன்றில் கூறுகின்றார். எந்தப் புத்திமதிக்கும் இணங்காதவனாய்க் கட்டுக்கடங்காத முரடனாய் அலெக்ஸாந்தர் தனது சிறு பிராயத்தில் விளங்கினான். இது அரிஸ்டாடிலிடம் அவர் மாணவனாய் அமருவதற்கு முன்பு. அத்தகைய அலெக்ஸாந்தரின் பிற்கால வாழ்விலே தத்துவ அறிவு அடிக்கடி நடைமுறை நிகழ்ச்சிகளில் ஊடாடிச் சிறந்ததென்றால் அதற்கு அவ

னின் குரு அரிஸ்டாடிலைத் தவிர வேறு யார் காரணமாயிருக்க முடியும்? ஹெகல் சாதாரண அறிஞரல்லர். மாபெரும் தத்துவ ஞானி. அத்தகைய மேதையின் பாராட்டுதலைப் பெறுமளவுக்கு அலெக்ஸாந்தரின் வாழ்விலே தத்துவம் கலந்திருந்த தென்றால், அப்பெருமை யனைத்தும் உண்மையில் அரிஸ்டாடிலையே சாரும். அரிஸ்டாடிலும் அலெக்ஸாந்தரும் ஒருவருக்கொருவர் எழுதிக்கொண்ட பல கடிதங்கள் சரித்திரத்தில் இடம் பெற்றிருக்கின்றன. அலெக்ஸாந்தர் தன் ஆசிரியரை எவ்வளவு மதித்துப் போற்றியிருக்கிறான் என்பதை அவற்றிலே நாம் தெளிவாகக் காண்கிறோம். அரிஸ்டாடிலுக்கும் அலெக்ஸாந்தருக்கும் இருந்த உறவைப் பற்றிப் பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. எது எவ்வாறெனினும், அலெக்ஸாந்தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை நாம் ஆராயும் பொழுது, அரிஸ்டாடிலின் போதனைகளால் அவன் சீரிய பயனை யடைந்திருப்பதாகத்தான் தெரிகிறதே யொழிய, அவைகள் விரயமாய்ப் போனதாகத் தெரிய வில்லை. குருவினுடைய போதனைகளால் மாணவன் பயனடைந்தானெனில், குருவை அவன் மிகவும் மதித்து நடந்திருக்க வேண்டு மென்பதில் எந்தவிதமான ஐயப்பாட்டுக்கும் இடமில்லை. இதற்கு மாறுபட்ட கருத்துக்களை நாம் ஏற்றுக் கொள்ளுதலும் சரியல்ல. அரிஸ்டாடிலினுடைய போதனைகளும் கண்காணிப்பு மின்றியே அலெக்ஸாந்தர் பெரிய அறிவையும் பெரிய உள்ளத்தையும் படைத்தவனாகத் திகழ்திருக்கக் கூடாதா? என்ற கேள்வியை அடிக்கடி பல அறிஞர்கள் தம் புத்தகங்களிலே எழுப்புகிறார்கள். இது சாத்தியமல்ல என்று கூறுவதற்கில்லை. உலகில் தோன்றிய மகா புருடர்களெல்லாம் இன்னொருவரால்தான் அவ்வாறு ஆக்கப் பட்டார்கள் என்று சொல்லுவது மிக அபத்தமான வாதம். வழி நடத்தும் ஆசிரியர் எவரும் இன்றியே எத்தனையோ



பேர் தங்களின் அனுபவத்தாலும், சிந்தனா சக்தியாலும் தங்களை முற்றிலும் மாற்றிக் கொள்கின்றனர். இம்மாறுதல் காலப்போக்கில் இயற்கையாகவே சமயங்களில் நடந்துவிடுகிறது. உலகில் தோன்றிய பெரிய மனிதர்கள் பலருடைய வரலாறுகளில் ஆரம்ப அத்தியாயங்களை ஆராய்ந்து பார்த்தோமே யானால், அவர்களின் பிற்காலப் பெருமை அவற்றிலே அநேகமாகப் பிரதிபலிப்ப தில்லை. அரிஸ்டாடில் ஆசிரியராய் அமர்ந்திராவிட்டால் அலெக்ஸாந்தர் உதவாக்கரையா யிருப்பான் என்ற கூற்று ஏற்றுக்கொள்ளக் கூடிய தல்ல; அரிஸ்டாடிலின் தொடர்பு ஏற்படா திருந்தால், அலெக்ஸாந்தர் உயர்ந்த மனோபாவம் படைத்தவனாயும் சிறந்த குணாளனாயும் ஆகியிருக்க முடியாது என்ற கூற்றும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தல்ல; அதே சமயத்தில் தத்துவ ஞானி அரிஸ்டாடில்தான் அலெக்ஸாந்தருக்குக் குருவா யிருந்தவர்; எனினும் அலெக்ஸாந்தரின்வாழ்வில் தத்துவம் கலந்திருந்ததற்கு அவர் காரணமல்லர் என்று கூறினால் அக்கூற்றுப் பொருத்த மற்ற கூற்றாகும். தத்துவத்தின் தாதுவோடேயே சிலர் பிறக்கின்றனர். இருப்பினும் அது பரிணமிப்பதற்குத் தக்கதும் அதற்கியைந்ததுமான சூழ்நிலைகள் தேவைப்படுகின்றன. அவை எளிதில் கிட்டாதபோது அத்தாது பரிணமிக்க முடியாது அப்படியே நின்றுவிடுகிறது; அல்லது நசித்துவிடுகிறது. அலெக்ஸாந்தர் தத்துவத்தின் தாதுவோடு பிறந்த மனிதர்களுள் ஒருவனா யிருக்கலாம். அது பரிணமித்துச் செழிப்பதற்கு அவனுக்குக் கிட்டிய சூழ்நிலைகளுள் தலையாயது பெயர் பெற்ற அரிஸ்டாடில் எனும் தத்துவ ஞானி அவனுக்கு ஆசிரியராக அமைந்ததே. இதை மறுத்துக் கூறுதல் சரியன்று. பெரிய உள்ளங்களெல்லாம் ஓரளவு தத்துவ உள்ளங்களாகவும் தார்மீக உள்ளங்களுமாகவே விளங்கும். அலெக்ஸாந்தரின் உள்ளம் பெரியது. அதை

உருவாக்கியதில் அரிஸ்டாடிலுக்கும் பங்கு உண்டு. ஆனால், அரிஸ்டாடிலின் தத்துவ ஞானத்தையும் தார் மீக போதனைகளையும் ரசித்துப் போற்றிய அலெக் ஸாந்தர் அவருடைய அரசியல் கருத்துக்களையும் உபதேசங்களையும் அவ்வளவாக மதித்திருக்க மாட்டா னென்றே தோற்றுகிறது.

கி. மு. 336—ல் ஃபிலிப் மன்னன் கொல்லப்பட் டான். அலெக்ஸாந்தர் அரியணை ஏறினான். கடல் கடந்து சென்று பல நாடுகளைக் கைப்பற்ற எண் ணினான். அரிஸ்டாடில் ஏதென்ஸ் நகருக்குத் திரும்பினார். தாம் கல்வி கற்ற பிளேட்டோ வின் கலைக் கழகத்துக்கே (Academy) சென்றுவிட லாமா என்ற எண்ணம் அவரின் உள்ளத்தில் மேலோங் கிற்று. கலைக் கழகத்தின் அப்போதைய தலைவனாக இருந்த ஸெனாக்ரீடஸ் என்பவன் கணிதம், மாயா வாதம் (Mysticism) இவற்றிலே மிகுந்த பற்றுக் கொண்டு இவற்றை வளர்ப்பதில் அதிகமான அக்கறை காட்டி வந்தான். அரிஸ்டாடிலுக்கு இவை அவ்வளவாகப் பிடிக்காது. எனவே, பிளேட்டோவின் கலைக் கழகத்துக் குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் சீக்கிரம் கீழோடி மறைந்தது. ஏதென்ஸ் நகரில் தாமே ஒரு கலைக் கழ கத்தை நிறுவினார். லிஸியம் (Lyceum) என்று அஃது அழைக்கப் பட்டது. மாஸிடோனியா மன்னனிட மிருந்து நிதி உதவி பெற்றே இக்கலைக் கழகத்தை ஆரம்பித்தார் அரிஸ்டாடில், அப்பொழு தெல்லாம் ஏதென்ஸ் உள்படக் கிரீஸ் அனைத்துமே மாஸிடோனியா மன்னனின் ஆளுகையினுள் வந்துவிட்டது. மாஸி டோனியாவிடம் தோற்று அதனுடைய ஆதினத்துக் குள் வந்த ஏதென்ஸுக்கு மாஸிடோனியாவின் மேல் ஒரே கசப்பு. தனக்கும் மாஸிடோனியாவுக்கும் ஏற் கனவே ஏற்பட்டிருக்கும் பந்தம் ஏதென்ஸ் மக்களைத் தம் கலைக்கழகத்தின் (Lyceum) எதிரிகளாக்கி விடுமோ



என்று ஆரம்பத்திலேயே அரிஸ்டாடில் ஐயுற்றார். இருப் பினும், "அறிவுப்பணிக்கு ஆபத்து எதுவும் வராது; ஒரு வேளை வரினும் அவற்றை எதிர்த்து நின்று எப்படியா வது வெற்றி கொள்வோம்" என்ற தன்னம்பிக்கை அவ ருக்கு ஏற்பட்டது. அரிஸ்டாடில் நிறுவிய கலைக்கழகம் தோன்றியவுடனேயே ஏதென்ஸ் மக்களின் பெருவாரி யான ஆதரவைப் பெற்றது. ஏராளமான மாணக்கர்கள் திரள் திரளாகக் கலைக்கழகத்தில் சேர முன்வந்தனர்.

பிளேட்டோ நிறுவிய கலைக் கழகத்துக்கும் (Academy) அரிஸ்டாடில் நிறுவிய கலைக்கழகத்துக் கும் (Lyceum) சிறிது வேறுபாடு உண்டு. இரண்டும் அறிவை வளர்க்க நிறுவப் பட்டவைதாம். ஆனால், பிளேட்டோ நிறுவிய கலைக்கழகத்திலே கணித சாத்தி ரத்துக்கும் அரசியல் தத்துவத்துக்குமே பிரதானமான இடம் அளிக்கப்பட்டது. அடுத்தபடியாகத்தான் மற்ற சாத்திரங்களுக்கு இடமளிக்கப்பட்டது. அரிஸ்டாடில் நிறுவிய கலைக் கழகத்திலே உயிர் நூல்களுக்கும் (Biology and Zoology) இயற்கை—விஞ்ஞானத்துக் குமே (Natural Science) முதல் இடம் அளிக்கப்பட் டது. அரிஸ்டாடிலின் கலைக்கழகத்தின் ஒரு பகுதி பெரிய விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடமாகவே ஆகிவிட் டது. ஆராய்ச்சிகளைத் திறம்பட நடத்துவதற்குத் தேவைப்பட்ட பணச்செலவு அனைத்தையும் அலெக் ஸாந்தர் மன்னனே ஏற்றுக்கொண்டதோடு பல்வேறு பிற உதவிகளையும் செய்து அக்கலைக் கழகம் வளர உறுதுணையாயிருந்தான் என்று ஒரு வரலாற்று நூல் கூறுகின்றது. அரிஸ்டாடிலின் மாணவர்கள் விஞ் ஞான ஆராய்ச்சிகளை நடத்திக் கொண்டிருந்தபொழுது, அரிஸ்டாடில் மிகத் தீவிரமான அரசியல் சித்தாந்த ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார். 158 விதமான அரசியல் சட்ட அமைப்புக்களைப் பரிசீலனை செய்தார். தமது பிரபலமான "அரசியல்" (Politics) என்ற நூலை

அவர் இக்கலைக் கழகத்தில்தான் எழுதி முடித்தார். அவரது வேறுபல நூல்களும் இங்குத்தான் எழுதப்பட்டன. அரிஸ்டாடில் தம் மனைவியின் மூலம் நிறையச் செல்வங்களைப் பெற்றிருந்தார். அலெக்ஸாந்தர் அளித்த பதவியுடன் தமது செல்வத்தையும் வேண்டிய அளவு உபயோகித்துக் கலைக்கழகத்தை மிகக் கண்ணும் கருத்துமாக வளர்த்து உருவாக்கினார்.

ஏதென்ஸ் நகரம் தன்னை வென்று ஆதினப்படுத்திக்கொண்ட மாஸிடோனியாவை அறவே வெறுத்தது எனினும், மாஸிடோனியாவின் கட்சியி லிருந்த அரிஸ்டாடிலுக்கோ அவரது கலைக்கழகப் பணிக்கோ எந்த விதமான இடையூறும் ஏதென்ஸ் செய்ய வில்லை. அரிஸ்டாடிலை ஏதென்ஸ் நகரம் பல காரணங்களுக்காக வெறுத்தாலும் வேறுபல காரணங்களுக்காகப் போற்றியது. எனவே, அரிஸ்டாடிலின் கலைக்கழகத்தில் அறிவு நிறைந்து வளர்ந்ததுடன் ஏராளமான நூல்களாகவும் அது பரிணமித்தது. ஏதென்ஸ் நகரின் பெருமை இதனால் எவ்வளவோ அதிகரித்தது.

அரிஸ்டாடில் தனது அரசியல் நூல்களை எழுதிய பொழுது கிரேக்க நகர ராஜ்யங்களில் பல தங்களின் பண்டைப் பெருமையை இழந்து சீர்குலைந்து அழிவுப் படலத்தின் அந்தியத்தி லிருந்தன. வேறு பல நகர ராஜ்யங்கள் ஏற்கனவே அழிந்து விட்டன. அழிந்து போன இந்த நகர ராஜ்யங்களின் பல்வேறு அரசியல் அமைப்புக்களைப் பரிசீலனை செய்து சேகரித்த கருத்துக்களைத்தான் தனது அரசியல் நூல்களுக்கு மூலப் பொருட்களாக அரிஸ்டாடில் ஆக்கிக் கொண்டார். நகர ராஜ்யங்களில்தான் இலட்சிய அரசியல் நடைபெற முடியுமென்பது அவரின் தீர்க்கமான அபிப்பிராயம். கிரேக்க நகர ராஜ்யங்கள் புத்துயிர் பெற்று மீண்டும் கிரேக்கப் பூகோளப்படத்திலே தோன்றும் நாள்தான்



கிரீஸ் தேசம் திரும்ப வாழும் நாள் என்பது அரிஸ்டாடிலின் முடிவு.

தன் குருவான பிளேட்டோவின் கருத்துக்களினின்றும் அரிஸ்டாடில் பல இடங்களில் மாறுபட்டது என்னவோ உண்மையெனினும், அரிஸ்டாடிலின் கருத்துக்கோர்வைகள் பிளேட்டோவின் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டே எழுந்தன. இருபது ஆண்டுகள் பிளேட்டோவின் அடிகளில் அவரின் சீடராக அமர்ந்து பலவிதமான தர்க்கங்களி லீடுபட்டுக் கருத்துக்களைப் பறிமாறிக் கொண்டவர் அரிஸ்டாடில். இந்த நீண்ட நாளைய கூட்டுறவின் காரணமாகப் பிளேட்டோவின் சிந்தனைப் படலங்கள் அரிஸ்டாடிலின் அறிவு மண்டலத்திலே செறிந்து ஒன்றிப் போயிருந்தன. அரிஸ்டாடிலின் சிந்தனைகளைச் சரிவர நாம் உணர்ந்து கொள்வதற்குப் பிளேட்டோவுடன் அவருக்கு ஏற்பட்டிருந்த நீண்ட காலத்திய உறவையும் அறிவுத் தொடர்பையும் சிந்தனையில் இருத்திக் கொள்வது அத்தியாவசியம் என்று சிறந்த அரசியல் நூலாசிரியரான **ஃபாஸ்டர்** கருதுகின்றார். அரிஸ்டாடிலின் நூல்களிலே அரிஸ்டாடிலினுடைய அறிவின் மாண்பு வியக்கத் தக்க முறையிலே திரண்டெழுவதைக் காண்கிறோம். அதே சமயத்தில் அவரின் சிந்தனைகளில் அடிக்கடி பிளேட்டோவின் சிந்தனைகளும் வந்து கலந்து ஒன்று கூடுவதைக் காண்கிறோம். அரிஸ்டாடில் பிளேட்டோவின் அருமந்த சீடர் என்பதை அரிஸ்டாடிலின் கருத்துக்கள் பல இடங்களில் தாமே அறிவித்து விடுகின்றன.

அரிஸ்டாடிலின் சொந்த வாழ்க்கையில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் சில சம்பவங்களை நாம் அப்படியே நம்பிவிடுவதற் கில்லை. அரிஸ்டாடிலின் மனைவி இறந்துவிட்டபின், **ஹெர்ஃபிலிஸ்** என்ற மங்கையொருத்தியுடன் அவருக்குத் தொடர்பேற்பட்டதாகவும், அந்த உறவினின்றும் **நிக்கோமாக்கஸ்** என்ற

ஒரு மகன் பிறந்ததாகவும், அரிஸ்டாடில் இறந்த பின் அவரின் எழுத்துச் சுவடிகளைத் தொகுப்பதில் **நிக்கோமாக்கஸ்** பெரிதும் உதவினதாகவும், அரிஸ்டாடில் தமது உயிலில் தனது ஆசைநாயகிக்கும் தனது புதல்வன் நிக்கோமாக்கஸுக்கும், இறந்துபோன தனது மனைவியின் மூலம் பிறந்த ஒரே மகளுக்கும் வகை செய்து வைத்துவிட்டுப் போனதாகவும் கூறப்படுகிறது. அரிஸ்டாடிலின் சீடன் ஒருவன் தனது குருவின் பேரப்பிள்ளைகளை ஆதரித்துக் காப்பாற்றிய தாகவும் கூட ஒரு செய்தி வழங்குகிறது.

அரிஸ்டாடிலின் வாழ்விலே சங்கடங்கள் பல தோன்ற ஆரம்பித்தன. ஏதென்ஸ் நகரத்துக்கு விரோதமாக அலெக்ஸாந்தரின் கட்சியில் இருந்த அரிஸ்டாடிலின் மேல் இப்பொழுது ஏதென்ஸ் நகர மக்கள் அடிக்கடி தங்களின் வெறுப்பைக் காட்டி வந்தனர். இத்துடன் அரிஸ்டாடிலுக்கும் அலெக்ஸாந்தருக்கும்கூட ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் மனத் தாங்கல் ஏற்பட்டது. அரிஸ்டாடிலின் உறவினன் ஒருவனை அலெக்ஸாந்தர் மன்னன் தண்டித்துவிட்டான். அரிஸ்டாடில் அதை மாற்றும்படி வேறு நாட்டிலே முகாமிட்டிருந்த மன்னனுக்கு விண்ணப்பம் அனுப்பினார். அறிஞரின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதெனப் பதில் வந்தது. அரசனின் ஆணைக்கு அறிஞருள்பட அனைவரும் அடிபணிய வேண்டியதே என்ற கருத்தும் கடிதத்தில் தொக்கி யிருந்தது. அரசனின் மேல் வெறுப்பு; மக்களின் மேல் சலிப்பு. இருப்பினும் பல காரணங்களை உத்தேசித்து அரசனின் கட்சியிலேயே தொடர்ந்து இருந்து வந்தார் அரிஸ்டாடில். ஏதென்ஸ் நகரில் இருந்துகொண்டு ஏதென்ஸ் மக்களுக்கு விரோதமாக அலெக்ஸாந்தர் மன்னனின் ஆட்சியைத் தொடர்ந்து ஆதரித்து வந்த அரிஸ்டாடிலின் மேல் ஏதென்ஸ் மக்களுக்குச் சினம் அதிகரிக்க



ஆரம்பித்தது. அரிஸ்டாடிலுக்குத் தன்னிடம் மனத் தாங்கல் ஏற்பட்டிருந்தாலும்கூட, அலெக்ஸாந்தருக்கு அறிஞரின் மேலிருந்த மதிப்புச் சிறிதும் குறையவில்லை. எதையும் பொருட்படுத்தாது தன் கட்சியிலேயே தொடர்ந்து இருந்துவந்த அரிஸ்டாடிலைக் கௌரவப் படுத்த விரும்பிய மன்னன் ஏதென்ஸ் நகரின் முக்கியமான இடமொன்றில் அரிஸ்டாடிலின் சிலையொன்றை நிறுவச் செய்தான். இதனால் அரிஸ்டாடிலின்மேல் ஏதென்ஸ் மக்களுக் கிருந்த வெறுப்பு இன்னும் பன் மடங்கு அதிகமாகியது.

காலம் சிறிது கடந்தது. திடீரென்று ஒரு பரபரப்பான செய்தி. ஏதென்ஸ் நகரம் இன்பக் களியாட்டத்தில் மூழ்கியது. மாஸிடோனியா துக்கத்தி லாழ்ந்து கதறியது. அலெக்ஸாந்தர் மன்னன் எதிர்பாராத மரணத்திற் குள்ளானான். ஏதென்ஸ் மக்களின் கண்கள் அரிஸ்டாடிலின் பக்கம் திரும்பின. வஞ்சம் தீர்ப்பதற்குச் சரியான வாய்ப்பு. ஏதென்ஸ் ஆட்சியாளர்களும் வேறு சில முக்கியஸ்தர்களும் ஒன்றுகூடி அரிஸ்டாடிலுக்கு முடிவுகட்ட ஒரு சதியை உருவாக்கினார்கள். தமது சதியைச் சட்டபூர்வமாகச் செயலாற்ற அரிஸ்டாடிலின் மேல் ஒரு குற்றப் பத்திரிகையைத் தயார் செய்தார்கள். சாக்ரடீஸின் மேல் வாசித்த குற்றப் பத்திரிகையின் பிரதியைப்போல் காணப்பட்டது அது. விசாரணைக்குத் தம்மை உட்படுத்த விரும்பாத அரிஸ்டாடில் தாம் ஏதென்ஸ் நகரை விட்டுச் சென்று விடுவதாகக் கூறினார். அக்காலத்திய வழக்கப்படி, ஏதென்ஸ் நீதி மன்றம் எவர் மீதாவது குற்றம் சுமத்தும்பொழுது, குற்றம் சுமத்தப்பட்ட மனிதர் நகரை விட்டுத் தாம் சென்று விடுவதாகக் கூறினால் அவரின்மீது மேற் கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது. அரிஸ்டாடிலின் விருப்பத்திற்கு ஏதென்ஸ் அரசு இணங்கியது. இதுகாறும் எந்த ஏதென்ஸ் நகரில் அமர்ந்து

அறிவுத் தெய்வத்தை அவனியில் நடக்கவிட்டுப் பார்த்தாரோ, அந்த ஏதென்ஸ் நகருக்கும் தம் கலைக் கழகத்திற்கும் கண்களில் நீர் மல்க அஞ்சலி செய்துவிட்டு, அந்நகரை விட்டு அகன்று தம் தாயின் ஊராகிய **சால்ஸிஸ்** என்ற இடத்தை அடைந்தார் அரிஸ்டாடில்.

சால்ஸிஸுக்கு அரிஸ்டாடில் வந்து சேர்ந்தவுடன் அவரைச் சந்திக்க அங்கு நோயொன்றும் வந்து சேர்ந்தது. பற்றிய நோய் சீக்கிரம் அவரின் உயிரைப் பறித்தது. ஏதென்ஸை விட்டுச் சென்ற சில மாதங்களிலேயே ஆறாத் துயரத்தில் அவரின் ஆவி பிரிந்தது. நோய் தானாக வரவில்லை, இவரின் துயரமே நோயை வரவழைத்தது என்று யூகிப்பதற்கும் இடமுண்டு. விஷத்தை அருந்தித் தாமே வலிய நோயை இவர் வரவழைத்துக் கொண்டதாகவும் சில ஆசிரியர்கள் கூறுகின்றனர். இதைப்பற்றி அதிகமான சர்ச்சை தேவையில்லை. கி. மு. 322ல் அரிஸ்டாடில் என்னும் அறிவுக் கனல் அணைந்து விட்டது.

அரிஸ்டாடிலின் நூல்களில் காணப்படும் பல முடிவுகள் பிளேட்டோவின் கருத்துக்களைக் கண்டனம் செய்பவையாகவே இருக்கின்றன. இருவரும் மெய்ப் பொருளைக் கண்டுபிடிப்பதற்கு வெவ்வேறான முறைகளை அனுசரித்தனர். அரிஸ்டாடில் புலன் அனுபவங்களிலும் பிற உலக அனுபவங்களிலும் மெய்ப் பொருளைக் காண விழைந்தார். அனுபவங்களிலே மெய்ப் பொருளின் அம்சங்களைக் காணமுடியும்; அனுபவத்தை விடுத்து வேறெங்கணும் அதைத் தேடுவது அவ்வளவு பலனளிக்கக் கூடிய செயலல்ல என்பது அவரின் முடிவு. அதற்கு மாறாக, அனுபவத்தில் காணப்படுவது மெய்ம்மை அல்ல; அனுபவத்தில் மெய்ப்பொருளைக் காண முடியாது; அதில் காணப் படுவது பொய்ம்மை; அனுபவத்தைப் புறக்கணித்து விட்டு, அதற்கப்பால் விருப்பு வெறுப்பற்ற தூய



அறிவைக்கொண்டு தேடினால்தான் மெய்ப்பொருளைக் காண முடியும் என்பது பிளேட்டோவின் வாதம். இங்கு "மெய்ப்பொருள்" என்ற சொல் பொதுவாக "மெய்" அல்லது "பேரறிவு" என்ற பொருளில்தான் உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது; "இறை" என்ற பொருளில் அல்ல என்பதை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். அனுபவங்களைக் கடந்தெழுந்த அறிவு, துணையெதுவு மின்றி, தன் விருப்ப வெறுப்பற்ற ஆராய்ச்சியால் கண்டுபிடித்த மெய்யே வாழ்வின் இலட்சியமாக அமைய வேண்டும்; அரசியலுக்கும் அதுவே இலட்சியம்; அனுபவங்களைத் துணையாகக் கொண்டு நாம் நமது அரசியலை நிர்மாணித்தோமானால் அது பொய்ம்மையின் அடிப்படையில் ஏற்படுத்தப்படுவதாகும்; மனிதனுடைய புலன்களுக்கு வேண்டுமென்றால் அதில் ஏதாவது பயனேற்படலாமே யொழிய மனிதனுடைய ஆத்மம் அதனால் எவ்விதப் பலனு மடையாது; இவற்றை அடிப்படையாகக் கொண்டே பிளேட்டோவின் சிந்தனைக் கோர்வைகள் எழுகின்றன. அரிஸ்டாடில் இதை வன்மையாக ஆட்சேபிக்கின்றார். நாம் காணும் ஒவ்வொரு பொருளும் மெய்ப்பொருளின் திவலையே; மனித அனுபவங்கள் நாளடைவில் மெய்ப்பொருளின் ஏதாவதொரு அம்சத்தைச் சூழ்ந்தே அமைகின்றன. மனித அனுபவங்களில் மெய்ப்பொருள் தன்னைச் சிறிது சிறிதாக ஒவ்வொரு காலக் கட்டத்திலும் வெளிப் படுத்திக் கொண்டு செல்லுகிறது. வாழ்வின் அனுபவங்களும் தொன்று தொட்டு நிலைபெற்று வரும் வழக்கங்களும் மரபுகளுமே மெய்ப்பொருளைத் தேடுவதற்கு நமக்கு உதவக்கூடிய ஒளி விளக்குகள். அனுபவங்களில் தேடிக் கண்டு பிடிக்க முடியாத மெய்ப் பொருளை வேறு எங்குத்தான் தேடுவது? அதைத் தேடித்தான் என்ன பயன்? அதைக் கண்டு பிடித்துத்தான் என்ன பயன்? பொதுவாக இந்தப்

போக்கிலே செல்லுகின்றது அரிஸ்டாடிலின் வாதம். இருவரும் மகோன்னதமான மனே நிலையிலிருந்து தான் பேசுகின்றனர். மெய்ப்பொருளைக் கண்டு பிடிப்பதிலே இவ்விருவருக்கும் அவ்வளவு அளவிறந்த வேட்கை! பிளேட்டோ கலைஞரின் உள்ளத்தைப் படைத்தவர்; அரிஸ்டாடில் விஞ்ஞானியி னுள்ளத்தைப் படைத்தவர்.

தேசத்தை ஒரு குடும்பமாகவே பாவிக்கின்றார் அரிஸ்டாடில். குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் எவ்வாறு தம் வெவ்வேறு கடமைகளைச் சரிவரச் செய்வ தால் குடும்பம் ஒன்றுபட்டுச் சரிவர இயங்குகின்றதோ, அதே போன்று நாட்டின் ஒவ்வொரு பகுதியினரும் தமக் குள்ள கடமைகளையும் வெவ்வேறு தொழில்களையும் சரி வரச் செய்வதில்தான் நாட்டின் ஒருமைப்பாட்டையும் முன்னேற்றத்தையும் காண முடியும் என்பது அவர் கருத்து. நாடு என்பது குடும்பத்தின் விரிவே (State is family writ large). இதுதான் அவரின் அடிப்படைக் கொள்கைகளுள் தலையாயது. மனிதனுடைய அடிப் படை இயற்கையினின்றும் அதையொட்டிய அத்தியா வசியமான தேவைகளினின்றும் தோன்றியது குடும்பம். மனிதனுடைய இயற்கை குடும்பமாகப் பரிணமிக்கின் றது. அது மேலும் பரிணமித்து நிறைவு அடைவதற்கு அரசியலமைப்புடன் கூடிய சமுதாய வாழ்வும் தேவைப் படுகிறது. மனிதனுடைய இயற்கை முதலில் குடும்ப மாகப் பரிணமித்துப் பின்னர் அரசியல் சமுதாயமாகப் (Political Society) பரிணமிக்கின்றது. எனவே, நாடு என்பது இயற்கையின் படைப்பு. மனிதனின் அறிவும் ஆத்மமும் அரசியல் சமுதாய வாழ்வில்தான் வளர்ந்து பக்குவமடைந்து பலனீகின்றது. இல்லையேல் அவை உயிர்க்காமலேயே நசித்து மறைந்து விடுகின்றன. மனிதன் இயல்பிலேயே சமுதாயப் பிராணி; அரசியல் சுபாவம் படைத்தவன். (Man is a political animal)



இந்த இயல்பிலும் சுபாவத்திலுமிருந்துதான் சமுதாயம் பிறக்கின்றது. எனவே, நாடு என்று நாமழைக்கும் முழு மையின் ஒரு பகுதிதான் மனிதன்; அதனின்றும் பிரித்து எண்ணப்பட முடியாத ஒரு அங்கமாகின்றான் மனிதன். அதனினின்றும் அவன் தன்னை விடுவித்துக் கொள்ளும் பொழுது அவனது இயல்பு பரிணமிப்பதில்லை; அவனது சக்திகள் வளர்ந்து நிறைவு பெறுவதில்லை. சமுதாயத் தினின்று அவன் பிரியும் பொழுது எவ்விதப் பொருளும் பயனுமற்ற ஜீவனாகி விடுகின்றான். உடலைப் பெற்றி ருப்பினும் மனிதன் எனும் வர்ணனைக்குள் அவன் வருவ தில்லை. சமுதாயத்தினின்று தன்னைத் துண்டித்துக் கொண்டு ஒரு மனிதன் இயங்க முடியுமானால், ஒன்று அவன் ஏதாவதொரு கடவுளாக இருக்க வேண்டும்; அல்லது மிருகமாக இருக்க வேண்டும்; நிச்சயம் மனித னாக இருக்க முடியாது. இக்கருத்துக்களே அரிஸ்டாடிலி னுடைய அரசியல் சித்தாந்தத்தின் அடிவரிசைக் கற்கள்.

பிளேட்டோவின் பொதுஉடைமைக் கொள்கையை மிக ஆணித்தரமாக அரிஸ்டாடில் எதிர்க்கிறார். ஆளும் வர்க்கத்தினருக்குத் தனிப்பட்ட சொத்தோ, மனைவி மக் களோ, பந்தபாசங்களோ இருக்கக்கூடாது என்பது பிளேட்டோவின் கருத்து. சுயநலம் முற்றிலும் அற்றவர் களாலேயே, தூய மெய்யை, தூய அறிவைக் கொண்டு, தூய்மையான முறையிலே, அரசியல் சமுதாயத் துறை யில் நிறைவேற்ற முடியும் என்பது அவரின் கோட்பாடு. தனக்கெனச் சொத்தும் மனைவி மக்களும் இருந்தால் அது சுயநலத்தை வளர்க்கும்; பொதுநலமும் சுயநலமும் ஒன்றோடொன்று மோதும்போது, சுயநலம் அடிக்கடி மேலோங்க ஏதுவுண்டு; இது அரசியலையும் பொதுமக்க ளின் நல்வாழ்வையும் வெகுவாய்ப் பாதிக்கும் என்று பிளேட்டோ அஞ்சுகின்றார். ஆஸ்திகளை மட்டுமல்ல, பெண்கள் குழந்தைகள் அனைவரையுமே பொதுஉடை

மையாக்கிவிட வேண்டும் என்று பிளேட்டோ வாதாடுகின்றார். பிளேட்டோவின் இந்தப் பொது உடைமைக் கொள்கையின் மேல் தம் ஆத்திரத்தையெல்லாம் கொட்டி, சக்திமிகுந்த வாதங்கள் பலவற்றைச் சரமாரியாகத் தம் நூல்களிலே தொடுத்துச் செல்லுகின்றார் அரிஸ்டாடில். பிளேட்டோவின் பொதுவுடைமைக் கொள்கை மனித இயற்கைக்கே விரோதமானது. மனித இயற்கையை அவமதிப்பது என்ற தோரணையில் அரிஸ்டாடில் அதைத் தாக்குகின்றார். சொந்த ஆஸ்தியையும் பெண்டு பிள்ளைகளையும் பெற்றிருப்பவர்களெல்லாம் பொது நலத்தைத் தியாகம் செய்து சுயநலத்தை வளர்த்துக் கொள்வார்கள் என்று கூறுவது விவேகமற்ற வாதம்; தங்களின் சுயநலத்தைத் தியாகம் செய்து பொதுநலத்தை வளர்த்த ஆட்சியாளர்கள் எத்தனையோ பெயர்களை வரலாற்றில் கண்டிருக்கின்றோம். சொந்த உடைமைகளைப் பெற்றிருப்பவர்கள் அனைவருமே சுயநலமிகள்; தூய்மையற்றவர்கள். அவர்களால் அரசியலைத் திறம்பட நடத்தமுடியாது என்று கூறுவது முற்றிலும் அபத்தமான வாதம். அதற்கு மாறாகத் தனி உடைமைகள், தமக்கெனப் பெண்டுபிள்ளைகள் இருக்கும்போது தான் மனிதனின் அடிப்படை இயல்புகளும் உணர்ச்சிகளும் ஓரளவு பூர்த்தியடையப் பெற்று அவன் பொது நலத்தை வளர்ப்பதற்குத் தயாராகின்றான். பொது நலத்தை வளர்க்கும் தகுதியையே அவன் அப்பொழுது தான் பெறுகின்றான். பிளேட்டோவின் பொது உடைமைக் கொள்கை மனிதனின் இயற்கையைச் சுட்டுச்சாம்பலாக்க முயலுகின்றது. இது அறவே முடியாத காரியம். அத்தகைய முயற்சி சுயநலத்தை அழிக்கத் தவறுவதோடு பொது நலத்தைச் சீர்குலைக்கவே தலைப்படும். எடுத்த எடுப்பிலேயே மனிதர்களனைவரையும் வேதாந்திகளாகவும் துறவிகளாகவும் ஆக்கிவிட முடியாது. சுயநல இச்சைகள் பூர்த்தியடையப் பெற்றபின்



தாமாகவே அவை காய்ந்து சலித்து உதிர முற்படும். ஒருவருடைய தனி உடைமைகளும், அவருடைய பெண்டு பிள்ளைகளடங்கிய குடும்ப வாழ்வும் அவரிடத்திலே அன்பு கனிந்த உணர்ச்சிகளையும் பிறரின் மேல் ஒரு பரிவையும் உயர்ந்த மனோபாவங்களையும் தோற்றுவிக்கின்றன. மனிதனின் ஆதிபூர்வமான காட்டுமிராண்டித்தனத்தை அழிப்பதே அவனுடைய தனி உடைமைகளும் குடும்ப வாழ்வும்தான். மனிதனை மனிதத் தன்மையுடையவனாக ஆக்குபவையே இவைகள்தான் என்பதைச் சிந்திப்பவர் எவரும் தெள்ளிதில் உணர்வர். சுயநலத்தை அளவு கடக்கும்படி விடக்கூடாது. அதை அறவே ஒழித்தலும் கூடாது. இவை இரண்டுமே தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் ஊறு விளைவிப்பன. "தான்", "எனது" என்ற மனிதனுடைய அடிப்படைத் தாபங்களை அழிக்க முற்படுவது மனித வளர்ச்சியின கருவையே அழிக்க முற்படுவதைப் போலாகும். சமுதாயத்தின் பொதுநலமே இறுதியில் இவற்றை உரமாகக் கொண்டுதான் வளருகின்றது. இந்த அடிப்படைத் தாபங்கள் ஓரளவு பூர்த்தியடையும்பொழுது பொதுநல உணர்ச்சிகளும் தியாகபுத்தியும் மனிதனிடத்தில் தாமாகவே துளிர்த்து வளர ஆரம்பிக்கின்றன. பிளேட்டோவின் பொதுவுடைமைக் கொள்கைக்கு எதிராக அரிஸ்டாடில் விடுக்கும் வாதங்களின் சுருக்கமான சாராம்சம் இது. பிளேட்டோவின் பொதுவுடைமைக் கொள்கையைக் கார்ல் மார்க்ஸின் பொதுவுடைமைக்கொள்கையோடு சேர்ந்தது என்று நாம் நினைத்துவிடக் கூடாது. இவ்விரண்டு பொதுவுடைமைக் கொள்கைகளுக்கும் எவ்வளவோ வேறுபாடு உண்டு. பிளேட்டோவின் பொதுவுடைமைக் கொள்கையைப் பொறுத்த வரையில் பிளேட்டோவும் அரிஸ்டாடிலும் வடதுருவமும் தென்துருவமுமாகி விடுகின்றனர்.

அரிஸ்டாடில் எழுதிய அரசியல் நூல்களுள் "அர

சியல்'' (Politics) என்ற நூல் முக்கியமானது "அரசியல்'' என்ற நூலிலே பல்வேறு அரசியல் அமைப்புக்களைப்பற்றி அவர் பொதுவாக ஒரு இலக்கணம் வகுத்து விடுகின்றார். ஒரு குறிப்பிட்ட ஆட்சி முறை நல்லதா, கெட்டதா என்பது அவ்வாட்சிக்குரிய அரசியல் கட்டுக்கோப்பையோ அமைப்பையோ பொறுத்ததல்ல; அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்பவர்களின் தன்மையையும் அதைப் பிரயோகிப்பவர்களின் தன்மையையுமே அது பொறுத்திருக்கின்றது என்று திட்டவட்டமாக ஆரம்பத்திலேயே கூறிவிடுகின்றார். மிகச் சிறந்த இலட்சிய பூர்வமான ஆட்சிமுறை அனுபவத்திற்கு எட்டாததாயிருந்து விடலாம்; எனவே, நடைமுறைக்குச் சாத்தியமான ஆட்சி முறைகள் பலவற்றுள் நல்லதொன்றை அறிஞர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்; இந்த ஆட்சி முறை தத்துவ ரீதியாக மட்டும் சிறந்ததா யிருந்தால் போதாது; குறிப்பிட்ட பிரதேசத்திலே குறிப்பிட்ட சூழ்நிலைகளிலே அது வெற்றி யடையுமா என்பதையும் சிந்தித்து ஆராய்ந்தே அதைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்தந்தச் சூழ்நிலைகளை மனத்தில் இருத்திக்கொண்டு ஆராய்ந்தால்தான் சிறந்த ஆட்சி முறையைத் தேர்ந்தெடுப்பதிலே நாம் வெற்றிபெற முடியும். தமது "அரசியல்'' என்னும் நூலிலே அரிஸ்டாடில் விளக்கும் கருத்துக்கள் இவை.

பண்டிதச் சீமான்களின் ஆட்சியைவிட மன்னராட்சி சிறந்தது. பாமர மக்களால் நடத்தப்படும் குடியாட்சியைவிடப் பண்டிதச் சீமான்களின் ஆட்சி சிறந்தது. ஆனால், மன்னராட்சியும் பண்டிதச் சீமான்களின் ஆட்சியும் தரம் குறைந்து பாழ்படச் ஆரம்பித்தால், மன்னனுடைய ஆட்சி சர்வாதிகாரக் கொடுங்கோலனுடைய ஆட்சியாக மாறிவிடுகின்றது; பண்டிதச் சீமான்களின் ஆட்சி ஒரு சுயநலக் கும்பலின் வெறி பிடித்த ஆட்சியாக மாறி விடுகின்றது. இதனால் ஜன



சமுதாயத்துக்கு விளையக் கூடிய தீமைகள் கணக்கிலடங்கா. இந்தச் சூழ்நிலையில் மேலே சுட்டிக்காட்டப்பட்ட வரிசை தலைகீழாக மாறுகின்றது. கொடுங்கோல் மன்னனுடைய ஆட்சியைவிட ஒரு சிலரின் கூட்டாட்சி சிறந்ததாகின்றது. இந்தச் சுயநலக் கும்பலின் ஆட்சியைவிடக் குடியாட்சி சிறந்த தாகின்றது. குடியாட்சி எவ்வளவு மோசமாகப் போனாலும் மற்ற ஆட்சி முறைகள் மோசமாகப் போகும்பொழுது ஏற்படக் கூடிய அளவு தீமைகள் ஏற்படுவ தில்லை. முற்றிலும் ஏழைகளான பாமர மக்களா லாகிய குடியாட்சியைக் காட்டிலும் மத்தியதர வகுப்பினர்களா லாகிய குடியாட்சி எளிதில் மோசமாகிப் பாழ்படாது; அத்துடன் அது சிறந்த நன்மைகளைப் பயக்கக் கூடியதாய் அமையும். அதாவது பொது மக்களில் பெருவாரியான சதவிகிதத்தினர் மிகுந்த ஏழைகளாகவோ பணக்காரர்களாகவோ இல்லாதிருத்தல் நல்லது. பணக்காரர்களின் சுபாவத்திலே அவர்களின் பணமும் டாம்பீகமான வாழ்க்கையும் தவிர்க்க முடியாத சில குறைபாடுகளை ஏற்படுத்தி விடுகின்றன. ஏழைகளின் சுபாவத்திலே அவர்களின் ஏழ்மை தவறான ஆசைகளையும் சமயங்களில் அடிமை மனப்பான்மையையும் ஏற்படுத்தி விடுகின்றது. இவ்விரு வகையான குறைபாடுகளையும் மத்தியதர வகுப்பினரிடம் (Middle class) அவ்வளவு அதிகமாகக் காண முடியாது. எனவே, மத்தியதர வகுப்பினர்களா லாகிய குடியாட்சியையே (Polity) அரிஸ்டாடில் சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கிறார். மத்தியதர வகுப்பினர்களா லாகிய குடியாட்சியை அமைப்பது சிரமமா யிருந்தாலும், பொதுவாகக் குடியாட்சியே மற்ற ஆட்சிமுறைகளைக் காட்டிலும் நல்லது என்பது அவரின் தேர்ந்த அபிப்பிராயம். எல்லா இடங்களுக்கும் சூழ்நிலைகளுக்கும் உகந்தது குடியாட்சியே; வெவ்வேறு இடத்திற்கும் சூழ்நிலைகளுக்கு மேற்பத் தேவைப்பட்ட திருத்தங்களையும் மாறு

தல்களையும் அதன் கட்டுக்கோப்பிலும் அமைப்பிலும் அவ்வப்போது செய்து கொள்ளலாம். குடியாட்சி என்பது தீமைகளே அற்ற ஆட்சி என்று சொல்லிவிட முடியாது; ஆனால், மற்ற ஆட்சி முறைகளில் ஏற்படக் கூடிய தீமைகளைக் காட்டிலும் குடியாட்சி முறையில் ஏற்படும் தீமைகள் குறைந்தனவாகவே இருக்கும். மேலும் குடியாட்சியில் லஞ்ச ஊழல் அதிகமாக இருக்காது. ஒரு சிலர் பொறுப்பை வகிக்கும் பொழுது அவர்களை லஞ்சம்கொடுத்துத் தம்பக்கம் இழுத்துக்கொள்வது சுலபம். பலர் ஆட்சிப் பொறுப்பை வகிக்கும் பொழுது இது எளிதில் முடியாது. ஒரு தனி மனிதரோ, ஒரு சிலரோ உணர்ச்சி வசப்பட்டுத் தவறான முறையிலே அதிகாரத்தைப் பிரயோகிக்கலாம். பல்லாயிரக்கணக்கான மக்கள் உணர்ச்சி வசப்பட்டுத் தவறிழைத்தல் எளிதில் நடக்கக் கூடிய காரியமல்ல. ஒரு தனி மனிதரோ, ஒரு சிலரோ தம் சொந்த விருப்பு வெறுப்புக்களை அடிப்படையாகக் கொண்டு அதிகாரத்தைத் துர்ப்பிரயோகம் பண்ணலாம். ஆனால், பல்லாயிரக்கணக்கான மக்களின் விருப்பு வெறுப்புக்கள் ஒன்றோடொன்று மோதும் பொழுது எல்லோருக்கும் பொதுவான நன்மை ஒன்றே எஞ்சி நின்று அனைவருடைய அங்கீகாரத்தையும் பெறுகின்றது. அரிஸ்டாடில் குடியாட்சிக்குச் சாதகமாக அமைத்துச் செல்லும் வாதங்களுள் இவை ஒரு சில.

திரும்பத் திரும்ப, மறவாமல் நாம் மனத்தில் ஒரு விஷயத்தை இருத்திக் கொள்ளுதல் அவசியம். அரிஸ்டாடில் சொல்லிச் செல்லும் குடியாட்சி இந்த இருபதாம் நூற்றாண்டிலே நம் நாட்டிலும் மேலை நாடுகளிலும் நாம் காணும் குடியாட்சியைப் போன்றதல்ல. கிரேக்கக் குடியாட்சியிலே பிரதிநிதித்துவம் இல்லை. கிரேக்கக் குடியாட்சியைக் கிரேக்கப் பிரஜைகள் அனைவரும் சேர்ந்து நேர்முகமாக இயக்கினார்கள். நிர்வாகப் பொறுப்பு, நீதி வழங்குதல், சட்டமியற்றல் இவையனைத்திலும்



குடிமக்களனைவரும் நேரடியாகப் பங்கு கொண்டார்கள். நகர—ராஜ்யத்தையும் (city state) இத்தகைய குடியாட்சியையுமே தமது “அரசியல்” என்னும் நூலில் இலட்சியங்களாக வரைந்து காட்டுகின்றார் அரிஸ்டாடில்

அரசியலின் குறிக்கோள்களைப் பற்றி மிக அழகாகச் சொல்லிச் செல்கின்றார் அரிஸ்டாடில். அவற்றில் ஒரு சில தற்காலச் சூழ்நிலைகளுக்கும் தேவைக்கும் ஒவ்வாதவையெனினும், பெரும்பான்மையானவை நம்மைப் பெரிதும் கவர்ந்து நம் சிந்தனையைத் தூண்டிவிடுகின்றன. மாதிரி ராஜ்யம் (Model state) எவ்வாறு இருக்க வேண்டும் என்று அரிஸ்டாடில் தமது நூலில் சித்தரித்துக் காட்டுகின்றார். நகர ராஜ்யமே நல்ல ராஜ்யம் என்று அவர் கூறுவதோடு, பொருளாதாரத் தன்னிறைவு (self sufficiency) அது பெற்றிருத்தல் அவசியம் என்பதை வலியுறுத்துகின்றார். மக்களின் பலதரப்பட்ட தேவைகளையும் பூர்த்தி செய்யும் விதத்தில் நாட்டிலே பொருளாதார சுபிட்சத்தை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் தலையாய பொறுப்பு. இக் குறிக்கோளை நோக்கி அரசாங்கம் சதா முயன்று கொண்டிருக்கவேண்டும். மாதிரி ராஜ்யம் இதற்கேற்ற இயற்கை வளங்களைக் கொண்டுள்ள சூழ்நிலையில் அமைதல் நலது. உடலிற்கு ஊறு விளைவிக்காது மனத்திற்கு இதமளித்துச் சதா உற்சாகமும் தெம்பும் அளிக்கக் கூடிய சீதோஷ்ண நிலையை உடையதாக அது இருக்க வேண்டும். நாட்டின் ஜனத்தொகை மிக அதிகமாகவோ மிகக் குறைவாகவோ இருக்கக் கூடாது. நாட்டின் பல்வேறு வளங்களை விருத்தி செய்து தொழில்களனைத்தையும் திறம்படக் கவனித்து நாட்டின் மொத்த உற்பத்தியையும் வருமானத்தையும் பெருக்குவதற்கு எவ்வளவு மனித சக்தி (man power) தேவையோ அதைப் பொறுத்து ஜனத்தொகை அமையவேண்டும். தேவைக்கு மேற்பட்ட ஜனத்தொகை இருந்தால் நாட்

டிலே ஏழ்மை மிகுந்து நாடு பலம் குன்றிப்போகும் என்பது அவருடைய கருத்து. மிகக் குறைவான ஜனத் தொகை இருந்தாலும் நாடு வளர்ச்சி குன்றி, படைபலம் இழந்து, அழிந்துபோக ஏதுவாகும் என்பதையும் அவர் குறிப்பாக உணர்த்துகின்றார். நாட்டில் ஜனத் தொகை 10,000 பேருக்கு மேல் இருப்பது அவ்வளவு விரும்பத் தக்கதல்ல என்பது அரிஸ்டாடிலின் கருத்து. நாட்டின் **எல்லைகள்** சாதகமான பூகோள ரீதியில் அமைய வேண்டும். தற்காப்பு வசதிகளை யுடையனவாகவும் அயல்நாட்டு வியாபாரப் போக்கு வரத்துக்கேற்ற வசதிகளை யுடையனவாகவும் அவை இருந்தால் அந்த நாடு மற்ற நாடுகளின் மத்தியில் ஏறுபோல் விளங்கி, எவருக்கும் அடிபணியாது சுதந்தரத்துடன் வாழும். கடல் வர்த்தகத்துக்கு ஏற்ற நல்ல துறைமுகங்களையும் கொண்டதாக ஒரு நாடு அமையுமானால் அதன் வளர்ச்சியை எவரும் தடுக்க முடியாது.

இவைகளை யெல்லாம் கொண்டு ஒரு நாடு அமைந்தால் அந்நாடு சீரிய வாழ்வு வாழும் என்று பொதுப் படையாகச் சொல்லிவிட்டு, அதற்கு மேற்கொண்டு அரிஸ்டாடில் மிக அரிய தார்மீகக் குறிக்கோள்களை (moral objectives) அரசினருக்கு வகுத்துக் கொடுக்கின்றார். உடலும் உயிரும் செவ்வனே இணைந்து சிறந்து வாழ்வதற் கேற்ற வசதிகளையும் சூழ்நிலைகளையும் ஏற்படுத்திக் கொடுப்பது மட்டும்தான் அரசாங்கத்தின் குறிக்கோள் என்று கொள்வது மடமை. நாட்டு மக்க ளனைவரும் நல்வாழ்வு (Good Life) வாழ வேண்டும்; மறத்தை யொழித்து மதிநுகத்தால் அறத்தை உணர்ந்து அதற்கியைந்த வாழ்வு வாழவேண்டும்; அறிவேற்றத்தையும் ஆன்ம வளத்தையும் கொண்ட வாழ்வு வாழவேண்டும்; உயிர் உடம்பில் தரித்து, உடல்புலனின்பத்தில் தரித்திருந்தால் மட்டும்போதாது; அறிவிலே தர்மம் தரித்து நிலைக்க வேண்டும். அக



வாழ்விலும் புற வாழ்விலும் சீரிய சிந்தனைகளாகவும் செயல்களாகவும் அது மலரவேண்டும். விலங்குணர்ச்சிகளிலிருந்து மனிதன் விடுபட்டு, மனிதனுக்குரிய தார்மீக இலக்கணங்களோடு அவன் இலங்க வேண்டும். இதற்கு வேண்டிய வழிகளையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுப்பது அரசாங்கத்தின் முக்கியமான கடமை; இதுவே அரசாங்கத்தின் பிரதானமான குறிக்கோளாக இருக்க வேண்டும். இதனின்று அரசாங்கம் சிறிதும் நழுவுதல் கூடாது. இக்குறிக்கோளை அரசாங்கம் நிறைவேற்றத் தவறும் பொழுது அரசின் அடிப்படைத் தத்துவமே பாழ்படுகின்றது.

அடுத்தபடியாக அந்நிய நாடுகளின்மேல் படையெடுத்தலைப்பற்றிச் சிறிது உன்னிப்பாகவே ஆராய்கின்றார் அரிஸ்டாடில். ஒரு நாடு அண்டை நாடுகளின் மேலோ, பிற நாடுகளின் மேலோ படையெடுத்துத் தனது ஆதிக்கத்தையும் எல்லையையும் விஸ்தரித்துக் கொள்வதை அரிஸ்டாடில் சிறிதும் விரும்ப வில்லை. அந்நிய நாடுகளின் மேல் படையெடுப்பதை எந்த நாடும் எக்காலத்திலும் தனது குறிக்கோள்களுள் ஒன்றாகக் கொள்ளவே கூடாது என்பது அவரின் முடிவான அபிப்பிராய மாகும். நீண்ட பரிசீலனைக்குப் பின்னரே அரிஸ்டாடில் இவ்வித முடிவுக்கு வருகின்றார். தனது சுபிட்சத்தையும் பலத்தையும் பெருக்கிக் கொள்வதற்கு ஒரு நாடு வேறு வழி முறைகளை ஆராய வேண்டுமே யொழியப் பிற நாடுகளின் மேல் படையெடுத்து அதன் மூலம் அவற்றைப் பெருக்கிக் கொள்ளும் எண்ணத்தை அறவே ஒழித்துவிட வேண்டுமென்று வன்மையாக எச்சரிக்கின்றார். பிற நாடுகளின் மேல் படையெடுத்து அவற்றை வென்றாலொழியத் தனக்குச் சுபிட்சமும் பலமும் ஏற்படுவதற்கு வழியே இல்லை என்ற நிர்ப்பந்தமான நிலையில் ஒரு நாடு இருக்குமானால், அது தனித்த ஒரு நாடாக இருக்கவே

தகுதியற்றது என்று அவர் கூறுகின்றார். போரிடாத நாடு சோம்பேறி நாடு என்று கொள்வது முற்றிலும் பொருத்தமற்ற கொள்கை என்பதையும் அவர் சுட்டிக் காட்டுகின்றார். தம்மீது படையெடுத்தவர்களோடு போரிடுவதையும், இயல்பிலேயே அடிமை வாழ்வுக்கென்று பிறந்தவர்களை வென்று அடிமைப்படுத்திக் கொள்வதையும் அரிஸ்டாடில் ஆதரிக்கின்றார். இவ்விருவகைப் போர்களைத் தவிர வேறு எவ்விதப் போரையும் எந்த நாடும் தன்னுடைய குறிக்கோளாகக் கொள்வது தவறு. பிற நாடுகளின் மேல் படையெடுத்து அவற்றை வென்று அடிமைப்படுத்திக் கொள்ள விழையும் எந்த நாடும் இறுதியில் தன்னை அழித்துக்கொள்வதற்குத்தான் வழி செய்து கொள்கிறது என்பதை மிக நுட்பமாகத் தமது நூலில் எடுத்துக் காட்டுகின்றார் அரிஸ்டாடில்.

பிரஜா உரிமையைப் பொறுத்து அரிஸ்டாடில் கொண்டுள்ள கருத்துக்கள் இருபதாம் நூற்றாண்டு மாந்தராகிய நம்மை உண்மையிலேயே திடுக்கிடச் செய்கின்றன. அவருடைய காலத்திலே அவரின் வாதங்கள் வரவேற்கப்பட்டன என்பதையும் நாம் மறுக்க முடியாது. பிரஜைகள் என்றால் யார் என்பதற்கு அரிஸ்டாடில் முதலில் விளக்கம் கொடுத்து வரையறுக்கின்றார். அரசாங்க நிர்வாகப் பொறுப்பைப் பகிர்ந்து கொள்ளும் உரிமையைப் பெற்றவர்களுக்குப் பிரஜைகள் என்று பெயர். பெண்களுக்கும் அடிமைகளுக்கும் இவ்வுரிமை அளிக்கக் கூடாது என்பது அவரின் முடிவு. இவர்கள் இயல்பிலேயே பிறரைச் சார்ந்து வாழக் கூடியவர்கள்; தாமாகவே ஒரு முடிவுக்கு வரவோ, ஒரு கருத்தை உருவாக்கிக் கொள்ளவோ சக்தியும் வாய்ப்பு மற்றவர்கள். இவர்களைப் பிரஜைகளாக ஆக்கி, அரசியல் நிர்வாகத்திலே அவர்களைச் சேர்த்துக் கொள்வதில் உருப்படியான பயன் எதுவும் விளையப் போவதில்லை என்று



அவர் கூறுகின்றார். இது போன்று சொத்து ஏதுமற்றவர்களுக்கும் பிரஜா உரிமையை அளிக்க மறுக்கின்றார் அரிஸ்டாடில். வயிற்றுப் பிழைப்பையே எப்பொழுதும் பெரிதாக நினைத்துக்கொண்டு அதே சிந்தனையாயிருப்பவர்கள் அரசியல் நிர்வாகத்துக்கு லாயக்கற்றவர்கள். அரசியல் நிர்வாகத்துக்கு வேண்டிய பெருந்தன்மையையோ, ஆற்றலையோ, சிந்தனா சக்தியையோ வளர்த்துக் கொள்வதற்கு வேண்டிய வாய்ப்பு அவர்களுக்கு ஏது? அதற்கு வேண்டிய ஓய்வுதான் ஏது? இத்தகைய கேள்விகளை எழுப்பி அவற்றின்மேல் அரிஸ்டாடில் தமது முடிவுகளை நிலைநாட்டுகின்றார். இங்கிலாந்து தேச சரித்திரத்தில்கூடச் சொத்துரிமை அற்றவர்களுக்கும், பெண்களுக்கும் வெகு காலமாக ஓட்டுரிமை இல்லாதிருந்ததை நாம் அறிவோம். நமக்கு இவையெல்லாம் உண்மையிலேயே அபத்தமான வாதங்களாகத் தோன்றினும், ஒரு காலத்தில் இத்தகைய வாதங்களுக்கு அரசியல் அரங்கிலே நல்ல மதிப்பு இருந்தது. அபத்தமான வாதங்களாயிருந்த காரணத்தினாற்றான், இவை நீடித்து நிலைத்து வெற்றிபெற முடியவில்லை. அரிஸ்டாடிலினுடைய தர்க்கம் மேலும் தொடர்ந்து செல்லுகின்றது. தொழிலாளிகளுக்கும் அரிஸ்டாடில் பிரஜா உரிமை அளிக்க மறுக்கின்றா. இது மட்டுமன்று. வர்த்தகத் துறையில் உள்ளவர்களுக்கும் பிரஜா உரிமை அளிப்பது தவறு என்கின்றார். இவ்விரு வகுப்பினருடைய தொழிலையும் அவ்வளவு கண்ணியமான தொழிலாக அவர் கருதவில்லை.

இவ்விரு சாராருக்கும் அற மார்க்கத்தில் ஈடுபாடு அவ்வளவு அதிகமாக இருக்காது. இவர்களிடத்தில் பண்பும் பக்குவமான சிந்தனைகளும் அதிகமாகக் காணப்படாது; அத்துடன் சுயநலமும் பொறாமையும் இவர்களிடம் மேலோங்கி நிற்கும்; சுயகௌரவம் மிகக் குறைந்து காணப்படும். இவையெல்லாம்

அரிஸ்டாடிலின் வாதங்களுடே உள்ளுறை கருத்துக்களாகத் தொக்கி நிற்பவை இவர்களுடைய தொழில் அற வாழ்விற்குப் புறம்பாகவே இவர்களை இட்டுச் செல்லும் என்பதை அரிஸ்டாடில் திட்டமாகத் தெளிவாக் கூறுகின்றார். இது பொதுக்கூற்று என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இவ்விரு வகுப்பினருள்ளும் எத்தனையோ பேர் சான்றாண்மையும் அறமும் நிறைந்தவர்களாக இருக்கக் கூடும் என்பதை அவர் மறுக்கவில்லை. அவருடைய நூலில் காணப்படும் வாதங்கள் பலவற்றை நாம் ஒப்புக்கொள்ள மறுப்பினும், அவருடைய தர்க்க ஆற்றல் நம்மை எளிதில் கவர்ந்து விடுகின்றது. மனிதர் செய்யும் பல்வகைத் தொழில்களுக்கும் அவர்களின் மனோமண்டலத்துக்கும் உள்ள தொடர்பைப் பற்றிய நீண்ட ஆராய்ச்சியில் அரிஸ்டாடில் நுழையும்பொழுது நாமும் ஓரளவு அவரைப் பின்பற்றவே செய்கின்றோம். அவருடைய அபிப்பிராயங்களுக்கு மாற்று அபிப்பிராயங்களை நாம் தெரிவிக்க விழையும் பொழுதுதான் அவர் நமது அருகிலில்லை, ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டு வாழ்ந்து மடிந்து போனவர் என்பதை உணருகிறோம். அடிமைகள், பெண்கள், சொத்துரிமை அற்றவர்கள், வர்த்தகர்கள், தொழிலாளிகள் இவர்களைத் தவிர மற்ற அனைவருக்கும் அரிஸ்டாடில் மிகத் தாராளமாகப் பிரஜா உரிமையை வழங்குகிறார். இத்துடன் பொதுமக்களிடையே காணப்படும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் எவ்வாறு அவர்களின் மத்தியிலே தனித்தனி வர்க்கங்களை (Classes) ஏற்படுத்தி அரசியல் அமைப்பிலே அவ்வப்போது மாற்றங்களைத் தோற்றுவிக்கின்றன என்பதையும் அரிஸ்டாடில் மிக அழகாக விளக்குகின்றார். காரல் மார்க்ஸின் (Karl Marx) "மூலதனம்" (Das capital) என்ற நூலைப் படித்தவர்கள் அரிஸ்டாடிலின் பொருளாதார வர்க்கங்கள் (Economic



classes) பற்றிய சிந்தனைகளை இன்னும் சற்றுத் தெளிவாகவே புரிந்து கொள்வர்.

நமக்குத் தெரிந்தவரையில் அரசினருக்குக் குறிக்கோள்கள் வகுத்துக் கொடுத்த முதல் சிந்தனையாளர் அரிஸ்டாடில். எண்ணற்ற அரசியல் பிரச்னைகளைத் துருவித்துருவி அலசி ஆராய்ந்து, அரசியல் துறையிலே பல அரிய தோற்றங்களை உலகிற்கு வழங்கியவர் அவர். அறிவுப் பணிக்கெனவே தம்மை அர்ப்பணித்து அதிலே இடையறா இன்பம் கண்டவர். அரசியல் வாழ்விலே நல்லது எது, கெட்டது எது என்பதைப் பகுத்துச் சொன்னவர். அவர் கண்டறிந்த மெய்ப்பாடுகள் பல பொய்யா மொழிகளாக இன்றும் நிலைத்து விட்டன. சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தனையின் தன்மையையே ஆராய்ந்தவர் அவர். சிந்திப்போர்க்கன்றிப் பிறர்க்கேது வாழ்வு என்று அனைவரையும் சிந்திக்கத் தூண்டியவர். எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட அவரின் வாசகங்கள் பல இன்றைக்கும் நாம் காணும் அரசியல் வட்டாரங்களுக்கு எழுதப்பட்ட அறிவுரைகள் போன்று காணப்படுகின்றன. இன்னும் எத்தனையோ நூற்றாண்டுகள் கடந்த பின் அரசியல் துறையிலே எத்தனையோ புதிய கேள்விகள் எழலாம். அவை யனைத்திற்கும் ஏற்கனவே நேரடியாகவும் சூட்சம மாகவும் விடையளித்துவிட்டு மறைந்தவர் அரிஸ்டாடில்.

**குடியேற்ற இயக்கம்** பிற நாடுகளில் சென்று குடியேறிய காலத்திலிருந்துதான் கிரேக்கர்களின் சரித்திர காலமே ஆரம்பிக்கிறது என்று கூறலாம். துடிதுடிப்பும் முன்னேற்ற சக்தியும் செயல் திறனும் நிறையப் பெற்றிருந்த கிரேக்க மக்கள் கடல் கடந்து சென்று பரவியதில் வியப்பொன்றுமில்லை. மத்தியதரைக் கடல் பிரதேசம் அனைத்திலுமே வெகு சீக்கிரம் கிரேக்கர்கள் பல பகுதிகளில் குடியேறி விட்டனர். கி. மு. 650க்குப்

பின்னுல் இக்குடியேற்ற இயக்கம் நன்கு வலுப்பெற ஆரம்பித்தது.

அதற்கு முன்னுல் **பொனீஷியர்களே** (Phoenicians) மத்தியதரைப் பகுதிகளில் வாணிகத்திலும் குடியேற்ற இயக்கத்திலும் ஒப்பாரும் மிக்காருமின்றித் தலைசிறந்து விளங்கினர். கிரீஸிலும் மத்தியதரைக் கடல் பகுதிகளிலும் அவர்களே பல குடியேற்றத் தலங்களை நிறுவியிருந்தனர். ஏஜியன் கடலில் (Aegean sea) கி. மு 1000 முதல் கி. மு. 700 வரை பொனீஷியர்களே கடல் வாணிகத்தின் அதிபர்களாகவும் முக்கியஸ்தர்களாகவும் இருந்தனர். கி. மு. எட்டாம் நூற்ருண்டின் இறுதியிலே அஸிரியன் (Assyrian) வெற்றிக்குப் பின்னர், பொனீஷியர்களின் கடல் வாணிகம் தாழ்ந்துகுன்ற ஆரம்பித்தது. இச்சமயத்தில் கிரேக்கர்கள் தீவிரமாக முனைந்து பொனீஷியர்கள் கைவிட்ட கடல் வாணிகத்தைத் தாங்கள் கைப்பற்ற ஆரம்பித்தனர். கடல் வாணிகத்திலும் பிற நாட்டுக் குடியேற்ற இயக்கத்திலும் ஒரு காலத்தில் பொனீஷியர்கள் ஆதிக்கம் செலுத்தியதைப் போன்றே கிரேக்கர்களும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர் மத்தியதரைக் கடற் பகுதிகளில் பல இடங்களிலே கிரேக்கக் குடியேற்ற நாடுகள் வெகு சீக்கிரத்தில் தோன்றி வளர்ந்தன.

**கிரீனிட்ஜ்** (Greenidge) என்ற அறிஞர் கிரேக்கக் குடியேற்ற இயக்கத்தைப் பற்றி மிக விரிவாகவும் தெளிவாகவும் தமது நூல்களில் எழுதியிருக்கிருர். இவ்வியக்கத்திலே, தனி மனிதர்கள் தங்களின் இயல்பு, தேவை இவற்றின் தூண்டுதலால் தாமாகவே பிற நாடுகளில் பரவிப் பெருகியதை ஒரு பகுதியாகவும், முன்கூட்டியே திட்டமிட்டு அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் ஸ்தாபன ரீதியிலே பிற நாடுகளில் குடியேறியதை மற்ருெரு பகுதியாகவும் பிரித்துக் காட்டுகின்ருர். முன்னதை "இயல்பு இயக்கம்" (Spontane-



ous movement) என்றும், பின்னதைத் "திட்டமிடப்பட்ட அமைப்பு" (Deliberate organisation) என்றும் அழைக்கலாம். நாம் நன்கு தெரிந்து கொள்ள வேண்டியது பின்னதைப் பற்றியே. இக்குடியேற்றத் தலங்கள் தனிப்பட்ட கிரேக்க நகர - ராஜ்யங்களின் (City states) ஸ்தாபிதங்களாகும். குடியேற்ற நாடுகள் தங்களை ஸ்தாபித்தநகர-ராஜ்யங்களை தாய்நாடுகள் (Mother-city) என்று கொண்டாடின. தமக்குரிய தாய் நாட்டின் பேராதரவுக்கு அறிகுறியாக அதனிடமிருந்து ஒரு சாஸனத்தையும் (Charter) பெற்றன. ஒவ்வொரு குடியேற்ற நாடும் சில சம்பிரதாய முறைகளின்படி அங்குரார்ப்பணம் (Inauguration) செய்யப்பட்டது. அப்பொழுது தாய் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட சிறிய நெருப்புச்சுடர் ஒன்று புதிய வாழ்வை ஆரம்பிக்கப் போகும் குடியேற்ற நாட்டில் ஏற்றி வைக்கப்பட்டது. குடியேற்ற நாட்டிற்கும் அதனுடைய தாய் நாட்டிற்கும் நிரந்தரத் தொடர்பு ஏற்பட்டு அவற்றினிடையே பந்தபாசம் சிறந்து வளர்ந்தது. குடியேற்ற நாட்டைத் தம் தாய் நாட்டிற்கு அடுத்த படியாகத்தான் கிரேக்கர்கள் மதித்தனர். தாய் நாடும் குடியேற்ற நாட்டைத் தன் அங்கங்களுள் ஒன்ருகவே கருதிப் போற்றி வந்தது.

கிரேக்கக் குடியேற்ற இயக்கம் தோன்றி வளர்ந்ததற்குப் பல காரணங்கள் உண்டு. இக்காரணங்களில் எவை அதிக முக்கியமானவை, எவை சாதாரணமானவை என்பது பற்றி அறிஞர்களுள் அநேக அபிப்பிராய பேதங்கள் காணப்படுகின்றன. எத்துறையைக் காட்டிலும் பொருளாதாரத் துறையில் ஏற்படும் காரணங்களும் சந்தர்ப்ப நிர்ப்பந்தங்களுமே புரட்சிகரமான மாறுதலுக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்குகின்றன. கிரேக்கக் குடியேற்ற இயக்கத்திற்கும் மற்ற எல்லாக் காரணங்களையும்விட

அப்போதிருந்த பொருளாதாரச் சூழ்நிலையே மிக முக்கியமான காரணமாகத் தோன்றுகிறது. பணக்காரர்களின் ஆட்சியிலே பணமில்லாத ஏழைகள் மிகவும் அல்லல்பட்டனர். பணமில்லாதவர்களுக்கு உலக வாழ்வு பொருளிழந்து களையிழந்து பயனற்றதாய்க் காணப்பட்டது. பொதுமக்களில் பெரும்பாலோர் ஏழைகளாயிருந்தனர். அவர்களின் மத்தியிலே அதிருப்தி வளர்ந்து அரசினரின் மேல் சினம் மூளத் தொடங்கியது. அதே சமயத்தில் அவர்கள் அயல்நாடுகளில் குடியேறித் தமக்கு நல்வாழ்வை உருவாக்கிக் கொள்ளவும் விழைந்தனர். இத்தகைய சூழ்நிலையில் இவ்வாறு ஏழைகள் கடல் கடந்து மற்ற நாடுகளில் குடியேறுவதை ஆட்சிபீடத்திலிருந்த பணக்காரர்கள் தமது சொந்த நலனை முன்னிட்டே பெரிதும் விரும்பினர். அரசின்மேல் வெறுப்பும் அதிருப்தியும் கொண்டவர்கள் பெருவாரியாக இவ்வாறு வெளியேறிவிட்டால், புரட்சிக்கான சூழ்நிலை சிறிது சிறிதாகக் குறைந்து ஒழிந்து போகும் என்பது அவர்களின் எண்ணம். எனவே, குடியேற்ற இயக்கத்திற்கு (Colonisation) அவர்கள் வேண்டிய ஆதரவளித்ததுடன், அதற்கு வேண்டிய வாய்ப்பு வசதிகளையும் தாங்களே உண்டுபண்ணிக் கொடுத்தனர். அத்துடன் இந்தக் குடியேற்ற இயக்கத்தால் கிரேக்கர்களின் கடல் வாணிகமும் அபரிமிதமாக வளர ஆரம்பித்தது. நாட்டின் வறுமையைப் போக்குவதற்கும், நாட்டிலே சுபிட்சத்தை வளர்த்துப் பிற நாடுகளில் தங்களின் ஆதிக்கத்தை ஓரளவு பரப்புவதற்கும் இந்த இயக்கம் வெகு உதவியாக இருந்ததை அரசினரும் நாட்டின் ஆன்ற அறிஞர்களும் தெள்ளிதில் உணர ஆரம்பித்தனர். கிரீஸ் நாடு நீர்வளம் நிலவளம் மிகக் குறைந்தது. வளர்ந்து பெருகி வந்த ஜனத்தொகைக்குத் தேவையான அளவு உணவு உற்பத்தியைக் கிரேக்க மக்கள் கிரேக்க மண்ணிலிருந்து எதிர்பார்ப்பது



நடவாத காரியமாயிருந்தது. இதனாலேயே நாம் ஏற்கெனவே கூறியபடி கிரேக்க மக்கள் கப்பல் வாணிகத்தில் பெரிதும் ஈடுபட்டார்கள். எதையும் பொருட்படுத்தாது துணிச்சலான முயற்சிகளில் கூசாது ஈடுபட்டார்கள். எனவே, குடியேற்ற நாட்டு இயக்கம் கிரேக்க மக்களின் வாழ்க்கைக்கு மிக ஏற்றதாயிருந்தது. தங்களுக்கும் தங்களின் நாட்டுக்கும் சீரிய நன்மை பயப்பதாயிருந்தது. தங்களின் உடலாற்றலுக்கும் மனத்திண்மைக்கும் நன்கு வழி வகுத்துக் கொடுப்பதாய் அமைந்திருந்தது. கடற்கரையோரங்களில் வசிக்கும் மக்களில் குறைந்தது பாதிப் பேராவது துணிச்சல் மிக்கவராயும் சுதந்தர மனப்பான்மை படைத்தவர்களாகவும் இருப்பார்கள், என்று பூகோள—அரசியல் சாத்திர (Geo-politics) அறிஞர்கள் கூறுகின்றனர். காரணம் என்ன என்பதை அத்துறையில் தேர்ந்த அறிவு படைத்த நிபுணர்கள் தான் கூறமுடியும். சதா ஆபத்துக்களைச் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஒருவன் வாழ்விலே ஏற்பட்டுக் கொண்டிருந்தால் நாளடைவில் துணிச்சலும் தைரியமும் அவனின் அங்கமெல்லாம் நிறைந்துவிடுகிறது. இயற்கைச் சக்திகளைச் சதா எதிர்த்து எதிர்த்துப் பழக்கப்பட்டுப் போனவர்களுக்கு நாளடைவில் தன்னைக் கட்டுப் படுத்த விரும்பும் மனிதனையும் எதிர்த்து அவனுக்கு அடிமைப்படாது வாழும் சுதந்தர மனப்பான்மையும் வந்துவிடுகிறது. கடலோரங்களில் வாழ்ந்து கடலையும் நம்பிப் பிழைப்பு நடத்துபவர்களுக்குத் துணிச்சலும் சுதந்தர மனப்பான்மையும் எளிதில் ஏற்படுவது இயல்பே. இதனால்தானோ என்னவோ கிரேக்க மக்களுக்குக் குடியரசு முறையே இறுதிவரை உகந்ததாயிருந்தது. இதே மனப்பான்மைதான் கிரேக்க மக்களைக் கடல் கடந்து இட்டுச்சென்று அங்கே குடியேற்ற நாடுகளை நிறுவச் செய்தது. கிரேக்கக் குடும்பங்களிலே குடும்பத்திற்கு ஒருவனாவது அளவுக்கு மீறிய துணிச்சலையும் சுதந்தர

மனப்பான்மையும் கொண்டவனா யிருந்திருக்கக் கூடும் என்று நாம் எளிதில் அனுமானிக்கலாம். அக்காலத்திய கிரேக்கக் குடும்ப அமைப்புப் பிரகாரம் குடும்பத் தலைவனுக்கே (Patriarch) சகல அதிகாரமும் சொத்துரிமையும் இருந்தது. குடும்பத்தைச் சேர்ந்த மற்ற அனைவரும் அவனுடைய சொற்படிக் கேட்டு அவனுக்கு அடங்கி வாழ வேண்டும். அவர்களின் சம்பாத்தியம் அனைத்தும் குடும்பத் தலைவனுக்கே சொந்த மாயிற்று. இத்தகைய குடும்ப அமைப்பு அக்குடும்பத்தைச் சேர்ந்த சுயேச்சை மனப்பான்மை படைத்த ஓரிருவருக்கு முற்றிலும் பிடிக்கா திருக்கலாம். இது போன்று கிரேக்கக் குடும்பஅமைப்பிலேவெறுப்புற்றுத் தமக்கெனச் சுதந்தர வாழ்வு வாழ விரும்பியவர்களின் தொகை சிறிது சிறிதாகக் கிரீஸ் நாட்டிலே வளர ஆரம்பித்தது. இத்தகையோர் சொந்த நாட்டிலே வாழ்ந்து முன்னேறுவதென்பது முடியாத காரியம். எனவே, பிற நாடுகளுக்குச் சென்று குடியேறி, அங்கே பொருளீட்டித் தங்கள் இஷ்டம்போல் சுதந்தரத்துடன் வாழ அவர்கள் விரும்பினர். இத்தகையோர் பலர் குடியேற்ற இயக்கத்தில் மிக ஆவலுடன் சேர்ந்தனர். இத்துடன் குற்றம் புரிந்தவர்களும், அரசாங்கத் தண்டனைக்குப் பயந்தவர்களும், ஊதாரிகளாய் ஊர் சுற்றிக் கொண்டிருந்தவர்களும், நிறையப் பொருளீட்டிப் பண பலத்தால் அதிகாரத்தில் அமர வேண்டுமென்று விரும்பியவர்களும் அந்நியப் பகுதிகளில் ஒருவரை யொருவர் முந்திக்கொண்டு குடியேறினர். மத்திய தரைப் பிரதேசத்தை (Mediterranean) ஒட்டிய பகுதிகளில் இவர்கள் அனைவரும் குடியேறி ஆங்காங்கே சிறு சிறு கிராமங்களையும் நகரங்களையும் நிறுவித் தங்கள் தங்களுடைய தாய்நாடுகளை மறந்துவிடாது வாழ்ந்தனர்.

இவைகளை நாம் காலனிகள் (Colonies) என்றே அழைப்போம். ஏற்கெனவே நாம் கூறியபடி இக்



காலனிகளை அமைப்பதற்கு அரசாங்கமே நடவடிக்கை எடுத்தது. பொதுமக்களில் சிலரோ பலரோ ஒன்றுகூடி ஒரு காலனியை நிறுவ வேண்டுமென்று விரும்பினால் அவர்கள் அரசாங்கத்திற்கு விண்ணப்பித்துத் தமது கோரிக்கைக்கு அதனுடைய ஆதரவையும் உத்தரவையும் எதிர்பார்த்தனர் அத்துடன் அவர்கள் தெய்வ அனுக்கிரகத்தையும் ஆக்ஞையையும் எதிர்பார்த்தனர். தங்களுடைய கடவுளின் சம்மதமின்றிக் காலனிகளை நிறுவுவதற்கு அவர்கள் சற்றும் விரும்பவில்லை. எனவே டெல்பி (Delphi) என்ற கோவிலில் ஒருவனுக்கு ஆவேசம் வரச்செய்து அவன் வாய் மூலம் வந்த வாக்கைத் தெய்வத்தின் அருள்வாக்காக அவர்கள் கொண்டு, அதன்படி நடந்தனர். குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் குறிப்பிட்ட ஒரு காலவரைக்குள் காலனி அமைக்க வேண்டாம் என்று ஆவேசம் வந்தவன் கூறுவானாகில் அக்காலனி அமைக்கும் எண்ணம் உடனே கைவிடப்படும். காலனி அமைக்கலாம், அது முன்னேறி வளரும் என்று அவன் கூறுவானாகில் உடனே காலனி அமைப்பதற்கான திட்டங்கள் மும்முரமாகச் செயல்படுத்தப்படும். அரசாங்கம் காலனி அமைத்துக் குடியேற விருக்கும் மக்கட் கூட்டத்திற்கு ஒரு தலைவனை நியமித்து அவனுக்கு முக்கிய பொறுப்புக்களை அளித்தது. அவர்களுக்கு அரசாங்கம் நிறையப் பணத்தையும் போர் ஆயுதங்களையும் பரிசளிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தது. பிரமாதமான வைபவங்களுடனும் சடங்குகளுடனும் காலனி வாழ்வு துவக்கி வைக்கப்பட்டது. இவையனைத்தும் எப்படி யிருப்பினும் ஒன்றை மட்டும் நாம் மறந்து விடுவதற் கில்லை. அரசாங்கம் இக்காலனிகளை அமைப்பதில் எவ்வளவு தீவிரமாகப் பங்கு கொண்டாலும், தனிப்பட்ட குடிமக்களே இவற்றின் தலையாய நிர்மாணிகளாய் விளங்கினர். எனவே, தாய் நாட்டுக்கும் அதனுடைய காலனிகளுக்கும் இடையே இருந்த

தொடர்பு ஆன்மீக பந்தபாசத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததே தவிர அரசியலை அல்ல. காலனிகளில் வாழ்ந்த மக்கள் தாய் நாட்டின் அரசுக்கோ சட்டங்களுக்கோ கட்டுப்பட்டு வாழவில்லை. ஆனால், வருடா வருடம் இக்காலனிகள் தாய் நாட்டுக்குச் சிறிது கப்பம் கட்டி வந்தன. தமக்கென ஒரு தனி அரசைத் தாமே அமைத்துக்கொண்டு வாழ்ந்த இக்காலனிகளில் பல நாளடைவில் தம் தாய்நாடுகளினுடன் போட்டியிட ஆரம்பித்தன. பொதுவாக வியாபாரத் துறையிலே இப்போட்டி வலுக்க ஆரம்பித்தது. சில சமயங்களில் தாய்நாடும் அதனுடைய காலனியும் ஒன்றுக்கொன்று விரோதிகளாக மாறின. காலனிகளில் புதிய சூழ்நிலையும் புதிய தொடர்புகளும் ஏற்பட்டதால் காலனிகளில் வாழ்ந்த மக்களின் மனப்பான்மையும் குணபாவமும் நாளடைவில் தாய்நாட்டின் சாயலை இழந்து வேறுபட்டது. தாய்நாட்டு மக்களைத் தங்களினின்று வேறுபட்ட பிற மக்களாகவே சில காலனிகளின் மக்கள் கருத ஆரம்பித்தார்கள். எனினும், தாய்நாட்டினின்று முரண்பட்ட காலனிகள் மிகச் சிலவே. பொதுவாக எல்லாக் காலனிகளுமே தாய்நாட்டுப் பற்றுடன்தான் வாழ்ந்தன. சமயங்களில் அதிகப்பட்டும் சமயங்களில் குறைந்தும் இது காணப்பட்டது. தாய்நாட்டுடன் விரோதம் பூண்டு வாழ்ந்து வந்த காலனிகளை விரல் விட்டு எண்ணி விடலாம். எத்தனையோ காலனிகள் தம் தாய்நாடுகளைவிட அதிகச் சீரும் சிறப்பும் பெற்று, பெரும் புகழீட்டி வாழ்ந்ததுடன் தம் தாய் நாடே பார்த்துப் பொருமைப்படும் படியான அரிய சாதனைகளை நிகழ்த்தி வாழ்ந்தன.

பண்டைக் கிரேக்க அரசியல் தத்துவத்தின்படி ஒரு நகரத்துக்கு ஒரு ஆட்சியே உகந்தது. இரண்டு மூன்று நகரங்களை ஒரு ஆட்சியின் கீழ் ஒன்று படுத்துவதையோ, அல்லது பூகோள ரீதியில் இணைக்கப்படாத



பல்வேறு பகுதிகளை ஒரே ஆட்சிக்கு உட்படுத்துவதையோ கிரேக்க மக்கள் விரும்பவில்லை. அது அவர்களின் சிந்தனைப் பாணிக்கே புறம்பா யிருந்தது. இக் காரணம் பற்றியே தாய்நாடுகள் தங்களின் காலனிகள் மேல் ஆட்சி செலுத்தித் தங்களின் அதிகாரத்தால் அவைகளைக் கட்டுப்படுத்த விரும்ப வில்லை. காலனிகளும் இக் காரணம் பற்றியே தங்களுக்கெனத் தனி அரசை நிறுவிக் கொண்டன. தாய் நாட்டின் ஆட்சிக்கு உட்பட்டு வாழ்வதென்பது புரிந்து கொள்ளமுடியாத அரசியல் மடமையாக அவர்களுக்குத் தோன்றியது.

இக் குடியேற்ற இயக்கத்தால் கிரீஸ் தேச முழுவதும் செல்வம் பெருகிற்று. கிரேக்க வியாபாரம் பல வேறு நாடுகளுக்குப் பரவிற்று. கிரேக்க மக்களின் சாதுர்யத்தையும் ஆக்க சக்தியையும் பிற நாட்டு மக்கள் நன்கு உணர்ந்தனர். மத்தியதரைக்கடல் கப்பல் வாணிகம் கிரேக்க மக்களின் ஏகபோக உரிமையாகியது. அண்மையில் பிரிட்டன் விளங்கியது போன்று, கப்பல் வாணிகத்திலே ஈடு இணையற்ற ஸ்தானத்தைக் கிரேக்கர்கள் அடைந்தார்கள். கப்பல் வாணிகத்திலே அவர்கள் அடைந்த பெருமை உலக சரித்திரத்திலே நிரந்தர இடம் பெற்றுவிட்டது. கப்பல் கட்டும் தொழிலிலும் கிரேக்கர்கள் சிறந்து விளங்கினர். கிரீஸ் நாட்டிலே செல்வம் பெருவாரியாகப் பெருகப் பெருக மக்கள் பல பொருளாதார வர்க்கங்களாகப் (Economic classes) பிரிய ஆரம்பித்தனர். உள்நாட்டிலே தொழிற் சாலைகள் பல தோன்றின. கிரேக்க கலாச்சாரம் மத்தியதரைக் கடலையடுத்த நாடுகள் அனைத்திலும் பரவியது. கிரேக்க காலனிகள் கிரேக்க கலாச்சாரத்தின் கேந்திரங்களாக விளங்கின. அரசியலில் வேறுபட்டாலும்கூடக் கிரேக்க நகர ராஜ்யங்களும் (City states) அவைகளின் காலனிகளும் மதத்துறையிலும் கலாச்சாரத் துறையிலும்

கடைசிவரை வேற்றுமை அணுவளவு மின்றி ஒன்
றித்தே விளங்கின.

குடியேற்ற இயக்கம் வளர வளரக் கிரீஸ் நாட்டின்
செல்வம் வளர்ந்து பெருகியது என்று நாம் ஏற்கெனவே
கூறினோம். கிரீஸ் அடைந்த செல்வ மனைத்தும் வியா
பாரச் செல்வமேயொழிய விவசாயச் செல்வ மல்ல. கிரீஸ்
நாட்டிலே பட்டினங்கள் பல தோன்றின. அங்கே
ஆடம்பரமும் ஆட்டபாட்டமும் நிறைந்து காணப்பட்
டது. செல்வந்தர்களும் வாழ்வை ருசித்து அனுபவிக்க
விரும்பியவர்களும் பட்டணங்களில் குவிந்தார்கள். கிரா
மப்புறங்கள் புறக்கணிக்கப்பட்டன. விவசாயம் வளர்
வதற்கோ, விவசாயிகள் வாழ்வதற்கோ வாய்ப்புக்கள்
எதுவும் அதிகமாகக் காணப்பட வில்லை. பட்டினங்
களிலே பணக்காரர்கள் கூட்டம். கிராமங்களில் ஏழை
களின் கூட்டம். இந்த ஏழைகளுக்கும் பணக்காரர்
களுக்கும் ஏற்றத்தாழ்வு மிக அதிகமா யிருந்தது. பட்டி
னங்களில் வளர்ந்த தொழிற்சாலைகளுக்குப் போதிய
அளவு தொழிலாளிகள் அகப்படாததால் அடிமை வியா
பாரம் வலுத்தது. எங்கணும் அடிமைச் சந்தைகள்
காணப் பட்டன. நாட்டிலே வளர்ந்து பெருகிய செல்வ
மெல்லாம் எப்படியோ பணக்காரர்களின் கரங்களை மட்
டுமே அடைந்தது. உள்நாட்டுத் தொழிலாளிகள் ஏழைக
ளாகவே இருந்தனர். வட்டிக் கணக்குகளும் அந்நியச்
செலாவணிக் கணக்குகளும் அதிகரித்தன. பாங்கிகள்
பல தோன்றின.

கிரீஸ் தேசத்திலே செல்வம் கொழிக்க ஆரம்பித்த
வுடன் பெண்கள் வாழ்விலும் புரட்சிகரமான மாறு
தல்கள் பல தோன்றின. பாரதியார் தம் பாடல்களிலே
வர்ணித்துள்ள புதுமைப் பெண்கள் பலர் கிரேக்க சமுதா
யத்திலே தோன்ற ஆரம்பித்தனர். உணர்வற்ற யந்தி
ரம் போல் வீட்டு வேலைகளை மட்டும் செய்து அங்கேயே
ஒதுங்கிக் கிடக்கும் நிலைமை மாறி, பெண்கள் சமுதாய



வாழ்விலே சிறந்த அளவில் பங்கு கொள்ள ஆரம்பித்
தனர். பல பெண்கள் வழக்கறிஞர்களாக ஆகி நீதி
மன்றங்களிலே மிக அறிவாற்றலுடன் அனைவரும்
வியக்கும் வண்ணம் வாதாடினர். பல பெண்கள் கட்டி
டக் கலையிலே தேர்ச்சிபெற்றுப் புத்தம் புதிய வடிவிலே
பல கட்டிடங்களை எழுப்பினர். தேரோட்டும் போட்டி
யிலே பல பெண்கள் ஆண்களுடன் போட்டியிட்டு
அவர்களைத் தோற்கடித்தனர். டாக்டர் தொழிலைப் பல
பெண்கள் மேற்கொண்டு தம் வைத்தியத் திறனால்
சமுதாயத்திற்குப் பெரிதும் உதவினர். வியாபாரஸ்தலங்
களிலும் காரியாலயங்களிலும் கணக்கெழுதுவதிலும்
கணக்குகளைச் சரி பார்ப்பதிலும் பெண்கள் சிறந்து
விளங்கினர். செல்வம் வளர வளர நாகரிகம் வளர்ந்தது.
ஜனத்தொகை வளர்ச்சி தடைப்பட்டது. ஜனத்தொகை
வருட வருடம் குறைந்துகொண்டே வந்தது.

கடல் கடந்து சென்று அந்நியப் பிரதேசங்களிலே
குடியேறி வாழ்வதென்பது எல்லா மக்களுக்கும் முடியக்
கூடிய காரிய மன்று. அதற்குத் தனி சுபாவமும் தனி
ஆற்றலும் தேவை. அசாதாரணமான மனோ வல்லமை
யுடன் வாழ்வை எப்படியும் வாழ்ந்தே தீர வேண்டு
மென்ற ஆர்வமும் உடையவர்களுக்கே அது சாத்திய
மாகும். இப்படிப்பட்ட மக்கள் சிறிய நாட்டைச் சேர்ந்த
வரா யிருப்பினும் அரிய சாதனைகளைப் புரிந்து தம் நாட்
டின் நிலையைப் பெரிதும் உயர்த்தி விடுகின்றனர்.
காலனி ஆட்சி முறை என்பது தற்காலத்திற்குச் சற்றும்
ஒவ்வாதது என்பது உண்மை. ஏனெனில் அது பிற
நாட்டவரின் சுதந்தரத்தையும் உரிமைகளையும் பறிக்
கும் பிற்போக்கு முறையாகத் தற்காலத்தில் மாறிவிட்
டது. ஆனால், பல நூற்றாண்டுகட்கு முன்பு, காலனி
களைத் தோற்றுவிக்கும் ஆற்றல் படைத்த நாடுகளே
உலகின் முன்னணி நாடுகளாகக் கருதப்பட்டன. காலனி
களைத் தோற்றுவித்து அதன் மூலம் தன் செல்வத்தைப்

பெருவாரியாகப் பெருக்கி உலகிலே தன்னை உயர்த்திக்
கொண்ட பழம்பெரும் நாடுகளுள் கிரீஸ் முதலிடம்
பெறுகின்றது.

கிரேக்க சரித்திரத்திலேயே இரு நகர-ராஜ்யங்கள்
**(City-states)** ஏறு போல் விளங்கின. வல்லரசுகள்
போல் விளங்கி வையத்தின் பாராட்டுதலைப் பெற்றன.
செயற்கரிய காரியங்கள் பலவற்றைச் செய்தன. உல
கோரின் சிந்தனையைத் தூண்டின. கிரேக்க சரித்திரத்
தின் கணிசமான பகுதி இவ்விரு நாடுகளை மையமாக
வைத்துச் சுழல்கின்றது. அவை இரண்டும் முற்றிலும்
மாறுபட்ட வாழ்க்கைத் தத்துவங்களைக் கொண்டு
வாழ்ந்தன. அவ்விரு நகர ராஜ்யங்களில் ஒன்றின்
பெயர் ஸ்பார்ட்டா **(Sparta)**. மற்றொன்றின் பெயர்
ஏதென்ஸ் **(Athens)**.

**ஸ்பார்ட்டா** (Sparta) : போரைத் தவிர வேறு
ஒரு தொழிலையுமே அறியாத இந்த நகர ராஜ்யம் ஒரு
புதிர் போல் விளங்கிச் சிந்தனையாளர்களைத் திக்குமுக்
காடச் செய்கின்றது. வியாபாரத்திலே ஸ்பார்ட்டா
வுக்குப் பற்றுக் கிடையாது. வியாபாரத்திலே அது ஈடு
படவில்லை. செல்வத்தை விருத்தி செய்து நாகரிக
வாழ்வு வாழ்வதையும் அது விரும்ப வில்லை. டாம்பீ
கத்தை அது நாடவில்லை. அறிவாராய்ச்சிகளில் ஈடு
பட்டு உயரிய நூல்களையோ சாத்திரங்களையோ அது
தோற்றுவிக்க வில்லை. இசை, நாடகம், நாட்டியம், சிற்
பம் போன்ற கலைகள் அனைத்தையும் வேம்பென
வெறுத்தது. சன்மார்க்க சித்தாந்தங்கள் இவை
களிலும் ஸ்பார்ட்டா சிறிதும் அக்கறை கொள்ள
வில்லை. பிற நாடுகளிலே சென்று குடியேறி அங்குக்
காலனிகளை நிறுவ வேண்டும், அதன் மூலம் பொரு
ளீட்டித் தன் புகழைப் பல திக்கும் பரப்பவேண்டும் என்ற
எண்ண மெல்லாம் அதற்குக் கிஞ்சித்தும் கிடையாது.
இலக்கியத்தை அதனுடைய வாடைகூடத் தனக்கு வீசக்



கூடாது என்று ஆயிரம் மைல்களுக்கு அப்பால் அதை
ஒதுக்கி வைத்துவிட்டது. இவையனைத்தையும் வாழ்
விற்குப் பரம விரோதிகள் என்று அது கருதியது. வாழ்வு
என்றாலே அது "போர்" தான் என்று ஸ்பார்ட்டா கருதி
யது. தனது குடிமக்கள் அனைவரையும் ஒவ்வொரு நிமி
டமும் போருக்காகவே தயார் செய்தது. கலை, இலக்கி
யம், வியாபாரம், வேதாந்தம் இவைகள் ஒன்றில் கூட
அவர்களைச் சிறிதும் ஈடுபட விடாது, உடலாற்றலைப்
பெருக்கிக் கொள்வதிலும், வேதனைகளைச் சகித்துக்
கொள்வதிலும், ஆசாபாசங்களை அழித்து மனத்திட்
பத்தை வளர்த்துக் கொள்வதிலுமே சதா அவர்களைப்
பழக்கியது. கொடூரமான கட்டுப்பாடுகளை அவர்களுக்கு
இடையறாது போதித்து, அவற்றினின்று தவறியவர்
களை ஈவு இரக்க மின்றித் தண்டித்தது. யுத்த மனப்
பான்மையை வளர்ப்பது ஒன்றையே தனது தலையாய
குறிக்கோளாகக் கொண்டு, குடிமக்கள் அனைவரையும்
யுத்த சன்னத்தர்க ளாக்கி, நாட்டையே ஒரு போர்க்
கூடாரமாக ஆக்கிக் கண்டுகளித்தது. ஸ்பார்ட்டா நகரத்
துள் எந்தக் கணத்தில் எவர் நுழைந்தாலும் அது ஒரு
போர்ப்பயிற்சி அளிக்கப்படும் ராணுவத்தலமோ என்று
தான் அதைச் சந்தேகித்திருப்பர். ஓய்வு ஒழிச்சலின்றி
எந்த நேரமும் குடிமக்களுக்கு இராணுவப் பயிற்சியை
அளித்துக் கொண்டிருந்தனர் ஸ்பார்ட்டா அரசினர்.
ஸ்பார்ட்டா தேசத்துக் குடிமக்களைக் குடிமக்கள் என்று
அழைப்பதும் அவர்கள் வாழ்ந்த வாழ்வை வாழ்வென்று
அழைப்பதும் உண்மையிலேயே பொருத்த மற்ற கூற்
றுக்க ளாகும். எனினும் ஸ்பார்ட்டா அதைத்தான் வாழ்
வென்று கருதியது. சதா போருக்கு ஆயத்தமா யிருப்
பதுதான் வாழும் முறை என்று கருதியது.
ஏனைய உலகம் நல்லது என்று கருதிப் போற்றியதனைத்
தையும் அது தீயவை என்று வெறுத்து ஒறுத்துத் தள்
ளியது. தனது எல்லைகளைப் பாதுகாத்துக் கொள்வதிலே

அதற்கு அவ்வளவு நாட்டம். தன்னைச் சுற்றியிருந்த நாடுக ளனைத்தும் தனக்கு வைரிகளா யிருந்ததால், தன்னைப் பாதுகாத்துக் கொள்ளத் தனது வாழ்வை நரகமாக்கிக் கொண்டது. அதிலே மகிழ்ந்தது.

ஸ்பார்ட்டாவை ஒரு நாடு என்று நாம் அழைத்தாலும்கூட உண்மையில் அது பத்துப் பதினைந்து கிராமங்களின் தொகுதியே. தங்கத்தையும் வெள்ளியையும் வெறுத்த அவர்கள் இரும்பா லடித்த நாணயங்களையே உபயோகித்து வந்தனர். அவர்களின் உள்ளமும் இரும்பாலடிக்கப் பட்டதாய்த்தான் இருந்தது.

இளைஞர்க ளனைவரும் ராணுவக் கூடாரங்களில் தான் நாள் முழுவதும் வசித்து வந்தனர். முதியவர்களும் போர் ஆயுதங்களை மறத்தல் கூடாது. மணமான இளைஞர்கள் ஒரு மாதத்திற்கு ஒரு முறையோ இரு முறையோதான் தம் மனைவியையும் குழந்தைகளையும் காண முடியும். ஆடவர்களும் பெண்டிர்களும் மிகக் கொடூரமான முறையிலே பிரிக்கப்பட் டிருந்தார்கள். அத்தனை பேரும் பந்தியாக அமர்ந்துதான் உணவு உண்ண வேண்டும். உணவு பரிமாறும் பொது இடங்கள் இதற்காக அமைக்கப்பட் டிருந்தன. அளிக்கப்பட்ட உணவு, உணவு என்ற பெயருக்கே அருகதையற்றதாயிருந்தது. ஒரு நாளைக்குப் பலதடவை உடற்பயிற்சிகள் அளிக்கப்பட்டன. பொதுக்கானகங்களில் வேட்டையாடுவது, ஆயுதங்களை வேகமாகப் பிரயோகிப்பது, அதிவிரைவுடன் பாய்ந்தோடிக் குதித்து மறைவது இவை போன்றவற்றில் இளைஞர்களும் சக்தி குன்றாத முதியவர்களும் கலந்து கொண்டனர். திருட்டுத் தொழிலைக் கூட அரசாங்கம் அங்கீகரித்தது. திருடிவிட்டு எவர் கையிலும் அகப்படாது தப்பித்து ஓடி வந்தவர்களை அரசாங்கம் பாராட்டியது. நாட்டின் குடிமக்கள் அனைவரும் நாட்டின் உடைமைகளாகவே கருதப்பட்டார்கள். ஸ்பார்ட்டா நகரத்திலே ராணுவம் என்பது நாட்டின்



குடிமக்கள் அனைவரையும் குறிக்கும் ஒரு சொல். ஸ்பார்ட்டாவின் எல்லைக்குள் வாழ்ந்த ஒவ்வொரு மனிதனும் இராணுவத்திலே ஒரு அங்கத்தினன். சரித்திரத்தில் அசுர சக்தியை வளர்த்துக் கொள்வதை ஸ்பார்ட்டா தன் மதமாகவே ஆக்கிக்கொண்டது.

குழந்தைகளின் வளர்ப்புப் பற்றி ஸ்பார்ட்டா அரசு விசேட கவனம் செலுத்தியது. ஒரு குழந்தை பிறந்தவுடன் அரசாங்கத்திற்குத் தகவல் அனுப்ப வேண்டும். அரசாங்க அதிகாரிகளும் குறிப்பிட்ட முதியவர்களும் பிறந்த குழந்தையை வந்து பார்வை யிடுவர். டேஜடஸ் (Taygetus) என்ற மலையில் பாதி உயரத்தில் வெயில், பனி இவைகள் நன்கு படும் ஒரு இடத்தில் அக்குழந்தையைக் கிடத்திவிட்டுத் தாய் தந்தையர் உள்பட அனைவரும் வந்துவிடுவர். சில நாள் கழித்துச் சென்று பார்க்கும்பொழுது அக்குழந்தை தப்பிப் பிழைத்திருக்குமாயின் அக்குழந்தை ஜீவசக்தி நிறைந்த வலிவுள்ள குழந்தையாகக் கருதப்பட்டு அரசாங்க உதவியுடனும் போஷாக்குடனும் போற்றி வளர்க்கப்படும். வலிய குழந்தைகளே நாட்டுக்குத் தேவை, மற்ற குழந்தைகள் பிறந்தவுடன் இறந்துவிடுதலே நலம் என்பதுதான் இம்முறையின் அடிப்படைக் கருத்தாகும். ஏழு வயது வரை அரசாங்க ஆணைகளுக்கும் விதிகளுக்குமுட்பட்டு அக்குழந்தையைக் குழந்தையின் தாயே வளர்ப்பாள். அரசாங்க அதிகாரிகள் குறிப்பிட்ட கால அளவிற்கொரு முறை வந்து குழந்தையையும் தாயையும் பார்த்துத் தணிக்கை செய்து விட்டுச் செல்வர். ஏழு வயது முடிந்தவுடன் குழந்தையைத் தாயின் கரங்களை விட்டு அரசாங்கத்தின் நேரடிக் கண்காணிப்பிற்கு எடுத்துச்சென்றுவிடுவார்கள். அவர்களுக்கு அளிக்கப்படும் கல்வியையும் பயிற்சிகளையும் கண்காணிக்கத் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆண்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சிகளே பெண்களுக்கும் அளிக்கப்பட்டது. ஆனால்,

ஆண்கள் தனியாகவும், பெண்கள் தனியாகவுமே இப் பயிற்சிகளைப் பெற்றனர். மணம் என்பது கட்டாயமாக் கப்பட்டது. ஆனால், முடிந்த அளவு அரசாங்கம் தம்பதி களைப் பிரித்தே வைத்திருந்தது.

**ஸ்பார்ட்டாவின் அரசியல் அமைப்பு** ஓரளவு வளர்ந்து பின் வளர்ச்சி தடைப்பட்டு அவ்வாறே நின்றுவிட்டது மாற்றமும் முன்னேற்றமும் அற்ற ஸ்பார்ட்டா நகர மக்களின் மனோநிலைக்கு அதுவும் ஒரு எடுத்துக்காட்டு எனக் கூறலாம். ஸ்பார்ட்டாவின் அரசியல் அமைப் பைப்பற்றி மாறுபட்ட அபிப்பிராயங்கள் பல அறிஞர் களுள் நிலவுகின்றன. சிலர் அதை அடிப்படையிலும் நடைமுறையிலும் பணக்காரர்களின் ஆட்சி என்று குறிப்பிடுகின்றனர். வேறு சிலர் அதை ஓரளவு குடியரசு முறை என்று கூறுகின்றனர். இன்னும் சிலர் அதை ஓரளவு மாற்றுக் குறைந்த பண்டிதச் சீமான்களின் ஆட்சி என்று கூறுகின்றனர். ஸ்பார்ட்டாவின் ஆட்சி உண்மையிலேயே முடியாட்சியைத்தவிர வேறு எதுவும் இல்லை என்று பிடிவாதமாகச் சர்ச்சை செய்பவர்களும் உண்டு. கிரீஸ் தேசத்தின் மற்ற நகர ராஜ்யங்கள் அனைத்தும் தங்களின் அரசியல் அமைப்புக்களை அவ்வப் பொழுது தேவைக்கேற்றபடி மாற்றியமைத்து, இறுதி யில் முழுக்க முழுக்கக் குடியரசுகளாக மாறிவிட்டன. அவைகளின் அரசியல் வளர்ச்சி வேகம் உண்மை யிலேயே அசாதாரணமானது. ஆனால், ஸ்பார்ட்டாவோ முடியாட்சி, பணக்காரர் ஆட்சி, குடியாட்சி இம்மூன்று மாறுபட்ட முறைகளையும் ஒன்றாகக் கொண்ட ஒரு பிற் போக்கு ஆட்சி முறையையே கடைசிவரை கொண்டிருந் தது. கிரீஸ் தேசத்திலிருந்து மற்ற நகர ராஜ்யங்கள் (City-states) அனைத்திற்கும் ஸ்பார்ட்டா ஒரு விதிவிலக் காக அரசியலிலும் மற்ற வாழ்வு முறைகளிலும் அமைந் திருந்தது.

ஸ்பார்ட்டாவின் அரசியல் அமைப்பிலே வேறெங்கும்



காண முடியாதபடி இரு அரசர்கள் இருந்தனர். ஒரு மன்னனின் அதிகாரத்தை இன்னொரு மன்னன் கட்டுப் படுத்தி அதை மிஞ்சவிடாது பார்த்துக் கொள்வதற் காகவே இம்முறை ஏற்பட்டிருந்திருக்கக்கூடும். இவ்விரு மன்னர்களும் இரு வெவ்வேறு குடும்ப பரம்பரைகளி லிருந்து வந்தவர்களா யிருப்பர். அப்பொழுதுதான் இரு வரும் ஒருவரை யொருவர் விழிப்புடனிருந்து கட்டுப்படுத் துவர் என்பது இவ்வமைப்பின் அந்தரங்க நோக்கமா யிருக்கலாம். இக்காரணத்தாலோ என்னவோ முடி யாட்சி ஸ்பார்ட்டாவின் அரசியல் அமைப்பில் இறுதி வரை நிலைத்தது. ஓர் அரசன் மட்டும் இருந்திருந்தால் அவனின் அதிகாரம் நாளடைவில் வலுத்து அவனுக்கும் பதவி மோகம் கூடி யிருக்கும். மக்கள் நாளடை வில் அவனை வெறுத்துப் பதவியிலிருந்து வீழ்த்தி யிருப்பர். முடியாட்சி முறையே அகன்று போயிருக் கும்.

இவ்விரு மன்னர்களுக்கும் மத சம்பந்தமான அலு வல்கள், உள்நாட்டு நிர்வாக அலுவல்கள், ராணுவ அலுவல்கள் விதிக்கப்பட்டிருந்தன. குடிமக்கட்கு மத குருக்கள் போன்று விளங்கி, குடிகளின் சார்பாக அவர் கள் கிரேக்க தெய்வங்களுக்கு வழிபாடுகளையும் வேள்வி களையும் நடத்தினார்கள். நாட்டு நிர்வாகத்திலே அவர் களுக்குப் பல முக்கியமான பொறுப்புக்கள் இருந்தன. ராணுவத்தின் அதிபர்கள் என்ற முறையில் பிறநாடு களின் மேல் போர் தொடுக்கும் அதிகாரமும் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளும் அதிகாரமும் அவர் களிடத்தில் தான் இருந்தன. ஆனால், உண்மையில் ராணுவ அதிகார மனைத்தும் மக்கள் சபையினருக்கே உரித்தானது. அவர்களின் விருப்பப்படி அரசர்கள் நடந்து வந்தார்கள். அரசர்கள் என்ற பெயரைத்தான் இவ்விருவர்களும் தரித்திருந்தார்களே யொழிய, உண் மையில் **ஈபார்கள்** (Ephors) என்று அழைக்கப்பட்ட

ஐந்து அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு சபையே அரசர்களுக்கும் மேலாக அமர்ந்து நாட்டின் தலையாய நிர்வாக யந்திரமாக விளங்கி அரசியல் அலுவல்களைக் கவனித்து வந்தது.

அரசர்களைத் தவிரப் பெரியோர்களின் குழு(Council of Elders) ஒன்று இருந்தது. இதற்கு ஜெரூசியா (Gerusia) என்று பெயர். அரசர்கள் இருவரும் இதில் அங்கம் வகித்தனர். அரசர்கள் இருவரைத் தவிர 28 பிரபுக்களும் இதில் அங்கம் வகித்தனர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இவர்கள். இவர்கள் தம் ஆயுள் கால முழுதும் பதவி வகித்தனர். அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களே இக்குழுவில் அங்கம் வகிக்க முடியும். **ஈபார்கள்** (Ephors) என்று ஏற்கெனவே நாம் கூறிய **நிர்வாகக் குழுவே** இதற்குத் தலைமை வகித்தது. ஜெரூசியா என்ற இச்சபையை ஒரு விவாத அரங்கென்று குறிப்பிடலாம். மக்களின் பொதுச் சபைக்கு முன்னால் கொண்டுவர இருக்கும் சகல சட்டதிட்டங்களையும் பிரச்சினைகளையும் இது நன்கு விவாதித்து அபிப்பிராயங்களைப் பரிமாறிச் சிறந்த முடிவுகளுக்கு வந்தது. கிரிமினல் வழக்குகளைப் பொறுத்த வரையில் ஜெரூசியா என்ற இச்சபையே தலைமை நீதி மன்றமாக விளங்கித் தீர்ப்பளித்தது. இச்சபையின் கூட்டங்களுக்குத் தலைமை வகித்த Ephorate என்ற நிர்வாகக்குழு மிகுந்த சக்தி வாய்ந்ததாய்ச் சிறந்த அதிகாரங்களைக் கொண்டு விளங்கியது. ஜெரூசியா என்ற இச்சபையைக் கொண்டுதான் பலர், ஸ்பார்ட்டாவின் அரசியல் அமைப்பிலே பண்டிதச் சீமான்கள் அல்லது பணக்காரர்கள் அரசியல் அதிகாரத்தை நிரம்ப வைத்துக் கொண்டிருந்தார்கள் என்று கூறி, ஸ்பார்ட்டாவின் அரசியல் அமைப்புக்கே "பணம் படைத்தோர்களின் ஆட்சி" என்ற முத்திரையை இட்டு விட்டார்கள்.

ஜெரூசியா என்ற பிரபுக்கள் சபையைத் தவிர,



**அப்பெல்லா** (Apella) என்ற குடிமக்களின் பொதுச்சபை ஒன்று இருந்தது. ஆனால், அரசியல் உரிமைகளைப் பூரணமாகப் பெற்றிருந்த குடிமக்கள் மட்டுமே (Full citizens) இதில் அங்கம் வகித்தனர். மேலும் முப்பது வயதை அடைந்தவர்களே இதில் அங்கம் வகிக்கலாம். இப்பொதுச் சபையே யுத்தம், சமாதானம் போன்ற முக்கியமான பிரச்சினைகளுக்கு முடிவு கட்டியது. அயல் நாட்டு விவகாரங்களை இச்சபை விவாதித்துத் தீர்மானங்களைத் தெரிவித்தது. மன்னர்களின் வாரிசு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளிலும் இதுவே தீர்ப்பளித்தது. **ஜெரூசியா** (Gerusia) என்ற பெரியோர்களின் சபைக்கும், **ஈபாரேட்** (Ephorate) என்றநிர்வாகக் குழுவுக்கும் இதுவே அங்கத்தினர்களைத் தேர்வு முறை ஒன்றைக் கொண்டு தேர்ந்தெடுத்தது. **அப்பெல்லா** (Apella) என்ற இக் குடிமக்களின் பொதுச்சபைக் கூட்டங்களுக்கு **ஈபாரேட்** (Ephorate) என்ற நிர்வாகக் குழுவே தலைமை தாங்கியது. பொதுச் சபையின் முடிவுகளைத் தலைமை தாங்கிய நிர்வாகக் குழு அமுல் நடத்த மறுக்கலாம். நிர்வாகக் குழு அங்கத்தினர்கள் நல்லது கெட்டதைப் பகுத்துணர்ந்து மக்களுக்கு அறிவிக்கும் ஒருவகை நீதிபதிகளாகவே விளங்கி வந்தனர்.

Ephorate என்ற நிர்வாகக் குழு அங்கத்தினர்கள் ஓராண்டுக் காலம் மட்டுமே பதவி வகித்தனர். ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும் இக்குழு **அப்பெல்லா** (Apella) என்ற பொதுச் சபையால் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த ஐந்து பேர்களில் ஒவ்வொருவரும் சமமான அந்தஸ்தையும் அதிகாரத்தையும் பெற்றிருந்தனர். அதிகாரம் அந்தஸ்து இவைகளைப் பொறுத்த வரையில் அவர்களுக்குள் எவ்வித உயர்வு தாழ்வும் கிடையாது. அவர்களுள் எவராவது ஒருவருக்கு மட்டும் கௌரவ முதன்மை ஸ்தானம் ஒன்று அளிக்கப்பட்டு (Honorary Precedence) அவ்வருடம் அச்சபை அவரின்

பெயரைக் கொண்டு விளங்கியது. இச்சபையில் பெரும்பான்மையோரின் (majority) முடிவே சபையின் முடிவாகக் கருதப்பட்டது. "**வெளிநாட்டு விவகார இலாகா**" (Department of External affairs) முற்றிலும் **ஈபாரேட்** (Ephorate) சபையின் ஆதிக்கத்தில்தான் இருந்தது. அது சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் அனைத்தையும் இச்சபையே பிரயோகித்தது. "**ஜெருசியா**" சபைக் கூட்டங்களுக்கும், "**அப்பெல்லா**" சபைக் கூட்டங்களுக்கும் **ஈபாரேட்** என்ற நிர்வாகக் குழுவே பல்வேறு விஷயங்களை விவாதத்திற்குக் கொணர்ந்து, அக்கூட்டங்களுக்கு ஓரளவு வழிகாட்டியது. அவ்விரு சபையின் தீர்மானங்களையும் இந்நிர்வாகக் குழுவே அமுல் நடத்தியது. இரகசியப் போலீஸ் இவர்களின் அதிகாரத்திற்கு உட்பட்டுத்தான் வேலை செய்தது. ஸ்பார்ட்டாவின் அரசியல் அமைப்பிலேயே ஏறக்குறையச் சர்வ சக்தி படைத்திருந்த ஸ்தாபனம் Ephorate என்ற இந்த நிர்வாகக் குழுதான். இதுவே ஸ்பார்ட்டா நகரத்து அரசியலின் மூலக் கல்லாகவும் முகப்பாகவும் விளங்கியது.

ஈபாரேட் சபை தனது அதிகாரத்தைத் துர்ப்பிரயோகம் செய்ய முடியாதவாறு அதைக் கட்டுப்படுத்துவதற்காகச் சில முறைகளும் ஸ்பார்ட்டாவின் அரசியல் அமைப்பிலே காணப்பட்டன. இச்சபை ஐந்து அங்கத்தினர்களைக் கொண்டிருந்ததால் ஒருவரை ஒருவர் குறை கூறிக் கண்டித்துத் திருத்தும் வாய்ப்புக்கள் நிறைய இருந்தன. அவர்களின் பதவிக் காலம் முடிந்தவுடன் அவர்கள் தம் பதவிக் காலத்தில் செய்த குற்றங் குறைகளையும், அடாத செயல்களையும் எடுத்துக்காட்டி, அவர்களின் மேல் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அவர்களுக்குப் பின்னுல் வந்து அதே சபையில் அங்கம் வகிப்போருக்கு இருந்தது. அத்துடன் பதவிக் காலம் ஒரு வருடமே யாதலால் எளிதில் முறைதவறி நடப்பது



சாத்தியமாகவோ அல்லது விரும்பத் தக்கதாகவோ இல்லாது போயிற்று.

ஸ்பார்ட்டாவின் அரசியலைப்பற்றி **அடால்ப் ஹோம்** (Adolf Holm) **கிரீனிட்ஜ்** (Greenidge), **வாக்கர்** (Walker), **வுட்கவுஸ்** (Woodhouse), **ப்யூரி** (Bury) போன்ற பண்டைச் சரித்திர நிபுணர்கள் மிக விவரமான முறையில் சிறந்த தோரணையில் எழுதியுள்ளார்கள். ஸ்பார்ட்டாவின் அரசியல் அமைப்பு "**இசைவு மிக்க ஒரு கலப்படம்**" (a harmonius blending of opposing principles) என்பதுதான் பெரும்பாலோரின் அபிப்பிராயம். அதை முற்றிலும் ஒரு முடியாட்சி என்றோ, பணக்காரப் பிரபுக்களின் ஆட்சி என்றோ, குடியரசு என்றோ கூறிவிட முடியாது. இவை மூன்றையும் மாறுபட்ட விகிதத்தில் கொண்ட ஒரு கலப்பு ஆட்சியே அது.

ஸ்பார்ட்டா நகரத்தின் சமுதாய அமைப்பு நான்கு பிரிவுகளைக் கொண்டதா யிருந்தது. *(1)* **டோரியன்** (Dorian) பரம்பரையைச் சேர்ந்த **பிரபுக்கள்.** அரசியல் உரிமைகள் முழுவதையும், இவர்களே பெற்றிருந்தனர். நாட்டிலுள்ள விளை நிலமனைத்தும் இவர்களுக்கே சொந்தம். சமமான பகுதிகளாக அது பிரிக்கப்பட்டு இவர்க ளனைவருக்கும், ஒருவருக்கு ஒரு பகுதியாக அது வழங்கப்பட் டிருந்தது. இப்பகுதிகளை எவரும் விற்கவோ விலைக்கு வாங்கவோ முடியாது. ஒரு பிரபு இறந்தவுடன் அவனுடைய நிலம் அவனுடைய மூத்த மகனுக்குச் சென்றது. இப்பிரபுக்கள்தான் முழுக் குடிமக்கள் (Full citizens) என்று கருதப்பட்டனர். தங்கம் வெள்ளி போன்ற உலோகங்களை இவர்கள் வைத்திருக்கக் கூடாது. அவைகளின் மேல் இவர்கள் நாட்டம் கொள்ளவும் கூடாது. பிரபுக்கள் (Nobles) என்று அழைக்கப்பட்டாலும்கூட டாம்பீகத்தையும் ஆடம்பரத்தையும் சுகபோக வாழ்வையும் இவர்கள்

அறவே வெறுக்க வேண்டும். போரையும் போர் ஆற்றலையும் தவிர வேறு எதையும் இவர்கள் சிந்திக்கக் கூடாது. (2) **சுதந்தரப் பிரஜைகள்** (Free men). **பிரியோஸி** (Periocei) என்று சரித்திர நூல்கள் இவர்களை அழைக்கின்றன. இவர்கள சொத்துரிமை அற்றவர்கள். ஆனால், ஸ்பார்ட்டா நகரத்து எல்லைகளுக்கப்பால் இவர்கள் நிலங்களைச் சொந்தமாக வைத்துக் கொள்ளலாம். ஸ்பார்ட்டா நகரத்துக்குள் இவர்கள் வியாபாரத்தையோ அல்லது ஏதாவது ஒரு தொழிலையோ மேற்கொண்டுதான் வாழமுடியும். அரசாங்கம் இவர்களிடமிருந்து வரி வசூலிக்கத் தவறவில்லை. (3) **அரசு அடிமைகள்** (State serfs) **ஹீலட்டுகள்** (Helots) என்று இவர்கள் அழைக்கப்படுகிறார்கள். நிலங்களில் வேலை செய்து உணவுப் பொருள்களைப் பெருக்கிக் கொடுப்பது இவர்களின் வேலை. நாட்டின் குடிமக்கள் யாரும் இவர்களை இஷ்டம்போல் கொல்லலாம். அதற்குக் கேள்வியோ தண்டனையோ எதுவும் கிடையாது. பிரஜா உரிமை எதுவும் இவர்களுக்குக் கிடையாது ராணுவத்தில் இவர்களை ஸ்பார்ட்டா அரசாங்கம் நன்கு உபயோகப்படுத்திக் கொண்டது. டோரியன் பரம்பரைக்கு முன்னால் இப்பிரதேசங்களில் வாழ்ந்தவர்கள் இவர்கள். இவர்களை டோரியன் பரம்பரையினர் அடிமைப்படுத்தி அரசியல் பொருளாதார உரிமைகள் எதுவுமற்ற உழைப்பு யந்திரங்களாக மாற்றி விட்டனர். அந்நிலைமை கடைசிவரை நீடித்தது. தங்களைக் கொடுமைப்படுத்திய ஸ்பார்ட்டா பிரஜைகளின் மேல் **ஹீலட்** என்ற இந்த அடிமைகளுக்குத் தீராத வெறுப்பு இருந்தது. அவர்களுடைய உள்ளத்தில் பகைமை வளர்ந்து வந்தது. எந்தச் சமயத்திலும் அவர்கள் ஒன்றுகூடித் தங்களைத் தாக்கித் தங்களின் அரசைக் கவிழ்த்து விடுவார்களோ என்ற பயம் ஸ்பார்ட்டன் மக்களுக்கும் இடையறாது இருந்து வந்தது. ஸ்பார்ட்டன் மக்கள்



சதா தங்களுக்கு ராணுவப் பயிற்சி அளித்துக் கொண்டிருந்ததற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்குமோ என்று சந்தேகிப்பதற்கும் இடமிருக்கின்றது. (4) **தனி அடிமைகள்:** (Slaves) இவர்கள் தனிப்பட்டோரின் உடைமைகளாக இருந்து அவர்களின் ஏவல்படி உழைத்து தங்களின் உயிரைக் காப்பாற்றி வந்தார்கள்.

ஸ்பார்ட்டா நகரத்து ராணுவம் இந்த நான்கு பிரிவு மக்களையும் ஒருங்கே கொண்டது.

விநோதமானதும் விபரீதமானதும் ஆன இந்த அரசியல் சமுதாய அமைப்பிலே ஸ்பார்ட்டன் மக்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள்? அவர்கள் உண்மையிலேயே மனித இனத்தைச் சேர்ந்தவர்கள்தானா? இன்பத்தை அவர்கள் எப்பொழுதாவது காண முடிந்ததா? என்ற கேள்விகளெல்லாம் இயற்கையாக நம்முன் எழுகின்றன. ஸ்பார்ட்டன் மக்கள் எளிய வாழ்விலே இன்பத்தைக் காணத்தான் செய்தார்கள். சுயநலனை அறவே மறந்து நாட்டு நலன் ஒன்றை மட்டுமே தம் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். ஏதோ ஒரு வழியில் தங்களின் இலட்சியமே சரியான இலட்சியம் என்று அவர்கள் கருதினர். இருப்பினும் ஸ்பார்ட்டன் மக்கள் வாழ்ந்த இல்வாழ்க்கை முறையை அக்காலத்திலேயே அண்டை நகரங்களில் வாழ்ந்த மக்கள் பலர் மிகமிக வெறுத்தனர். 'இதுவும் ஒரு வாழ்வா' என்று அக்காலத்திலேயே பலர் சலித்துக் கொண்டனர். ஸ்பார்ட்டன் மக்களுடைய மனோமண்டலம் எவ்வாறு இயங்கி வேலை செய்தது என்பதைப் பல மனோ சாத்திர நிபுணர்கள் சிந்தித்து அதிசயித்துத் திகைப்புறுகின்றனர். எனினும் ஸ்பார்ட்டா தன் புலனின்பங்களையெல்லாம் தியாகம் செய்து, போர்த்துறையிலே புகழீட்டியது. போர் வன்மையில் தங்களுக்கு நிகர் தாங்களே என்று ருசுப்படுத்தி, அயல் நாடுகளிலே அரிய பல சாதனைகளைச் செய்தது.

ஸ்பார்ட்டாவின் சட்ட திட்டங்களுக்கும் அரசியல்

சமுதாய அமைப்பிற்கும் மூலகர்த்தா யார் என்ற
கேள்வி வெகு காலமாகச் சரித்திர ஆசிரியர்கள் பலரால்
எழுதப்பட்டு வந்திருக்கிறது. தற்காலத்திய சரித்திர
அறிஞர்களில் பெரும்பாலோர், ஸ்பார்ட்டா தேசத்து
அரசியல் சமுதாய ஸ்தாபனங்கள் எந்தத் தனிப்பட்ட
ஒரு மனிதரின் அறிவிலிருந்து உதித்தவை அல்ல.
சிறிது சிறிதாகத் தாமாகவே வளர்ந்து நாளடைவில்
சில குறிப்பிட்ட வடிவங்களை அடைந்தவை என்று
கருதுகின்றனர். ஆனால், பண்டைக் கிரேக்க சரித்திர
மேதைகளும் ஆராய்ச்சியாளர்களுமான **ஹிரோடோடஸ்**
(Herodotus), **தூஸிடிடிஸ்** (Thucydides) போன்
றவர்கள், ஸ்பார்ட்டாவின் சட்ட திட்டங்களும் அரசி
யல் சமுதாய அமைப்பு முறைகளும் **லிக்கர்கஸ்**
(Lycurgus) என்ற சிறந்த அரசியல் நிபுணனும் ராஜ
தந்திர மேதையுமான ஒருவனின் அறிவாக்கங்களே
என்று உறுதியுடன் கூறுகின்றனர். கர்ண பரம்பரைச்
செய்திகளும் அவ்வாறே கூறுகின்றன. அவனே
ஸ்பார்ட்டா தேசம் உய்யுமாறு அம்மக்களுக்குச் சட்டங்க
ளியற்றிக் கொடுத்தவன் (Law giver) என்று கூறப்
படுகின்றது. உண்மையில் ஸ்பார்ட்டா தேசத்து அர
சியல் அமைப்பைப் பொறுத்தமட்டில் அதை ஒரு
விசேடமான சாதனை என்றுதான் கூறவேண்டும். கலைப்
பொருள் ஒன்றுக்கு இருக்கக் கூடிய இயைபையும்
ஒற்றுமையையும் (Artistic Unity) நாம் அதில் காண்ப
தோடு, அரசியல் அமைப்பில் ஒவ்வொரு பகுதியும் மிக
விவேகத்துடன் நிர்மாணிக்கப் பட்டிருப்பதையும் அறிகி
றோம். அத்துடன் அரசியல் அமைப்பின் பல்வேறு
பகுதிகள் ஒன்றோடொன்று முரண்படாது மிக லாவகத்
துடன் அழகாக இணைக்கப்பட்டிருக்கின்றன. இக்
காரணத்தாலேயே கிரீஸின் மற்ற நகர ராஜ்யங்களு
டைய அரசியல் அமைப்புக்கள் நாளடைவில் சிதைந்து
மாறிப் புதிய உருவமடைந்து கொண்டிருந்தபொழுதெல்



லாம் ஸ்பார்ட்டா தேசத்து அரசியல் அமைப்பு ஒரே
நிலையில், மாறாது தொடர்ந்து பலனளித்துக் கொண்டு
வந்தது. ஆட்டங் காணாது ஒரே சம நிலையில் (stability)
நெடுங்காலம் நிலவி நின்ற கிரேக்க நகர ராஜ்யங்களின்
அரசியல் அமைப்புக்கள் மிகச் சிலவற்றில் ஸ்பார்ட்டா
வின் அரசியல் அமைப்பு முதன்மையானது. ஸ்பார்ட்
டாவின் அரசியல் அமைப்பை நன்கு ஆராயும்பொழுது
அது ஒரு தனிப்பட்ட மனிதனின் ஆக்கமாகத்தான்
இருக்க வேண்டுமென்றே எண்ணத் தோன்றுகிறது.
பல்வேறு காலங்களில் பல்வேறு மனிதர்களால் அதன்
பல பகுதிகளும் தனித்தனி தோற்றுவிக்கப்பட்டிருந்
தால் அதில் பல முரண்பாடுகள் இயற்கையிலேயே
காணப்பட்டிருக்கும். முரண்பாடுகள் அற்ற ஒரு சிங்
காரக் கோர்வையாகவே ஸ்பார்ட்டா தேசத்து அரசியல்
அமைப்புக் காணப்பட்டது. ஒரு தனி மனிதனின் அறிவி
லிருந்து தோன்றியிருந்தாலொழிய, அவ்வரசியல்
அமைப்பின் பல்வேறு பகுதிகள், இசைந்துவரும் தர்க்க
வாதங்களின் இனிய சேர்க்கை (Logical Coherence)
போல, அவ்வளவு அழகாக ஒன்றையொன்று பற்றி
நின்றிருக்காது. எனவே, லிக்கர்கஸ் (Lycurgus) என்
பவனே ஸ்பார்ட்டா தேசத்து அரசியல் கட்டுக்கோப்
பின் (Contitution) ஆதிகர்த்தாவாக இருக்க வேண்டு
மென்று நாம் ஒருவாறு முடிவு கட்டலாம்.

வெகு காலத்திற்கு முன்னால் கிரேக்க நாட்டில்
வாழ்ந்த புளூடார்க் (Plutarch) என்ற எழுத்தாளர்
ரோமானிய கிரேக்க வீரர்கள், மேதைகள், தலைவர்கள்
பலரைப்பற்றி வாழ்க்கை வரலாறுகள் எழுதியுள்ளார்.
''வாழ்க்கைகள்'' (Lives) என்ற தலைப்பைக் கொண்ட
அப்புத்தகத்தில் லிக்கர்கஸ்ஸை (Lycurgus) ப்பற்றிய
வரலாற்றையும் காண்கிறோம். அவர் அவனைப் பற்றிக்
கூறியுள்ளவையெல்லாம் மக்களிடையே அவனைப்
பற்றி எழுத்திலும் பேச்சிலும் நிலவி வந்த செய்திகளின்

திரட்டே. அதில் தனது சொந்த ஆராய்ச்சித் திறனைக் கொண்டு சில செய்திகளை ஏற்புடைத்து என்றும், சில செய்திகளை நம்பத்தக்கவை அல்ல என்றும் முடிவு கட்டுகின்றார். லிக்கர்கஸ்ஸைப் பற்றிய ஒவ்வொரு செய்திக்கும் இன்னொரு மாற்றுச் செய்தி இருக்கவே இருக்கின்றது என்று புளுடார்க்கே கூறுகின்றார். அவரின் பிறப்பைப் பற்றியும், பிரயாணங்களைப் பற்றியும் அவரின் இறப்பைப் பற்றியும் பலவேறு கதைகள் சொல்லப்படுகின்றன. அவருடைய வாழ்க்கையின் எந்த ஒரு சம்பவத்தைப் பற்றியும் ஒருமுகமான அபிப்பிராயம் இதுவரை கிடையாது.

லிக்கர்கஸ் என்பவன் ஸ்பார்ட்டா தேசத்து அரசன் ஒருவனுக்கு உறவினன் என்றும், அவ்வரசன் பாலப் பருவத்தில் இருந்தபொழுது அவனுக்குக் கார்டியனாக லிக்கர்கஸ் இருந்து ஸ்பார்ட்டா தேசத்து அரசியலைக் கவனித்து வந்தான் என்றும் கூறப்படுகிறது. லிக்கர்கஸ் சுமார் கி. மு. 800-க்கு முன்னால் இருந்திருக்க வேண்டும். பாலப் பருவத்திலிருந்து இளங் கோமகனின் முடியைப் பறிக்கத்தான் முயலுவதாகச் சந்தேகம் எதுவும் எவருடைய உள்ளத்திலும் ஏற்படக் கூடாதென்றே அவன் நாட்டைவிட்டு வெளியேறி அந்நிய நாடுகள் பலவற்றிற்கு யாத்திரை சென்றான் என்றும் கூறப்படுகிறது. ஈஜிப்ட், அயோனியா, கிரீட் முதலிய பல்வேறு நாடுகளுக்கும் இன்னும் பல தூர தேசங்களுக்கும் அவன் சென்று பல பெரிய மனிதர்களைச் சந்தித்திருக்கலாம் என்று யூகிக்க இடமிருக்கின்றது. லிக்கர்கஸ் ஸ்பார்ட்டாவில் இல்லாதிருந்த பொழுது, ஸ்பார்ட்டாவின் அரசியல் நிலைகுலைந்து அங்கே அராஜகம் நிலவியதாகவும், பின்னர் லிக்கர்கஸ் ஸ்பார்ட்டாவுக்குத் திரும்பி வந்து புதிய அரசியல் அமைப்பு (Constitution) ஒன்றின் மூலம் அம்மக்களை அராஜகத்திலிருந்து மீட்டு நல்வாழ்வு வாழச் செய்த



தாகவும் புளுட்டார்க்கின் நூலிலிருந்தும்வேறு சில புத்தகங்களிலிருந்தும் நாம் அறிகிறோம் கிரீட் தீவிலே தான் கண்ட அரசியல் முறைகள் சிலவற்றை ஸ்பார்ட்டா அரசியல் அமைப்பில் அவன் புகுத்தியதாகவும் கூறப்படுகிறது. ஏதென்ஸ் நகருக்குச் சட்டமியற்றிக் கொடுத்த **சோலன்** (Solon) என்பவனுடன் லிக்கர்கஸ் வழக்கமாக ஒப்பிடப்படுகிறான். ஆனால், லிக்கர்கஸ் சோலனைப் போன்று தான் ஆக்கிக் கொடுத்த அரசியல் அமைப்பிலே மனிதத் தன்மையை வளர்ப்பதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்தாதவன் என்று லிக்கர்கஸின் மேல் பழி சுமத்தப்படுகின்றது. (Lycurgus made machines, while Solon made men.) ஆனால், ஸ்பார்ட்டாவின் அரசியல் அமைப்பு ஒரு விநோதமான அதிசயமென்றும், இலட்சிய அரசியல் அமைப்புக்கு ஒரு உதாரணம் என்றும் அக்காலத்திலேயே தூர தேச மக்களாலும் போற்றப்பட்டது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஸ்பார்ட்டா மக்களின் சமுதாய ஆன்மீக வாழ்வுதான் வறண்ட பாலைவனமாக இருந்ததேயொழிய அவர்களின் அரசியல் அமைப்பு (Constitution) சங்கேத கணிதம் (Algebra) போன்ற ஒரு கட்டுக்கோப்பை உடையதாயிருந்தது.

ஸ்பார்ட்டா நகரத்தில் மக்களுக்கு அளிக்கப்பட்ட ராணுவப் பயிற்சி அவர்களை அஞ்சாநெஞ்சர்களாகவும் அழகிய தோற்றத்தை உடையவர்களாகவும் ஆக்கியது. தேசாபிமானத்தில் ஸ்பார்ட்டா நகரத்து மக்கள் ஏனைய கிரேக்க நகர ராஜ்யங்கள் பலவற்றை விஞ்சினர். போர்க்களத்திலே ஸ்பார்ட்டா தேசத்து யுவர்களை எதிர்த்துப் போராட எவரும் பயப்பட்டனர். வெற்றி மனப்பான்மை படைத்த அவர்கள், வெற்றி என்பது தங்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியதொன்று என்று நம்பினார்கள். வெற்றி தங்களுடையதே என்ற எண்ணம்தான் எப்பொழுதும் அவர்களின்

இதயத்தில் மேலோங்கி நின்றது. ஒழுங்குக்கும் கட்டுப்
பாட்டுக்கும் பெயர்போன அவர்கள் பிற நாட்டு மக்கள்
பலருக்கு மாதிரிகளாக விளங்கினார்கள். சாவிற்கு
அஞ்சாத ஸ்பார்ட்டா மக்களைக் கண்டு அண்டை
நாடுகள் பல அஞ்சி நடுங்கின.

("The Spartan boy grew up a soldier, matchless for steadiness, discipline and bravery, looking on victory in the field as but his due, and death in action at the call of his country as his highest honour." —Woodhouse.)

தங்களுடைய போர் வன்மையால் ஸ்பார்ட்டா
தேசத்து மக்கள் தங்களின் நாட்டைப் பெரிதும் விரிவு
படுத்தினார்கள். கிரேக்க சரித்திரத்திலேயே பிற நாடுகள்
பலவற்றை வென்று அதை நிரந்தர மாக்கிக் கொண்
டவர்கள் ஸ்பார்ட்டா மக்கள்தான். அவர்களுக் கிருந்த
போர் வலிமை கிரீஸின் மற்ற எந்த நகர ராஜ்யத்திற்கும்
இல்லா திருந்ததால், போர்த்துறையிலும் பிற நாடு
களைக் கைப்பற்றும் செயல்களிலும் ஸ்பார்ட்டாவுடன்
எந்த நாடும் போட்டியிட முடியவில்லை. மதிப்பிற் குரிய
பலவற்றைத் தியாகம் செய்துவிட்டுப் போர் ஒன்றையே
அவர்கள் பெரிதாகக் கருதி அதில் தம்மை அல்லும்
பகலும் பயிற்றுவித்துக் கொண்டதுதான் இதற்குக்
காரணம். இருப்பினும், இறுதியில் ஸ்பார்ட்டா
அழிந்தே தீர்ந்தது. அதனுடைய அசுர பலம் அதை
வெகு காலம் காப்பாற்ற வில்லை. தன்னுள்ளேயே
அழிவு சக்தியை அது தன்னையு மறியாமல் வளர்த்து
வந்தது. சரீர பலத்தால் மட்டும் உலகில் எந்த மனித
ரும் நாடும் வாழ்ந்துவிடுவ தில்லை.

பல குட்டி நாடுகளை ஒன்றாகக் கூட்டிப் பெலப்பொ
னீஷியன் பகுதியில் ஒரு பெரிய சமஷ்டியை (Peloppo-
nesian Confederacy) ஸ்பார்ட்டா தோற்றுவித்து
அதைத் தன்னுடைய ஆதிக்கத்தின் கீழே இருக்கச்



செய்தது. அதனுடைய நடுநாயகமாகத் தன்னை ஆக்கிக்
கொண்டது. அதைக் கொண்டு கிரேக்கப் பிரதேசம்
அனைத்தையுமே தன்னுடைய ஆட்சியின் கீழ்க்கொண்டு
வரத் திட்ட மிட்டது. சாம்ராஜ்யம் ஒன்றை நிர்மாணிப்
பதிலே அது தீவிர சிரத்தை காட்டியது. போர்கள்
பல தோன்றின. ஏதென்ஸைக் கண்டு மிகப் பொறா
மைப்பட்டது ஸ்பார்ட்டா. நாளடைவில் ஸ்பார்ட்டா
வின் பலம் சிறிது சிறிதாகக் குன்றித் தேய
ஆரம்பித்தது.

**ஏதென்ஸ்:** ஸ்பார்ட்டாவினின்று முற்றிலும் மாறு
பட்டு விளங்கியது ஏதென்ஸ் நகரம். ஸ்பார்ட்டா
வட துருவம் என்றால் ஏதென்ஸ் தென் துருவமாக
விளங்கியது. இரண்டு நகரங்களுக்கும் இடையே
யிருந்த தூரம் ஏறக்குறைய நூறு (100) மைல்கள்
தான். எனினும் இவை இரண்டும் ஒன்றினின்று மற்
றொன்று எவ்வளவு மாறுபட முடியுமோ அவ்வளவு
மாறுபட்டன. ஸ்பார்ட்டா நகரம் போரைப் பெரிதாக
நினைத்துப் போருக்காகவே வாழ்ந்தது. ஏதென்ஸ் நகரம்
கலை காவியத்தையும் அறிவுச் செல்வங்களையும் வியா
பாரத்தையும் குடியரசையும் பெரிதாகக் கருதி அவை
களுக்காக வாழ்ந்தது. அரசியல், சமுதாய லட்சியங்கள்
அனைத்திலுமே ஸ்பார்ட்டாவினின்று ஏதென்ஸ்
நகரம் மாறுபட்டது. ஏதென்ஸ் நகரிலே குடியரசு
தோன்றி நிலைப்பதற்கு முன்னால் முடியாட்சி, கொடுங்
கோலாட்சி, பண்டிதச் சீமான்களின் ஆட்சி, பணக்
காரர்களின் ஆட்சி இவையனைத்தும் மாறிமாறி ஏற்பட்
டன. எனினும் இவையனைத்தையும் ஒன்றன்பின்
ஒன்றாக ஏதென்ஸ் கடந்து, வளர்ந்துகொண்டே சென்று
இறுதியில் குடியரசை ஸ்தாபித்து அதையே தனது நிலை
யான அரசியல் முறையாக ஆக்கிக் கொண்டது. மனித
னுடைய அறிவும் ஆத்மமும் ஏதென்ஸ் நகரில்வளர்ந்த
அளவுக்கு அக்காலத்தில் வேறு எந்த ஐரோப்பிய

நாட்டிலும் வளரவில்லையென்று நாம் உறுதியுடன் கூறலாம். இன்றைய மேலை நாட்டு நாகரிகத்தின் அடிமட்டத்தை நாம் ஆராய்ந்து பார்த்தோமேயானால் ஏதென்ஸ் நகரின் அறிவுச் செல்வங்களும் கலைச் செல்வங்களும் எந்த அளவுக்கு அதைப் பாதித்திருக்கின்றன என்பதை நாம் உணர்ந்து வியப்பிலாழ்ந்து விடுவோம். ஏதென்ஸ் நகரச் சட்டங்கள் நியாயத்தையும் மனிதத் தன்மையையுமே அடிப்படையாகக் கொண்டிருந்தன. உயர்ந்தவர் தாழ்ந்தவர் அனைவருக்கும் ஒரே நீதிதான் வழங்கப்பட்டது. (Justice was to be pitiless, but it was to be the same for all) சுதந்தரத்துக்கும் நல்வாழ்வுக்கும் ஒரு கவர்ச்சிகரமான சின்னமாக உலகிற்கு ஏதென்ஸ் நகரம் காட்சியளித்தது.

**அக்ரோபாலிஸ்** (Acropolis) என்ற மலையின் அடிவாரத்தில் இருந்த இந்த நகரத்திற்கு **அதீனா** (Athena) என்ற கன்னித் தெய்வமே குல தெய்வமாக விளங்கியது. இத்தெய்வத்தின் பெயரைத்தான் இந்நகரத்துக்குச் சூட்டி அதை ஏதென்ஸ் (Athens) என்று மக்கள் அழைத்திருக்கக் கூடும் என்றும் நாம் அனுமானிகக லாம்.

குடியரசு ஏற்பட்டு நிலைத்தபின் ஏதென்ஸ் நகரில் பொதுமக்களுக்கும் ஏழைகளுக்கும் நீதி கிடைத்தது போல் அதற்கு முன்பு கிடைக்க வில்லை. பண்டிதச் சீமான்களின் ஆட்சி ஏதென்ஸ் நகரில் ஏழாவது நூற்றுண்டின் மத்தியில் பணக்காரர்களின் ஆட்சியாக மாறியது. பிறப்பைக் கொண்டல்லாது தம் செல்வத்தை அடிப்படையாகக் கொண்டு பலர் ஆட்சிபீட மேறினர். வியாபாரப் பெருக்கத்தினால் குவிந்த செல்வமனைத்தையும் சுயநலமிகளாகிய பணக்காரர்கள் கைப்பற்றிக் கொண்டனர். ஏழை பணக்காரரிடையே ஏற்கனவே காணப்பட்ட ஏற்றத்தாழ்வு மிக அதிகமாகியது. இத்துடன் நாணயச் செலாவணி முறை பழக்கத்திற்கு வந்த



பின், ஏராளமான மூலதனத்தைப் பெருக்கிக் கொள்ளும் வாய்ப்பு பணக்காரர்களுக்கு எளிதில் ஏற்பட்டது. ஏழை மக்களிடையே ஏழ்மையும் இன்னல்களும் அதிகரித்தன. ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் மோதல் ஏற்படும் நிலைமை உருவாகிக் கொண்டு வந்தது. இச்சமயத்தில் **மெகாரா** (Megara) என்ற நாட்டுடன் ஏதென்ஸ் போரிட வேண்டியதாயிற்று. மெகாரா நகரத்தைச் சேர்ந்தவர்கள் ஏதென்ஸ் எல்லைப்புறப்பகுதிகள் பலவற்றைக் கொள்ளையடிக்க ஆரம்பித்தனர். மெகாரா நாட்டின் எண்ணெய் மார்க்கெட்டுகளுக்குள் ஏதென்ஸ் வியாபாரிகளை அனுமதிக்க மெகாரா மறுத்தது. ஏதென்ஸ் நகரிலே பொருளாதார நெருக்கடி உருவாகியது. இதனால் ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப் பட்டார்கள். அவர்களின் நிலைமை முன்னைவிட மோசமாகியது அவர்களுக்கும் பணக்காரர்களுக்குமிடையே உருவாகிக் கொண்டிருந்த விரோத மனப்பான்மை மிக அதிகமாக வலுக்க ஆரம்பித்தது. ஏழைகளின் கஷ்டங்களை நிவர்த்தி செய்யா விட்டால், நிலைமை கட்டுக் கடங்காமல் போய்விடும்போல் தோன்றியது. ஏழைகளின் பொருளாதாரக் குறைபாடுகளையும் இன்னல்களையும் போக்க மார்க்கங்கள் பல ஆராயப்பட்டன. நிலைமையைச் சமாளித்துச் சாங்கோபாங்கமான சூழ்நிலையை ஏற்படுத்த **டிரேகன்** (Dracon) என்பவன் அதிகார பூர்வமாக நியமிக்கப்பட்டான்.

சட்டங்கள் அப்பொழுது எழுத்தில் பொறிக்கப் படாது பண்டிதச் சீமான்களின் நினைவிலேயே இருந்து வந்தன. பண்டிதச் சீமான்களின் ஆட்சி பணக்காரர்களின் ஆட்சியாக மாறியபொழுது, அவை பணக்காரர்களின் ஏகபோக உரிமையாயிற்று. பண்டை மரபுகளையும் பழக்க வழக்கங்களையும் அடிப்படையாகக் கொண்ட சட்டங்களாதலால் (Customary law), பரம்பரையாக அவை ஒரு பகுதியினரின் நினைவில்தான் முடங்கிக்

கிடந்தன. ஆட்சி பீடத்திலிருந்த பணக்காரர்களில் பலர் பண்டிதச் சீமான்களின் பரம்பரையிலே வந்தவர்கள். ஆனால், மாறுபட்ட குணாதிசயத்தை உடையவர்கள். இவர்கள் தங்கள் இஷ்டம் போல் தம் சுயநலன்களுக்கேற்ப அடிக்கடி சட்டத்தை மாற்றி மாற்றிச் சொல்லி வந்தார்கள். ஏழை மக்களின் அல்லல்களுக்கும் அவல நிலைக்கும் பல முக்கியமான காரணங்களுள் இதுவும் ஒன்று. இதுதான் சட்டம், இது சட்டமில்லை என்று ஏழைகளுக்குத் திட்டவட்டமாகத் தெரியாததால் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள், இந்த நிலைமைக்கு **டிரேகன்** (Dracon) ஒரு முற்று வைத்தான்.

டிரேகன் செய்த முக்கியமான வேலை, பழைய சட்டங்களிலிருந்தும் அப்பொழுது நிலவிய சூழ்நிலையை அனுசரித்தும் புதிய சட்டங்களை இயற்றி அதை எழுத்தில் பொறித்துப் பொதுமக்களுக்கு அளித்ததே. அவனுடைய சட்டங்களெல்லாம் மிகக் கடுமையானதாகவே இருந்தன. ஈவு இரக்கத்திற்கு அவற்றிலே சிறிதும் இடமில்லை. அச்சட்டங்கள் ஏழைகளுக்கு முற்றிலும் நன்மை பயந்தன என்று சொல்வதற்கும் இல்லை. அவனின் சட்டங்களில் பலவற்றைப் பணக்காரர்கள் தங்களுக்குச் சாதகமாகவே பயன்படுத்திக் கொண்டார்கள். எனினும் ஏழைகளுக்கு அது ஒரு விதத்தில் பெரிய ஆறுதல் அளித்தது. ஒரு குறிப்பிட்ட பிரச்சினையோ, சூழ்நிலையோ எழும்பொழுது சட்டம் இன்னதுதான் என்பதை அவாகளால் இப்பொழுது தெரிந்து கொள்ள முடியும். சட்டத்தைஎழுத்தில் பொறித்து எல்லோருக்கும் அறிவித்துவிட்டால் பணக்காரர்கள் ஏழைகளை எளிதில் ஏமாற்ற முடியாது. பணக்காரர்களின் தனி உடைமையாயிருந்த சட்டம் இப்பொழுது நாட்டு மக்கள் அனைவருக்கும் பொது உடைமை யாயிற்று. தாங்கள் சொன்னதுதான் சட்டம் என்று பணக்காரர்கள் இப்பொழுது வாதாடுவதற்கு இடமில்லை. பணக்காரர்



களின் ஆட்சி பற்றிப் பல மர்மங்கள் இப்பொழுது பொது மக்களுக்கு வெளிப்படையாகத் தெரிந்தன. ஆட்சி பீடத்திலிருந்த பணக்காரர்களும் அவர்களுக்கு ஆதரவளித்து அவர்களிடமிருந்து ஆதரவு பெற்று வந்த பணக்காரர்களும் ஏழை மக்களை முன்போல் தம் சொற்களால் வெல்ல முடியவில்லை. அவர்கள் சொல்வதை ஏழை மக்கள் ஒப்புக் கொள்ளாது கேள்வி மேல் கேள்வியாக அடுக்கிக் கொண்டு சென்றார்கள். ஏழை மக்களிடையே ஏற்பட்ட இந்த விழிப்பு அவர்களின் இன்னல்களுக்கு ஓரளவு நிவாரணம் அளித்தது.

("Whether the customary law was substantially changed or simply committed to writing, it is plain that it is to be no longer the private possession of a class. The secrets of aristocratic rule are being revealed to the whole community, questioning has begun - questioning as to the rules which the oligarchy administers" – Fowler).

டிரேகனுடைய பணி ஏழைகளின் மத்தியில் சட்டம் பற்றி நிலவியிருந்த அறியாமையைத்தான் ஓரளவு போக்கியதே யொழிய அவர்களின் ஏழ்மையையோ, அப்போதிருந்த பொருளாதார அமைப்பின் அடிப்படைத் தீமைகளையோ போக்க வில்லை. ஏழைகளை ஏமாற்றுவதற்கும் அவர்களைத் தம் பண பலத்தால் நிஷ்டூரப்படுத்துவதற்கும் எத்தனையோ புதிய வழிகளைப் பணக்காரர்கள் கற்றுக் கொண்டார்கள். பணக்காரர்களிடத்தில் பணம் இருந்ததால் ஏழைகள் தங்களுடைய நிலங்களை அவர்களுக்கு அடமானம் வைத்து அவர்களிடம் வட்டிக்குக் கடன் வாங்கினார்கள். பணக்காரர்கள் மனச்சாட்சிக்குப் பொருந்தாத முற்றிலும் அநீதியான விகிதத்தில் ஏழைகளிடமிருந்து வட்டி வசூலித்தார்கள். பலர் வருடா வருடம் தங்களின் நிலங்களில் விளைந்த தானிய மணித்தையும் தமக்குக் கடன்

கொடுத்த பணக்காரர்களுக்கு வட்டிக்குப் பதிலாகக் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. நிலங்களை இழந்து எத்தனையோ ஏழைகள் அடிமைகளாக ஆகி விட்டனர். ஆட்சி பீடத்தில் பணக்காரர்கள் அமர்ந்திருந்ததால் நீதி மன்றத்தில் அமர்ந்திருந்த நீதிபதிகளும் பணக்காரர்களின் தாசர்களாகவே இருந்தனர். நீதி மன்றத்தில் ஏழைகளுக்கு நியாயம் கிடைப்பது மிகமிக அரிதாகிவிட்டது. பணக்காரர்களின் நன்மைக்கெனவே தோன்றிய நீதி மன்றங்கள் போன்று அவை இயங்கின. ஏழைகளின் உள்ளம் மீண்டும் கொதிக்க ஆரம்பித்தது. அவர்களின் சினம் வளர்ந்து கொண்டு சென்றது. அதிகார பீடத்தில் அமர்ந்திருந்தவர்கள் நிலைமையை உணர்ந்து ஏழை பணக்காரர்களுக்குள் ஓர் நல்லுறவு ஏற்படுத்தவும், அதற்கு வேண்டிய மார்க்கங்களைக் கூறித் தேவையான சட்டங்களைச் செய்யவும் **சோலன்** (Solon) என்ற அறிஞனை நியமித்தனர். அவனுக்கு ஏராளமான விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டன. சோலன் அறிஞன் மட்டுமல்லன். மிகுந்த அனுபவம் நிறைந்தவனும்கூட. அத்துடன் ஏழைகளின் மேல் இயல்பாகவே பச்சாத்தாபம் நிறைந்தவன். பணக்காரர்களை வெறுப்பவனுமல்லன். இருதரப்பினருக்கும் நியாயமானதைச் செய்ய அவனே தகுதி வாய்ந்தவனென்று அனைவராலும் கருதப்பட்டது.

ஏதென்ஸ் நகருக்கு நீடித்துப் பயனளித்த சட்டங்களை இயற்றிக் கொடுத்தவன் சோலன்தான். அதனாலேயே ஏதென்ஸ் நகருக்கு நல்மார்க்கங்களைக் காட்டியவனாக அவன் கருதப்படுகின்றான். (**Solon – the lawgiver of Athens.**)

சோலன் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தான். பொருளாதாரச் சீர்திருத்தங்களை மட்டுமே அவன் கொண்டு வரவில்லை. அல்லது அரசியல் சீர்திருத்தங்களை மட்டுமே கொண்டு வரவில்லை. ஆழ்ந்து சிந்திக்



கும் சக்தி பெற்ற மேதையானதால் அரசியல், பொருளாதாரம் இரண்டிலுமே மிக முக்கியமான சீர்திருத்தங்களை அவன் கொண்டு வந்தான்.

பொருளாதாரத் துறையில், குன்றிப்போன தேசியத் தொழில்கள் அனைத்தையும் திரும்பத் தோற்றுவித்து வளர்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அதற்கான சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டு வந்தான். இதனால் ஏழை மக்கள் அனைவருக்குமே சதா வேலை கிடைத்துக் கொண்டிருக்கும். வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும். பொதுமக்களில் ஏழைகள் உள்பட ஒவ்வொருவரும் ஓரளவு செல்வத்தைச் சேகரிக்கவும் பணத்தைச் சேமிக்கவும் முடியும் என்று அவன் கருதினான். வாங்கிய கடனுக்காகத் தம் உடலையே அடமானம் வைக்கும் வழக்கம் அப்பொழுதிருந்து வந்தது. அந்த வழக்கத்தை உடனே ரத்து செய்தான். கடனுக்காக அடிமையானவர்கள் அனைவரையும் உடனே விடுதலை செய்தான். ஒவ்வொருவரும் அதிகபட்சம் இவ்வளவு நிலம்தான் வைத்திருக்க முடியும் என்று ஒரு அளவை நிர்ணயித்து, அதற்கென ஏதென்ஸ் ஒரு கடுமையான சட்டத்தை இயற்றினான். எப்பொருளையும் நகரிலே உற்பத்தி செய்யப்பட்ட என்று வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாது விதி உத்தரவிட்டான். எண்ணெய் ஒன்றுக்கு மட்டும் விதி விலக்கு அளித்தான். ஏதென்ஸ் நகரம் இதுவரை வியாபாரத் தொடர்பு கொள்ளாத **இபோயன்** (**Euobean**) குடியேற்ற நாடுகளுடன் வியாபாரம் செய்து தன் செல்வத்தைப் பெருக்கிக் கொள்ளும் பொருட்டு, ஏதென்ஸ் நகர நாணயச் செலவாணியை இபோயன் முறையை ஒட்டி மாற்றியமைத்தான். இவ்வியாபாரத்தால் பணக்காரர்களுடன் ஏழைகளும் நன்கு லாபமடைவதற்கான வழிகளை மிகச் சூட்சமமாக வகுத்தான்.

அரசியலைப் பொறுத்த வரையில் பழைய ஸ்தாப

ணங்களை மாற்றியமைத்ததுடன் புதிய ஸ்தாபனங்களையும் அவன் நிறுவினான். பழைய சட்டங்களைத் திருத்தியமைத்தான். அரசியல் அமைப்பில் (Constitution) புதிய சட்டங்களைப் புகுத்தினான். பணக்காரச் சீமான்களின் ஆட்சியைத் தளரச் செய்து குடியாட்சி முறைகளை வலுக்கச் செய்வதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அவையனைத்தையும் அவன் செய்ய முயன்றான். குடியாட்சியின் மேலும் பொது ஜனங்களின் மேலும் அவனுக்கு ஏதோ ஒருவகை அலாதிப்பற்று. சோலன் கொண்டு வந்த சீர்திருத்தங்களாலும் புதிய சட்டங்களாலும் குடியாட்சியின் வளர்ச்சிக்கு மிகப் பலமான அஸ்திவாரம் போடப்பட்டது. மனிதத் தன்மையையும் உயர்ந்த அரசியல் பண்புகளையும் வளர்ப்பனவாய் அவனது சட்டங்களும் சீர்திருத்தங்களும் அமைந்திருந்தன. சோலன் செய்த சட்டங்களில் ஓரிரண்டைத்தான் நாம் இங்கே கூறியுள்ளோம். அனைத்தையும் இங்கே கூறுவதென்பது இயலாது ; அவை தேவையுமல்ல. பணக்காரர்களின் ஆட்சியிலிருந்து ஏதென்ஸ் நகரை விடுவித்தவனே சோலன்தான் என்று அறிஞர்கள் பலர் ஒருமுகமாகக் கூறுகின்றனர்.

கி. மு. 594ல் சோலன் ஏதென்ஸுக்கு இயற்றிக் கொடுத்த சட்டங்கள் அமுலுக்கு வந்தன. சட்டங்களை இயற்றிக் கொடுத்துவிட்டுப் பத்து ஆண்டுக் காலம் சோலன் ஏதென்ஸைக் கடந்து வெளிநாட்டுப் பிரயாணம் சென்றுவிட்டான். ஈஜிப்ட், ஆசியாமைனர் போன்ற பகுதிகளில் சுற்றியலைந்துவிட்டுத் தன் தாயகமான ஏதென்ஸுக்கு அவன் திரும்பி வந்தபொழுது, அங்கே பிளவுகளும் பூசல்களும் மலிந்துபோய் இருப்பதைக் கண்டான். ஏதென்ஸ் நகரில் எங்குப் பார்த்தாலும் புரட்சியும் கொந்தளிப்பும் தலைதூக்கிக் கொண்டிருந்தது. அதிகாரத்தை அனுபவித்து அதில் சிறிது பரிச்சயப்பட்ட பொதுமக்கள் மேலும் அதிகாரம் தங்க



ளுக்குவேண்டுமென்று ஆர்ப்பரித்தனர். பணக்காரர்கள் தாங்கள் முன்பு அனுபவித்த அதிகாரம் அனைத்தையும் திரும்பப் பெற முயற்சித்தனர். மக்களிடையே பல கட்சிகள் தோன்றி, ஒன்றுக் கொன்று தீராப் பகையை வளர்த்துக் கொண்டிருந்தன. சோலன் இயற்றிக் கொடுத்த சட்டங்கள் தகர்ந்து வீழ்ந்தன. அராஜகம் போன்ற ஒரு நிலை ஏதென்ஸ் நகரிலே நிலவ ஆரம்பித்தது. இத்தகைய சூழ்நிலையில்தான் ஏகாதிபத்தியம் (Tyranny) தோன்றுவது வழக்கம். ஏதென்ஸிலும் இப்பொழுது **பிஸிஸ்ட்ரேடஸ்** (Pisistratus) என்ற ஒரு ஏகாதிபத்தியத் தலைவன் தோன்றினான். (Tyrant) என்று ஆங்கிலப் பதத்துக்குக் கொடுங்கோல் மன்னன் என்ற பொருள் இருந்தாலும் பிஸிஸ்ட்ரேடஸ் போன்றவர்களைக் கொடுங்கோல் மன்னர்கள் என்று சொல்வதற்கில்லை. அவர்களைச் சர்வாதிகாரம் படைத்த ஏகாதிபதி என்று கூறுவதே பொருத்தமாகும். பிஸிஸ்ட்ரேடஸ் ஏதென்ஸ் நகரிலே ஒரு பிரபுவின் குடும்பத்தைச் சேர்ந்தவன். தன் தாய் வழியிலே சோலனுக்கு நெருங்கிய உறவினன். கி. மு. 560 ல் அக்ரோபாலிஸ் (Acropolis) பகுதியைக் கைப்பற்றித் தன்னை ஏதென்ஸ் நகரின் ஏகாதிபதியாகப் பிரகடனம் செய்துவிட்டான்.

பிஸிஸ்ட்ரேடஸினுடைய ஆட்சி சட்ட அமைப்புக்குட்பட்ட ஜனநாயக ஆட்சியைப் போன்று இருந்ததே தவிரச் சர்வாதிகார ஏகாதிபத்தியத்தைப் போல் இல்லை, **(His rule was more like a constitutional government than a tyranny)**. முன்னேறிக்கொண்டு வந்த குடியாட்சி முறைகளையும் ஜனசக்தியையும் அவன் தடுத்து நிறுத்த முயலவில்லை. சோலன் இயற்றிக் கொடுத்த சட்டங்கள், அரசியல் அமைப்பு இவற்றின் ஜீவாதாரமான பகுதிகளை அவன் அப்படியே பின்பற்றினான். அவற்றைப் புறக்கணித்து ஒதுக்கித் தள்ள அவன் விரும்பவில்லை. ஜனங்களைக் கொடுமைப்படுத்துவதை

அவன் முற்றிலும் வெறுத்தான். சட்டங்களுக்குக் கீழ்ப்படியாதவர்கள் தன்னுடைய அத்தியந்த நண்பர்களேயாயினும் அவர்களைக் கடுமையாகத் தண்டித்தான். எல்லோருக்கும் முதலாகத் தானே சட்டங்களுக்கு மிக மரியாதையுடன் கீழ்ப்படிந்து பிறருக்கு ஒரு மாதிரியாகவும் எடுத்துக் காட்டாகவும் விளங்கினான். தாழ்வுற்ற ஏழை மக்களின் இன்னல்களைப் போக்குவதற்காக ஓயாது முயற்சி செய்து கொண்டிருந்தான். நிலமில்லாத ஏழைகளுக்கு நிலமளித்தான். இவ்வாறு சிறிய விவசாயிகள், சிறிய நிலச்சுவான்தார்கள் இவர்களின் தொகையைப் பெருக்கினான். வரிகள் மிகக் குறைவாகவே இருந்தன. பாரபட்சம், சலுகை எதுவுமின்றி எல்லோருக்கும் சம விகிதத்திலேயே வரி விதிக்கப்பட்டது. சொந்தப் பணத்தைக் கொண்டு விவசாயம் செய்ய முடியாத ஏழைகளுக்கு அரசாங்கத்திலிருந்து உதவிப் பணம் கொடுக்கப்பட்டது. கோவில்கள், பாலங்கள் இவற்றைக் கட்டுதல் போன்ற பொது வேலைத் திட்டங்களால் ஏழைகளுக்கும் கைத்திறன் படைத்த தொழிலாளிகளுக்கும் வேலை கொடுக்கப்பட்டது. நீதி மன்றங்களில் ஏழைகளுக்கு மிக எளிதில் நியாயம் கிடைத்தது. மதத்தையும் கலையையும் முன்னேற்ற பிஸிஸ்ட்ரேடஸ் பல சிறந்த முயற்சிகளைச் செய்தான். கோவில்கள் பலவற்றைக் கட்டி விழாக்களை நன்கு விரிந்த முறையில் மிக ஆடம்பரமாக நடத்த ஏற்பாடு செய்தான். ஏதென்ஸ் நகரின் குல தெய்வமான **எதினா** (Athena) என்ற கன்னித் தெய்வத்திற்குப் பிரம்மாண்டமான ஒரு கோவிலைக் கட்டினான். இக்கோவிலில் நடந்த வருடாந்திரத் திருவிழாவிலே ஹோமரின் காவியங்களான **இலியட்** (Iliad), **ஒடிஸி** (Odyssey) இவைகளிலுள்ள பாடல்களைத் தேர்ச்சி பெற்றவர்களைக் கொண்டு ஒழுங்காக நல்ல முறையில் அனைவரின் உள்ளத்திலும் பதியுமாறு பாராயணம் செய்யும்படி



செய்தான். இவ்விரு காவியங்களிலுமுள்ள பாடல்களை நன்கு சிரமப்படுத்தி வரிசையாக்கிப் பிழையெதுவுமின்றி எழுதச் செய்து வெளியிட்டான். கோவில்களில் பாராயணம் பண்ணுவதற்கு இவ்வெளியீடுகள்தான் உபயோகப்படுத்தப்பட்டன. அதற்காகவே இந்நூல்கள் அரசாங்கத்தால் வெளியிடப்பட்டன. இவ்வாறு செய்ததன் மூலம் அவன் இலக்கியத்திற்கே ஒரு பெரிய சேவையைச் செய்தான். முதன் முதலாக ஹோமரின் பாடல்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து, பிழையெதுவுமின்றி, கிரமமான வரிசையில், எழுத்து வடிவில் வெளியிட்டவன் பிஸிஸ்ட்ரேடஸ்தான். அவன் அவ்வாறு செய்திராவிடில் இன்று ஹோமரின் பாடல்கள் நமக்குச் சிதைந்து போன பகுதிகளாகவும் கோர்வையற்ற தனிப்பாடல்களாகவுமே கிடைத்திருக்கும். பிற்காலத்திய மக்கள் பிஸிஸ்ட்ரேடஸின் ஆட்சியைக் கிரேக்க வரலாற்றின் பொற்காலம் என்று புகழ்ந்து போற்றினர்.

பிஸிஸ்ட்ரேடஸுக்குப் பின்னால் அவனுடைய குமாரர்கள் இருவர் ஆட்சிக்கு வந்தனர். அவர்களுடன் ஏதென்ஸில் ஏகாதிபத்திய ஆட்சி முடிவடைந்தது.

ஏதென்ஸ் நகர வரலாற்றிலே அடுத்தாற்போல் தோன்றிய பெரும் ராஜதந்திரி **கிளெஸ்தனிஸ்** (Cleisthenes) என்பவன். அதிகார பீடத்தில் இவன் அமர்ந்த பொழுது பொது ஜனங்களைத் தன்னுடைய கூட்டாளிகளாக ஆக்கிக்கொண்டு (Partnership with the massess) குடியரசை வளர்ப்பதற்கான திட்டங்களைத் தோற்றுவித்து அவற்றை அமுல் நடத்தினான். சோலன் முன்பு இயற்றிக் கொடுத்த சட்டங்களையும் அரசியல் கொள்கைகளையும் விரிந்த முறையில் நன்கு செயல்படுத்தினான் கிளெஸ்தனிஸ். சோலன் குடியாட்சிக்கு வழி கோலிவிட்டது உண்மை. ஆனால், ஏதென்ஸில் குடியாட்சியை வெற்றிகரமாக ஸ்தாபித்தது கிளெஸ்தனிஸ்

தான் என்று சரித்திரப் புலமை பெற்றவர்கள் அனைவரும் ஒப்புக் கொள்கின்றனர். "எதெனியக் குடியரசின் ஸ்தாபகர்" என்றே கிளெஸ்தனிஸ் சரித்திர நூல்களில் வர்ணிக்கப்படுகின்றான். (The founder of Athenian democracy). ஃபௌலர் (Fowler) என்ற சரித்திரப் பேராசிரியர் தமது நூலொன்றிலே சோலனுக்கும் கிளெஸ்தனிஸ்ஸுக்கும் உள்ள பாகுபாட்டைக் கீழ்க்கண்டவாறு விவரித்துச் சொல்லுகின்றார். சோலனின் பணியைவிடக் கிளெஸ்தனிஸின் பணி பன்மடங்கு உயர்ந்தது என்பது அவரின் கருத்து.

(Solonian changes did not constitute democracy- a form of government then unknown and for which there was as yet no word in the Greek language. But they initiated the democratic spirit"......"The change introduced by Cleisthenes was perhaps the most far reaching in all Athenian history" - Fowler).

("Cleisthenes established the tribes and democracy among the Athenions".........."he took the people into partnership". - Herodotus).

அரிஸ்டாடிலும் "அரசியல்" (Politics) என்ற தன்னுடைய நூலிலே ஏதென்ஸ் நகரில் குடியரசை ஸ்தாபித்தவன் கிளெஸ்தனிஸ்தான் என்று அழுத்தமாகக் கூறுகின்றார்.

குடியாட்சிக்குப் பெருத்த அளவிலே வழிகோலி விட்டவன் சோலன். சோலன் இயற்றிக் கொடுத்த சட்டங்களையும் ஆட்சி அமைப்பு முறைகளையும் (Constitution) கொண்டுதான் கிளெஸ்தனிஸ் நிரந்தரமான அடிப்படையில் ஏதென்ஸில் குடியரசை ஸ்தாபகம் செய்தான். எனவே, ஏதென்ஸில் குடியரசை நிறுவிய பெருமை இவ்விருவருக்குமே சேர்ந்தாற்போல் உண்டு. பியூரி என்ற பேராசிரியர் கூறுவது போன்று, ஏதென்ஸ் நகரில் குடியாட்சிக்கு வழி வகுத்த சோலனைக்



குடியாட்சியின் முதல் ஸ்தாபகர் என்றும், ஏதென்ஸில் குடியாட்சியை மாறாத அடிப்படையில் (unafterable basis) நிறுவிய கிளெஸ்தனிஸைக் குடியாட்சியின் இரண்டாவது ஸ்தாபகர் என்றும் அழைப்பதே முறை. இவ்விருவரில் எவரையாவது ஒருவரைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் நமக்கு ஏற்பட்டால் நிச்சயமாக நாம் கிளெஸ்தனிஸைத்தான் "ஏதென்ஸின் குடியரசு ஸ்தாபகர்" என்று சுட்டிக் காட்ட வேண்டியிருக்கும்.

ஏதென்ஸ் நகரம் சரித்திரப் பிரசித்திபெற்ற பெர்ஸியப் போரிலே (Persian war) ஈடுபட்டிருந்த பொழுது ஏதென்ஸுக்கு வெற்றிப் பாதையை வகுத்துக் கொடுக்க முனைந்து நின்றான் மற்றொரு பெரிய ராஜதந்திரி, அவனின் பெயர் **தெமிஸ்டாகில்ஸ்** (Themistocles). அசாதாரணமான அறிவாற்றலையும் மனோசக்திகளையும் படைத்தவன் அவன். அளவு கடந்த முன்யோசனையையுடையவன். சூழ்ச்சிக் கலையிலே நிபுணன். ஏதென்ஸ் வரலாற்றிலேயே மிகப்பெரிய மனிதன் அவன்தான் என்று இன்றும் பலர் கருதுகின்றனர். ஏதென்ஸில் மட்டுமல்ல, கிரீஸ் நாட்டிலே தோன்றிய பெரிய மனிதர்களிலெல்லாம் அவனே மிகப் பெரிய மனிதன் என்றும் பலர் கருதுகின்றனர். பெர்ஸிய யுத்த காலத்தில் ஏதென்ஸுக்கு வந்த ஆபத்துக்களையெல்லாம் ஏதென்ஸ் சாதுர்யமாகக் கடந்து சென்றது அவனுடைய தந்திரத்தாலும் யுக்தியாலுமே. ஐரோப்பாக் கண்டத்திலே ஒரு சாம்ராஜ்யத்தையே ஸ்தாபிப்பதற்காக ஸ்பார்ட்டா செய்த முயற்சிகளனைத்தையும் தனது புத்தி சாதுரியத்தால் முறியடித்தவன் இவன். ஏதென்ஸ் நகரைக் கடலாதிக்கம் பெற்ற வல்லரசாக (Sea - Power) மாற்றிக் கொடுத்ததே தெமிஸ்டாகில்ஸ்தான் என்றால் அது மிகையாகாது. அயராத உழைப்பாலும் கொள்கையாலும் அறிவாற்றலாலும் ஏதென்ஸ்

நகரம் பிற்காலத்தில் ஒரு சாம்ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு அவன் பலமான அஸ்திவாரங்களைத் தோற்றுவித்தான். **ஹெல்லாஸ் ராணி** (Queen of the Hellas) என்று பிற்காலத்தில் அழைக்கப்பட்ட ஏதென்ஸ் நகரின் மகத்துவத்திற்கும் அமோகப் புகழுக்கும் வித்திட்டவன் தெமிஸ்டாக்கிள்ஸ். இவனுடைய வாழ்க்கைச்சரிதையைப் புளூடார்க் மிக அழகாக எழுதியுள்ளார்.

கிரேக்க வரலாற்றிலேயே மிகப் பிரசித்தி பெற்ற போர்கள் இரண்டு. ஒன்று பெர்ஸியப் போர் (Persian war). மற்றொன்று பெலப்பொனீஸியப் போர் (Peloponesian war). ஹிரோடோடஸ் என்ற புகழ் பெற்ற கிரேக்க சரித்திர எழுத்தாளன் பெர்ஸியப் போரைப் பற்றிய வரலாறு ஒன்றை மிகத் திறமையுடனும் ஆராய்ச்சி நுணுக்கத்துடனும் எழுதியிருக்கிறான். தூஸிடிடிஸ் (Thucydides) என்ற மற்றொரு பிரபல சரித்திர எழுத்தாளன் பெலப்பொனிஸியப் போரைப்பற்றிய வரலாறு ஒன்றைச் சொற்செறிவு பொருட்செறிவு இரண்டும் ஒருங்கே மிளிருமாறு ஆக்கியிருக்கிறான். இவ்விரு வரலாற்று நூல்களும் செஞ்சொற் காவியங்கள் போன்ற சுவை படைத்தவை. இந்த இரு போர்களைப் பற்றிய விஷயங்களனைத்தையும் ஏறக்குறைய இந்த இரு நூல்களிலிருந்து மட்டும்தான் நாம் சரிவரத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

பெர்ஸிய யுத்தத்தைப் பற்றியும் அதில் ஏதென்ஸின் பங்கு என்ன என்பதைப் பற்றியும் ஓரளவு நாம் தெரிந்து கொள்வது நன்று.

கி. மு. 490-லிருந்து கி. மு. 468 வரை பெர்ஸியப் போர் நடந்தது. பெர்ஸியர்கள் அப்போது மிகுந்த பலம் வாய்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்கள் ஒரு அகண்ட சாம்ராஜ்யத்தையே நிறுவியிருந்தனர். ஆசியாமைனரிலிருந்த கிரேக்கர்கள் வெகு காலத்துக்கு முன்னமேயே அவர்களின் ஆதிக்கத்துக்குள் வந்து விட்டார்கள்.



பெர்ஸிய சாம்ராஜ்யம் **டேரியஸ்** (Darius) என்ற பெர்ஸிய மன்னனால் 21 பெரிய மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. அதில் இரண்டு மாகாணங்கள் முழுவதிலும் ஆசியாக் கண்டத்தில் வாழ்ந்த கிரேக்கர்களை (Asiatic Greeks) ஒன்றுகூட்டி அவற்றை அவர்களின் நிரந்தர வாழ்க்கைத் தலமாக்கினான். அவ்விரு மாகாணங்கள் **லிடியா** (Lydia), **பிரிஜியா** (Phrygia) என்று அழைக்கப்பட்டன. பெர்ஸியர்களுக்கு நாடு பிடிக்கும் ஆசை மென்மேலும் வளர்ந்து கொண்டேயிருந்தது. கிரீஸ் பிரதேசத்தைத் தாக்கி எப்படியாவது கிரீஸ் முழுவதையும் பிடித்துத் தம் ஆதிக்கத்துக்குள் கொண்டு வந்துவிட வேண்டுமென்பது அவர்களின் வெகு நாளைய ஆசை. இவ்வாசையின் காரணமாகவும் வேறு பல சந்தர்ப்பச் சூழ் நிலைகளின் காரணமாகவும் போர் மூண்டது.

இந்த ஆபத்து கிரீஸ் பிரதேசம் அனைத்திற்கும் பொதுவான ஆபத்து. எனவே, கிரேக்கப் பிரதேசத்திலுள்ள நகர ராஜ்யங்கள் (City states) அனைத்தும் இயல்பாகவே ஒன்றுகூடி ஒரு கூட்டு முன்னணியை அமைத்துப் பெர்ஸியர்களை எதிர்த்திருக்க வேண்டும். ஆனால், இத்தகைய பேராபத்துத் தங்களைச் சூழ்ந்து கொண்டிருந்த பொழுதுகூடக் கிரேக்க நகர ராஜ்யங்களுள் ஒற்றுமை ஏற்படுவது அரிதாயிருந்தது. வெகு காலமாகத் தங்களுக்குள் இருந்த விரோதங்களையும் பிளவுகளையும் அவைகள் எளிதில் மறக்க முடியவில்லை. அப்பொழுது கிரேக்க ராஜ்யங்களுள் மிக உன்னத நிலையை அடைந்து அபரிமிதமான செல்வாக்குப் பெற்றிருந்தவை ஸ்பார்ட்டாவும் ஏதென்ஸும்தான். அதிலும் ஸ்பார்ட்டா ஏதென்ஸைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு சக்தியும் செல்வாக்கும் பெற்று, அண்டை நாடுகள் பலவற்றைத் தன் சொற்படி ஆடச் செய்து கொண்டிருந்தது. மற்ற நகர ராஜ்யங்கள் அநேகமாக மிகச் சாதாரண

மானவையாயிருந்தன. அத்துடன் அங்கே உள்நாட்டுக் கட்சிகளும் பிளவுகளும் அதிகரித்து, அவை பலமிழந்து நின்றன. எல்லா நகர ராஜ்யங்களும் பெர்ஸியர்களை எதிர்ப்பதற்கு ஏகோபித்து ஒன்று கூடாவிட்டாலும், வந்திருக்கும் பேராபத்தை உணர்ந்து, ஆங்காங்கே சிற்சில நகர ராஜ்யங்கள் தங்களுக்குள் ஒரு கூட்டுறவை ஏற்படுத்திக் கொள்ள முயன்றன. ஸ்பார்ட்டா, ஏதென்ஸ் இவ்விரு நாடுகளால் கிரீஸ் பிரதேசத்திலுள்ள நகர ராஜ்யங்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து ஒரே கூட்டணியாக ஆக்கியிருக்க முடியும். ஏதென்ஸ் அதை விரும்பியது. ஸ்பார்ட்டா அதை விரும்புவது போல் நடித்தது. ஏதென்ஸ் ஸ்பார்ட்டாவிடம் ஒற்றுமையின் அவசியத்தையும் கூட்டு எதிர்ப்பு எவ்வளவு முக்கியம் என்பதையும் வற்புறுத்தியது. ஸ்பார்ட்டாவும் அதை உணர்ந்தது. ஆவன சிலவற்றைச் செய்தது. ஆனால், ஏதென்ஸின் மேல் ஸ்பார்ட்டாவுக்கிருந்த அளவு கடந்த பொறாமை உபயோகமான முயற்சிகள் அனைத்திலும் குறுக்கிட்டுக் கொண்டேயிருந்தது. ஏதென்ஸைத் தாக்கிக் கைப்பற்றி அதைத் தன் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்துவிட வேண்டுமென்ற எண்ணத்தை வெகு காலமாக ஸ்பார்ட்டா தன் நெஞ்சில் வளர்த்துக் கொண்டேயிருந்தது. ஏறக்குறையப் பெர்ஸியர்கள் கிரீஸின் மேல் படையெடுக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்த அதே சமயம் ஸ்பார்ட்டா அண்டை நாட்டுக் கூட்டாளிகள் சிலரைச் சேர்த்துக் கொண்டு ஏதென்ஸைத் தாக்கியது. இதில் ஏதென்ஸ் வெற்றியடைந்ததோடு மட்டுமின்றி எதிரிகளுக்குச் சொந்தமான இரண்டு பகுதிகளையும் கைப்பற்றியது. இந்தச் சூழ்நிலையில் ஸ்பார்ட்டா ஏதென்ஸுடன் சேர்ந்தோ அல்லது ஏதென்ஸைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டோ ஒரு கூட்டு முன்னணியை ஏற்படுத்திப் பெர்ஸியர்களை எதிர்ப்பதென்பது கனவிலும் சேராமல்



நனவிலும் சேராமல் இரண்டுக்கும் பொதுவான ஒரு நிலையில் இருந்தது.

கிரேக்கர்களுக்கும் பெர்ஸியர்களுக்கும் போர் நடந்தது தவிர்க்க முடியாத தொன்று என்றுதான் பல சரித்திர மேதைகள் கருதுகின்றனர். கிரேக்கர்களும் பெர்ஸியர்களும் ஒன்றுக் கொன்று எதிர்மறையான நாகரிகங்களை உடையவர்கள்; அவர்களின் குணாதிசயங்களும், கொள்கைகளும், பழக்க வழக்கங்களும், அரசியல் அமைப்புகளும் மரபுகளும் ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்டவை. இத்தகைய இரு மக்கள் பக்கம் பக்கமாக வாழ நேரிட்டால் அவர்களுள் பகைமை வளருவது இயற்கை. இக்காலத்திலே அவ்வாறு ஏற்படுவது அபூர்வம். ஆனால், இப்போதுள்ள அரசியல் மனோபாவமும் சிந்தனைப் பாணியும் வேறு. அக்காலத்தில் தங்களுக்குப் பிடிக்காதவர்களை வென்று தங்களுக்கு அடிமைப்படுத்திக் கொள்வதென்பது பேரரசுகள் சிற்றரசுகள் இரண்டையும் பீடித்திருந்த ஒரு பொதுவான மனப்பான்மை. மேலும் பெர்ஸியா ஏற்கெனவே பல நாடுகளைக் கைப்பற்றியிருந்ததால், ஆதிக்க வெறி அதனிடம் அதிகமாக வளர்ந்திருந்தது. கிரீஸைக் கைப்பற்றுவது தனக்கு இன்றியமையாத ஒரு தேவை என்று அது நினைத்தது. (" A conquering power sets no limits to its conquests, but is urged by success to advance even farther afield by what seem imperative necessities "—Woodhouse).

பெர்ஸியர்களைக் கிரேக்கர்கள் வேறு பல காரணங்களுக்காகவும் வெறுத்தார்கள் (1) பெர்ஸிய ஆதிக்கத்தில் இரண்டு மாகாணங்களில் கிரேக்கர்கள் (Asiatic Greeks) இருந்ததாக நாம் ஏற்கெனவே கூறினோம். இந்தக் கிரேக்கர்களுக்குப் பெர்ஸியர்களின் பழக்க வழக்கங்களும், பெர்ஸிய அரசாங்கக் கொலு மண்டபத்தில் நடைமுறையில் இருந்த அடிமைத்தனமான மரியாதை

முறைகளும் ஆசாரங்களும் (Slavish etiquette) அறவே பிடிக்க வில்லை. அத்துடன் பெர்ஸியர்கள் கிரேக்கக் கடவுள்கள், மதம், கலை இவற்றை அடிக்கடி மரியாதைக் குறைவாகப் பழித்துப்பேசிக் கிரேக்கர்களின் மனம் புண் படும்படி நகையாடினார்கள். (2) பெர்ஸியர்கள் கிரேக்க வாணிகத்துக்கு ஓரளவு ஆதரவு கொடுத்தார்கள். ஆனால், அதற்குப் பதிலாகத் தங்களுக்கு நிறையக் கப்பம் கட்டும்படி அவர்களை வற்புறுத்தினார்கள். அத்துடன் தாங்கள் வேண்டும்போது கிரேக்கர்கள் தங்களுக்கு நிறையத் தளவாடங்களையும் கப்பல்களையும் அனுப்பிக் கொடுக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்திருந்தார்கள். (3) பெர்ஸியர்கள் கிரேக்க நகர ராஜ்யங்களிலே குடியரசு சக்திகளை வளரவிடாது தடுக்க முயற்சித்தனர். கொடுங்கோல் மன்னர்கள் அங்கே தோன்றிக் கிரேக்க மக்களை அடக்கிக் கொடுமைப்படுத்துவதற்குத் தங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு உதவி செய்தார்கள். குடியரசு முறையிலே அமோகப் பற்றுக்கொண்ட ஏதென்ஸ் குடியரசு முறைக்கு யமனாக மாறிக் கொண்டிருந்த பெர்ஸியாவை அடியோடு வெறுத்ததில் ஆச்சரியமில்லை. (4) ஏதென்ஸிலிருந்து தேசப்பிரஷ்டம் செய்யப்பட்ட **ஹிப்பியாஸ்** (Hippias) என்ற ஏகாதிபத்தியக் கொடுங்கோலனுக்குப் பெர்ஸியா அடைக்கலம் கொடுத்து, ஆதரவளித்து வைத்திருந்தது. அவன் தன்னைத் தேசப்பிரஷ்டம் செய்த ஏதென்ஸின் மேல் படையெடுக்குமாறு பெர்ஸியர்களை ஓயாது தூண்டிக் கொண்டிருந்தான். ஏதென்ஸை வெல்லுவதற் குரிய மார்க்கங்களையும் ரகசியங்களையும் அவர்களுக்கு அவன் புகட்டிக்கொண்டே யிருந்தான்.

பெர்ஸிய ஆட்சிக்குள் இரு தனி மாகாணங்களில் வாழ்ந்து வந்த ஆசிய கிரேக்கர்களுக்கு மேலே கூறப் பட்ட காரணங்களால் பெர்ஸியர்களின் மேல் அடங்காச் சினமும் பகைமையும் ஏற்பட்டது. இந்த ஆசியகிரேக்கர்



களுக்குத் தங்களின் தாயகமான கிரீஸின்மீது எப்பொழுதும் குறையாத பற்றும் பாசமும் இருந்து வந்தது. கிரீஸுக்குச் சதா தொந்தரவு கொடுத்துக்கொண்டு வந்த பெர்ஸிய அரசாங்கத்தின்மீது அவர்களுக்கு உட்பகை வளர்ந்துகொண்டே யிருந்தது. **அரிஸ்டகோரஸ்** (Aristogoras) என்பவனின் தலைமையின்கீழ் ஆசிய கிரேக்கர்கள் பெர்ஸியாவை எதிர்த்துப் புரட்சி செய்தார்கள். அரிஸ்டகோரஸின் சுயநலமும் சிறிது இதில் கலந்திருந்தது. புரட்சிக்கு உதவியளிக்குமாறு ஸ்பார்ட்டாவை அரிஸ்டகோரஸ் வேண்டினான். குறுகிய மனப் பான்மை கொண்ட ஸ்பார்ட்டா உதவி செய்ய மறுத்தது. அரிஸ்டகோரஸின் வேண்டுகோளுக் கிணங்கி ஏதென்ஸும், **எரிட்ரியா** (Eretria) நகரமும் புரட்சிக்கு நிறைய உதவின. ஏதென்ஸும் எரிட்ரியாவும் கிரீஸ் நாட்டில் அயோனியப் பிராந்தியத்தைச் சேர்ந்தவை. ஆசிய கிரேக்கர்கள் அரிஸ்டகோரஸின் தலைமையில் ஆரம்ப கட்டங்களில் பெர்ஸியர்களுக்கு எதிராகச் சில வெற்றிகளை அடைந்தார்கள். இதை ஆசிய கிரேக்கர் களின் சுதந்தரப் போராட்டம் என்று கூறலாம். இறுதியில் பெர்ஸியர்களே வெற்றியடைந்தார்கள். ஆசிய கிரேக் ஆசிய கிரேக்கர்கள் நசுக்கப்பட்டனர். ஆசிய கிரேக் கர்கள் நடத்திய இந்தப் புரட்சி சரித்திரத்திலே **அயோனிக் கலகம்** (Ionic Revolt) என்று அழைக்கப்படுகின்றது. "பெர்ஸியப் கிரீஸுக்கும் பெர்ஸியாவுக்கும் நடந்த போருக்கு" இந்தக் கலகமே உடனடியான காரணம். இப்புரட்சி கி. மு. 498 லிருந்து கி. மு. 494 வரை நடந்தது. பெர்ஸிய மன்னனான **டேரியஸ்** (Darius) இந்தக் கலகத் தால் மிக ஆத்திர மடைந்தான். இக்கலகத்திற்கு உதவி செய்த ஏதென்ஸையும் எரிட்ரியாவையும் எப்படியாவது பூண்டோடு அழித்தே தீரவேண்டுமென்று முடிவு கட்டினான். "பெர்ஸியப் போர்" ஆரம்பித்தது.

பெர்ஸியப் போர் ஏதென்ஸுக்கும் அதனுடைய

கூட்டாளியான எரிட்ரியாவுக்கும் விரோதமாக எழுந்த போரெனினும், ஏற்கெனவே கூறியதுபோல் அது கிரீஸ் அனைத்துக்கும் தோன்றிய ஒரு ஆபத்து என்பதை மறந்தற்கில்லை. ஏதென்ஸ் இதை மிக நன்கு உணர்ந்தது. கிரீஸிலுள்ள நாடுகளனைத்தும் ஒரு கூட்டுறவைத் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்டு எதிரியை முறியடிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கிரீஸின் பல நகர ராஜ்யங்களுக்குத் தூதுவர்களை அனுப்பியது. அவைகளிடமிருந்து ஒத்துழைப்பும் உதவியும் ஆதரவும் கோரியது. ஓரிரண்டு நாடுகளைத் தவிர, ஒன்றுகூட ஒத்துழைப்போ உதவியோ அளிக்க முன் வரவில்லை. நிறைய உதவி அளிக்க விரும்புவதைப்போல் பாசாங்கு செய்த ஸ்பார்ட்டா உண்மையில் பேருக்குத்தான் உதவி செய்ததே யொழிய அதிகமானதும் உபயோகமானதுமான உதவி எதுவும் செய்யவில்லை. ஏதென்ஸினுடைய தனிப்பட்ட படை பலம் அப்பொழுது மிகக் குறைவாகவே இருந்தது.

இருப்பினும் பெர்ஸியப் போரில் இறுதி வெற்றி ஏதென்ஸுக்கே கிடைத்தது. அதிலும் **மேரதன்** (Marathan) என்ற வெட்டவெளியில் நடந்த சண்டையில் ஏதென்ஸ் வீரர்கள் அபாரமான சாகஸத்தையும் சாதுரியத்தையும் திறமையையும் போர்த் தந்திரங்களையும் காட்டினார்கள். **மேரதன் சண்டை**யிலே ஏதென்ஸுக்குக் கிடைத்த வெற்றி ஒரு அதிசயமாகவே கருதப்படுகின்றது. மேரதன் வெற்றி ஏதென்ஸ் நகரில் அப்பொழுது அண்மையில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த குடியரசின் வெற்றியென்றே போற்றப்பட்டது. போர்க் காலங்களில் குடியரசு முறைகளைத் தற்காலிகமாக ஒத்திவைத்துவிட்டுச் சர்வாதிகார முறைகளினால் நாட்டு மக்களை ஒன்றுகூட்டிப் பலத்தைத் திரட்ட வேண்டுமென்று இப்பொழுது கூறுவது போலவே அக்காலத்திலும் கூறப்பட்டது. பெரிய வல்லரசுகள் படையெடுத்து



வரும்பொழுது குடியரசுகள் தோற்றுவிடும்; சர்வாதிகார ஆட்சி முறையைக் கொண்ட நாடுகளே (Dictatorships) எதிரியைச் சமாளிக்க முடியும் என்ற அபிப்பிராயத்திற்கு மேரதன் வெற்றி சாவு மணி அடித்தது. சுதந்தரத்தின்மேல் பற்றும், குடியரசின்மேல் பற்றும் இருந்து நாட்டு மக்கள் பிளவுகளை மறந்து ஒன்று கூடுவார்களானால், நிச்சயம் எதிரியை முறியடிக்க முடியும் என்பதை ஏதென்ஸ் மக்கள் ருசுப்படுத்தினார்கள். பெர்ஸியப் போரிலே மேரதன் சண்டைக்குப் பின்னால் நடந்த பல சண்டைகளிலும் ஏதென்ஸ் மக்கள் வெற்றிபெற்றனர். மேரதன் வெற்றியை அடைந்தபின் ஏதென்ஸ் மக்களுக்கு ஒரு புதிய நம்பிக்கையும் உற்சாகமும் அளவுக்கு மீறிய வெற்றி மனப்பான்மையும் அதிசயமான வீரமும் தோன்றியது. எவராலும் விவரிக்கப்பட முடியாத ஒரு விசித்திரமான சுயநம்பிக்கை அவர்களுள் எங்கணும் பரிணமித்தது. பெர்ஸிய வல்லரசு எவராலும் வெல்லப்பட முடியாததொன்று என்ற மூடநம்பிக்கை (Myth) இற்று வீழ்ந்தது. மேரதன் வெற்றி பெர்ஸியப் போர் முடியுங்காலம்வரை ஏதென்ஸ் வீரர்களின் நினைவை விட்டு அகல வில்லை. மேரதனில் தாங்கள் வெற்றியடைந்த ஓறையிலிருந்துதான் தங்களின் நற்காலம் ஆரம்பித்ததாக அவர்கள் கருதினார்கள். அதுதான் தங்களுடைய அதிர்ஷ்டத்தின் ஆரம்பம் என்று நம்பினார்கள். தங்களால் இன்னும் பல எதிரிகளை வெல்ல முடியும் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தைக்கூட நிறுவிவிட முடியும் என்று நினைத்தார்கள். அவ்வாறே பிற்காலத்தில் ஒரு சாம்ராஜ்யத்தையும் நிறுவினார்கள். மேரதன் வெற்றி தினத்தன்று அவர்களின் தெய்வமே அவர்களின் முன் தோன்றி, "இனிமேல் உங்களுக்கு எக்காலமும் நற்காலமே, முன்னேறுங்கள்; வாழுங்கள்; முடிவற்ற புகழடையுங்கள்" என்று கூறியதைப்போல் அவர்கள் மனத்தில் கற்பனை செய்து களிப்படைந்

தார்கள். மேரதன் சண்டை ஏதென்ஸ் வரலாற்றில் மட்டுமல்ல, கிரேக்க வரலாற்றில் மட்டுமல்ல, உலக வரலாற்றிலேயே உன்னதமான இடம் பெற்றுவிட்டது. உலக சரித்திரத்திற்கு அதிமுக்கியமான திருப்பங்களைக் கொடுத்து அதை மாற்றியமைத்த 15 போர்களுள் மாரதன் சண்டையும் ஒன்றெனக கருதப்படுகின்றது.

பெர்ஸியப் போரிலே ஏதென்ஸ் தோற்றுப் போயிருந்தால் உலகம் எவ்வளவோ அறிவுச் செல்வங்களையும் கலைச் செல்வங்களையும் இழந்திருக்கும்; அற்புதமான அரசியல் ஞானத்தை இழந்திருக்கும். ஐரோப்பிய சரித்திரமே மிகக் கேவலமான நிலையில் மாறிப் போயிருந்திருக்கும். (The victory of Athens in the persian wars "secured for mankind the intellectual treasures of Athens, the growth of free institutions, the liberal enlightenment of the Western world, and the gradual ascendancy for many ages of the great principles of Europeon civilisation"-Creasy).

ஏதென்ஸ் பெர்ஸியப் போரில் தான் அடைந்த வெற்றியின்மூலம் கிரீஸ் அனைத்தையுமே காப்பாற்றிவிட்டது. பெர்ஸியப் போரிலே அடைந்த வெற்றிக்குப் பின் ஏதென்ஸ் புகழிலும் செல்வாக்கிலும் ஓங்க ஆரம்பித்தது. ஸ்பார்ட்டா தாழ்ந்தது.

குடியரசு நாடான ஏதென்ஸ் பெர்ஸியப் போரிலே வெற்றியடைந்தவுடன் ஏதென்ஸுக்கு மட்டுமல்லாது, குடியரசுக்கே கிரீஸ் முழுவதும் ஒரு தனி மதிப்பு ஏற்பட்டுவிட்டது. குடியரசில் வாழும் மக்களுக்குத்தான் சுதந்தர வேட்கை அதிகமிருக்குமென்றும், சுதந்தர வேட்கை அதிகமுள்ள மக்கள்தான் அந்நியருக்கு அடிமையாவதை வெறுத்து உயிரைக் கொடுத்தும் தங்களுடைய நாட்டைக் காப்பார்களென்றும், குடியரசில் வாழும் சுதந்தர வேட்கையுள்ள மக்களுக்குத்தான் எதிரிகளை வீழ்த்துவதற்கு வேண்டிய உண்மையான



ஆவேசமும் பலமும் ஏற்படுமென்றும் அவர்களிடத்திலே புரியமுடியாத ஒரு சக்தி தோன்றி அவர்களின் சுதந்தரத்தைக் காக்குமென்றும், பலவாறு எல்லா இடங்களிலும் பேசப்பட்டது, எழுதப்பட்டது. கிரீஸிலுள்ள அத்தனை நகர ராஜ்யங்களிலும் குடியரசு மனப்பான்மை நெருப்புப்போல் பரவி வளர ஆரம்பித்தது. ஏதென்ஸ் நகரமே கிரீஸிலுள்ள அத்தனை நகர ராஜ்யங்களுக்கும் வழி காட்டவும் தலைமை தாங்கவும் யோக்கியுதையுள்ளது என்பதைக் கிரீஸிலுள்ள அனைவரும் ஒப்புக் கொண்டனர். ஏதென்ஸ் தனக்கும் தெரியாமல் தன்னுள் மறைந்து ஒளிந்து கிடந்த அசாதாரணமான சக்தியையும் பலத்தையும் தானே பெர்ஸியப் போரில் தான் கண்டது. ஏதென்ஸுக்கு இருந்த மட்டற்ற சக்தியைக் கிரீஸின் மற்ற நாடுகளும் பெர்ஸியப் போரில்தான் கண்டன.

பெர்ஸியப் போரில் ஏதென்ஸ் அடைந்த வெற்றி பெர்ஸியாவின் ஆட்சிக்குள் அகப்பட்டுக் கிடந்த ஆசிய கிரேக்கர்களுக்கும் விடுதலை அளித்தது. பெர்ஸியப் போரில் வெற்றிக்கு மேல் வெற்றியைத் தொடர்ந்து அடைந்து கொண்டே வந்த ஏதென்ஸைக் கண்டு கிரீஸிலுள்ள பல நாடுகள் அஞ்சியதுடன், மனமாரப் பாராட்டவும் செய்தன. மாரத்தன் வெற்றிக்குப் பின்னால், குறிப்பாகப் பெர்ஸியப் போரின் இறுதிக் கட்டங்களில் ஏதென்ஸுக்கு அவை வீரர்களையும் கப்பல்களையும் முடிந்தமட்டும் கொடுத்து உதவின. ஏதென்ஸ் அடையும் வெற்றியால் தங்களுடைய நாடுகளும் காப்பாற்றப்படும் என்ற உண்மையைக் கடைசியில் உணர்ந்துதான் அவ்வாறு செய்தன. அந்த நாடுகளெல்லாம் இப்பொழுது ஏதென்ஸுடன் விசேட உறவு கொண்டாடியதுடன், ஏதென்ஸ் தன்னை மையமாக வைத்துக் கிரீஸிலே ஒரு பெரிய சமஷ்டியைத் (Confederacy) தோற்றுவிக்க வேண்டுமென்று ஏதென்ஸுக்குத் திரும்பத் திரும்ப யோசனை கூறின. போர்

முடிந்தவுடன் தங்கள் தங்கள் நாடுகளுக்குத் திரும்பிச்
சென்ற வீரர்களும் மாலுமிகளும் ஏதென்ஸின் பேராற்
றலையும் வெற்றியை அடைவதற்கு அது கையாண்ட
உபாயங்களையும், எவரையும் பிரமிக்க வைக்கும்
ஏதென்ஸ் மக்களுடைய வீரத்தையும் வானளாவப்
புகழ்ந்தனர்.

பெர்ஸியப் போரின் ஆரம்பத்தில் ஏதென்ஸுக்கு
உதவி யளிக்கவும் அதனுடன் ஒத்துழைக்கவும் விரும்
பாத ஸ்பார்ட்டா, நாளடைவில் கிரேக்க மண்டலத்தின்
நாடுகள் சிலவற்றுடன் கூட்டுறவை ஏற்படுத்திக்
கொண்டு, ஒரு கூட்டு முன்னணியைத் தோற்றுவித்துப்
பெர்ஸியர்களைத் தீவிரமாக எதிர்த்தது. பெர்ஸியப்
போர் நடந்து கொண்டிருந்த காலத்திலேயே ஏதென்
ஸின் கப்பல் படை நன்கு விரிந்து பெரிதாகி விட்டது.
பெர்ஸியப் போர் முடிந்தவுடன் ஏதென்ஸ் பெரிய கடற்
படையைக் கொண்டதாய்க் கடலாதிக்கம் பெற்றுக்கடல்
வல்லரசாக (Sea Power) மாறியது. ஸ்பார்ட்டா பெர்ஸி
யப் போர் முடிந்த காலத்தில் முன்னிருந்த நிலையை
விடக் குன்றியதா யிருந்தது. கிரேக்க மண்டலம் முழு
வதுக்கும் ஒரு காலத்தில் பிரதிநிதி போன்று விளங்கிய
ஸ்பார்ட்டா இப்பொழுது கிரேக்க மண்டலத்தின் பெலப்
பொனீஷியப் பகுதிக்குள் அடங்கிய நாடுகளுக்கு
மட்டுமே அதுவும், நிலைகுலைந்த முறையில் தலைமை
தாங்கி நின்றது. ஏதென்ஸின் கடலாதிக்கத்தைக்
(Maritime empire) கண்டு பொருமையுற்ற ஸ்பார்ட்டா
கிரேக்க மண்டலத்தின் தரைப் பகுதியில் அதற்குப்
போட்டியாக ஒரு சாம்ராஜ்யத்தை நிறுவத் திட்டமிட்
டது. கடல் பகுதியில் ஏதென்ஸுக்குச் சமமாகத் தானும்
ஒரு ஆதிக்கத்தை நிறுவ வேண்டும் என்று முயற்சிகள்
பல செய்து அவற்றில் தோல்வியடைந்த பின்தான்
ஸ்பார்ட்டா தரைப்பகுதியில் ஒரு சாம்ராஜ்யத்தை
நிறுவும் முயற்சியில் ஈடுபட்டது. இதற்கு முன்னோடி



யாகக் கிரேக்க மண்டலத்தின் சில குறிப்பிட்ட நாடு
களைக் கொண்டு ஒரு புதிய கூட்டு சமஷ்டியைத்
(Confederacy) தோற்றுவித்து அதற்குத் தன்னைத்
தலைமையாக்கிக் கொள்ளச் சூழ்ச்சி செய்தது. ஏற்
கெனவே நாம் கூறியபடி, அப்பொழுது ஏதென்ஸுக்
குத் தலைவனுயிருந்த தெமிஸ்டாக்கில்ஸ் இந்தச் சூழ்ச்
சியைத் தன் புத்திகூர்மையால் திறம்பட உணர்ந்து,
அத்திட்டத்தையே முறியடித்தான். தெமிஸ்ட்டாக்
கில்ஸ் தனக்கு இழைத்த தீங்கை ஸ்பார்ட்டா மறக்கவு
மில்லை: மன்னிக்கவுமில்லை. தெமிஸ்ட்டாக்கில்ஸினு
டைய வீழ்ச்சிக்கான சூழ்ச்சிகளைத் தீட்டிக் கொண்
டிருந்தது. சிறிது காலத்தில் அரிஸ்டைட்ஸ்
(Aristides) என்பவன் ஏதென்ஸின் அதிகார பீடத்
திற்கு வந்தான். தெமிஸ்ட்டாகில்ஸும் அரிஸ்டைட்
ஸும் பரம்பரை விரோதிகள். தெமிஸ்ட்டாகில்ஸ் தீவிர
மான குடியரசுவாதி அரிஸ்ட்டைட்ஸும் குடியரசு
வாதிதான் என்ருலும் அவன் ஒரு மிதவாதி. தெமிஸ்ட்
டாக்கில்ஸை ஒழிக்கா விட்டால் தன்னுடைய பதவிக்கும்
புகழுக்கும் ஆபத்து காத்துக் கொண்டே யிருக்கிற
தென்று நினைத்தான் அரிஸ்ட்டைட்ஸ். இத்தகைய
சந்தர்ப்பத்தைத்தான் ஸ்பார்ட்டா எதிர்பார்த்துக்
கொண்டிருந்தது. தெமிஸ்ட்டாகில்ஸ் சம்பந்தப்பட்ட
சில தஸ்தாவேஜுகள் தங்கள் கையில் கிடைத்திருப்ப
தாகவும் அவற்றிலிருந்து தெமிஸ்ட்டாகில்ஸ் ஏதென்
ஸின் எதிரிகளுக்குக் கையாளாக இருந்து வேலை செய்
திருப்பதாகத் தெரிய வருகிறதென்றும் ஸ்பார்ட்டா ஒரு
வதந்தியைப் பரப்பியது. பாஸானியாஸ் (Pausanias)
என்ற ஸ்பார்ட்டன் தேசத் துரோகியுடன் தெமிஸ்ட்டா
கில்ஸும் இணைந்து வேலை செய்தான் என்று
ஸ்பார்ட்டா குற்றம் சாட்டியது. அரிஸ்ட்டைட்ஸும்
இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தையே எதிர்பார்த்துக்
கொண்டிருந்தான். தெமிஸ்ட்டாகில்ஸ் தேசப்பிரஷ்டம்

செய்யப்பட்டான். பல நாடுகளுக்குச் சென்று பல வழிகளில் அமைதி காணவும் வஞ்சம் தீர்த்துக்கொள்ளவும் முயன்ற தெமிஸ்ட்டாக்கிலஸ் கி. மு 458 ல் மரணமடைந்தான். அவன் இயற்கை மரணம் எய்தியதாகவே நம்பப் படுகிறது.

பெர்ஸியப் போர் முடிந்துவிட்டதன் பின்னர் ஏதென்ஸ் கடற்கரை நாடுகளையும் தீவுகளையும் கொண்ட ஒரு கடல் சாம்ராஜ்யமாக விளங்கியது என்று ஏற்கெனவே குறிப்பிட்டோம். இந்த நிலைக்கு வித்திட்டவன் தெமிஸ்ட்டாகில்ஸ். இதற்கு அஸ்திவாரத்தைக் கட்டியவன் அரிஸ்ட்டைட்ஸ்.

ஏதென்ஸின் தலைமையில் **டிலாஸ்** (Delos) கூட்டுச் சமஷ்டி என்று ஒரு பெரிய சமஷ்டி பெர்ஸிய யுத்தம் முடிந்ததன் பின்னர்த் தோன்றியது. இந்தக் கூட்டுச் சமஷ்டியின் அமைப்பாளன் அரிஸ்ட்டைட்ஸ். இந்தக் கூட்டுச் சமஷ்டியை அடிப்படையாகக் கொண்டுதான் பின்னால் ஏதென்ஸ் சாம்ராஜ்யமே தோன்றியது. பலவந்தத்தால் தோன்றியதல்ல இது. இக்கூட்டுச் சமஷ்டியில் அங்கம் வகித்த நாடுகள் தங்களின் சொந்த விருப்பத்தின் பேரிலேயே இதில் சேர்ந்தன. இந்தக் கூட்டுச் சமஷ்டியில்சேருவதால் நிறையப் பலனுண்டு என்பதைப் பல்வேறு நாடுகளுக்கும் சாதுரியமான முறையில் தெளிவாக விளக்கி அவைகளை இக்கூட்டுச் சமஷ்டியில் வலிய வந்து சேருமாறு கவர்ந்த பெருமை அரிஸ்ட்டைட்ஸையே சாரும். ஆசியக் கடற்கரையில் இருந்த நாடுகள் பல, ஏஜியன் கடலைச் சேர்ந்த தீவுகள் பல, உட் பிரதேச நகரங்கள் பல இக்கூட்டுச் சமஷ்டியில் சேர்ந்தன. இன்னும் இதைப்போன்று பல நாடுகள் அதில் அங்கம் வகித்தன. இக்கூட்டுச் சமஷ்டியின் குறிக்கோள்களுள் முக்கியமானவை மூன்று. (1) ஏஜியன் கடலிலே பெர்ஸியர்களை எந்தக் காரணத்தைக் கொண்டும் நுழைய விடாமல் தடுப்பது. (2) கிரேக்கர்கள் வாழ்ந்த தீவுகளையும், ஆசிய நகரங்களையும் அந்நியரின் ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பது. (3) பெர்ஸியாவைக் கொள்ளையடித்துப் பெர்ஸிய யுத்தத்திலே தங்களுக் கேற்பட்ட செலவிற்கும் நஷ்டத்திற்கும் ஈடு செய்து கொள்வது.



இக்கூட்டுச் சமஷ்டியிலே பெரிய நாடுகள் மட்டுமின்றி மிகச் சிறிய நாடுகளும் அங்கம் வகித்தன. இக் கூட்டுச் சமஷ்டிக்குப் பெரிய நாடுகள் கப்பல்களையும் வீரர்களையும் அளித்தன. சிறிய நாடுகள் வருடா வருடம் பணமாக ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுத்தன. **டிலாஸ்** (Delos) பட்டினத்திலே இக்கூட்டுச் சமஷ்டியின் பொதுச் சபை நிறுவப்பட்டது. இப்பொதுச் சபை விவாதங்களில் ஏதென்ஸ் போன்ற பெரிய நாடுகளுக்கு இயல்பாகவே செல்வாக்கு அதிகம் இருந்தது. டிலாஸ் பட்டினத்திலே யிருந்த **அப்பல்லோ** (Apollo) தெய்வத்தின் கோவிலில் இக்கூட்டுச் சமஷ்டியின் பெரிய பணப்பெட்டி வைக்கப்பட்டது. பத்துப் பெரிய அதிகாரிகள் அதைக் கண்காணித்து வந்தார்கள். செயல்முறைப் பொறுப்புக்கள் (Executive authority) அனைத்தும் ஏதென்ஸின் கையில்தான் இருந்தன. அதுவே இக்கூட்டுச் சமஷ்டியின் நடுநாயகமாக விளங்கியது. தன்னிடமிருந்து பொறுப்புக்களையும் செல்வாக்கையும் சிறிது சிறிதாக வளர்த்து, இறுதியில் இக்கூட்டுச் சமஷ்டியை ஏதென்ஸ் தன் தலைமையில் இயங்கக்கூடிய, தனக்குச் சொந்தமான ஒரு சாம்ராஜ்யமாக மாற்றிவிட்டது. ("From the first Athens held in her hands the means of gradually transforming the naval union into a naval empire.") முன்னமே கூறிய து போன்று, ஸ்பார்ட்டா இதைக்கண்டு மனம் புழுங்கிப் பொறாமை யுற்றது. ஸ்பார்ட்டாவுக்கும் ஏதென்ஸுக்கும் பகைமை வளர்ந்தது. இதனால் கிரேக்க மண்டலமே இரு பிரிவாகப் பிரிந்தது. ஒரு பிரிவுக்கு ஸ்பார்ட்டா தலைமை தாங்கியது. மற்றொரு பிரிவுக்கு ஏதென்ஸ்

தலைமை தாங்கியது. ஸ்பார்ட்டா தலைமை தாங்கிய பிரிவிலே பெரும்பாலும் நகர ராஜ்யங்களின் ஆட்சி (Oligarchy) நிலவியது. ஏதென்ஸ் தலைமை தாங்கிய பிரிவில் குடியரசு பெரும்பாலும் நிலவியது. ஸ்பார்ட்டா தலைமை தாங்கிய பிரிவு பெலப்பொனீஷியன் கூட்டுச் சமஷ்டி (Peloponnesian Confederacy) யாகியது. ஏதென்ஸ் தலைமை தாங்கிய பிரிவு நாம் ஏற்கெனவே கூறியது போல் டிலாஸ் கூட்டுச் சமஷ்டி (The Confederacy of Delos) என்ற பெயரில் விளங்கியது.

ஏதென்ஸை ஒரு வல்லரசாக உருவாக்கியதிலே தெமிஸ்ட்டாகில்ஸ், அரிஸ்ட்டைட்ஸ் இருவருக்கும் பங்கு உண்டு. ("The best title of Aristides to fame was his work in connection with the formation of the Delian League, and the best title of Themistocles to fame was the making of Athens a great sea power and the laying of the foundations of her empire".)

ஏதென்ஸ் நகரிலே இருந்த அரசியல் கட்சிகளில் ஒன்றுக்குத் தெமிஸ்ட்டாகில்ஸும் இன்னொன்றுக்கு அரிஸ்ட்டைட்ஸும் தலைவர்களாக இருந்தனர். தெமிஸ்ட்டாகில்ஸுக்குப் பின் அவனுடைய கட்சிக்கு **பெரிகிள்ஸ்** (Pericles) தலைவனாக வந்தான். அது போன்றே அரிஸ்ட்டைட்ஸுக்குப் பின் அவனுடைய கட்சிக்குச் **சைமன்** (Cimon) என்பவன் தலைவனானான். இவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் முற்றிலும் மாறுபட்ட குண விசேடங்களை யுடையவர்கள். சைமன் தைரியமும் திறமையும் வாய்ந்த தளபதி; பிறருக்கு வாரி வழங்குபவன்; புலனின்பங்களிலும் காதல் லீலைகளிலும் பற்றுக் கொண்டவன்; இசை இலக்கியங்களில் எவ்வித ஞானமு மற்றவன்; தத்துவம், அலங்காரச் சொற்கள் நிறைந்த மேடைப் பிரசங்கம் இவற்றை அடியோடு வெறுப்பவன். தனக்குரிய



அலுவல்களைத் தொடர்ந்து மெய் வருந்தி ஊன்றிக் கவனிக்காதவன். ஆனால், பெரிகிள்ஸோ சேர்ந்தாற் போல் உயரிய நாகரிகமான குணங்கள் பலவற்றைப் பெற்றிருந்தான்; நேர்மை, மனத்திண்மை, காரியத் திறன், தேர்ந்து தெளிதல், சொல்லாற்றல், தனது கட்சியாளருக்கு உபாயமான மார்க்கங்களை எடுத்துக் காட்டி அவர்களை வழி நடாத்தும் சக்தி இவையனைத்தும் பெரிகில்ஸின் குண விசேடங்கள். ("In taste, in talent, and in character, Cimon was the very opposite of Pericles - a brave and efficient Commander, a lavish distributor, a man of convival and amorous habits, but in capable of sustained attention to business, untaught in music and letters, and imbued with a Laconian aversion to rhetoric and philosophy; while the ascendancy of Pericles was founded on his admirable combination of civic qualities - probity, firmness diligence, judgment, eloquence, and power of guiding partisians.")

மக்களுக்குத் தலைமை தாங்கி ஏதென்ஸின் நிலைமையை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய குண நலன்களும் புத்தி தீட்சண்யமும் சைமனிடம் அவ்வளவு அதிகமாகக் காணப்படவில்லை. பெருவாரியான பொது மக்களுடைய மனப்பான்மையையும் அபிலாஷைகளையும் புரிந்து கொள்ளச் சக்தியற்றவனாக அவன் இருந்தான். பல்வேறு சூழ்நிலைகளை மனக்கண் கொண்டு ஊடுருவிப் பார்த்து எதிர் காலத்தைக் கணிக்கும் ஆற்றலற்றவனாக இருந்தான். ஆனால், போரைப் பொறுத்தவரை அவனுடைய அறிவு மிகுந்த தீர்க்க தரிசனத்துடனும் சிறந்த அனுமான சக்தியுடனும் வேலை செய்தது. அசாதாரணமான போராற்றல் வாய்ந்த அவன் போர்களிலே எளிதில் வெற்றிகளைக் கண்டான். அவனை ஒரு இலட்சியப் போர் வீரன்

(Ideal Soldier) என்று கூறுவது மிகப் பொருத்தமான கூற்றாகும். குடியரசிலே அவனுக்கு நம்பிக்கை யில்லை என்று சொல்லுவதற்கில்லை. ஆனால், அதிலே அவன் மிக அதிகமான நம்பிக்கை வைக்க வில்லை. எனினும் ஏதென்ஸ் நகரத்தின் அரசியல் அமைப்பிலும் அதனுடைய சாதனைகளிலும் பெருமை கொண்டான். சிறந்த தேசாபிமானி. களங்கமற்றவன். நேர்மையாளன்.

பெர்ஸியாவுடன் போரைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று அவன் விரும்பினான். அவ்வாறே போரைத் தொடர்ந்து நடத்தி வெற்றிகள் பலவற்றை அடைந்தான்; நகரங்கள் பலவற்றைப் பிடித்தான். ஸ்பார்ட்டாவும் ஏதென்ஸும் கிரேக்க மண்டலத்தின் தலைமைப் பொறுப்பை அப்பொழுதிருந்த அடிப்படையிலேயே நிரந்தரமாகப் பகிர்ந்து கொண்டு ஒன்றுக்கொன்று சமாதானமாய் வாழ வேண்டுமென்று வற்புறுத்தினான். ஸ்பார்ட்டாவுடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகள் அனைத்தையும் செய்தான். இவைகளே சைமனின் அரசியல் கொள்கைகள். இது போன்ற வேறு பலவற்றையும் அவன் அடிக்கடி வற்புறுத்திச் சொல்லிக்கொண்டு வந்தான். இவனுடைய கொள்கைகளில் பல காலங் கடந்த கொள்கைகளாகவும், குடியரசிலே வாழும் ஏதென்ஸ் பொது மக்களின் மனோபாவத்திற்கு முரண்பட்டவையாகவும் இருந்ததால் இவனுக்கு விரோதமாகப் பொது மக்களின் மத்தியிலே அதிருப்தியும் எதிர்ப்பும் தலைதூக்க ஆரம்பித்தன. சைமன் தங்களுக்கு ஏற்ற தலைவனல்லன் என்று அவர்கள் நினைக்க ஆரம்பித்தனர்.

இந்தச் சமயத்தில் பூகம்பம் ஒன்று தோன்றி ஏறக்குறைய ஸ்பார்ட்டா நகரம் முழுவதையுமே அழித்துவிட்டது. ஸ்பார்ட்டாவுக்கு ஏற்பட்ட இந்தத் துரதிர்ஷ்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு **ஹீலட்டுகள்** (Helots) என்று நாம் ஏற்கெனவே கூறியுள்ள அடிமைகள்



ஸ்பார்ட்டாவுக்கு விரோதமாகப் புரட்சி செய்யப் பெரிய அளவில் திரண்டு ஒன்று சேர்ந்தார்கள். ஸ்பார்ட்டாவினிடம் சைமன் அவ்வப்பொழுது அன்பு காட்டி வந்ததால், ஸ்பார்ட்டா ஹீலட்டுகளின் கலகத்தை அடக்க உதவி செய்யுமாறு ஏதென்ஸுக்கு வேண்டுகோள் விடுத்தது. ஸ்பார்ட்டாவுக்காகச் சைமனும் ஏதென்ஸ் பொது மக்களிடம் மிகவும் பரிந்து பேசினான். ஏதென்ஸும் இசைந்தது. சைமன் 4000 வீரர்களை அழைத்துக் கொண்டு தானே ஹீலட்டுகளின் கலகத்தை அடக்கச் சென்றான். **இதோம் மலையில்** (Mount Ithome) கூடிக்கொண்டு கலகத்தை மிகச் சாமர்த்தியமாக நடத்திக் கொண்டிருந்த ஹீலட்டுகளிடம் சைமனுடைய தந்திரமோ அவனுடைய வீரர்களின் ஆற்றலோ பலிக்கவில்லை. சைமன் தோல்வியுற்றான் என்று சொல்லிவிட முடியாது. அவன் தப்புக் கணக்குப் போட்டுக்கொண்டு கலக ஸ்தலத்திற்கு வந்தான். தான் நினைத்தது ஒன்று நடந்தது ஒன்றாகி விட்டது. அவனைத் தொடர்ந்து செயலாற்ற விட்டிருந்தால் ஏதென்ஸிலிருந்து மேலும் வீரர்களை வரவழைத்துப் புதிய தந்திரங்களைக் கொண்டு கலகத்தை அவன் அடக்கி யிருக்கக் கூடும். ஆனால், ஸ்பார்ட்டா மிக்க எரிச்சலுடன் காரணம் எதையும் கூறாமல் சைமனையும் அவனுடைய ஆட்களையும் உடனே திரும்பி ஏதென்ஸுக்குச் சென்றுவிடும்படி கட்டளை யிட்டு விட்டது. ஏதென்ஸ் இதைத் தனக்கு நேர்ந்த ஒரு மானபங்கமாகக் கருதியது. இதற்குக் காரணமான சைமனை ஏதென்ஸ் தேசப்பிரஷ்டம் செய்தது. **கிராண்ட்** (Grant) என்ற சரித்திர எழுத்தாளர் ஏதென்ஸின் இந்தச் செய்கையை மிக வன்மையாகக் கண்டிக்கிறார். சைமனுக்கு ஏதென்ஸ் மிகுந்த பாதகம் செய்துவிட்டதாகக் கூறுகிறார். ஒரு சிறந்த தேசாபிமானிக்கு ஏதென்ஸ் இதையா பரிசாக அளிப்பது என்ற தோரணையில் ஏதென்ஸைக் காய்ந்து குறை கூறு

கிறார். ஏதென்ஸுக்குப் போராற்றல் மிக அதிகமாகத் தேவைப்பட்ட சமயத்தில் தன்னிடமிருந்த ஒரு வீராதி வீரனைத் தன்னுடைய மடமையினால் ஏதென்ஸ் இழந்துவிட்டது என்று அவர் வருந்துகிறார். ("Never was a vote of ostracism less justifiable. Cimon sought after no tyranny, and throught his whole career was an upright and patriotic citizen. His ostracism doubtless allowed the democratic changes, in any case inevitable, to be accomplished without much opposition and obstruction, but it also deprived Athens of her best soldier at a time when she needed all her military talent" - Grant). அறிஞர் **கிராண்ட்** தம்முடைய நூலிலே இப்பகுதியைப் பற்றிய விஷயங்களை மிக விஸ்தாரமாகவே எழுதியுள்ளார். குறிப்பாக இப்பகுதியை அவர் தம்முடைய நூலிலே மிக உருக்கமாக வரைந்துள்ளார். நீதிமன்றத்திலே வழக்கறிஞர்கள் வாதாடும் தோரணையில் சைமனுடைய கட்சியை மிகக் கவர்ச்சிகரமாக எடுத்துப் பேசுகின்றார்.

தனக்கு ஸ்பார்ட்டா அவமான மிழைத்து விட்டதாகக் கருதிய ஏதென்ஸ், ஸ்பார்ட்டாவுடன் மேலும் பகைமை பாராட்டியது. ஸ்பார்ட்டாவுக்குப் பரம வைரிகளான **ஆர்கோஸ்** (Argos), **தெஸாலி** (Thessaly) இவ்விரு நாடுகளுடன் உடன்படிக்கை செய்து கொண்டு புதிய உறவை ஏற்படுத்திக் கொண்டது. ஸ்பார்ட்டாவிலிருந்து வெளியேறிய ஹிலட்டுகள் என்ற அடிமைகளுக்கு அடைக்கலம் அளித்து **நபாக்டஸ்** (Naupactus) என்ற துறைமுகப் பட்டினத்திலே அவர்களைக் குடியேற்றியது. ஏதென்ஸின் இச் செய்கைகளனைத்தும் ஸ்பார்ட்டாவுக்கு மிகுந்த சினமூட்டியது. ஸ்பார்ட்டாவுக்கு மேலும் சினமூட்டும் வகையில் ஏதென்ஸ் **நபாக்டஸில்** ஒரு கப்பல் படைத் தளத்தை நிறுவி



அங்கே ஒரு கப்பல் படையையும் நிறுத்தியது. பின்னால் வரவிருந்த பெலப்பொனீஷிய யுத்தத்துக்கு பல காரணங்களுள் இதுவும் ஒன்று என்பது சொல்லாமலே விளங்கும்.

**பெரிகிள்ஸ்** (Pericles): சைமனுடைய வீழ்ச்சிக்குப் பிறகு முப்பத்திரண்டு வருட காலம் (கி. மு. 461-429) பெரிகிள்ஸ் பொதுமக்களுடைய பேராதரவுடன் ஏதென்ஸின் ஈடு இணையற்ற தலைவனாக விளங்கினான். (The undisputed master of Athens). கிரீஸ், ஏதென்ஸ் இவற்றின் அரசியல் சமுதாய வாழ்விலே பெரிகிள்ஸின் செல்வாக்கு எங்கணும் பரவிப்படிந்து அதற்கு ஒரு புது வண்ணத்தையே அளித்தது. பெரிகிள்ஸ் ஏதென்ஸின் தலைவனாக விளங்கிய காலத்தைக் கிரேக்க வரலாற்றின் மாபெரும் சகாப்தங்களில் ஒன்றென அறிஞர்கள் போற்றுகின்றனர். நாகரிகத்தின் ஒளி விளக்கு என்று ஏதென்ஸ் கருதப்பட்ட அக்காலத்திலேயே ஏதென்ஸைக் காட்டிலும் பெரியவனாகப் பெரிகிள்ஸ் விளங்கினான். மதிப்பிற்குரிய பெரிய குடும்பத்தில் பிறந்தவன். கிரீஸில் தோன்றிய அரசியல் தலைவர்கள் அனைவருள்ளும் மிகப் பெயரும் புகழும் பெற்றவன் இவனே. அவர்கள் அனைவருள்ளும் மிக மகோன்னதமான மனோபாவத்தையும் உன்னத இலட்சியங்களையும் கொண்டவனாய் இவன் இருந்ததோடு, அரிய மனோசக்திகளையும் அறிவாற்றலையும் இவன் பெற்றிருந்தான். ராஜரிகமான பெரும் போக்கைப் படைத்திருந்த பெரிகிள்ஸ் சாதாரண பொதுமக்களின்பால் மிகுந்த அன்பு காட்டி அவர்களின் அரிய நண்பனாக விளங்கினான். குடியரசிலே அபரிமிதமான பற்றுக் கொண்டிருந்த இவன் குடியசிரன் காவலனாக விளங்கினான். பெரிகிள்ஸ் பரந்த நோக்கங்களையும் உயர்ந்த குறிக்கோள்களையு முடையவன். நடைமுறை அரசியலிலே நிபுணன். அரசியல் சாத்திரங்களை ஆழ்ந்து கற்றவன். இதற்கெல்லாம் மேலாக

உயர்ந்த தத்துவ சிந்தனையாளனாகவும் அவன் விளங்கினான். ஏதென்ஸுக்கு எவ்வளவோ அவன் சேவை செய்தான். அவனுடைய உன்னதமான மனோபாவத்தையும் குறிக்கோள்களையும் கிரேக்கமும், ஏதென்ஸும் நன்கு புரிந்துகொண்டு, அவற்றிற்கு ஈடு கொடுத்து அவனுடன் தொடர்ந்து சென்றிருக்குமாயின், கிரேக்க மண்டலத்தையே அவன் புதிய அச்சில் வார்த்து அதனுடைய வாழ்விற்கு ஒரு தெய்வீகச் சோபையையும் சுவையையும் ஊட்டியிருப்பான். அவனுடைய மனோநிலையில் அளவுக்கு உயர்ந்து அவனைச் சரிவரப் புரிந்துகொள்ளும் சக்தி அக்காலத்திய கிரேக்கத்திற்கு இல்லாது போயிற்று. எனினும் பொதுமக்களும் அறிஞர்களும் தங்களுடைய அன்பையும் பாசத்தையும் அவன்மேல் மாரிபோல் பொழிந்தனர்.

அரசியல் வாழ்விலே பெரிகிள்ஸ் கிளெஸ்தனிஸையே (Cleisthenes) பெரும்பாலும் பின்பற்றினான். ஆனால், பல கிளெஸ்தனிஸுகள் ஒன்று சேர்ந்தாலும் பெரிகிள்ஸ் ஒருவனுக்குச் சமமாக முடியாது. கிளெஸ்தனிஸ் நிறுவிவிட்டுச் சென்ற ஏதென்ஸ் குடியரசைப் பெரிகிள்ஸ் வளப்படுத்தி, புதிய சட்டங்களையும் திட்டங்களையும் கொண்டுவந்து, குடியரசு ஒரு வெற்றிகரமான அரசியல் முறை என்பதை நிரூபித்தான். குடியரசை ஏதென்ஸில் நிறுவியதில் கிளெஸ்தனிஸுக்கு எவ்வளவு பெருமையுண்டோ அவ்வளவு பெருமை பெரிகிள்ஸுக்கு அதை வளர்த்து விரிவுபடுத்தியதில் உண்டு. உதார குணத்தையும் அபார ஆற்றலையும் பெற்றிருந்த அவன் தலைவனாக இருக்கவே பிறந்தவனோ என்று எல்லோராலும் ஐயுறும்படி ஏதென்ஸ் அரசியலை நடத்திச் சென்றான். அவனுடைய குணாதிசயத்தை விவரித்துச் சொல்லும் ஒரு பெரிய சரித்திர மேதை தம்முடைய நூலொன்றில் அவனை, **A man of stately and commanding character** என்று குறிப்பிடுகின்றார்.



பெரிகிள்ஸ் சைமனைப்போன்று ஒரு ஆற்றல் மிக்க போர்த் தளபதியல்லன். போர்த்துறையில் ஏதோ சில வெற்றிகளை அவன் அடைந்திருந்தானெனினும், அதில் அவனின் ஆற்றல் சாதாரணமானதே. ஆனால், அவனது மனோ வல்லமையும் சிறந்த அறிவும் ஏதென்ஸின் உள்நாட்டு அரசியலுக்கு உன்னதமான திருப்பத்தையும் வடிவத்தையும் அளித்தது. அவனுடைய தூரதிருஷ்டி மிக்க கொள்கைகளும் சேவையுமே ஏதென்ஸைக் கிரேக்க மண்டலத்தின் வித்யா தேவதையாகவும் கலாராணியாகவும் அறிவரசியாகவும் (The intellectual queen of the Hellas) ஆக்கி அதற்கு உலகப் புகழீட்டிக் கொடுத்தது. பெரிகிள்ஸ் கடல் வாணிகத்தையும் தரை வாணிகத்தையும் சிறந்த அளவிலே பெருக்கினான்.

ஏதென்ஸ் சாம்ராஜ்யமே அல்லும் பகலும் பெரிகிள்ஸின் இதயத்தில் ஒலித்துக் கொண்டிருந்தது. அதை விரிவுபடுத்தி, ஏதென்ஸின் ஆதிக்கத்தைக் கடல் பகுதியிலும் தரைப்பகுதியிலும் வெகுதூரத்துக்குப் பரப்ப வேண்டுமென்பது அவனது தீராத ஆசை. அவனுடைய கனவுகளை முடிந்த அளவு நனவாக்கவும் அவன் தவறவில்லை. எத்தனை நாடுகளை ஏதென்ஸ் சாம்ராஜ்யத்துக்குள் கொண்டுவர முடியுமோ அத்தனையையும் அதனுள் கொண்டு வருவதும், ஏதாவது சில நாடுகளைப் பொறுத்தமட்டில் அவற்றை ஏதென்ஸ் சாம்ராஜ்யத்துக்குள் கொண்டுவர இயலாது, அல்லது அவ்வாறு கொண்டு வருவது உசிதமல்ல என்ற நிலைமை ஏற்பட்டால் இந்நாடுகளில் ஏதென்ஸின் ஆதிக்கத்தையில்லாவிட்டாலும் செல்வாக்கையாவது எப்படியும் பரப்பிவிட வேண்டுமென்பதும் அவனுடைய தலையாய குறிக்கோள்களுள் ஒன்று. ஆசியப் பகுதிகள், மத்தியதரைக் கடற்கரைப் பகுதிகள், கிரீஸ், இன்னும் மற்ற பகுதிகள் இவையனைத்தும் பரவிக் கிடந்த கிரேக்க மண்டலத்தை ஒன்றாக்கி ஏதென்ஸ் தலைமையில் அவற்றிற்கு ஒரு புது

வாழ்வளிக்கவேண்டும் என்பதைத் தன் இலட்சியமாகக் கொண்டான். கிரேக்க மண்டலத்திலுள்ள நாடுகளனைத் தும் பாஷையாலும், மதத்தாலும், கலாசாரத்தாலும், பாரம்பரியத்தாலும் ஒன்றுபட்டவையாதலால், அவை தனித்தனியே பிரிந்து கிடப்பதும், அப்பிரிவினால் சக்தி யிழந்து கிடப்பதும் ஏதோ விபரீதமான நிலையாக அவனுக்குத் தோன்றியது. அவன் பதவிக்கு வந்த பொழுது ஏதென்ஸ் சாம்ராஜ்யம் ஓரளவு உருவாகித்தா னிருந்தது. அதைத் திருத்தமான அடிப்படையில் செவ்வனே நிர்மாணித்ததில் பெரிகிள்ஸுக்குப் பெரும் பங்கு உண்டு. ஆனால், அவனுடைய ஆசை மிகப் பெரிது. அவனுடைய சாம்ராஜ்யக் கனவில் கணிசமான பகுதி ஸ்பார்ட்டாவினுடைய தொடர்ந்த எதிர்ப்பாலும் வேறு சில காரணங்களாலும் நனவாகாமலே போய் விட்டது.

ஏதென்ஸிலே மிகப் பெரிய அரசியல் கட்சிகள் இரண்டு இயங்கி வந்தன. மிதவாதிகளைக் கொண்ட **கன்சர்வேடிவ் (Conservative)** கட்சி ஒன்று. பெரிகிள் ஸைத் தலைவனைக் கொண்ட குடியரசுக் கட்சி ஒன்று. ஸ்பார்ட்டாவும் ஏதென்ஸும் ஒன்று சேர்ந்து சமாதான மான நண்பர்களாக இயங்கினால்தான் கிரேக்கம் வளர முடியும் என்று கன்சர்வேடிவ் கட்சி வாதாடியது. ஆனால், பெரிகிள்ஸ் அப்போது நிலவிய சூழ்நிலையையும் சென்ற காலத்தையும் நன்கு சிந்தித்து, எதிர்காலத்தை யும் தன் சூட்சம அறிவால் திறம்படக் கணக்கிட்டு, ஸ்பார்ட்டாவும் ஏதென்ஸும் நண்பர்களாக ஒத்துப் போவது என்றும் நடவாத காரியமென்று அதற்கான காரணங்களைத் திறம்பட விளக்கினான். எதிர்காலத் திலே இரண்டு நாடுகளுக்கும் ஒரு போர் வந்தே தீரு மென்றும், அது தவிர்க்க முடியாததொன் றென்றும் அதற்கு இப்பொழுதிருந்தே தயாராகிக் கொள்வதுதான் புத்திசாலித்தன மென்றும் எடுத்துக் கூறினான்.



ஏதென்ஸ் தன் சாம்ராஜ்யத்தையோ, சாம்ராஜ்யத்தை வளர்க்கும் கொள்கையையோ கைவிடுவதென்பது தற் கொலைக்குச் சமானம் என்று முழங்கினான். ஏஜியன் கடல் அனைத்தும் ஏதென்ஸின் ஏகபோக உரிமையாகி விடவேண்டு மென்றும், அதில் வேறு எவரையும் அனு மதித்தல் மடமையென்றும் அவ்வாறு அனுமதித்தால் ஏதென்ஸின் வியாபாரமும், படைபலமும் சீரிய அளவில் பாதிக்கப்படும் என்றும் அவன் சுட்டிக்காட்டினான். ஏதென்ஸ் சாம்ராஜ்யத்தில் கிரேக்க நாடுகள் மட்டும் இருக்கவில்லை. கிரேக்கரல்லாத மற்றவர்களுக்குச் சொந்தமான நாடுகளும் இருந்தன. அவற்றையெல் லாம் ஏதென்ஸ் தனது படைபலத்தால், தனது எதிர் கால சௌகரியத்தை முன்னிட்டு, வென்று தனது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்திருந்தது. அந்த நாட் டின ரிடமெல்லாம் பெரிகிள்ஸ் மிக அதிகமான தாராள சிந்தையுடனும், நியாயத்துடனும் நடந்துகொண்ட தோடு. அவர்களுக்கு விசேட சலுகையும் காட்டினான்.

சைமனைப் பற்றி நாம் ஏற்கனவே அறிவோம். அவ னுக்கு ஸ்பார்ட்டாவிடம் தனிப்பற்று இருந்திருக்க வேண்டுமோ என்று யூகிக்கத் தோன்றுகிறது. அதனால் தானோ என்னவோ ஸ்பார்ட்டாவைப் போன்றே அவ னும் கலை, காவியங்கள், தத்துவம், சொல்லலங்காரம் இவற்றை யெல்லாம் வெறுத்தான். சைமன் ஒரு பெரிய போர்த் தளபதியாகையால், போர்த்துறையிலே அசாதா ரணமான பலத்தையும் முன்னேற்றத்தையும் ஓயாத பயிற்சியால் அடைந்திருந்த ஸ்பார்ட்டாவை அவன் மிகவும் மதித்ததில் தவறொன்று மில்லை. ஸ்பார்ட்டா வுக்கும் ஏதென்ஸுக்கும் உறவேற்பட்டு விட்டால் ஸ்பார்ட்டாவின் முறைகளைப் பார்த்துப் பார்த்துப் பின் பற்றி ஏதென்ஸும் போர்த்துறையிலே எளிதில் ஸ்பார்ட் டாவுக்குச் சமமாகிவிடலாம், அல்லதுஸ்பார்ட்டாவையும் எளிதில் மிஞ்சிவிடலாம் என்று அவன் உள்ளத்தில் ஒரு

ஆசையை வளர்த்திருந்திருக்கக் கூடும். ஏதென்ஸின்
நல்வாழ்வையே தனது நல் வாழ்வாகக் கருதிய பெரிய
தேசாபிமானி அவன். அவன் தேசப் பிரஷ்டமடைந்த
வுடன் ஸ்பார்ட்டாவைப் பொறுத்தவரை ஏதென்ஸின்
கொள்கை அடியோடு மாறியது. ஸ்பார்ட்டாவைத்
தனது பயங்கரமான வைரியாக ஏதென்ஸ் கருத ஆரம்
பித்தது. ஸ்பார்ட்டா ஏதென்ஸுக்கு உண்மையிலேயே
ஒரு பயங்கரமான விரோதிதான் என்பதைப் பெரிகிள்ஸ்
தன் அறிவாற்றலால் உணர்ந்தான். கலை, காவியம்,
தத்துவம், ஆத்ம விசாரம் இவற்றையெல்லாம் தனது
வாழ்விலே நுழையவிடாது சுட்டுப் பொசுக்கிய
ஸ்பார்ட்டாவிடம் எந்த உன்னத குணங்களை எதிர்
பார்க்க முடியும்? நல்ல மனோபாவமும் சமாதான
எண்ணமும் அதற்கு எவ்வாறு ஏற்படும்? உயர்ந்த
ரகப் பண்பாடுகளை வளர்க்கும் கலை, தத்துவம்
இவற்றை அடியோடு வெறுப்பவர்கள் மித்திரபேதம்
செய்வதற்கும், தங்கள் சுயநலத்தை முன்னிட்டுத்
துரோகம் செய்வதற்கும் எவ்வாறு அஞ்சுவார்? தான்
வெறுப்பதையெல்லாம் விரும்பிப் போற்றி வளர்த்து
அவற்றிற்கு ஆதாரபீடமாய் விளங்கும் ஏதென்ஸிடம்
ஸ்பார்ட்டாவுக்கு அந்தரங்க விரோதத்தைத் தவிர அந்த
ரங்கப் பற்று எவ்வாறு ஏற்பட முடியும்? ஸ்பார்ட்டா
வுடன் சமாதானமாய்ப் போக வேண்டுமென்று ஏதென்
ஸாவது சமயங்களில் விரும்பியதேயொழிய, ஸ்பார்ட்டா
அவ்வாறு அந்தரங்க சுத்தியுடன் எப்பொழுதும் விரும்
பியதாகத் தெரியவில்லை.

ஸ்பார்ட்டாவுக்கு விரோதமாக ஏதென்ஸ் ஸ்பார்ட்
டாவின் எதிரிகளான **ஆர்கோஸ்** (Argos), **தெஸாலி**
(Thessaly) ஆகிய நாடுகளுடன் கூட்டுறவு உடன்
படிக்கை செய்து கொண்டதை நாம் ஏற்கனவே அறி
வோம். ஏதென்ஸின் வாணிக வளர்ச்சியைக் கண்ட
**கொரிந்த்** (Corinth), **எஜினா** (Aegina) ஆகிய இரு நகரங்



களுக்கும் ஏதென்ஸின்மேல் அளவற்ற பொறாமை ஏற்
பட்டது. இவை இரண்டும் பிரபலமான வாணிக
நகரங்கள். கொரிந்து நகரத்துக்கு இன்றியமையாத
முக்கியத்துவத்தைப் படைத்த **நபாக்டஸ்ஸை** (Naupac-
tus) ஏதென்ஸ் கைப்பற்றி அங்கே ஒரு கடற்படையை
இருத்தியது கொரிந்துக்கு அச்சத்தை மூட்டியதுடன்
ஆத்திரத்தையும் மூட்டியது.

ஸ்பார்ட்டாவால் தலைமை தாங்கப்பட்ட பெலப்
பொனீஷியன் கூட்டுச் சமஷ்டியிலே கொரிந்து இருந்
ததைப்போலவே **மெகாரா** (Megara) என்ற நகரமும்
இருந்தது. கொரிந்துடன் ஏற்பட்ட எல்லைத் தகராறின்
காரணமாக, மெகாரா பெலப்பொனீஷியக் கூட்டுச்
சமஷ்டியைப் புறக்கணித்துவிட்டு, அதனின்று வெளி
யேறி, ஏதென்ஸுடன் சேர்ந்துகொண்டு ஏதென்ஸி
னுடைய ஆதரவை நாடியது. இதை ஏதென்ஸ் நன்கு
பயன்படுத்திக்கொண்டு, மெகாரா எல்லைகளில் நீண்ட
பலமான சுவர்களை எழுப்பி (Long walls of Megara)
அங்கே தனது துருப்புக்களையும் ஏராளமாகக் காவல்
வைத்து, பெலப்பொனீஷியப் பகுதியில் தனது படை
பலத்தைக் குறிப்பிடத் தக்க முறையிலே நன்கு அதிகப்
படுத்திக் கொண்டது. ஏதென்ஸின் இச்செயலால்,
தங்களுடைய கௌரவம் பாழ்போனதாக ஸ்பார்ட்டா
வும் கொரிந்தும் கருதின. பெலப்பொனீஷியப் பகுதி
யிலே யுத்தம் மூண்டது. இந்த யுத்தம் "**ஹெல்லனிக்
யுத்தம்**" (Hellenic War : 459-451 B.C.) என்று அழைக்
கப்படுகிறது. சண்டையின் முடிவில் ஏதென்ஸுக்கும்
ஸ்பார்ட்டாவுக்கும், ஐந்து வருடச் சமாதான உடன்
படிக்கை ஒன்று ஏற்பட்டது. ஸ்பார்ட்டாவும், **ஆர்
கோஸு**ம் (Argos) தங்களுக்குள் ஒரு முப்பது வருட
சமாதான உடன்படிக்கையைச் செய்துகொண்டன.
ஏதென்ஸுக்குக் கடற்பகுதியில் ஒரு சாம்ராஜ்யம் இருந்
தது போலவே தரைப்பகுதியிலும் ஒரு சாம்ராஜ்யம் ஏற்

பட்டது (Continental Empire). கடற்பகுதியி லிருந்த சாம்ராஜ்யத்தை (Maritime Empire)ப் போன்றே இது வும் ஏதென்ஸின் கலை, தத்துவம் போன்ற அறிவுச் செல்வங்களை அனைத்திடத்துக்கும் பரப்பப் பெரிதும் உத வியது. ஏதென்ஸினுடைய சாம்ராஜ்ய பலம் ஏதென் ஸின் குடியரசுக்கு மட்டுமல்லாது பொதுவாகக் குடியரசு சித்தாந்தங்களுக்கே ஒரு பலமாக விளங்கியது. குடி யரசு ஏகாதிபத்திய ஆட்சிக்கு எவ்வழியிலும் இளைத்த தல்ல; ஏகாதிபத்திய ஆட்சியைக் காட்டிலும் அது உயர்ந்தது, பெரியது என்பதை இது நிரூபித்துக் காட் டியது சாம்ராஜ்யம் வளர வளரக் குடியரசின் சக்தியும் வளர்ந்தது.

கிளெஸ்தனிஸ் ஏதென்ஸில் குடியரசை ஸ்தாபித்து விட்டுச் சென்றதன்பின் பெரிகிள்ஸ் பதவியேறியது வரை, ஏறக்குறைய ஐம்பது ஆண்டுக் காலம், ஏதென்ஸ் போர்களிலும் போர் முஸ்தீபுகளிலுமே தனது சிந்தனை, சக்தி, நேரம் அனைத்தையும் செலவிடவேண்டி யிருந் தது. இந்த இடைவெளிக் காலத்தில்தான் பெர்ஸிய யுத்தமும், பின்னால் சாம்ராஜ்யமாக வளர்ந்த டெலாஸ் கூட்டுறவு சமஷ்டியும் ஏற்பட்டன. இக்கால இடை வெளியில் ஏதென்ஸ் தன் உள்நாட்டு அரசியல் அமைப் பில் எந்தவிதமான சீர்திருத்தங்களையும் செய்ய முடியாது போயிற்று.

பெரிகிள்ஸ் குடியாட்சியில் பல சீர்திருத்தங்களைக் கொண்டுவந்து குடியாட்சியை மிகச் சீரிய முறையிலே வளர்த்தான். ஏதென்ஸின் சாதாரணக் குடிமகன் கூடப் பல்வேறு துறைகள் பற்றிய அறிவைக் கெழுமிய அளவில் பெற்று ஒரு மாதிரி வடிவமாக விளங்க வேண்டுமென்பது அவனுடைய ஆசை. (The individual Athenian Citizen should be a type of intellectual many sidedness).

கிரேக்க சரித்திரத்திலே பெரிகிள்ஸின் ஆட்சிக்காலம்



“பொற் காலம்” என்று அழைக்கப்படுகின்றது. பெரி கிள்ஸின் வாழ்க்கைச் சரிதத்தைக் கிரேக்க அறிஞர் புளூடார்க் (Plutarch) எழுதியிருக்கின்றார். பெரிகிள் ஸின் வாழ்க்கை கிரேக்க சரித்திரத்தோடு பல வழிகளில் ஒன்றித்து இணைந்தது. பலபல சம்பவங்கள் கொண்ட அவனது வாழ்க்கை படிப்போருக்கு ஒரு மாபெரும் காவியம் போல் களிப்பூட்டுகின்றது. பெரிகிள்ஸினு டைய ஆட்சிக் காலத்தில் ஏதென்ஸினுடைய பிரகாசம் அதனுடைய சாம்ராஜ்யத்தின் எல்லைகளையும் வெகு தூரம் கடந்து பிரகாசித்தது. பெரிகிள்ஸின் முயற்சி யால் ஏதென்ஸ் அதுவரை கண்டிராத உயரத்துக்கு அறிவுத் துறையிலும் கலைத்துறையிலும் வளர்ந்தது. ஒவ்வொரு நாட்டுக்கும், மனித சரித்திரத்தின் ஒவ் வொரு சகாப்தத்திற்கும், எக்காலமும் உதவக் கூடிய வகையிலே ஏதென்ஸின் அறிவு கலைச் செல்வங்கள் அமைந்தன. ஏதென்ஸ் மக்கள் தங்கள் அறிவைக் கொண்டு நிகழ்த்திய சாதனைகள் உலக அறிவின் முயற்சிக்கு எல்லைக் கற்களாகவும் திசை காட்டி களாகவும் இன்றும் விளங்குகின்றன. (“In politics
and in the war the Greeks have many supe-
riors; their true service to mankind was artistic
and intellectual. It was in Athens, under Pericles,
that the intellectual and artistic life of Greece was
exhibited most perfectly.”)

பெரிகிள்ஸ் குடியரசுக் கொள்கைக்குச் சேவை
செய்தது போன்று வேறு எவரும் அதற்கு முன்போ
அல்லது பின்போ செய்தது கிடையாது. அவன்
காலத்தில் ஏதென்ஸ் குடியரசு வளர்ந்து முழுமையடைந்
தது போல் வேறு எக்காலத்திலும் அடையவில்லை.
ஏதென்ஸை **ஹெல்லாஸ் இராணி** (Queen of the
Hellas) யாக்கியதன் மூலம் பெரிகிள்ஸ் உலக மகா
புருடர்களின் ஒருவனாகி விட்டான். கிரேக்க சரித்திர

மும் உலக சரித்திரமும் அவனை இன்றும் தேர்ந்தெடுத்த சொற்களைக் கொண்டு போற்றி வர்ணிக்கின்றன. மனிதருள் மாணிக்கம் போலப் பிரகாசித்த அவனால் கிரேக்கமும் பிரகாசித்தது.

**பெலப்பொனீஷியப் போர்** : (Pelopponesian War) பெர்ஸியப் போரைப் போன்றே பெலப்பொனீஷிய யுத்தமும் உலக சரித்திரத்திலே இடம் பெற்றது. கிரேக்க நகர ராஜ்யங்கள் தமக்குள் எவ்வளவு பொருமையையும் பகைமையையும் சுயநலத் தனித்துவத்தையும் வளர்த்துக் கொண்டிருந்தன என்பதை இப்போர் வெகு விளக்கமாக எடுத்துக் காட்டுகின்றது. இப்போரைப்பற்றி மிக விரிவாகவும், அழகாகவும் எழுதியுள்ள பண்டைக் கிரேக்க சரித்திர எழுத்தாளர் தூஸிடிடிஸ் (Thucydides) இதை ஒரு அறிவு ரசனை நூலாகவும் அற விளக்க நூலாகவும் ஆக்கிவிட்டார். பெலப்பொனீஷிய யுத்தத்தை ஏதென்ஸ் சாம்ராஜ்யத்தினுடைய தாழ்வையும் வீழ்ச்சியையும் பற்றிய கதை என்றே குறிப்பிடலாம். செவிக்கினிய கதையாக, ஆங்காங்கே ஆன்மீக சன்மார்க்கங்களையும் மறைமுகமாகவும் நேரடியாகவும் உணர்த்திக்கொண்டு செல்கின்றது தூஸிடிடிஸின் சரித்திர நூல். சரித்திரத்தின் தத்துவ அடிப்படையிலே நாட்டங் கொண்டோருக்கு இந்நூல் ஒரு அரிய விருந்து. கிரேக்க நகர ராஜ்யங்கள் அளவிலேமிகச் சிறியவையா யிருந்தன என்பதை நாம் அறிவோம். எனினும் கிராமங்கள் போன்ற இச்சின்னஞ்சிறு குட்டிப் பிரதேசங்களில்தான் அக்காலத்தில் அரசியல் ஞானத்தின் அமரத் தத்துவங்கள் அடுக்கடுக்காக வளர்ந்து, அநேக ஸ்தாபனங்களாகவும் நூல்களாகவும் புரட்சிகளாகவும் போர்களாகவும் வடிவெடுத்தன. எனவே, இச்சிறு குட்டி நாடுகளுக்குள் நடந்த இப்போரானது உலக சரித்திரத்தின் போக்கைச் சில குறிப்பிட்ட வழிகளில் மாற்றியது என்று கூறி



னால் அது மிகையாகாது. பெர்ஸியப் போர் கொடுங்கோலேகாதிபத்தியத்திற்கும் (Despotism) குடியாட்சிக்கும் நடந்த போர் எனச் சரித்திரத்தில் குறிப்பிடப்படுகின்றது. ஏதென்ஸுக்கும் ஸ்பார்ட்டாவுக்கும் நடந்த இப்போரைப் பணக்கார ஆட்சிக்கும் குடியாட்சிக்கும் நடந்த போரெனக் குறிப்பிடுவது தகும்.

**ஆல்கிராப்ட்** (Allcroft) என்ற ஆசிரியர் தமது ஆராய்ச்சித் திறன் மிக்க நூலிலே பெலப்பொனீஷியப் போரின் காரணங்களை மிக விவேகத்துடன் ஆராய்கின்றார். அரசியல் அமைப்பிலும், அறிவு வளர்ச்சியிலும், பனோபாவத்திலும் வர்க்கப் பரம்பரையிலும் (Race) முற்றிலும் மாறுபட்ட இரு நாடுகள் அண்டை அண்டை நாடுகளாகச் சமாதானத்துடன் எக்காலத்திலும் வாழ்வதென்பது எளிதில் இயலாத காரியம் என்பதையே இப்போருக்கு அடிப்படையான காரணம் என்று அவர் மிகவும் வலியுறுத்திப் பேசுகின்றார். ஸ்பார்ட்டா **டோரியன்** (Dorian) வமிசாவளியைச் சேர்ந்தது. ஏதென்ஸ் **அயோனியன்** (Ionian) வமிசாவளியைச் சேர்ந்தது ஸ்பார்ட்டா பணக்கார ஆட்சியைப் (Oliga'chy) போற்றியது. ஏதென்ஸ் குடியாட்சியைப் (Democracy)ப் போற்றியது. ஸ்பார்ட்டா கலைகளை வெறுத்துத் தத்துவ ஞானத்தைப் பழித்தது. ஏதென்ஸ் அவற்றை உயிருக்கும் மேலாகக் கருதி வளர்த்தது. ஸ்பார்ட்டா தரைப் பரப்பிலே ஒரு சாம்ராஜ்யத்தை (Continental Empire) நிர்மாணித்துக் கொண்டிருந்தது. ஏதென்ஸ் கடல் பகுதியிலே சாம்ராஜ்ய ஆதிக்கம் (Maritime Empire) செலுத்திக் கொண்டிருந்தது. ஏதென்ஸ் விரிந்த மனப்பான்மையையும் முற்போக்குத் தன்மையையும் படைத்தது. அறிவுத் துறையிலும் அறத் துறையிலும் லயிக்க முயன்று வந்தது. ஸ்பார்ட்டா குறுகிய மனப்பான்மையையும் பிற்போக்குத் தன்மையையும் கொண்டது. அசுர பலத்தை

வளர்த்துக் கொள்வதற்காக எதையும் செய்யத் துணிந்தது. டோரியன் பரம்பரையைச் சேர்ந்த நாடுகள், அயோனியன் பரம்பரையைச் சேர்ந்த நாடுகள் இவை இரண்டுமே ஒன்றையொன்று வெகு காலமாக உள்ளூர வெறுத்து வந்தன. கிரேக்க மண்டலத்தின் தலைமைப் பதவி ஸ்பார்ட்டாவிடமிருந்து ஏதென்ஸுக்குச் சென்றதிலிருந்தே இரு நாடுகளுக்கும் இடையே போருக்கான அறிகுறிகள் நெருப்புப் பொறிகள் போல் அவ்வப்போது தென்பட ஆரம்பித்தன. போர் வந்தேயாக வேண்டுமென்று ஸ்பார்ட்டா விரும்பியது. போர் வந்தே தீருமென்று ஏதென்ஸும் முன்னெச்சரிக்கையாக இருந்தது. இந்த முன்னெச்சரிக்கைக்கான ஏற்பாடுகளே ஓரளவு இப்போருக்கும் காரணங்களாகி விட்டன.

போர் எவ்வாறு ஆரம்பித்தது என்று பார்ப்போம். ஸ்பார்ட்டாவின் கட்சியைச் சேர்ந்த **கொரிந்த்** (Corinth) என்ற நகரத்தைப் பற்றி நாம் ஏற்கெனவே அறிவோம். **கார்சிரா** (Corcyra), **பொடிடே** (Potidaea) என்ற இரண்டும் கொரிந்தினுடைய குடியேற்ற நாடுகள். கார்சிராவுக்குக் கொரிந்தின் மேல் எப்பொழுதுமே பற்றோ பாசமோ கிடையாது. பொடிடே தன் தாய் நாடான கொரிந்துடன் நல்லுறவு கொண்டிருந்ததெனினும் ஏதென்ஸின் கூட்டுறவுச் சமஷ்டியிலே அங்கம் வகித்து வந்தது. கொரிந்தின் குடியேற்ற நாடாகிய கார்சிராவும் தனக்கென ஒரு குடியேற்ற நாட்டை ஸ்தாபித்துக் கொண்டது. அதனுடைய பெயர் **எபிடேம்னஸ்** (Epidamnus). எபிடேம்னஸ் ஒரு முன்னேற்றப்போக்கான நாடு. அங்கு ஆட்சி செய்து வந்த பணக்காரர்களை (Oligarchs) குடியரசுவாதிகள் வீழ்த்தி விரட்டிவிட்டுப் பதவிக்கு வந்தார்கள். பதவியிலிருந்து வீழ்ந்த பணக்காரர்கள் எபிடேம்னஸ் மக்களுக்கு ஓயாத தொல்லைகளைக் கொடுத்து வந்தார்கள். இப்பணக்



காரர்களை அடக்கி ஒடுக்கி அவர்களின் சூழ்ச்சிகளையும் திட்டங்களையும் தகர்த்தெறிவதற்காக எபிடேம்னஸ் தன் தாய் நாடான கார்சிராவிடம் உதவி கோரியது. கார்சிரா மறுத்தது. உடனே எபிடேம்னஸ் தனது முந்தை நாடான (Grand-mother) கொரிந்திடம் தனக்கு உதவி யளிக்குமாறு வேண்டியது. கொரிந்த் உடனே தலையிட்டு எபிடேம்னஸுக்கு உதவி செய்தது. இந்தத் தலையீட்டைக் கார்சிரா ஆட்சேபித்து, கொரிந்தை ஒரு போர்க்களத்தில் முறியடித்து, எபிடேம்னஸைக் கைப்பற்றிக் கொண்டது. தனித்து நின்றால் தனக்கு ஆபத்து என்பதை உணர்ந்த கார்சிரா ஏதென்ஸ் கூட்டுச் சமஷ்டியில் அதற்கு அடுத்த வருடமே சேர்ந்து கொண்டது; ஏதென்ஸுடன் கொரிந்துக்கு விரோதமாக ஒரு தற்காப்பு உடன்படிக்கையும் செய்துகொண்டது. ஒரு வருடம் கழிந்தது. விழி கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த கொரிந்தியர்கள் சரியான சமயம் பார்த்துக் கார்சிராவைத் தாக்கிச் **சிபோட்டா** (Sybota) என்ற போர்க்களத்தில் அதைத் தோற்கடித்தார்கள். போர் தொடர்ந்தது. ஏதென்ஸ் படையொன்று கார்சிராவுக்கு உதவுவதற்காகப் போர்க்களத்தை நெருங்கிய பொழுது கொரிந்தியர்கள் பின்வாங்கி விட்டார்கள்.

**சிபோட்டா** (Sybota) போரில் கொரிந்துக்கு **மெகாரா** (Megara) உதவி செய்தது. மெகாரா இப்பொழுது ஸ்பார்ட்டா தலைமை தாங்கிய பெலப்பொனீஷியக் கூட்டுறவு அமைப்பிலே (Pelepponesian Confederacy) இருந்தது. ஏதென்ஸ் சாம்ராஜ்யத்தின் எல்லைக்குட்பட்ட எந்தச் சந்தைக்குள்ளும் துறைமுகத்துக்குள்ளும் மெகாரா நுழையக் கூடாது என்றும், ஏதென்ஸ் சாம்ராஜ்ய எல்லைக்குள் எந்தவிதமான வியாபாரத் தொடர்பும் எவ்விடத்திலும் வைத்துக் கொள்ளக் கூடாதென்றும் ஏதென்ஸ் கி. மு. 432-ல் ஓர் உத்தரவு பிறப்பித்தது. இதனால் மெகாரா நாட்டினுடைய பொருளாதா

ஏமே நொறுங்கி நாசமடையக் கூடிய நிலை ஏற்பட்டது. இதைப் பார்த்த ஸ்பார்ட்டா கோபத்தால் பொருமியது. ஏதென்ஸிடம் ஏற்கெனவே சில சொந்தக் காரணங்களால் அதிருப்தி யடைந்திருந்த ஏதென்ஸின் கூட்டாளிகளாகிய சில நாடுகள் இப்பொழுது இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஸ்பார்ட்டாவின் கட்சியிலே சேர்ந்தன. இவையனைத்தும் மெகாராவின் பரிதாப நிலைக்கு ஒரு பரிகாரம் தேடுவதை முதற் குறிக்கோளாகக் கொண்டு ஸ்பார்ட்டாவிலே ஸ்பார்ட்டாவின் தலைமையில் ஒரு மந்திராலோசனைக் கூட்டம் நடத்தின. "முப்பதாண்டுச் சமாதான உடன்படிக்கையை" (Thirty Years' Peace) ஏதென்ஸ் மீறிவிட்டதாகப் பல நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டி ஏதென்ஸ் மீது குற்றஞ்சாட்டின. மெகாராவுக்கு எதிராகப் பிறப்பித்த உத்தரவை ஏதென்ஸ் உடனே வாபஸ் பெறவேண்டுமென்றும் ஏதென்ஸுக்கு எச்சரிக்கை விடுத்தன. வெளிப்படையாகத் தனது கட்சியிலிருந்தாலும் தனது தாய் நாடான கொரிந்துடன் பல்வேறு வகையில் நட்புறவு கொண்டிருந்த **போடிடே** (Potidaea)யை மிகவும் சந்தேகித்த ஏதென்ஸ், சூழ்ந்துகொண்டிருக்கும் ஆபத்தான நிலையை உத்தேசித்து, போடிடேயை முற்றுகையிட்டிருந்தது. இம்முற்றுகையையும் உடனே நிறுத்தித் துருப்புக்களை ஏதென்ஸ் திருப்பி அழைத்துக் கொள்ள வேண்டுமென்றும் ஸ்பார்ட்டாவில் கூடிய இக்கூட்டம் மிகக் காரசாரமாக வலியுறுத்தியது. இவ்வனைத்தையும் நிதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த ஏதென்ஸ் ஒரே வார்த்தையில் 'முடியாது' என்று மறுத்து, அவர்களுடைய கோரிக்கைகள் அனைத்தையும் நிராகரித்தது.

பெரிய நாடுகள் இரண்டும் யுத்த முழக்கம் செய்து கொண்டிருந்ததைக் கண்ட குட்டி நாடுகளுக்குக் கொண்டாட்ட மேற்பட்டது. தங்க



ளுக்குள் ஒன்றுக்கொன்று வஞ்சந் தீர்த்துக்கொள்வதற்கு இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டன. ஏதென்ஸின் கட்சியிலிருந்து **பிளாட்டி** (Plataea) என்ற நகரைத் **தீப்ஸ்** (Thebes) தாக்கியது. இச்செய்கையின் மூலம் ஸ்பார்ட்டாவின் கட்சியைச் சேர்ந்த **தீப்ஸ்** "முப்பதாண்டுச் சமாதான உடன்படிக்கையை"ப் பகிரங்கமாக அவமதித்து அதை உடைத்தெறிந்தது. போரை ஒழிக்க முடியும் என்ற நம்பிக்கைக்கும் அது முற்று வைத்துவிட்டது.

ஆரம்ப கட்டங்களிலே ஏதென்ஸ் மிக முன் யோசனையுடனும் புத்திசாலித்தனத்துடனும் நடந்துகொண்டது. எதிரிகளைப் பாதி வழியில் சந்தித்துத் தாக்குவதையும், அவர்களை ஆக்கிரமித்து எதிர்த்து வீழ்த்துவதையும் அது சிறிது காலத்திற்கு ஒத்திப் போட்டுவிட்டு, தற்காப்பு முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டது. ஆங்காங்கேயுள்ள மக்களும் போர் வீரர்களும் தங்கள் தங்கள் நகரங்களைவிட்டு வெளியேறாது, அவற்றைப் பலப்படுத்திப் பாதுகாப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்க வேண்டுமென்று பெரிகிள்ஸ் தன் ஆட்சியின் கீழுள்ள நகரங்கள் அனைத்தையும் கேட்டுக்கொண்டான். தங்களுடைய நிலங்களையும் வீடுகளையும் இழந்தாலும் பரவா யில்லை, ஒவ்வொருவரும் தமது நகரத்தைக் காப்பாற்றுவதில் முனைந்து நிற்க வேண்டும்; கப்பல் படையை நன்கு பலப்படுத்த வேண்டும்; தங்களுடன் நட்புப் பூண்டிருக்கும் நாடுகளைத் தங்களை விட்டு அகலாது இருக்கும்படி செய்வதுடன், அவர்களுடன் இருக்கும் உறவைச் சீரிய முறையில் விருத்தி செய்துகொள்ள வேண்டும்; எதிரிகளைத் தாங்கள் தாக்கித் தங்களுடைய படை பலத்தை முதலிலேயே தேவையின்றி விரயம் செய்வதைவிட, எதிரிகள் தங்களுடைய நகரங்களைத் தாக்கி, அதனால் பயனெதுவுமடையாது தங்களுடைய பலத்தை இழப்பதுடன், அம்

முயற்சியில் தளர்ந்து அசந்து போனார்களேயானால் அதுவே தங்களுக்கு நல்ல முறையில் வெற்றிக்கு அடிகோலும். குறிப்பாக ஏதென்ஸ் நகர மக்களுக்கு, இவ்வறிவுரையைத் திரும்பத் திரும்பப் பெரிகிள்ஸ் போதித்தான். ("Let us give up lands and houses, but keep a watch over the city and the sea; defend the walls, but do not go out to battle; equip the fleet, in which lies your strength; keep the allies well in hand".—Pericles ) பெலப்பொனிஷியப் படைகள் தரை மார்க்கமாக ஏதென்ஸ், திரேஸ் இவ்விரு நகரங்களை மட்டும்தான் தாக்க முடியும். ஏதென்ஸ் சாம்ராஜ்யத்தின் மற்ற நகரங்களைத் தரை மார்க்கமாக அவ்வளவு சுலபத்தில் தாக்க முடியாது. எனவே, ஏதென்ஸ் நகரின் மேல் ஸ்பார்ட்டா தனது கூட்டாளிகளைச் சேர்த்துக் கொண்டு ஒவ்வொரு வருடமும் படையெடுத்தது. திரேஸில் போர் இடைவிடாது நடந்துகொண்டேயிருந்தது. கடற்பகுதிகளிலே நடந்த போர்களில் ஸ்பார்ட்டாவை ஏதென்ஸ் முறியடித்துக்கொண்டேயிருந்தது. இதைத் தவிரக் கிரீஸின் மேற்குப்பகுதியனைத்தும் போர் பலமாக நடந்தது. தரைப் பகுதியிலே தற்காப்பையும், கடல் பகுதியிலே எதிரிகளை வலியத் தாக்குவதையும் ஏதென்ஸ் தனது உபாயமாகக் கொண்டது. கடற்பகுதியிலே ஏதென்ஸுக்கு ஸ்பார்ட்டாவைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு பலம் அதிகம். தரைப் பகுதியிலே ஏதென்ஸைக் காட்டிலும் ஸ்பார்ட்டாவுக்குப் பல மடங்கு பலம் அதிகம். இதை நன்கு உணர்ந்த ஏதென்ஸ் அதை ஒட்டித் தன் உபாயங்களை வகுத்துக் கொண்டது. நாளாவட்டத்தில் தரைப் பகுதியிலும் முன்னேறித்தாக்க வேண்டிய நிர்ப்பந்தம் (offensive war) ஏதென்ஸுக்கு ஏற்பட்டது. எனினும் மிகுந்த நிதானத்துடன் சந்தர்ப்பத்திற் கேற்றவாறு அவ்வப்போது ஆவன செய்து கொண்டிருந்தது ஏதென்ஸ்.



பொடிடே (Potidaea) யைத் தொடர்ந்து முற்றுகையிட்டுக்கொண் டிருந்ததால் ஏதென்ஸுக்கு மிகுந்த நஷ்டம் ஏற்பட்டது, ஏதென்ஸின் நிதிநிலைமை இதனால மோசமாகியது. இருப்பினும் கி. மு. 430ல் பொடிடே ஏதென்ஸின் படைபலத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் வீழ்ந்தது. ஏதென்ஸ் அதைக் கைப்பற்றி அதில் தன்னுடைய மக்களில் பலரைக் குடியேற்றி, அதைத் தன்னுடைய குடியேற்ற நாடாக ஆக்கிக் கொண்டது. இருப்பினும் ஏதென்ஸ் பெருவாரியான நஷ்டத்தை அடைந்த பின்னரே பொடிடேயைத் தன் வசமாக்க முடிந்தது. இத்துடன் துரதிர்ஷ்டவசமாக ஏதென்ஸ் நகரில் பிளேக் நோய் பரவ ஆரம்பித்தது. போர் நெருக்கடியால் தற்காப்புக்காக, மக்கள் ஏதென்ஸ் நகரிலே மேலும் மேலும் குவிந்ததால் இந்நோய் மேலும் பரவி அதனுடைய கோரம் அதிகப்பட்டது. மக்களிடையே அதிருப்தியும் சிறிது சிறிதாகப் பரவ ஆரம்பித்தது. இக்காரணங்களால் சிறிது காலம் பெரிகிள்ஸினுடைய செல்வாக்குக் குறைந்தது. ஆனால், மறுபடியும் அது முன்னைய அளவுக்கு வளர்ந்து, பெரிகிள்ஸ் மறுபடியும் நாட்டினுடைய தலைமைப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டான். பிளேக் தோன்றி நான்கு வருடங்களுக்குப் பின்னர் மறைந்தது. ஏதென்ஸ் மக்களும்போருக்குப்பின் உற்சாகத்தையும் சிந்தனைத் தெளிவையும் திரும்பப் பெற்றனர். ஆனால், கி. மு. 429ல் ஏதென்ஸ் மக்களின் அரும்பெருந் தலைவனும், கிரேக்க மண்டலத்தின் தாரகையுமான பெரிகிள்ஸ் மறைந்தான்.

எந்த நெருக்கடியான கட்டத்திலும் அஞ்சாது நிலை கலங்காது புன்சிரிப்புடன், ஆழ்ந்த மனோ அமைதியுடன், செயலாற்றும் சக்தி படைத்தவன் பெரிகிள்ஸ். இடுக்கண்கள் அடுக்கடுக்காய்ச் சூழ்ந்தாலும் சிந்தனைத் தெளிவையும் மனத்திட்பத்தையும் இழக்காதவன் அவன். தன்னுடைய அரசியல் எதிரிகளின் ஏச்சையும் பேச்சை

யும் எள்ளளவும் பொருட்படுத்தாது, தனது அறிவைக் கொண்டு எதையும் திறம்பட ஆராய்ந்து, நாட்டுக்கு நல்லது எதுவோ அதைத் தீர்க்க தரிசனத்துடன் உணர்ந்து, தீவிரமாக அதைச் செயலாற்றுவதிலே பெரிகிள்ஸ் கைதேர்ந்தவன். அந்த மேதைக்கு ஈடான ஒரு தலைவனை ஏதென்ஸ் அவனுக்குப் பின்னால் பெற முடியாமலே போயிற்று.

மக்களின் பொதுச்சபைக்கு அவ்வப்போது தேவையான அறிவைப் புகட்டி நல்ல செயல் முறைத் திட்டங்களை அவர்களின் மத்தியிலே உருவாக்குவதற்குப் பெரிகிள்ஸ் இப்பொழுது இல்லை. பெரிகிள்ஸோடு எவ்வகையிலும் ஒப்பிடப்பட முடியாத இரண்டாந்தரமான அரசியல்வாதிகள் பலர் ஏதென்ஸ் நகரிலே தோன்றினர். இவர்கள் முற்றிலும் புதுமாதிரியானவர்கள் ஏதோ தங்களால் முடிந்தமட்டும் ஜனநாயக முறைகளைப் பின்பற்றி, ஜனநாயகத்தைக் கவிழவிடாது பாதுகாத்தனர். அரிஸ்ட்டைட்ஸ், சைமன், பெரிகிள்ஸ் போன்ற தலைவர்களுக்கு இருந்தது போன்று இவர்களுக்கு உயர்குடிப் பிறப்போ, வம்சாவளிச் சிறப்போ, செல்வாக்கு மிகுந்த கிளைஞர்களின் ஆதரவோ கிடையாது. அவற்றைக் கொண்டு இவர்கள் அரசியலில் நுழையவில்லை. இவர்களெல்லாம் தங்களின் சுய முயற்சியால் மதிப்பிற்குரிய மனிதர்களானவர்கள் ; ஜனங்களிடத்தே செல்வாக்குப் பெற்றவர்கள். தங்களுடைய பிரசங்க வன்மை, வாசாலகம், சாமர்த்தியம், உழைப்பு, துணிச்சல் (Cleverness, audacity, industry, and eloquence) இவற்றைக் கொண்டு அரசியலைக் கைப்பற்றியவர்கள். அரிஸ்ட்டைட்ஸ், சைமன், பெரிகிள்ஸ் போன்றவர்களுக்கிருந்த தூய சேவா மனப்பான்மையோ, தியாக புத்தியோ, அறிவாற்றலோ, ஆன்ம எழுச்சியோ இவர்கள் ஒருவரிடம்கூடக் கிடையாது. இப் புதிய அரசியல் வாதிகளின் அரசியலில் சுயநலம் பாதி



கலந்திருந்தது. எனினும் அவர்கள் நிர்வாகத் திறமையோ நேர்மையோ அற்றவர்கள் என்று சொல்லிவிடுவதற்கில்லை. இவர்களில் சிலர் பணம் படைத்த வியாபாரிகளாகவும் வேறு சிலர் பல்வேறு தொழிலதிபர்களாகவும் இருந்தனர். **கிளியான்** (Cleon) என்பவன் பெரிய தோல் வியாபாரி. **யூக்ரெடீஸ்** (Eucrates) என்பவன் கயிறு விற்பனைத் தொழிலில் ஏராளமான பணம் சம்பாதித்தவன். **ஹிப்பர்போலஸ்** (Hyperbolus) என்பவன் ஒரு விளக்கு வியாபாரி. சாதாரண எளிய மக்களின் கூட்டத்தைச் சேர்ந்த இவர்கள் தளரா உழைப்பையும் விடா முயற்சியையும் கொண்டவர்களாயிருந்தார்கள். அத்துடன் எந்தச் சூழ்நிலையிலும் தங்களை முன்னேற்றிக் கொள்ளும் கலையை நன்கு கற்றவர்களாயிருந்தார்கள். இக்குணங்களாலேயே இவர்கள் வியாபாரத்திலும் தொழிலிலும் நன்கு முன்னேறிப் பெரிய தனவந்தர்களானார்கள். வியாபாரத்திலும் தொழில் துறையிலும் இவர்களடைந்த பயிற்சி அரசியலிலும் இவர்களுக்கு ஓரளவு பயன்பட்டது. வியாபாரத்துக்குத் தேவையான ஜனவசியம் போட்டி மனப்பான்மை, விளம்பரம், ரகசிய உடன்பாடு, ஓயாத விழிப்பு, காலந்தாழ்த்தாமை போன்ற குணங்களனைத்தையும் இவர்கள் சீரிய அளவில் பெற்றிருந்தமையால், அரசியலை வியாபாரமாக்கி, பொதுமக்களைச் சரக்குகளாக்கி அதில் நல்ல வெற்றியையும் கண்டார்கள். பெரிகிள்ஸின் ஞாபகம் சதா அவர்களிடம் இருந்து கொண்டிருந்ததால், ஓரளவு நேர்மையையும் கைவிடாது செயலாற்றி வந்தார்கள். பெரிகிள்ஸைக் கண்டு களித்த மக்களின் ஆதரவைப் பெற வேண்டுமானால் ஓரளவாவது பெரிகிள்ஸின் குணங்களைப் பின்பற்ற வேண்டும் என்ற உண்மையை நன்கு இவர்கள் உணர்ந்தார்கள். இதையும் வியாபார தந்திரங்களுள் ஒன்றாகவே கருதவேண்டும். அசல் சரக்கு நின்றவுடன் போலிச் சரக்கு மார்க்கெட்டுக்கு வரலாம்.

எனினும் அசல் சரக்கின் குணத்தில் ஒரு பின்னமாவது போலிச் சரக்குக்கு இல்லாவிட்டால் போலிச் சரக்கு மக்களிடத்தில் எளிதில் எடுபடுவதில்லை. இதுபோன்றே பெரிகிள்ஸுக்குப் பின்னால் ஏதென்ஸில் தோன்றிய அரசியல்வாதிகள் பெரிகிள்ஸின் தாசானுதாசர்களைப்போல் பெரிகிள்ஸின் குணங்களில் ஓரிரண்டை அவ்வப்பொழுது காட்டி வந்தார்கள். இதனாலதானோ என்னவோ கொஞ்சகாலத்திற்கு ஏதென்ஸ் அரசியல் மிகவும் சீர்குலைந்து கெட்டுப் போகாது ஓரளவு திருப்திகரமாகவே சென்றுகொண்டிருந்தது. மக்களின் பொதுச் சபையில் இவர்கள் நல்ல செல்வாக்கைப் பெற்றார்கள். அரசியல் கொள்கைகளையும் புத்திசாலித்தனமாகவே வகுத்தார்கள். ("Though they may have been vulgar and offensive in their manners there is abundant evidence that they were able, and there is no proof that they were not generally honest politicians"—Bury).

அப்போதிருந்த பிரபலமான அரசியல் தலைவர்களுள் ஒருவன் **நிஷியாஸ்** (Nicias) என்பவன் பணக்காரன்; பழமைப் பிரியன் (Conservative); ஏராளமான அடிமைகளுக்கு எஜமானன்; பிற்போக்காளர்களுள்ளே ஒரு முக்கியஸ்தன்; பிற நாட்டவரையும் கவர்ந்து பரவசப்படுத்திய ஏதென்ஸின் அறிவுத்துறை முன்னேற்றங்களையும், கலைத்துறை, அரசியல்துறை முன்னேற்றங்களையும் வெறுப்புடன் பழித்துப் பேசுபவன். மக்களின் பொதுச் சபையிலே அப்பொழுது மிகுந்த செல்வாக்குப்பெற்றிருந்த **கிளியான்** (Cleon) போன்ற புதிய தலைவர்களைக் கடூரமாகத் தாக்கிப் பேசுவதிலே நிஷியாஸுக்கு ஒரு தனிப் பிரியம். அறிவாற்றல் சிறிது மட்டானாலுங்கூட, காரியத்திலே சமர்த்தன். ஏதென்ஸில் அவன் ஒரு அரசியல் தலைவனாக ஆகிவிட்டானே யொழிய, ஒரு தலைவனுக்கு வேண்டிய உதார குணமோ, உயரிய இலட்சியமோ,



ஆன்மீகப் பண்பாடோ, அறநெறிப்பற்றோ அவனிடத்தில் சிறிதளவுகூடக் கிடையாது. ("Nicias was a man of mediocre abilities; he would have made an excellent subordinate officer. but he scarcely-possessed the qualities of a leader or a statesman.") இருந்தாலும் அவனுக்கு ஏதென்ஸ் மக்களின் மத்தியிலே போதிய செல்வாக்கு இருந்தது. ஸ்பார்ட்டாவுடன் ஏதென்ஸ் சமாதானம் செய்துகொள்ள வேண்டும்; இரு நாடுகளும் சமாதானமாய் வாழ வேண்டுமென்று அவன் பலமாகப் பிரச்சாரம் செய்து வந்தான்; காலஞ்சென்ற சைமனுக்கு இவன்தான் அரசியல் வாரிசு என்று பலரால் சிரித்தும் சிலரால் புகழ்ந்தும் இவன் கூறப்பட்டான்.

சிஸிலித் தீவிலே அயோனியன் நகரங்களுமிருந்தன. டோரியன் நகரங்களுமிருந்தன. அயோனியன் நகரங்கள் ஏதென்ஸின் பரம்பரையைச் சேர்ந்தவை. டோரியன் நகரங்கள் ஸ்பார்ட்டாவின் பரம்பரையைச் சேர்ந்தவை. இதை நாம் ஏற்கெனவே அறிவோம். டோரியன் நகரங்களுக்கு விரோதமாக அயோனியன் நகரங்களுக்கு உதவி செய்வதையே பெரிகிள்ஸ் தன் ஆட்சிக்காலம் முழுவதும் ஒரு மாறாத கொள்கையாகக் கொண்டிருந்தான். பெரிகிள்ஸுக்குப் பிறகு இக் கொள்கை சிறிது சிறிதாகத் தளர்ச்சியுற்று மறைந்தது. ஸ்பார்ட்டாவுக்கும் ஏதென்ஸுக்கும் இப்பொழுது போர் வந்துவிட்டவுடன் ஸ்பார்ட்டா சிஸிலித்தீவின் முக்கிய நகரங்களுள் ஒன்றான **சிராக்கூஸ்** (Syracuse) நகருடன் தனது உறவைப் பெருக்கிக்கொண்டு அதனிடமிருந்து பெரும் அளவில் போருக்கான உதவியைப் பெற முயன்றது. ஏதென்ஸ் விழித்துக்கொண்டது. பெரிகிள்ஸுக்குப் பின்னால் கைவிடப்பட்ட கொள்கையை ஏதென்ஸ் மீண்டும் நிலைநாட்டி, சிஸிலித் தீவிலுள்ள அயோனியன் நகரங்களுக்கு உதவி செய்யவும், ஸ்பார்ட்டா கட்சியினரின் தாக்குதலிலிருந்து அவற்றைக் காத்து, அதன்மூலம்

தன்னுடைய பலத்தைப் பெருக்கிக் கொள்ளவும் திட்டமிட்டது. இதையொட்டிச் சிஸிலிக்கு ஒரு படையை கி. மு. 425ல் **யூரிமெடான்** (Eurymedon), **சாஃப்பகிள்ஸ்** (Sophocles) ஆகிய இருவரின் தலைமையில் ஏதென்ஸ் அனுப்பி வைத்தது. இந்தப் படை (Expedition) சிஸிலித் தீவை அடையுமுன்பே, சிஸிலித் தீவிலுள்ள நகரங்களனைத்தும் **ஜீலா** (Gela) என்ற இடத்தில் ஒன்று கூடி சிஸிலிக்கு அப்பாற்பட்ட எந்த நாட்டையும் சிஸிலித் தீவினுடைய விவகாரங்களிலே தலையிட விடுவதில்லை என்று முடிவு கட்டின. ஏதென்ஸோ ஸ்பார்ட்டாவோ, எதுவும் இம்முடிவுக்கு விதிவிலக்கல்ல என்பதையும் திட்டவட்டமாக அறிவித்தன. ஆனால், சிஸிலியின் இக்கொள்கை வெகு காலம் நீடிக்கவில்லை. சிஸிலித் தீவினுள்ளே இரு கட்சி நகரங்களுள் சில ஒன்றையொன்று தாக்கிக் கொள்ள ஆரம்பித்தன. கி. மு. 418ல் **செஜெஸ்டா** (Segesta) என்ற அயோனியன் நகரம் **செலினஸ்** (Selinus) என்ற டோரியன் நகரத்துக்கு எதிராகத் தனக்கு உதவி செய்யும்படி ஏதென்ஸைக் கேட்டுக் கொண்டது. அப்பொழுது இவ்விரு நகரங்களுக்கும் போர் மூண்டிருந்தது. சிஸிலித் தீவுக்கு உதவிப் படை அனுப்புவதை **நிஷியாஸ்** ஆட்சேபித்தான். எனினும் ஏதென்ஸ் அரசு **நிஷியாஸ்** (Nicias), **அல்ஸிபியாடஸ்** (Alcibiades), **லமாக்கஸ்** (Lamachus) ஆகிய இம்மூவரின் தலைமையில் ஒரு விசேடப் பயணப் படையைச் (Expedition) சிஸிலித் தீவுக்கு அனுப்பத் தீர்மானித்தது.

சிறிது காலந்தாழ்த்திப் புறப்பட்ட இப்படை **ரீஜியம்** (Rhegium) என்ற இடத்தை அடைந்தது. **செஜெஸ்டா** (Segesta) வின் பொருள்வளத்தைப் பற்றி ஏதென்ஸ் தூதுவர்கள் முன்பு கொண்டு வந்த தகவல்கள் அவ்வளவு சரியான தகவல்கள் என்பதை நிஷியாஸ், அல்ஸிபியாடஸ், லமாக்கஸ் ஆகிய மூன்று தளபதி



களும் உணர்ந்தனர். செலினஸ் நகரை உடனே சென்று தாக்குவது உசிதமாகாது என்பதையும் அவர்கள் உணர்ந்தனர். சிஸிலித் தீவின் கடற்கரையோரத்திற்கு மட்டும் சென்று அங்கே ஏதென்ஸின் படை பலத்தைப் பகட்டாக விளம்பரப்படுத்திவிட்டுத் திரும்பி விடலாம் என்று நிஷியாஸ் யோசனை கூறினான். சிஸிலித் தீவிலுள்ள நகரங்களில் அது ஒரு பீதியை உண்டாக்கினால், ஏதென்ஸின் பக்கம் பல நகரங்கள் சேர விரும்பும்; **செலினஸும்** (Selinus) ஒருவேளை செஜெஸ்டாவைத் தாக்காது பின்வாங்கும் என்பது அவனுடைய யோசனையின் உட்கருத்து. அல்ஸிபியாடஸ் வேறொரு யோசனையைக் கூறினான். நம்பகமான தூதுவர்கள் சிலரைச் சிஸிலித் தீவுக்குள் அனுப்பி, அங்கேயுள்ள நகரங்கள் பலவற்றின் அதிபர்களைச் சந்திக்க வைத்து, அவர்களை ஏதென்ஸின் பக்கம் சேரச் செய்து, சிராக்கூஸுக்கு விரோதமாக அவர்களைத் திருப்ப முயற்சிக்க வேண்டும் என்பதே அல்ஸிபியாடஸின் யோசனை. லமாக்கஸ் முற்றிலும் மாறுபட்ட, ஆனால், மிகச் சிறந்த யோசனை ஒன்றைக் கூறினான். சிராக்கூஸ் நகரம் அப்பொழுது போருக்கு எந்தவிதமான ஆயத்தமும் முஸ்தீபும் செய்யாது அயர்ந்திருந்ததால், உடனே சிராக்கூஸைத் தாக்க வேண்டுமென்றும், அவ்வாறு தாக்கினால் சிராக்கூஸை எளிதில் கைப்பற்றி விடலாமென்றும் லமாக்கஸ் கூறினான். லமாக்கஸினுடைய யோசனையை நிறைவேற்றியிருந்தால், ஒருவேளை கிரேக்க சரித்திரமே ஏதென்ஸுக்குச் சாதகமாக மாறியிருக்கக் கூடும். ஆனால், வேறு சில காரணங்களை உத்தேசித்து அல்ஸிபியாடஸின் யோசனையை அமுலாக்கத் தீர்மானிக்கப் பட்டது.

இப்படை ஆரம்பத்தில் ஏதென்ஸைவிட்டுப் புறப்படுவதற்கு முன்னால் ஏதென்ஸில் ஏற்பட்ட ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி ஏதென்ஸின் எதிரிகளுடைய சூழ்ச்சியின்

விளைவு என்று இப்பொழுது ஊர்ஜித மாயிற்று. அதிலே அல்ஸிபியாடஸ் எதிரிகளின் தரப்பிலே இருந்து ஏதென்ஸுக்கு விரோதமாக வேலை செய்திருக்கக்கூடும் என்று சந்தேகிப்பதற்கான சில சான்றுகள் ஏதென்ஸுக்குக் கிடைத்தன. அச்சான்றுகளைக் கொண்டு ஏதென்ஸ் அல்ஸிபியாடஸின் மேல் தேசத் துரோகக் குற்றம் சாட்டியது. அல்ஸிபியாடஸை ஏதென்ஸுக்கு உடனே திரும்பி வரும்படி கட்டளையிட்டது. பாதிதூரம் வந்த அல்ஸிபியாடஸ் ஏதென்ஸுக்குள் வராது, தானே வலியத் தன்னை தேசப் பிரஷ்டமாக்கிக்கொண்டு வேற்று நாட்டுக்குச் சென்றுவிட்டான். ஏதென்ஸ் அவனுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்து, அவனுக்கு மரண தண்டனையை இட்டு வைத்தது.

சிஸிலித் தீவிலிருந்த **சிராக்கூஸ்** (Syracuse) நகரை முற்றுகையிட்டுக் கைப்பற்றுவதற்காக நிஷியாஸ் தலைமையில் ஒரு படை சிஸிலித் தீவுக்குச் சென்றது. சிஸிலித் தீவின் மக்களில் பெரும்பகுதியினர் ஏதென்ஸின் பக்கமே சேர்ந்தனர். ஸ்பார்ட்டாவின் கட்சியைச் சேர்ந்த சிராக்கூஸ் நகரம் கி. மு. 414ல் முற்றுகையிடப்பட்டது. ஒரு வருட காலம் முற்றுகை நீடித்தது. கடும்போர் நடந்தது. நிஷியாஸ் உருப்படியான வெற்றி ஒன்றுகூட அடைய முடியவில்லை. அவன் கையாண்ட சில தந்திரங்கள் ஆரம்பத்தில் சில வெற்றிகளை அளித்து இறுதியில் பயங்கரமான தோல்வியில முடிந்தன. இதே சமயத்தில் **டெமாஸ்தனிஸ்ஸும்** (Demosthenes) வேறொரு படைக்குத் தலைமை தாங்கி அங்கு வந்து சேர்ந்தான். எதிர்க்கட்சிப் படையினரின் ஆற்றலுக்கு முன்னால் நிஷியாஸ், டெமாஸ்தனிஸ் இவர்களின் படைகள் நிற்க முடியவில்லை. தோல்விக்கு மேல் தோல்வியடைந்த ஏதென்ஸ் படைகள் பின்னடைந்து கொண்டே சென்றன. ஒரு வார காலம் கடுமையான



கஷ்டங்களை அனுபவித்ததன் பின்னர் எதிரிகளிடம் அவை சரணடைந்தன. தங்களைக் கொல்லுவதில்லை என்று எதிர்க்கட்சியினர் கொடுத்த வாக்குறுதியின் பேரிலேயே அவை சரணடைந்தன. வாக்குறுதி காற்றில் பறந்தது. கைதான ஏதென்ஸ் வீரர்கள் அனைவரும் **எபிபொலே** (Quarries of Epipolae) கல் சுரங்கங்களிலும் பள்ளத்தாக்குகளிலும் வீசியெறியப் பட்டனர். நிஷியாஸ், டெமாஸ்தனிஸ் இருவரையும் மரண தேவதை மற்றொரு முறையில் ஆட்கொண்டுவிட்டாள்.

**சிராக்கூஸை** (Syracuse) முற்றுகையிட்டுக் கைப்பற்றும் பொறுப்பை நிஷியாஸிடம் ஒப்படைக்காது அல்ஸிபியாடஸ், லமாக்கஸ் இவர்களிடம் ஏதென்ஸ் ஒப்படைத்திருந்தால், சிராக்கூஸ் நகரம் எளிதில் ஏதென்ஸ் கைவசமாகியிருக்கக் கூடும். நிஷியாஸிடம் போர் ஆற்றல் இல்லாமலில்லை. எனினும் அப்பொழுது தேவைப்பட்ட அளவுக்கு அது அவனிடத்தில் இல்லாதிருந்தது. சரித்திர ஆசிரியர்களில் பலர் நிஷியாஸ் சிராக்கூஸ் முற்றுகைக்குத் தலைமைதாங்கியது விதியின் சூழ்ச்சி என்று விதியின் மேல் பழியைப் போடுகின்றனர்.

**மாரதன்** (Marathon) போரைப் போன்றே சிராக்கூஸ் போரும் கிரேக்க சரித்திரத்திலும் உலக சரித்திரத்திலும் முக்கியத்துவம் வாய்ந்தது. மாரதன் போரிலிருந்து எவ்வாறு ஏதென்ஸின் அரசியல் வைபோக வாழ்வு (Political glory of Athens) தொடங்கியதோ, அதே போன்று சிராக்கூஸ் போரிலிருந்து ஏதென்ஸினுடைய மாட்சியும் பிரபாவமும் குறைய ஆரம்பித்தது. ஏதென்ஸினுடைய வீழ்ச்சியின் தொடக்கத்திற்குச் சிராக்கூஸ் போர் ஒரு வரை கோடாக அமைகின்றது. சிராக்கூஸ் போரிலே டோரியன் கட்சிக்கு வெற்றி தேடித்தந்த பெருமை, சிஸிலித் தீவின் சரித்திரத்திலேயே ஒப்பாரும்

மிக்காருமற்ற தளபதியான ஜிலிப்பஸ் (Gylippus) என்பவனையே சாரும்.

சிராக்கூஸ் போரிலே ஏதென்ஸ் வெற்றி பெற்றிருந்தால் ரோமின் எதிர்காலப் புகழும் வளர்ச்சியும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கும் ("Syracuse was a break-water which God's providence raised upto protect the yet immature strength of Rome"—Arnold). அது மட்டுமல்லாது, ரோம் பிற்காலத்தில் வென்று கைப்பற்றிய கார்த்தேஜ் நகரத்தை (Carthage) கிரீஸ் கைப்பற்றியிருக்கும்; ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலி இத்தேசங்களின் பாஷா அமைப்புக்களிலே லத்தீனுக்குப் பதில் கிரேக்கம் நுழைந்திருக்கும்; தற்போதைய நாகரிக உலகின் சட்டங்களுக்கு ரோமுக்குப் பதிலாக ஏதென்ஸ் நாட்டின் சட்டங்கள் அடிப்படையாக அமைந்திருக்கும்.

சிராக்கூஸ் தோல்விக்குப் பின்னர் ஏதென்ஸ் தனது தன்னம்பிக்கையையும் தெம்பையும் சற்று இழக்க ஆரம்பித்தது. எனினும் சிராக்கூஸ் போருக்குப் பின்னால் சில முக்கியமான வெற்றிகளை ஏதென்ஸ் அடைந்தது. ஆனால், சிராக்கூஸ் போரில் ஏதென்ஸ் அடைந்த நஷ்டம் அதை மிகப் பெரிய அளவிலே பாதித்தது. ஆனால், ஸ்பார்ட்டாவினுடைய நிலைமை விருத்தியடைந்து முன்னேறிக்கொண்டே வந்தது.

தப்பிச் சென்ற அல்ஸிபியாடஸ் ஸ்பார்ட்டாவுடனும் பெர்ஸியாவுடனும் போய்ச் சேர்ந்து கொண்டு ஏதென்ஸுக்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்தான். ஸ்பார்ட்டாவுக்கும் பெர்ஸியாவுக்கும் மிலடஸ் உடன்படிக்கை (The treaty of Miletus) என்ற ஒரு முக்கியமான உடன்படிக்கையை ஏற்படுத்தி வைத்தான். இதன் மூலம் ஆசியாக் கண்டத்திலுள்ள கிரேக்க நகரங்களின் மேல் பெர்ஸியாவுக்கு ஆதிக்கம் செலுத்த உரிமையுண்டென்றும், ஆசியக் கடற்கரைப் பகுதிகளிலே ஸ்பார்ட்டாவும் அதனுடைய கட்சி நாடுகளும் ஓடவிடும்



கப்பல்கள் ஆற்றும் பணிக்குப் பெர்ஸியா ஊதியம் அளிக்க வேண்டுமென்றும் இரு தரப்பினராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது. கிரீஸிலுள்ள கிரேக்க நகரங்கள் பெர்ஸிய மன்னனுடைய ஆதிக்கத்துள் வராவிட்டாலும் அவனுடைய விருப்பத்திற்குப் பெரும்பாலும் இசைந்து செல்லும் ஒரு அவல நிலையை இவ்வுடன்படிக்கை நாளாவட்டத்தில் ஏற்படுத்தியது ("The treaty of Miletus opened up a new path in Greek politics, which was to lad the Persian King to the position of arbiter of Hellas"—Bury)

கொஞ்ச காலத்தில் அல்ஸிபியாடஸுக்கும் ஸ்பார்ட்டா மன்னனுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டுக் கசப்பு முற்றியது. அல்ஸிபியாடஸ் பெர்ஸியாவுக்கும் ஸ்பார்ட்டாவுக்கும் ஏற்பட்டிருந்த உடன்படிக்கையையும் கூட்டுறவையும் முறியடித்து ஏதென்ஸுக்கும் பெர்ஸியாவுக்கும் புது உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்துவதற்காக முயன்றான். அதற்கான பேச்சுவார்த்தைகளை ஏதென்ஸுடனும் பெர்ஸிய கவர்னருடனும் ஆரம்பித்தான். ஏதென்ஸும் அல்ஸிபியாடஸைத் திரும்ப அழைத்து, அவனுக்குப் பிரஜா உரிமை அளித்துத் தன்னுடைய குடிமகனாக மீண்டும் ஆக்கிக் கொண்டது. நிஷியாஸ், டெமாஸ்தனிஸ், லமாக்கஸ் போன்ற தளபதிகளுக்குப் பின்னால் ஏதென்ஸில் திறமை வாய்ந்த தளபதி ஒருவரு மில்லையாதலால், அல்ஸிபியாடஸைத் திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் ஓரளவு ஏதென்ஸுக்கு ஏற்பட்டு விட்டது.

அல்ஸிபியாடஸ் சிறந்த தளபதி; சிறந்த அறிவாளி மிகத் தைரியம் வாய்ந்த வீரன்; ஆனால், நிரந்தரமான கொள்கையோ, உருப்படியான செயல் திட்டமோ இல்லாதவன். ("A man of scintillating intellect, reckless and brave, but without any political conviction or programme".)

ஏதென்ஸ் வந்தடைந்த அல்ஸிபியாடஸ் ஸ்பார்ட்டாவுக்கு விரோதமாகத் தன் ஆத்திரம், திறமை அனைத்தையும் காட்ட ஆரம்பித்தான். **சிஜிகஸ்** (Cyzicus) என்ற இடத்திலே நடந்த போரில் ஸ்பார்ட்டாவைத் தோற்கடித்து அதனுடைய படைகளைப் பல இக்கட்டுகளுக்கு உள்ளாக்கினான். ஏதென்ஸுடன் சமாதானப் பேச்சு வார்த்தை நடத்த விரும்புவதாக ஸ்பார்ட்டா ஏதென்ஸிடம் தெரிவித்தது. ஏதென்ஸ் இதற்கு மறுத்தது. ஸ்பார்ட்டாவின் இந்த வேண்டுகோளை ஏதென்ஸ் ஏற்றிருந்தால் ஏதென்ஸின் நலனுக்கு அது மிகவும் உதவியாயிருந்திருக்கும். இந்தச் சந்தர்ப்பத்தில் அல்ஸிபியாடஸின் பேச்சைக் கேட்டு மிகப் புத்திசாலித்தன மற்ற முறையில் ஏதென்ஸ் நடந்து கொண்டது.

அல்ஸிபியாடஸை ஏதென்ஸ் அரசின் தலைமைப் பதவிக்கு (Strategus) தேர்ந்தெடுத்து, ஸ்பார்ட்டாவுடன் போரை நடத்துவதற்கு அவனுக்குப் பரிபூரண அதிகாரம் வழங்கியது. கி.மு 406ல் **நோஷியம்** (Notium) என்ற இடத்தில் நடந்த போரில் **லைஸாண்டர்** (Lysander) என்ற வீரனின் தலைமையில் ஸ்பார்ட்டன் கப்பல் படையொன்று அல்ஸிபியாடஸைத் தோற்கடித்தது. அல்ஸிபியாடஸினுடைய அசிரத்தையால் தான் இத்தோல்வி ஏற்பட்டதென்று குற்றம் அல்ஸிபியாடஸின் மேல் சுமத்தப்பட்டது. அல்ஸிபியாடஸ் பதவியிலிருந்து விலக்கப் பட்டான். **மெக்னீஷியா** (Magnesia) என்ற இடத்திற்குச் சென்ற அல்ஸிபியாடஸ் அங்கே தனிமையாகத் தன் காலத்தைக் கழிக்க விரும்பினான். ஆனால், சிறிது காலத்தில் ஸ்பார்ட்டாவினுடைய தூண்டுதலாலும் சூழ்ச்சியாலும் அவன் கொல்லப்பட்டான்.

இதைத் தொடர்ந்து மேலும் பல போர்கள் நடந்தன. ஏதென்ஸுக்குச் சில வெற்றிகளும் கிட்டின. தோல்விகளும் பல ஏற்பட்டன. இறுதியில் **ஏகோஸ்பொடாமி** (Aegospotami) என்ற இடத்தில் கி. மு. 405ல் நடந்த



போரில் ஏதென்ஸ் ஸ்பார்ட்டாவிடம் படுதோல்வியடைந்தது. தனது பலமனைத்தும் இழந்து ஏதென்ஸ் நிர்க்கதியாகி நின்றது. போரும் ஓய்ந்து ஒருவாறு முடிவுற்றது.

ஸ்பார்ட்டா தன் கட்சியைச் சேர்ந்த நாடுகள் அனைத்தையும் ஒன்று கூட்டி வீழ்ந்துபட்ட தன் எதிரியான ஏதென்ஸை எவ்வாறு நடத்துவதென்று மந்திராலோசனை நடத்தியது. ஏதென்ஸுக்கு எந்தவிதமான இரக்கமும் காட்டக் கூடாது என்ற அபிப்பிராயமே ஒருமுகமாக உருவாகியது. ஏதென்ஸ் நகரை முற்றிலும் அழித்துத் தரை மட்டமாக்கிவிட்டு, ஏதென்ஸ் குடிமக்கள் அனைவரையும் அடிமைகளாக விற்றுவிட வேண்டுமென்ற யோசனை பலமாக வலியுறுத்தப் பட்டது. ஆனால், ஸ்பார்ட்டா இத்தகைய யோசனைகள் ஒன்றையும் ஏற்கவில்லை. ஏதென்ஸினுடைய கடந்த காலப் புகழையும் மாட்சிமையையும் பொன்னொளி வீசிப் புவனத்தை மயக்கிய அதனுடைய சாம்ராஜ்ய வாழ்வையும் ஸ்பார்ட்டா திரும்பத் திரும்பச் சிந்தித்துப் பார்த்தது. ஏதென்ஸின் மேல் இரக்கமும் பரிவும் காட்டியது. பெருந்தன்மை இன்னதென்றே அறியாத ஸ்பார்ட்டா, ஏதென்ஸிடம் மிகப் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டது. ஸ்பார்ட்டாவினுடைய தலைமையை ஏதென்ஸ் ஏற்றுக்கொண்டு, ஸ்பார்ட்டா விதித்த நிபந்தனைகளையும் ஒப்புக் கொண்டது.

இதோடு பெலப்பொனீஷியப் போர் முடிந்தது. எத்திக்கும் புகழீட்டிய ஏதென்ஸ் வீழ்ச்சி அடைந்தது.

இவ்வாறு ஏதென்ஸ் வீழ்ச்சியடைந்து விட்டதன் பின்னர் ஏதென்ஸில் தோன்றியவர்கள்தாம் பிளேட்டோவும் அரிஸ்டாடிலும். இவர்களைப் பற்றி நாம் ஏற்கனவே கூறியுள்ளோம். மகோன்னதமான நிலையிலிருந்து மாபெரும் வீழ்ச்சி யடைந்த ஏதென்ஸில் தோன்றியதால் பிளேட்டோ, அரிஸ்டாடில் இவர்களின் சிந்தனைகள் அரசியல் ஞானத்தின் முடிவெல்லையையே

தொட முயலுகின்றன. அரசுகளின் உயர்ச்சிக்கும்
வீழ்ச்சிக்கு முரிய காரணங்கள் அனைத்தையும்
ஆராய்ந்து, அவற்றிற்குச் சித்தாந்த முத்திரையை
அளிக்க இவ்விரு மேதைகளும் விழைந்தனர். அக்
காரணங்களை ஐயந்திரிபற ஆராய்ந்து, அவற்றை அர
சியல் இலக்கணமாகவே வகுத்துக்கூறி, அரசியல்
அறிவிற்கு ஒரு உறுதியான அடித்தளத்தை அமைத்
துக் கொடுத்தனர்.

நல்ல மனிதர்களைக் கொண்டுதானே நல்ல அரசி
யல் அமைகின்றது. நல்ல மனிதர்களை எவ்வாறு சமு
தாயம் தோற்றுவிக்கின்றது? நல்ல மனிதர்களை ஆக்
கிக் கொடுப்பவை எவை? நல்ல அரசியலும் ஓரளவுக்கு
நல்ல மனிதர்களை ஆக்கிக் கொடுக்க முடியும். ஆனால்,
அரசியலைக் காட்டிலும், ஒரு நாட்டின் கலைப் படைப்புக்
களும், இலக்கியமும், தார்மீக ஸ்தாபனங்களும் மக்க
ளின் அற மனோபாவத்தை வளர்த்து அவர்களை நல்ல
வர்களாக ஆக்குகின்றன. கிரேக்கர்களைப் போல் கலை
யிலும் இலக்கியத்திலும் தங்களைப் பறிகொடுத்தவர்
களை உலக வரலாற்றிலே ஒரு சில நாடுகளில்தான் நாம்
காணமுடியும். இதனால்தான் மிகத் தீக்குணம் படைத்த
கிரேக்கன்கூடத் தனது செயல்களுக்கு ஒரு தத்துவ
அடிப்படையைத் (Philosophic basis) தேடுகின்றான்.
அறிஞர்கள் அவனுடைய செயல்களிலே ஒரு கவிதை
தோன்றி நிறைவதைக் காண்கின்றனர். வாழ்வை
மோகித்து, வண்டு மலரைப் பற்றுவதைப்போல்,
அதைப்பற்றி வாழ்ந்தவர்கள் கிரேக்கர்கள். தத்துவம்
என்னும் மகரந்தத்தைச் சதா துய்த்து அதைத் தம் கலை
யிலும் இலக்கியத்திலும் ஏற்றி நிறைத்தவர்கள்
அவர்கள்.

**மதம், கலை, இலக்கியம்:** வாழ்விலே நன்கு தோய்ந்து
அதை அனுபவித்த கிரேக்கர்கள், வாழ்வைப்பற்றியும்
அதனுடைய தார்மீக லட்சணங்களைப் பற்றியும்



ஆழ்ந்து சிந்தித்தார்கள். அறிவை எதற்கும் அடிபணிய
விடாது தீவிரமாக அதை இயக்கி, வாழ்வின் அறங்கள்,
மறங்கள் இவற்றைப்பற்றித் திரும்பத் திரும்ப ஆராய்ந்
தார்கள். பகுத்தறிவை இடையறாது உபயோகிப்பதி
லும், உன்னதமான மனோ நிலைகளில் அமர்ந்து மனித
வாழ்வு பற்றிய தார்மீக தத்துவங்களை ஆராய்வதிலும்
அவர்களுக்கு ஒரு கரைகடந்த ஆசை இருந்தது. அதில்
அவர்கள் அரிய இன்பத்தைக் கண்டார்கள். அறிவைச்
சதா பிரயோகிப்பதில் அவர்களுக்கு வேட்கை அதிக
மிருந்ததால், மதமும் மத குருக்களும் அவர்களைக் கட்
டுப்படுத்த முடியவில்லை. மதம் தங்களுடைய அறி
வைப் பாதித்து அறிவின் போக்கைத் தடுப்பதையோ,
மதகுருக்கள் தங்களின் சமய வாதங்களால் அவர்
களின் அறிவுக்கு விலங்கிடுவதையோ, கிரேக்கர்கள்
அறவே வெறுத்தனர். எனவே, தங்கள் வாழ்வில் அர
சியல் உள்பட எல்லாத் துறைகளிலும் அறிவுக்கே பிர
தானமளித்து, அறிஞர் காட்டிய மார்க்கங்களையே பின்
பற்ற முயன்றனர். மதகுருக்களை அரசியலிலும் தங்க
ளுடைய அறிவியல் முயற்சிகளிலும் தலையிட விடாது
தூரத்தே தடுத்து நிறுத்தி வைத்திருந்தனர். குறிப்
பாகக் கிரீஸில் குடியரசு ஆட்சிமுறை வளர வளர, மதம்,
கோவில்களோடு நின்றுவிட்டது. கிரேக்கர்கள் கோவில்
களுக்குச் சென்றார்கள். தெய்வங்களை மன ஒருமையுடன்
வணங்கினார்கள். தங்களின் மதகுருக்களைக் கொண்டு
பூஜைகள், வேள்விகள் முதலியவற்றை நடத்தினார்கள்;
கோவில்களிலே ஆடம்பரமான திருவிழாக்களுக்கு ஏற்
பாடு செய்து அவற்றிலே களியாட்டத்துடன் பங்கு
கொண்டார்கள். புகழ்பெற்ற டெல்பி ((Delphi) ஆலயத்
துக்குச் சென்று தங்களுடைய எண்ணங்களையும் கோரிக்
கைகளையும் கூறித் தெய்வத்தின் அருள்வாக்குக்காக
வும் (Oracle) நிமித்தங்களுக்காகவும் காத்து நின்ற
னர். கிரேக்கர்களுக்கு மதத்தில் நம்பிக்கை இருந்தது.

இதை எவரும் மறுத்ததற்கில்லை ஆனால், அறிவில்
அவர்களுக்கு இன்னும் அதிகமான நம்பிக்கை இருந்
தது. தமது அறிவின்பத்திலும் புலனின்பத்திலும்
மதத்தையும் மதகுருக்களையும் அவர்கள் குறுக்கிட விட்
டிருந்தால், கிரீஸிலே தத்துவமும், கலையும், தார்மீக
நாகரிகமும், விஞ்ஞானமும் அவ்வளவு வியக்கத் தக்க
அளவுக்கு வளர்ந்திருக்க மாட்டா. சிந்தனை, சிந்தனை,
தீர்க்கமான அறிவைத்தேடும் தீராத சிந்தனை, தீரத்
தெளிந்த சிந்தனை, இதுவே கிரேக்கர்களின் மூச்சாயிருந்
தது தங்களின் புலன்களை (Senses)க் கொண்டு அவர்கள்
வாழ்வை அனுபவித்தது போலவே தங்களின் அறி
வைக் கொண்டும் அவர்கள் வாழ்வை அனுபவித்தனர்.

இன்றைக்கு நான்கைந்து நூற்றாண்டுகளுக்கு
முன்பு வரை மிக முன்னேற்றமான நாடுகள் என்று
தங்களை அழைத்துக் கொண்ட நாடுகளில்கூட மதம்
அரசியலிலும் சமுதாய வாழ்விலும் பிணைந்து அறிவிற்
குப் புறம்பானவற்றைச் சாதித்து வெற்றி கண்டு வந்
ததை நாம் அறிவோம். விஞ்ஞானமும் அறிவியக்கமும்
எங்கணும் கரைபுரளக்கூடிய இக்காலத்தில்கூட, உல
கின் பல நாடுகளில் மதம் அரசியலிலும் இதர துறை
களிலும் ஆதிக்கம் செலுத்தி அறிவை வளரவிடாமலும்,
அதைச் சில வரம்புகளைக் கடக்க விடாமலும் தடுத்து
வருவதை நாம் காண்கிறோம். 2500 ஆண்டுகட்கு
முன்பு வாழ்ந்த கிரேக்கர்கள் அறிவின் வளர்ச்சியிலே
குறுக்கிடுவதற்கு எந்தச் சக்தியையும் அனுமதிக்க
விடாது வாழ்ந்தார்களென்றால், கிரேக்க மக்கள் உண்
மையிலே போற்றற்குரியவர்கள் என்பதில் எவ்வாறு
ஐயமிருக்க முடியும்? கிரேக்கர்கள், அறிவை எவரும்
அதுவரை தேடாத இடங்களிலெல்லாம் தேடி, அதற்
காகவே தவங் கிடந்தார்கள்.

("The Greek kept his formal religion in one compartment and everything that really mattered to him in



another. He never went to a priest for guidance or advice. Did he want to know how to bring up his children or what Truth was, he went to Socrates, or to the great sophist Protagoras or to a learned grammarian. The idea of consulting a Priest would never have occured to him...The Greek were intellectualists; they had a passion for using their minds"—Edith Hamilton.)

கிரேக்கர்கள் கலைப்பித்தர்களாயிருந்ததைப்
போலவே அறிவுப் பித்தர்களாயுமிருந்த காரணத்தாற்
றான் கிரீஸிலே விஞ்ஞானமும் நன்கு வளர்ந்தது. விஞ்
ஞான ஆராய்ச்சிக் கூடங்கள் பல கிரீஸிலே தோன்றிக்
கிரேக்க நாகரிகத்திற்கு மெருகிட்டு அதை எழில்படுத்
தின. கிரேக்கர்களின் அறிவு பூத உலகைப்பற்றிய
ஆராய்ச்சியிலும் தீவிரமாக ஈடுபட்டதால், பிற்கால
விஞ்ஞான வளர்ச்சிக்குக் கிரேக்கர்கள் சிறந்த முன்னோடி
களாயிருந்தனர். கிரேக்கர்களின் விஞ்ஞான சாதனை
பற்றி வாழ்ந்த அண்டை நாட்டு மேதைகள் பலர்
வியந்து கூறியுள்ளனர். அறிவு எவ்விடத்தில் தளராது
வேலை செய்துகொண்டிருக்கிறதோ அவ்விடத்தின்மேல்
இயற்கையன்னைக்கு ஒரு மாறாத பற்று ஏற்பட்டுவிடு
கின்றது. தனது ரகசியங்களை அங்கே வெளிப்படுத்
துவதற்கு இயற்கை தயங்குவதில்லை. இயற்கையின்
மர்மங்களாலாகியது விஞ்ஞானம். கலைத்துறை, தத்
துவத்துறை இவைகளிலே கிரேக்கர்கள் தீவிரமாக
முயன்று முன்னேறியதைப்போல், வெளி உலக
ஆராய்ச்சியிலும் தீவிரமாக ஈடுபட்டுப் பல அரிய உண்
மைகளைக் கண்டு பிடித்தார்கள். அவற்றைக் கொண்டு
தம் புறவாழ்வுக்கு வேண்டிய பல சாதனங்களை ஆக்கிக்
கொண்டார்கள். ஐரோப்பிய விஞ்ஞானம் கிரேக்க
விஞ்ஞானத்துக்கு ஓரளவு கடமைப்பட்டுள்ளது என்று
கூறினால் அது சிறிதும் மிகையாகாது.

("The Greek mind was free to think as it pleased, to reject all traditional explanations, to disregard all that the priests taught, to search unhampered by any outside authority for the truth. The Greeks had free scope for their scientific genius and they laid the foundations of our science today"—Edith Hamilton )

சுருக்கமாய்ச் சொன்னால், கிரீஸிலே அறிவும் ஆத்மமும் ஒன்றாக, சமமாக வளர்ச்சியடைந்து சென்றன. ஆத்மத் துறையிலே மிக முன்னேறிப் பல தத்துவங்களையும், கலைத்துறையிலே முன்னேறிப் பல கலைப்படைப்புக்களையும் தோற்றுவித்த கிரேக்கர்கள், மதத்துறையிலே (religious as distinct from the spiritual or ethical) அதிகம் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை.

கிரேக்க மக்களின் தார்மீகக் கலாசாரம் மிக வளர்ந்தது; பெருமை வாய்ந்தது; பேரறிவு படைத்த மெய்ஞ்ஞானிகளாலும், கவிஞர்களாலும், கலைஞர்களாலும், தியாகமூர்த்திகளாலும் வளர்த்து உருவாக்கப்பட்டது. ஆத்ம விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டது; அறிவிற்குக் கட்டுப்பாடு விதிக்காதது; அனைத்தையும் உள்ளடக்கியது. பல்வேறு உன்னதமான சிந்தனைப் படைப்புக்கள் ஒன்றாக உருகித் தெளிந்தது. கிரேக்கர்களின் மதத்திற்குக்கூட "மதம்" என்ற சொல் பொருந்துமா என்பது சந்தேகம்தான். எந்த ஒரு தனிப்பட்ட தீர்க்கதரிசியாலோ, அல்லது மத ஸ்தாபகராலோ, அல்லது குறிப்பிட்ட ஞானிகளின் குழு ஒன்றாலோ அது ஸ்தாபிக்கப்பட்டதல்ல. எண்ணற்ற மனித உள்ளங்கள் வளர்ந்து வளர்ந்து ஸ்தாபன ரீதியில் அவ்வப்போது வடிவெடுத்துக்கொண்டு சென்ற ஒரு தொடர் நிகழ்ச்சிதான் நாளடைவில் சிறிது சிறிதாக ஒட்டுங் குன்றி இறுதியடைந்து மதம் என்ற பெயருடன் மக்களைச் சில விதிமுறைகளுள் கட்டுப்படுத்த முயன்றது. அறிவு, தான் வளருவதற்கு முன்னால் மதத்தையும்



தான் வளரத் தொடங்கியதன் பின்னால் தத்துவத்தையும், உலகிற்கு அளிக்கின்றது. சில மதங்கள் தத்துவத்தையும் உள்ளடக்கியவையாயிருக்கின்றன. அத்தகைய மதங்களிலே இரு பகுதிகள் உண்டு. ஒன்று தத்துவப் பகுதி (The philosophic part); மற்றொன்று ஆசார அனுஷ்டானப் பகுதி (the ritual part). கிரேக்கர்களின் மதத்தைப் பல அறிஞர்கள் பல்வேறு முறைகளில் விவரித்து அதற்குப் பல்வேறு பெயர்களைச் சூட்டுகின்றனர். கிரேக்க மதம் இவ்விரு பகுதிகளாலுமான ஒரு கலவையே. சீர்தூக்கி ஆராய்ந்தால் உலகிலுள்ள அத்தனை மதங்களும் இத்தகைய கலவைதான் என்று கூறிவிடலாம். சில மதங்களில் தத்துவப் பகுதி விரிந்தும் வளர்ந்தும் காணப்படுகின்றது; சில மதங்களில் அது சிறிய அளவினதாய், வளர்ச்சியடையாததாய்க் குன்றிப்போய் நிற்கின்றது. கிரேக்க மதமும் கிரேக்கத் தத்துவமும் வெகு காலத்திற்கு முன்னமேயே ஒன்றிலிருந்து ஒன்று பிரிந்துவிட்டது. கிரேக்க ஆன்மீக சித்தாந்தங்களைக் கிரேக்க மதத்தோடு ஒன்று சேர்த்துப் பேசுவது பொருளற்றதும் பயனற்றதுமாகும். மதத்திலே இன்னொரு பகுதியும் உண்டு. அதுதான் புராணப் பகுதி (Mythological part). கிரேக்க மதம் ஏராளமான புராணங்களைக் கொண்டதாயிருந்தது. இப்புராணங்களில் ஆங்காங்கே பல ஆன்மீக உண்மைகள் காணப்பட்டன என்பதைக் கிரேக்க அறிஞர்கள் பலர் சுட்டிக்காட்டி விளக்கியுள்ளனர். ஏறக்குறைய எல்லாக் கிரேக்கப் புராணக் கதைகளும் பகுத்தறிவுக்குப் புறம்பானவையேயெனினும், படிப்போருக்குச் சலிப்பைக் காட்டிலும் களிப்பை அதிகமாக அளிக்கும் வண்ணம் நன்கு சுவைபட அவை அமைந்திருக்கின்றன. பொதுவாகச் சொல்லப் போனால் அறிவிலிருந்து தத்துவமும் விஞ்ஞானமும் தோன்றுகிறது; அறியாமையிலிருந்து மதம் தோன்றுகிறது. மதம் அறிவைக் கட்டுப்படுத்த முயலும்

பொழுது, மனித வாழ்வின் முன்னேற்றம் தடைப்படு
கின்றது. மதத்தை அறிவின் வழியிலே குறுக்கிடாது
தடுத்ததனைதான் கிரேக்கர்கள் சகல துறைகளிலும்
அபரிமிதமான முன்னேற்றத்தை அடைந்தார்கள்.
அவர்களின் அறிவு அபார சக்தியுடன் இயங்கி வேலை
செய்து பல அரிய சாதனைகளை ஈட்டியது.

இலக்கியத் துறைக்கு வருவோம். கிரேக்கர்களின்
இலக்கியப் படைப்புக்களை வர்ணிப்பதற்கு வார்த்தைகள்
எளிதில் அகப்படா. அரிய தார்மீக உண்மைகளை
யும் தத்துவங்களையும் எடுக்க எடுக்கக் கொடுத்துக்
கொண்டேயிருக்கும் அட்சய பாத்திரங்கள் அவை.
அறிவின்பத்தை இடையறாது சொரிந்து கொண்டே
யிருக்கும் அமுத கலசங்களாக இன்றைக்கும் அவை
விளங்குகின்றன. மனிதனின் ஆத்ம தாபங்களை
அடிப்படையாகக் கொண்டு எழுந்து நிற்கும் கிரேக்க
நாடகங்களும் கவிதைகளும் அறிவு மண்டலத்திலே
பல உச்சங்களைத் தொடுவதோடு, நமது அற உணர்ச்சி
களை அமோகமாகக் கிளறி விடுகின்றன. கிரேக்க
இலக்கியம் துன்பியல், இன்பியல் ஆகிய இரு பகுதிகளை
யும் கொண்டதெனினும் துன்பியலே (Tragedy) இன்பி
யலைக் (Comedy) காட்டிலும் சிறந்தோங்கி நிற்கின்றது.
இதற்குக் காரணம் கிரேக்கர்கள் வீரத்தின் விளைநிலனாக
மட்டும் விளங்கவில்லை; இரக்கத்தின் வாரிதியாகவும்
விளங்கினார்கள். வைரம் போன்ற நெஞ்சுறுதியைப்
படைத்திருந்த அவர்கள் பூப்போன்ற மென்மையான
இதயத்தையும் படைத்திருந்தனர். அவர்கள் வாழ்விலே
போகியர்களாக மட்டும் இருக்கவில்லை; கிரேக்க மேதை
களுள் பலர் யோகியரைப் போல் தனித்து நின்று
உலகின் துன்ப துயரங்களின் காரணங்களையும் ஆராய்ந்
தார்கள். இன்பத்தைக் காட்டிலும் துன்பத்திலிருந்தே
வாழ்வின் மாபெரும் தத்துவங்கள் தோன்றுவதால்,
தத்துவ உள்ளம் படைத்த அவர்கள் துன்பியலைத்



தங்களின் கவிதை காவியங்களில் அமைத்து உலகின
ருக்கு அறிவின்பத்தை அளித்ததோடு ஆத்ம போத
னைகள் பலவற்றையும் வழங்கினார்கள். இன்பத்தின்
பிறப்பிடமே துன்பம்தான் என்பதை நன்குணர்ந்த
கிரேக்க இலக்கிய கர்த்தாக்கள் துன்பத்திலே பிரபஞ்ச
சக்தியின் பிரதிபலிப்பையே கண்டார்கள். தத்துவ உள்
ளங்களிலே மனித குலத்தின் மீதும் துன்ப துயரங்களில்
அகப்பட்டுத் தவிப்பவர் மீதும் ஓயாத இரக்கமொன்று
ஒவ்வொரு கணமும் சுரந்து கொண்டேயிருக்கும். தத்
துவ உள்ளத்தைப் படைத்தவர்கள் ஒருவித தெய்வத்
தன்மையைப் படைத்தவர்கள். அவர்கள் எவ்வளவு சுக
போக இன்பங்களை அனுபவித்தாலும், பிறரின் துன்பங்
களைக் கண்டு மனம் நொந்து வருந்திக்கொண்டேயிருப்
பார்கள். ஏறக்குறைய உயர்ந்த உள்ளங்கள் அனைத்துக்
கும் இரக்கம்தான் ஒரு பொதுவான சிறப்பு முத்திரையாக
விளங்குகிறது. உலகில் தோன்றிய மகா புருடர்களெல்
லாம் வீரம் நிறைந்தவர்களாகவும் இரக்கம் நிறைந்தவர்க
ளாகவுமே இருந்திருக்கின்றனர். வீரம் இருக்கும் இடத்
தில் இரக்கமும் இரக்கம் இருக்குமிடத்தில் வீரமும் தவ
றாது காணப்படும். கிரேக்க இலக்கிய கர்த்தாக்கள் இத்
தகைய மனோபாவத்தைப் படைத்திருந்த காரணத்தால்
உலகினரின் துன்ப துயரங்கள் தங்கள் இலக்கியப்
படைப்புகளின் சிறப்பு அம்சமாக விளங்க வேண்டு
மென்று இயல்பாகவே விரும்பினார்கள். கிரேக்க இலக்கி
யத்தின் இன்பியல் பகுதிகளிலும் மனித வாழ்வின்
துன்பங்களைப் பற்றிய தத்துவ விமரிசனங்கள் சுவை
சொட்டும் கவிதையாகத் தரப்பட்டிருக்கின்றன. ஜில்பர்ட்
முர்ரே (Gilbert Murray) என்ற ஆங்கில இலக்கிய
மேதை கிரேக்க நாடகங்கள் பலவற்றை ஆங்கிலத்தில்
மொழிபெயர்த்து அவற்றை மிக அழகாக விமர்சனமும்
செய்திருக்கின்றார். புவன சக்தி பற்றிய பேருண்மைகள்
பல மனித வாழ்வின் துன்பங்களில்தான் மிகக் கம்பீர

மாகவும் கவர்ச்சிகரமாகவும் எழுந்து நிற்கின்றன; இதை இலக்கிய கர்த்தாக்கள் மனத்தில் கொண்டு அதற்கேற்பத் தங்களின் இலக்கியப் படைப்புக்களை அமைக்கும்பொழுது, துன்பமும் இன்பம் போன்றே கவர்ச்சிகரமாகத் துலங்க ஆரம்பிக்கின்றது. இத்தகைய இலக்கியப் படைப்புக்களிலே தோயும் மனிதன் பிறருக்கு இரக்கம் காட்டுவதிலும் ஒரு இலட்சியத்திற்காக வாழ்வதிலும் தான் மனித குலத்தின் பெருமையே அடங்கியிருக்கிறதென நினைக்கிறான். ஜில்பர்ட் முர்ரே அவர்களின் நூல்களைப் படிக்கும்போது இத்தகைய சிந்தனைகளெல்லாம் நம்முள் எழுகின்றன. பிரபஞ்ச சக்திகளின் முன்னே மனிதன் சக்தியற்றவன் என்ற உண்மையையும் விசாலமான ஒரு தத்துவக் கோணத்திலிருந்து கிரேக்க இலக்கிய கர்த்தாக்கள் வலியுறுத்துகின்றனர்.

**பிண்டார்** (Pindar), **அரிஸ்டோபேன்ஸ்** (Aristophanes), சாஃப்பகிள்ஸ் (Sophocles), **எஸ்கிலஸ்** (Aeschylus), **யூரிபிடிஸ்** (Euripides) போன்ற கிரேக்க நாடகாசிரியர்கள் அமர உறுதிப்பாடுகள் பலவற்றைத் தங்கள் நூல்களிலே மிகத் திறமையாகக் கையாண்டதுடன், தாங்கள் வாழ்ந்த காலத்திலும் இடத்திலும் கண்ட பல்வேறு அரசியல் சமுதாயக் குறைபாடுகளையும் தங்களின் பாத்திரங்கள் வாயிலாக அறிவுசெழுமிய சொற்களைக் கொண்டு தாக்குகின்றார்கள். முக்கியமான சரித்திர நிகழ்ச்சிகளையும் ஆங்காங்கே தங்கள் நூல்களில் மையமாக வைத்தோ, அல்லது ஒரு அங்கமாக ஆக்கியோ தங்களின் சினத்தையும் சிந்தனைகளையும் கொட்டுகின்றார்கள். போரிலே தங்களின் நகரங்களுக்கு வெற்றியும் புகழுமீட்டிக் கொடுத்த வீரர்களைப் போற்றுகின்றார்கள். தம் நாட்டைச் சேர்ந்த பொது மக்களின் மடமையையும், தம் எதிரிகளின் குண விசேடங்களையும் சிறப்புக்களையும் கூசாது சுட்டிக்காட்டி, மன்னனையும் மக்களையும் இடித்துக் கூறுகின்றார்கள்.



பண்டை ரோமானியர்களிடமும் இப்பண்பு நிறைந்திருந்தது. கிரேக்க ரோமானிய நாடகங்களையும் இதர கவிதைகளையும் கற்போரிடம் உயர்ந்த குண நலன்கள் நாளடைவில் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் கிரேக்க ரோமானிய இலக்கியப் படைப்பு ஒவ்வொன்றும் பெரிய உள்ளங்களையும், உயரிய மனோ நிலைகளையும், மகோன்னதமான தத்துவங்களையும் பிரதிபலிக்கின்றன. கிரேக்க இலக்கியங்களில் வரும் கதாபாத்திரங்கள் ஒவ்வொருவரும் ஏதாவதொரு அறத்திற்கோ மறத்திற்கோ பிரதிநிதியாக அமைந்து வாழ்விற்கு ஓர் இலக்கணத்தை வகுத்துக் கொடுக்கின்றனர்.

கிரேக்க சரித்திரம் வாழ்வைக் கலையாக்கி வாழ முயன்ற ஒரு அரிய பெருமக்களின் சரித்திரம். கற்போருக்குக் களிப்பூட்டுவதுடன், அவர்களின் அறிவையும் விவேகத்தையும் அது வளர்க்கிறது. உயர்ந்த உணர்ச்சிகளையும், எழுச்சி மிக்க சிந்தனைகளையும், அரிய மனோபாவங்களையும் நம்முள் அது தூண்டி விடுகின்றது. அஞ்சா நெஞ்சு படைத்த தளபதிகள் பலரின் வீரத்தையும், சுயநலமற்ற சான்றோர்கள் பலரின் தியாகத்தையும், மெய்ஞ்ஞானத்தை நோக்கி இடையறாது முயன்ற மேதைகள் பலரின் அறிவையும் தேசத்தைக் காக்கப் போர் முனையில் மாய்ந்த தேசாபிமானிகள் பலரின் செங்குருதியையும், தூரக் கண்ணோட்டம் படைத்த அரசியல் தலைவர்கள் பலரின் இணையற்ற ராஜதந்திரத்தையும் கொண்டு ஆக்கப்பட்டது கிரேக்க சரித்திரம். இத்துடன் கீழ்த்தரமான சூழ்ச்சியாளர்களையும், சபலமிக்க கோழைகளையும், அந்நிய நாடுகளுடன் அந்தரங்கமாக உறவாடும் தேசத் துரோகிகளையும், போர் வெறி கொண்ட அரக்கர்களையும், அதிகாரத்தைக் கொண்டு மக்களைத் துன்புறுத்திய அநீதியாளர்களையும் கிரேக்க வரலாற்றில் ஆங்காங்கே காண்கிறோம். தூயது, தீயது இவ்விரண்டாலுமான

ஒரு சேர்க்கை அது. ஒளியும் நிழலும் போல அவை ஒன்றையொன்று தொடர்கின்றன. எந்நாட்டு வரலாற்றிலும் இது தவிர்க்க முடியாத தொன்று. ஆனால், கிரேக்க வரலாற்றிலே கெட்டதைக் காட்டிலும் நல்லது பன்மடங்கு மிகுந்து காணப்படுகின்றது. பொதுவாக, நல்லதைப் பேசி, நல்லதற்காக வாழ்ந்து நல்லதற்காக மடிந்தவர்கள் கிரேக்கர்கள். பொது நோக்கில் பார்த்தோமானால் கிரேக்கர்கள் மிகப் பெருமதி படைத்தவர்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல் கழிந்து விட்டன. உலகத்து அறிஞர்கள் அனைவரும் இன்றைக்கும் கிரேக்கர்களைப் பெருமக்களென்றே போற்றுகின்றனர்.

ARCHIVES LIBRARY
MADRAS
105819